# சாதி ஒழிப்பு

டாக்டர் அம்பேத்கர்



# சாதி ஒழிப்பு

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்

அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை—600 024.
தொலைபேசி : 4815474

## நூலைப் பற்றிய குறிப்புகள்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சாதி ஒழிப்பு |
| ஆசிரியர் | : | டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் |
| மொழி | : | தமிழ் |
| மொழியாக்கம் | : | வெ. கோவிந்தசாமி |
| பொருள் | : | சமூக வரலாறு |
| முதல் பதிப்பு | : | டிசம்பர், 1998 |
| வெளியீடு | : | அலைகள் வெளியீட்டகம்<br>36, தெற்குச் சிவன் கோயில் தெரு,<br>கோடம்பாக்கம், சென்னை-600 024.<br>தொலைபேசி : 4815474 |
| நூல் அளவு | : | கிரவுன் 1×8 |
| தாள் | : | 10. 5 கிலோ, சேஷசாயி |
| பக்கங்கள் | : | 172 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| கட்டு | : | செக்ஷன் தையல்கட்டு |
| அச்சு | : | அலைகள் அச்சகம்<br>சென்னை—600 024 |
| விலை | : | ரூ. 32-00 |

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

இந்தியச் சமூகத்தின் தனித்தன்மையான 'சாதி' அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறாத ஒன்று. ஆய்வாளர் பலருள் டாக்டர் அம்பேத்கருக்கு தனிச் சிறப்பிடம் உண்டு. வரலாற்றில் பதிந்துவிட்ட அவரது இந்த ஆய்வுரையை வளரும் வாசகர்களின் தேவை கருதி வெளியிடுகிறோம்.

*—பதிப்பகத்தார்.*

## உள்ளே...


பக்கம்

- இரண்டாம் பதிப்பின் முன்னுரை 5
- மூன்றாம் பதிப்பின் முன்னுரை 7
- முன்னோட்டம் 8
- டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் உரை 25
- பிற்சேர்க்கை—1

  சாதி அமைப்பு சரியானதே
  —மகாத்மா காந்தி 137
- வருணமா சாதியா
- பிற்சேர்க்கை—2 145

  'மகாத்மா'வுக்கு ஒரு பதில்
  —டாக்டர் அம்பேத்கர் 149

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

லாகூர் ஜாத்-பட்-தோடக் மண்டலுக்காக நான் தயாரித்த உரை இந்துக்களை மனதில் இருத்தியே தயாரிக்கப்பட்டது. அதற்கு இந்துக்களிடமிருந்து ஆச்சரியப் படத்தக்க அளவில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. ஆங்கிலத்தில் அச்சிட்ட 1500 படிகளும் இரண்டே மாதத்தில் தீர்ந்து விட்டன. குஜராத்தியிலும் தமிழிலும் உரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மராத்தி, இந்தி, பஞ்சாபி, மலையாளம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டு வருகிறது. ஆங்கிலப் பதிப்புக்கான தேவை இன்னமும் குறையாமல் உள்ளது. இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காக இரண்டாம் பதிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. உரையை ஒரு வரலாற்றுப் பதிவு என்ற முறையிலும் உத்வேகத்துடன் வெளிப்பட்டுள்ள அதன் வடிவத்தைப் பத்திரப்படுத்தவும் ஏற்கெனவே இருந்த சொற்பொழிவு அமைப்பிலேயே வெளியிட்டு விட்டேன். பலரும் கேட்டுக் கொண்டது போல் நேரடி விவரண அமைப்புக்கு மாற்றவில்லை.

இந்தப் பதிப்பில் இரு பிற்சேர்க்கைகளை இணைத்துள்ளேன். முதல் பிற்சேர்க்கையில் என் உரையை மதிப்பிடும் முகமாக 'ஹரிஜனில்' திரு. காந்தி எழுதிய இரண்டு கட்டுரைகளையும், ஜாத்-பட்-தோடக் மண்டலைச் சேர்ந்த திரு. சான்ட்ராமுக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றையும் சேர்த்துள்ளேன். இரண்டாம் பிற்சேர்க்கையில் திரு. காந்தியின் மேற்படி கட்டுரைகளுக்கு என் கருத்துகளைப் பதிலாகத் தந்துள்ளேன்.

திரு. காந்தியைப் போலவே பலரும் என் உரையில் உள்ள கருத்துகளை எதிர்நிலையில் நின்று விமர்சித்துள்ளனர். ஆனால் திரு. காந்திக்கு மட்டும் நான் பதில் தந்துள்ளேன். ஏன்? பதில் தந்தாக வேண்டிய அளவுக்கு அவரது கட்டுரை விஷயகனமுள்ளது அல்ல. ஆனால் இந்துக்கள் அவரை ஒரு தீர்க்கதரிசியாக மதிக்கிறார்கள். அவர் தன் வாயைத் திறந்ததுமே எல்லோருமே தம் வாயை மூடிவிட வேண்டும். தெருவில் போகும் நாய் கூட குரைக்கக் கூடாது என்ற அளவுக்கு அவரது வார்த்தைகள் பொய்யாமொழியாக இந்துக்களால் கொள்ளப்படுகிறது.

ஆனால் ஈசனே ஆயினும் அவன் குற்றமற்றவன் அல்ல என்று நேருக்கு நேர் நின்று வாதிடத் துணியும் கலகக்காரர்களாலே தான் இந்த உலகம் வாழ்கிறது. எந்த ஒரு முற்போக்கான சமுதாயமும் தன் கலகக்காரர்களுக்கு என்ன மதிப்புத் தருகிறது என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை. இந்துக்கள் இந்தியாவின் நோயாளிகள்; அவர்களின் நோய் மற்ற இந்தியர்களின் நலத்துக்கும் சந்தோசத்துக்கும் ஆபத்து விளைப்பதாக இருக்கிறது. இதை அவர்கள் உணரும்படி செய்துவிட்டால் அதுவே எனக்குப் போதும்.

பி. ஆர். அம்பேத்கர்.

# மூன்றாம் பதிப்பின் முன்னுரை

இந்த உரையின் இரண்டாம் பதிப்பு 1937இல் வெளியிடப்பட்டது. மிகக் குறுகிய காலத்தில் தீர்ந்து போனது. புது பதிப்பு வெளியிட வேண்டிய தேவை நீண்டகாலமாகவே இருந்து வந்தது. மே 1917 இந்திய அரும்பொருள் ஆய்வேட்டில் வெளியான என் "இந்தியாவில் சாதிகள் : அவற்றின் அமைப்பியக்கம் தோற்றுவாய் வளர்ச்சி" என்ற கட்டுரையையும் இதனுடன் இணைத்து அதற்கேற்ப இந்த உரையை மாற்றி அமைக்க எண்ணி இருந்தேன். நேரமும் கிட்டவில்லை. செய்துமுடிக்கும் நிலையிலும் நான் இல்லை. ஆனால் நூலை உடனடியாக வெளியிடக் கோரி பொது மக்களின் கோரிக்கை அதிகரித்து வந்தது. எனவே இந்தப் பதிப்பு இரண்டாம் பதிப்பின் மறு பதிப்பாகவே வெளி வருகிறது.

இந்த உரையின் செய்தி இவ்வளவு தூரத்துக்கு பரவியதில் மகிழ்ச்சி அடைகிறேன். எந்த நோக்கத்தை உத்தேசித்து இந்த உரை வெளியிடப் பட்டதோ அந்த நோக்கத்துக்கு இது உதவும் என்று நம்புகிறேன்.

22, பிருதிவிராஜ் சாலை — பி. ஆர். அம்பேத்கர்.
புதுடெல்லி
1—12—1944

# முன்னோட்டம்

1935 டிசம்பர் 12 அன்று ஜாத்-பட்-தோடக் மண்டலின் செயலராகிய திரு. சான்ட்ராமுவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

*அன்புள்ள டாக்டர் சாகிப்!*

*தங்கள் 5 ஆம் தேதிய கடிதத்துக்கு மிக்க நன்றி. உங்கள் அனுமதியைக் கேட்காமல் அதை பத்திரிக்கையில் வெளியிட்டதற்கு மன்னிப்புக் கோருகிறேன். அதை வெளியிடுவதால் எந்தக் கெடுதலும் ஏற்படும் என நான் கருதவில்லையாதலால் வெளியிட்டு விட்டேன். நீங்கள் மாபெரும் சிந்தனையாளர். உங்கள் அளவுக்கு சாதிப் பிரச்சினையைப் பற்றி ஆராய்ந்தவர் வேறு யாருமில்லை என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். உங்கள் கருத்துகளால் நானும் எங்கள் மண்டலும் எப்போதுமே நன்மை அடைந்து வந்துள்ளோம். உங்கள் கருத்துகளை ''கிரந்தி''யில் நான் பல தடவை வெளியிட்டுள்ளேன். பல மாநாடுகளில் விளக்கிப் பேசியும் இருக்கிறேன். ''சாதி அமைப்பு எந்த மதக் கருத்துகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்த மதக்கருத்துகளை அழித்தொழிக்காமல் சாதியை அழிப்பது சாத்தியமில்லை'' என்ற உங்கள் புதுக்கருத்தை விவரமாக அறிய ஆவலாக உள்ளேன். எனவே கூடிய சீக்கிரம் இக்கருத்தை விரித்து எழுதுங்கள். நாங்கள் உங்கள் கருத்தை எடுத்து மேடை மூலமாகவும் வெளியீடு மூலமாகவும் பிரசாரம் செய்ய வசதியாக இருக்கும். இப்போது உங்களின் அந்தக் கருத்து எனக்குச் சரியாகப் பிடிபடாமல் உள்ளது.*

□ □ □

எங்கள் வருடாந்திரக் கருத்தரங்குக்கு நீங்கள்தான் தலைவராக இருக்க வேண்டும் என்று எங்கள் செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. உங்கள் வசதிக்கேற்ப எங்கள் தேதியை நாங்கள் மாற்றிக் கொள்ள முடியும். பஞ்சாப் சுதந்திர அரிசன்கள் உங்களைச் சந்திக்கவும் தம் திட்டங்களை உங்களுடன் விவாதிக்கவும், ஆவலாயிருக்கிறார்கள். எனவே லாகூரில் நடக்க உள்ள கருத்தரங்குக்கு தலைமை ஏற்க அன்புடன் இசைவளித்தீர்களானால் ஒரே கல்லில் இரண்டு மாம்பழம் கிடைத்தது போலாகும். எல்லாத்தரப்பு அரிசனத் தலைவர்களையும் நாங்கள் அழைக்க உள்ளோம். எனவே அவர்களிடம் உங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் உங்களுக்கு வாய்ப்பாகும்.

எம் துணைச் செயலர் திரு. இந்திர சிங் அவர்கள் பம்பாய் சென்று உங்களைச் சந்திக்கும்படி மண்டல் பணித்துள்ளது. அவர் கிறிஸ்துமஸ் தினத்தன்று உங்களைச் சந்தித்து கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி நேரில் கேட்டுக் கொள்வார்.

□ □ □

எனக்குத் தெரிய வந்த வரையில், ஜாத்-பட்-தோடக் மண்டல் சாதி இந்துக்களில் உள்ள சமூக சீர்திருத்தவாதிகளின் அமைப்பாகும். இந்துக்கள் மத்தியில் இருந்து சாதி அமைப்பை அகற்றுவதே அதன் ஒரே இலட்சியமாகும். பொதுவாக சாதி இந்துக்கள் நடத்தும் எந்த நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொள்வதில்லை. சமூக சீர்திருத்தம் பற்றிய அவர்களின் நிலைபாட்டுக்கும் என் நிலைபாட்டுக்கும் ஒத்துப்போவதில்லை எனவே அவர்களுடன் சேர்ந்து இயங்குவது கடினமாக இருக்கிறது. கருத்து வேறுபாடு இருப்பதால் அவர்களின் சகவாசம் எனக்கு மிகவும் அசவுகரியமாகவே இருக்கிறது. எனவே முதல் தடவை என்னை மண்டல் அணுகின போது நான் அவர்கள்

அழைப்பை ஏற்க மறுத்துவிட்டேன். ஆனால் மண்டல் அதை ஏற்காமல் மீண்டும் தன் உறுப்பினர் ஒருவரை பம்பாய்க்கு அனுப்பி, அழைப்பை ஏற்றுக் கொள்ளும்படி என்னை வற்புறுத்தியது. இறுதியில் நான் தலைமை தாங்க ஒத்துக் கொண்டேன். மண்டலின் தலைமையகம் உள்ள லாகூரில் ஆண்டுக் கருத்தரங்கு நடப்பதாக இருந்தது. ஈஸ்டர் தினத்தன்று கருத்தரங்கு கூடுவதாக இருந்தது. ஆனால் 1936 மே மாதத்திற்கு தள்ளிவைக்கப்பட்டது. இப்போது வரவேற்புக்குழு கருத்தரங்கையே ரத்து செய்து விட்டது. என் தலைமை உரை அச்சிடப்பட்டு பல நாட்களுக்குப் பிறகே ரத்து அறிவிப்பு வந்தது. உரையின் படிகள் இப்போது என்னிடம் கிடக்கின்றன. தலைமை உரையாக அதை வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காததால், சாதி அமைப்பு உருவாக்கியுள்ள பிரச்சனைகள் பற்றிய என் கருத்துகளை அறியும் வாய்ப்பு பொது மக்களுக்குக் கிடைக்காமல் போகிறது. பொதுமக்கள் அக்கருத்துகளை அறியவும் என்னிடம் கிடக்கும் அச்சிட்ட பிரதிகளைப் பயன்படச் செய்யவும் அவற்றை நான் விற்பனைக்குக் கொண்டு செல்ல தீர்மானித்தேன். பின் வரும் பக்கங்களில் அந்த உரை.

என் கருத்தரங்கத் தலைமைப் பதவி ரத்தானது எப்படி என்பதை அறிய பொதுமக்கள் ஆர்வமுள்ளவர்களாய் இருக்கலாம். முதலில் உரையை அச்சிடுவது குறித்து வாதம் எழுந்தது. உரையை பம்பாயில் அச்சிட வேண்டும் என்று நான் விரும்பினேன். சிக்கனம் கருதி அதை லாகூரில் அச்சிட விரும்பியது மண்டல். நான் சம்மதிக்கவில்லை. பம்பாயிலேயே அச்சிட வேண்டும் என வலியுறுத்தினேன். அதற்குப் பதிலாக மண்டல் உறுப்பினர்கள் பலரின் கையெழுத்திடப்பட்ட ஒரு கடிதம் வந்தது. அதிலிருந்து:

27—3—36

*மதிப்புக்குரிய டாக்டர்ஜி!*

திரு. சான்ட்ராமுக்கு நீங்கள் எழுதிய 24 ஆம் தேதிய கடிதத்தை நாங்கள் கண்டோம். சற்று ஏமாற்றமடைந்தோம். ஒருவேளை இங்கு எழுந்துள்ள நிலைமையை நீங்கள் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை போலும். பஞ்சாபில் உள்ள இந்துக்கள் ஏறக்குறைய அனைவரும் நீங்கள் இந்த மாகாணத்துக்கு வருவதை எதிர்க்கிறார்கள். ஜாத்-பட்-தோடக் மண்டலை மிக மிகக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். எல்லாத் தரப்பில் இருந்தும் சொல்லத் தகாத வார்த்தைகளால் கண்டனங்கள் எழுந்துள்ளன. பாய் பரமானந்த் எம். எல். ஏ. (முன்னாள் தலைவர், இந்து மகா சபை), மகாத்மா ஹான்ஸ் ராஜ், டாக்டர் கோகல் சந்த் நரங் (ஸ்தல சுயாட்சி மந்திரி), ராஜா நரேந்திர நாத் எம்.எல்-சி. உட்பட எல்லா இந்துத் தலைவர்களும் மண்டலின் இந்த நடவடிக்கையிலிருந்து கழண்டு கொண்டு விட்டனர்.

இருந்தாலும் ஜாத்-பட்-தோடக் மண்டலை நடத்துவோர் (முக்கியமாக சார்ஜன்ட், சாண்ட்ராம்) இதை எல்லாம் சமாளித்துக் கொள்ளலாம் என்பதிலும் உங்கள் தலைமையை கைவிட வேண்டியதில்லை என்பதிலும் உறுதியாக இருக்கிறார்கள். மண்டலுக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

□ □ □

இந்தச் சூழ்நிலையில் மண்டலுடன் ஒத்துழைப்பது உங்கள் கடமையாகிறது. ஒருபுறம் இந்துக்கள் மண்டலை வாட்டி வதைக்கும்போது மறுபுறம் நீங்களும் அதன் கஷ்டத்தை அதிகரித்தால் அது மிகவும் வருந்தத்தக்கதும் துரதிருஷ்டமானதுமாக ஆகிப்போகும்.

தாங்கள் இதனைப் பரிசீலித்து எங்கள் எல்லார்க்கும் நல்லதே செய்வீர்கள் என நம்புகிறேன்.

□ □ □

இந்தக் கடிதம் எனக்கு திகைப்பை ஏற்படுத்தியது. உரையை அச்சிடுவதில் கொஞ்சம் அதிகமாகச் செலவாவது குறித்து மண்டல் ஏன் இவ்வளவு வருந்தவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. இரண்டாவதாக நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக சர் கோகல் சந்த் நரங் போன்றவர்கள் உண்மையிலேயே ஒதுங்கி விட்டார்கள் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. ஏனென்றால் சர் கோகல் சந்த் கைப்பட எழுதிய பின் வரும் கடிதம் எனக்கு வந்திருந்தது.

5, மாண்ட்காமரி சாலை
லாகூர், 7-2-36.

அன்புள்ள டாக்டர் அம்பேத்கர் :

ஈஸ்டர் விடுமுறையில் லாகூரில் நடக்க உள்ள ஜாத்-பட்-தோடக் மண்டலின் ஆண்டு விழாவிற்கு தாங்கள் தலைமை ஏற்க சம்மதித்துள்ளதாக மண்டலைச் சேர்ந்தவர்களிடமிருந்து அறிந்தேன். மகிழ்ச்சி. லாகூருக்கு வரும் போது நீங்கள் என்னுடன் தங்கியிருந்தால் அது எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கும். மற்றவை நேரில்.

தங்கள் உண்மையுள்ள
ஜி. சி. நரங்

நிஜம் எதுவாயிருந்தாலும் இந்த நெருக்கடிக்கு நான் இணங்கவில்லை. இந்நிலையில் ''பிரச்சனையை நேரில் பேசித் தீர்க்க'' திரு. ஹர்பகவன் என்பவரை பம்பாய்க்கு அனுப்புவதாக மண்டல்காரர்கள் எனக்கு தந்தி அடித்தனர். ஹர்பகவன் ஏப்ரல் 9 அன்று பம்பாய்க்கு வந்தார். உரையைப் பம்பாயில் அச்சிடுவதா, லாகூரில் அச்சிடுவதா

என்பது பற்றி அவர் கவலைப் பட்டதாகவே தெரிய வில்லை. சொல்லப் போனால் தன் பேச்சில் அவர் இந்த பிரச்சனையைத் தொடவே இல்லை. உரையின் உள்ளடக் கத்தை மட்டுமே அவர் அறிய ஆவல் காட்டினார். எனக்கு விஷயம் விளங்கலாயிற்று. உரையை லாகூரில் அச்சிடுவதில் மண்டலின் நோக்கம் பணசிக்கனமல்ல, உரையின் உள்ளடக் கத்தை அறிய வாய்ப்புக் கிட்டும் என்பது தான். நான் உரையின் படியொன்றை அவரிடம் தந்தேன். உரையின் சில பகுதிகள் அவருக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. லாகூருக்குத் திரும்பிவிட்டார். லாகூரில் இருந்து பின்வரும் கடிதத்தை அனுப்பியிருந்தார்.

லாகூர்
14-4-1936

அன்பார்ந்த டாக்டர் சாஹிப்:

12 ஆம் தேதி பம்பாய் வந்து சேர்ந்தேன். ஐந்தாறு நாட்கள் தொடர்ந்து இரவில் இரயில் பயணத்தின் போது தூக்கம் கெட்டதால் வந்து சேர்ந்த நாள் முதலே உடல் நலமில்லை. இங்கு வந்ததும் நீங்கள் அமிர்தசரஸ் வந்து சென்றதாக அறிந்தேன். உடல் நலத்துடன் இருந்தால் நான் உங்களை சந்தித்திருக்கக்கூடும். உங்கள் உரையை திரு. சான்ட்ராமிடம் மொழி பெயர்க்கத் தந்துள்ளேன். அவருக்கு மிகவும் பிடித்துள்ளது. ஆனால் 25 ஆம் தேதி அச்சுக்குத் தருவதற்குள் உரையை மொழி பெயர்த்து விட முடியுமா என்று ஐயப்படுகிறார். எப்படியும் அதற்கு பரவலான விளம்பரம் கிட்டும். இந்துக்களை அவர்களின் துயிலில் இருந்து அது தட்டி எழுப்பும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

பம்பாயில் உங்களிடம் நான் சுட்டிக்காட்டிய பகுதியை என் நண்பர்கள் சிலர் வாசித்தார்கள். அவர் களுக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டியுள்ளது. எந்த அசம்பாவிதமும் இன்றி கருத்தரங்கு இனிதே முடிய

வேண்டும் என விரும்பும் எங்களவர் குறைந்தபட்சம் இப்போதைக்கு ''வேதம்'' என்ற சொல்லை நீக்கிவிட வேண்டுமென விரும்புகிறார்கள். நீங்களே இதில் நல்ல முடிவு எடுக்கும்படி விட்டுவிடுகிறேன். இறுதி பாராக்களில் இந்த உரை உங்கள் சொந்த உரை என்றும், பொறுப்பு மண்டலுடையது அல்ல என்றும் நீங்கள் தெளிவுபடுத்தி விடுவீர்கள் என நம்புகிறேன். இப்படிச் சொல்வதைப் பொருட்படுத்த மாட்டீர்கள் என்றும், 1000 பிரதிகளையும் எங்களுக்கு அனுப்பி வைப்பீர்கள என்றும் நம்புகிறேன். அதற்கான தொகையைத் தந்துவிடுகிறோம். இது தொடர்பாக இன்று உங்களுக்கு ஒரு தந்தி அனுப்புகிறேன். இத்துடன் 100 ரூபாய்க்கான காசோலை இணைத்துள் ளேன். பெற்றுக் கொண்ட விவரம் தெரிவிக்கவும். பில்லும் தக்க நேரத்தில் அனுப்பி உதவவும்.

வரவேற்புக் குழுவின் கூட்டத்தைக் கூட்டியுள்ளேன். அவர்களின் முடிவை உடனடியாக உங்களுக்குத் தெரிவிப்பேன். நீங்கள் என் மீது காட்டும் அன்புக்கும், உங்கள் உரையைத் தயாரிப்பதற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமங்களுக்கும் என் உள்ளம் கனிந்த நன்றியை அன்பு கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள். உண்மையிலேயே உங்களுக்கு நாங்கள் பெரிதும் நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

தங்கள் உண்மையுள்ள

ஹர்பகவன்

பி. கு. — உரைப்படிகளை அச்சான உடன் பயணிகள் இரயில் மூலம் அனுப்பி வையுங்கள். அவற்றை அச்சுக்குக் கொடுக்க வேண்டும்.

□ □ □

அப்படியே நான் கையெழுத்துப் படியை அச்சகத் தாரிடம் கொடுத்து 1000 படிகள் அடிக்கச் சொன்னேன்,

எட்டு நாள் கழித்து ஹர் பகவனிடம் இருந்து மற்றுமொரு மடல் வந்தது:

லாகூர், 22—4—36

அன்புள்ள டாக்டர், அம்பேத்கர்,

உங்கள் தந்தியும் கடிதமும் கிடைக்கப் பெற்றோம். அதற்காக எங்கள் நன்றி உரித்தாகுக. உங்கள் விருப்பப் படி நாங்கள் மீண்டும் கருத்தரங்கை ஒத்தி வைத்துள் ளோம். ஆனால் பஞ்சாபில் தினமும் வெப்பம் அதிகரித்து வருவதால் 25, 26 தேதிகளில் நடத்திவிடுவது நல்லதாகும் எனக் கருதுகிறோம். மே மத்தியில் வெயில் மிகக் கடுமை யாக இருக்கும். பகல் பொழுதில் அமர்வை நடத்துவது வசதியாக இராது. எப்படியும் மே மத்தியில் நடத்தினாலும் எல்லாம் கூடிய வரை இனிதே நடைபெற எங்களால் இயன்றவரை முயற்சி செய்வோம்.

இருப்பினும் ஒரு விஷயத்தை உங்கள் அன்பான கவனத்துக்கு நாங்கள் கொண்டு வர நேர்ந்துள்ளது. மதமாற்றம் பற்றிய உங்கள் அறிவிப்பு குறித்து எங்களில் சிலர் கொண்டுள்ள ஐயப்பாடு பற்றி உங்களிடம் நான் சுட்டிக்காட்டியபோது, அது நிச்சயம் மண்டலின் எல்லைக்கு உட்பட்டது அல்ல என்றும் இது விசயமாக எங்கள் மேடை யில் இருந்து எதுவும் வெளியிடும் உத்தேசம் உங்களுக்கு இல்லை என்றும் நீங்கள் என்னிடம் கூறினீர்கள். அத்துடன் உங்கள் உரையின் கையெழுத்துப் படியை என்னிடம் தந்தபோது நீங்கள் என்னிடம் அதுவே உரையின் பிரதானப் பகுதி என்றும் இன்னும் இரண்டு மூன்று பாராக்களையே முடிவாகச் சேர்க்க விரும்புகிறீர்கள் என்றும் உறுதி செய்தீர்கள். உங்கள் உரையின் இறுதிப் பகுதி எங்களுக்குக் கிடைத்ததும் அது மிக நீண்டு இருப்பது கண்டு நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். அவ்வளவையும் வெகு சிலரே முழுசாகப் படிக்க முடியும் என்பதே எங்கள்

அச்சத்துக்கு காரணம். மேலும் அதில் நீங்கள் இந்து சமூகத்தில் இருந்து நீங்கள் வெளியேற தீர்மானித்து விட்டதாகவும், ஒரு இந்து என்ற முறையில் அதுவே உங்கள் கடைசி உரையாக இருக்கும் என்றும், பல இடங்களில் குறிப்பிட்டுள்ளீர்கள். வேதங்கள் முதலான இந்துக்களின் புனித நூல்களின் அறத்தன்மையையும் அறிவார்ந்த தன்மையையும் அனாவசியமாகத் தாக்கியுள்ளீர்கள். இந்து மதத்தின் சட்டப் பகுதியை விஸ்தாரமாக ஆராய்கிறீர்கள். எடுத்துக் கொண்ட பிரச்சனையுடன் இது எவ்வித தொடர்புமற்றது; சில பகுதிகள் முற்றிலும் தலைப்புக்குப் பொருத்தமற்றதாகவும் சம்பந்தமற்றதாகவும் இருக்கிறது. என்னிடம் நீங்கள் தந்த பகுதியுடன் உரையை முடித்திருந்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம். அல்லது தேவையானால் பார்ப்பனியம் முதலியவை பற்றி நீங்கள் எழுதி இருந்தவற்றை மட்டும் சேர்த்துக் கொண்டிருக்கலாம். இந்து மதத்தை முற்றாக ஒழிப்பது பற்றிக் கூறுவதும் இந்துக்களின் புனித நூல்களின் அறத்தன்மையைச் சந்தேகிப்பதும்; இந்து சமூகத்திலிருந்து வெளியேறும் உங்கள் எண்ணத்தை வெளிப்படுத்துவதுமான கடைசிப் பகுதி பொருத்தமானதாக எனக்குப் படவில்லை.

எனவே கருத்தரங்குப் பொறுப்பாளர்கள் சார்பில் நான் உங்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். மேற்சொன்ன பகுதிகளை நீக்கிவிடுங்கள். என்னிடம் முதலில் தந்த அளவிலோ பார்ப்பனியம் பற்றி சில பாராக்கள் சேர்த்தோ உரையை முடித்து விடுங்கள். அனாவசியமாகத் தூண்டிவிடும் விதமாக உரையை அமைப்பது அறிவுடைமையாகப் படவில்லை. உங்கள் உணர்வுகளை எங்களில் பலரும் பகிர்ந்து கொள்கிறோம். இந்து மதத்தை மறுசீரமைப்பதற்கான உங்கள் இயக்கத்தில் ஒன்றுபட மிகவும் விரும்புகிறோம். உங்கள் கொள்கைக்கு ஆள் சேர்க்க நீங்கள் முடிவு செய்யும் பட்சத்தில் பஞ்சாபில் இருந்து சீர்திருத்தவாதிகளின் பெரும்படையே உங்களுடன் வந்து சேரும் என்று உறுதி கூறுகிறேன்.

உண்மையில், சாதிப் பிரச்சனையை நீங்கள் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்திருப்பதால் சாதி அமைப்பு என்ற தீமையை ஒழிப்பதில் நீங்கள் எங்களுக்கு முன்னணியில் நிற்பீர்கள். ஒரு புரட்சியை நிகழ்த்துவதன் மூலம் எங்கள் கரங்களைப் பலப்படுத்துவீர்கள். இந்த பிரமாண்டமான பணியின் மையமாக உங்களை ஆக்கிக் கொள்வீர்கள் என்று எண்ணினோம். ஆனால் உங்கள் அறிவிப்பு— அதுவும் பல முறை செய்யப்பட்டதும்— தன் ஆற்றலை இழந்து சலிப் பேற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் நீங்கள் மீண்டும் விசயத்தை முழுவதுமாக ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ''இந்துக்கள் தம் சொந்தபந்தத்தையும் மதக் கருத்துகளையும் உதறிட நேர்ந்தாலும் கூட தயங்காமல் சாதி அமைப்பை ஒழிக்கும் பணியில் நேர்மையாக உழைக்க முன்வருவார்களானால் அந்தப் பணியில் முன்னணிப் பங்கை ஆற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைவேன்'' என்று உங்கள் உரையை முடித்தால் அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று யோசனை கூறுகிறேன். அப்படிச் செய்வீர்களானால் அந்த முயற்சிக்கு பஞ்சாபில் இருந்து உடனடி ஆதரவு கிட்டும் என்று உறுதியாகக் கூறுவேன்.

ஏற்கெனவே நிறைய பொருள் செலவு, தாமதம். எனவே மேலே கூறியபடி உங்கள் உரையை மட்டுப்படுத்திக் கொண்டதாக மறுதபாலில் தெரிவித்துதவினால் நன்றி உள்ளவனாவேன். உரையை முழுசாகத்தான் பதிப்பிக்க முடியும் என்று இன்னும் நீங்கள் வற்புறுத்தினால் அது சாத்தியப்படாது என்று மிக்க வருத்தத்துடன் கூறுகிறோம். அதைவிட கால வரையறையின்றி கருத்தரங்கை ஓத்திப்போடுவதே எங்களுக்கு நல்லதாகும். இப்படித் திரும்பத் திரும்ப தள்ளிவைப்பதால் மக்கள் மத்தியில் எங்கள் மீதுள்ள நல்லெண்ணத்தை இழந்துவிடுவோம் என்றாலும் வேறுவழியில்லை. இருந்தாலும் சாதி அமைப்பைப் பற்றிய உங்கள் உரை இதுவரை எழுதப்பட்ட

வற்றிலேயே மதிப்புமிக்கது. அதை எழுதினதன் மூலம் எங்கள் மனதில் அழியாத இடம் பெற்று விட்டீர்கள் என்பதையும் நாங்கள் கூறவேண்டும். இதைத் தயாரிப்ப தில் உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

உங்கள் அன்புக்கு மிக்க நன்றி. வாழ்த்துகளுடன்

தங்கள் உண்மையுள்ள

ஹர் பகவன்

இதற்கு நான் பின்வரும் பதிலை அனுப்பினேன்:

27—4—1936

அன்புள்ள திரு. ஹர்பகவன்,

உங்கள் 22 ஆம் தேதிய கடிதம் கிடைத்தது. 'உரையை முழுசாக அச்சிடவேண்டுமென நான் வலியுறுத்தினால் கருத்தரங்கை காலவரையறையின்றி ஒத்திப்போட நேரும்' என்ற முடிவுக்கு வரவேற்புக்குழு வந்திருப்பது கண்டு வருந்துகிறேன். நானும் என் பதிலைக் கூறியாக வேண்டும். சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி என் உரையைக் கத்தரித்தே ஆகவேண்டுமென மண்டல் வற்புறுத்தினால் நானும் கருத்தரங்கை இரத்து செய்யவே கூறுவேன். தெளிவற்ற பதங்கள் எனக்குப் பிடிக்காது. என் முடிவு உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் தன் உரையைத் தயாரிப்பதற்கு ஒவ்வொரு தலைவருக்கும் உரிமை உண்டு. மாநாட்டில் தலைமை தாங்கும் கௌரவத் துக்காக அந்த உரிமையை விட்டுத்தர என்னால் முடியாது. தனக்குச் சரி என்று பட்ட வழியை; தான் தலைமை தாங்கும் கருத்தரங்கில் தெரியப்படுத்த ஒவ்வொரு தலை வருக்கும் கடமை உண்டு. மண்டலைத் திருப்திப் படுத்து வதற்காக அந்தக் கடமையை விட்டுவிட என்னால் முடியாது. பிரச்சனை கொள்கைப் பிரச்சனை, எனவே இதில் எந்தவித சமரசத்துக்கும் இடமில்லை என்று எண்ணுகிறேன்.

வரவேற்புக் குழுவின் முடிவு சரியா என்ற சர்ச்சைக்குள் நான் போகப் போவதில்லை. ஆனால் என்மேல் பழியைப் போடுவதான சில காரணங்களை நீங்கள் தந்திருப்பதால் அவற்றுக்கு நான் பதில் கூறியாக வேண்டும். முதலாவ தாக வ. குழு ஆட்சேபித்திருக்கும் உரைப்பகுதியின் கருத்து கள் மண்டலுக்குப் புதியவை என்பதை மறுக்கிறேன். திரு. சான்ட்ராமே சாட்சி. அவருக்கு நான் எழுதிய பதில் ஒன்றில் ''சாதி அமைப்பை உடைக்க உண்மையான வழி சமபந்தி விருந்துகளோ, கலப்புமணங்களோ அல்ல, சாதி யின் அடிப்படையாக உள்ள மதக் கருத்துகளை ஒழிப் பதே'' என்று கூறி இருந்தேன். இது ஒரு புதிய கருத்து என்றும் எனவே இதை விளக்கி எழுதுமாறும் திரு. சான்ட் ராம் கேட்டுக் கொண்டார். திரு. சான்ட்ராமின் இந்த வேண்டுகோளுக்கிணங்கியே ஒரு வாக்கியத்தில் என் கடிதத் தில் எழுதிய கருத்தை என் உரையில் விரித்து எழுத வேண்டும் என நினைத்தேன். எனவே உரையின் கருத்து கள் முற்றிலும் புதிது என்று நீங்கள் கூற முடியாது அல்லது குறைந்தது, உங்கள் மண்டலின் ஜீவனாகவும் கலங்கரை விளக்கமாகவும் நிற்கும் திரு. சான்ட்ராமுக்காவது அவை புதியதல்ல. ஆனால் நான் இதற்கும் மேல் சென்று கூறுகி றேன்— நான் என் உரையின் அந்தப் பகுதியை எழுதியது என் விருப்பத்துக்காக மட்டுமல்ல, வார்த்தை நிறைவு செய்ய அந்தப் பகுதி அத்தியாவசியமாகத் தேவை என்பதா லும் ஆகும். அந்தப் பகுதியை உங்கள் குழு பொருத்த மற்றது, சம்பந்தமற்றது என்று சித்தரித்ததைப் படித்து பிரமித்தேன். நான் ஒரு வக்கீல். உங்கள் குழுவினரைப் போலவே எனக்கும் பொருத்தப்பாட்டின் இலக்கணம் தெரியும். நீங்கள் ஆட்சேபிக்கும் பகுதி மிகவும் பொருத்த மானது மட்டுமல்ல முக்கியமானதும் கூட என அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறேன். உரையின் இந்தப் பகுதியில் தான் சாதி அமைப்பை உடைப்பதற்கான வழிவகையை விவாதித்துள்ளேன். சாதியை ஒழிக்க மிகச் சிறந்த வழி என நான் கண்ட முடிவு திகைப் பூட்டுவதாகவும் வேதனை

அளிப்பதாகவும் இருக்கலாம். என் ஆய்வுமுறை தவறானது என்று சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் சாதியின் பிரச்சனைகளை அலசும் உரையில் சாதியை எப்படி ஒழிக்க முடியும் என்பது பற்றி வெளிப்படையாக நான் விவாதிக்கக் கூடாது என்று நீங்கள் சொல்ல முடியாது.

உங்கள் இன்னொரு புகார், உரையின் நீளத்தைப் பற்றியது. இந்தக் குறைக்கு உரையிலேயே நான் மன்னிப்புக் கோரியுள்ளேன். ஆனால் இதற்கு உண்மையில் யார் காரணம்? உங்களுக்கு தொடக்கத்தில் நடந்தது எல்லாம் தெரியாது போலும். ஏனென்றால் முதலில் நான் என் வசதிப்படி ஒரு சுருக்கமான உரையை எழுதவே திட்டமிட்டிருந்தேன். ஏனென்றால் விரிவான ஆய்வுரையை எழுதுவதற்கான அவகாசமோ தெம்போ என்னிடம் இருக்கவில்லை. மண்டல்தான் விஷயத்தை விரிவாக எழுதும்படி வேண்டியது. மண்டல்தான் சாதி அமைப்பு தொடர்பான கேள்விப்பட்டியலை அனுப்பி என் உரையில் அவற்றுக்குப் பதில் தருமாறும், ஏனென்றால் அந்தக் கேள்விகளைத்தான் மண்டலின் எதிராளிகள் அடிக்கடி எழுப்புகிறார்கள், ஆனால் அவர்களுக்குத் திருப்திகரமாக விடையளிக்க மண்டல் கஷ்டப்படுகிறது என்றும் கேட்டுக் கொண்டது. மண்டலின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் முயற்சியாகவே உரை இவ்வளவு தூரம் நீண்டுவிட்டது. ஆகவே உரையின் நீளத்துக்கு நான் காரணமல்ல என்பதை இப்போது ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்து மதத்தை அழிப்பது பற்றி நான் பேசியதற்கு மண்டல் இவ்வளவு தூரம் நொந்துவிடும் என நான் எதிர் பார்க்கவில்லை. முட்டாள்கள்தான் வார்த்தைகளுக்குப் பயப்படுவார்கள். அப்படியும் மற்றவர்கள் மனதில் தப்பர்த்தம் உண்டாகாதிருப்பதற்காக, மதம் என்றும், மத ஒழிப்பு என்றும் எதை நான் அர்த்தப்படுத்துகிறேன் என்பதை நான் பிரயாசை எடுத்து விளக்கி இருக்கிறேன். என் உரையைப் படிக்கும் யாரும் என் கருத்தை தவறாகப்

புரிந்து கொண்டுவிட முடியாது என்பது உறுதி. போதிய விளக்கம் இருந்தும் 'மத ஒழிப்பு' போன்ற வெறும் வார்த்தைகளைக் கண்டு உங்கள் மண்டல் மிரள்கிறது என்கையில் அது என் மதிப்பில் உயரவில்லை. சீர்திருத்த வாதியின் நிலைபாட்டை எடுத்துவிட்டு, பின் (அதை நடைமுறையில் கடைப்பிடிப்பது ஒருபுறம் இருக்கட்டும்) அந்த நிலையாட்டின் தர்க்கரீதி விளைவை பார்க்கக்கூட மறுக்கிற எவரையும் என்னால் மதிக்க முடியாது.

என் உரையைத் தயாரிப்பதில் எந்தவித கட்டுப் பாட்டுக்கும் நான் ஒத்துக் கொள்ளவில்லை என்பது உங்களுக்கே தெரியும். உரையில் என்ன வரவேண்டும் என்ன வரக்கூடாது என்று எனக்கும் மண்டலுக்கும் இடை யில் ஒரு தடவை கூட விவாதம் எழவில்லை. இந்த விசயம் பற்றி நான் கொண்டுள்ள கருத்துகளை விவாதிக்க எனக்கு சுதந்திரம் உண்டு என்று உள்ளபடியே நான் எடுத்துக் கொண்டேன். உண்மையில் நீங்கள் பம்பாய்க்கு ஏப்ரல் 9ஆம் தேதி வரும்வரை நான் எந்தவிதமான உரையை தயார் செய்து வருகிறேன் என்பது மண்டலுக்குத் தெரி யாது. நீங்கள் பம்பாய்க்கு வந்தபோது ஒடுக்கப்படும் வகுப்புகளின் மதமாற்றம் பற்றிய என் கருத்தை வெளி யிட உங்கள் மேடையைப் பயன்படுத்த விருப்பமில்லை என்று நான் தான் வலிய வந்து கூறினேன். உரையில் நான் அந்த வாக்குறுதியைக் கச்சிதமாகக் கடைப்பிடித்துள் ளேன் என்றே நினைக்கிறேன். போகிற போக்கில் மறை முகமாக 'நான் இங்கு இருக்கமாட்டேன் என்பதற்காக வருந்துகிறேன்...' என்றவாறு தொட்டுச் செல்வதைத் தவிர உரையில் இவ்விசயத்தை எங்குமே பேசவில்லை. இவ்வளவு மேலோட்டமாகவும் மறைமுகமாகவும் வெளி யிட்ட ஒரு கூற்றையே நீங்கள் ஆட்சேபிப்பதைப் பார்க்கும் போது, நான் பின்வரும் கேள்வியைக் கேட்டே ஆக வேண்டும்— உங்கள் கருத்தரங்குக்கு தலைமை தாங்க

ஒத்துக் கொண்டதற்காக, ஒடுக்கப்படும் வகுப்புகளின் நம்பிக்கை மாற்றம் குறித்த என் கருத்துகளை நிறுத்தி வைக்கவோ கைவிடவோ செய்வேன் என்று நினைத்தீர் களா? அப்படி நினைத்திருந்தால் அது உங்கள் தவறு. அதற்கு நான் பொறுப்பல்ல. என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து கௌரவித்ததற்காக என் மதமாற்றத் திட்டத்தின் மீது எனக்குள்ள நம்பிக்கையைக் கைவிட வேண்டும் என்று உங்களில் யாராவது ஒருவர் குறிப்பாகச் சொல்லி இருந்தால் கூட, நான் வெளிப்படையான-நேரடியான சொற்களில் எனக்கு உங்கள் கௌரவத்தை விட என் நம்பிக்கையே பெரிசு என்று சொல்லி இருப்பேன்.

உங்கள் 14 ஆம் தேதியக் கடிதத்துக்குப் பிறகு வந்துள்ள சமீப கடிதம் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. யார் இதைப் படித்தாலும் அவர்களும் அதிர்ச்சி அடை யவே செய்வார்கள். வரவேற்புக் குழுவின் இந்த திடீர்க் குட்டிக்கரணத்துக்கு காரணம் புரியவில்லை. உங்கள் 14 ஆம் தேதிக் கடிதத்தின் போது குழுவிடம் இருந்த நகல் வரைவுக்கும் இப்போது நான் கொடுத்துள்ள இறுதி வரைவுக்கும் சாரத்தில் எந்த வேறுபாடும் இல்லை. பழைய வரைவில் இல்லாத எந்த ஒரு புதிய கருத்தும் இறுதி வரைவில் சேர்க்கப்பட்டுள்ளதாக உங்களால் காட்ட முடியாது. ஒரே வித்தியாசம் என்னவென்றால் இறுதி வரைவு விளக்கமாக எழுதப்பட்டிருப்பதுதான். எனவே ஏதாவது ஆட்சேபணை தெரிவிப்பதென்றால் 14ஆம் தேதியே நீங்கள் சொல்லியிருக்க முடியும். சொல்லவில்லை. அதற்குப் பதில் 1000 படிகள் அடிக்கச் சொல்லிவிட்டீர் கள். நீங்கள் தெரிவித்த வார்த்தை மாற்றங்களை ஏற்பதோ மறுப்பதோ என் உரிமை என்று சொல்லி விட்டீர்கள். அவ்வாறே அச்சடித்த 1000 படிகளும் என்னிடம் கிடக்கின்றன. எட்டுநாள் கழித்து உரைக்கு ஆட்சேபணை தெரிவித்தும், அதை மாற்றாவிடில் கருத் தரங்கு இரத்தாகும் என்றும் எழுதுகிறீர்கள். உரையில் எந்த மாறுதலும் செய்வதற்கில்லை என்பதை நீங்கள்

அறிந்திருக்கவேண்டும். நீங்கள் பம்பாய் வந்திருந்தபோதே நான் சொன்னேன். ஒரு கால் புள்ளியைக் கூட மாற்ற முடியாது. என் உரையை தணிக்கை செய்வதை அனுமதிக்க முடியாது. நான் முடித்துத் தரும் வடிவத்தில் உரையை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றேன். உரையின் கருத்துக்கான முழுப் பொறுப்பும் என்னைச் சேர்ந்தது. கருத்தரங்கு அவற்றை ஏற்காவிட்டால் அவற்றுக்கு எதிராக கருத்தரங்கு தீர்மானம் நிறைவேற்றினாலும் கவலையில்லை என்று சொன்னேன். என் கருத்துகளுக் காக மண்டல் சிரமப்பட்டுவிடக் கூடாது என்பதிலும் உங்கள் கருத்தரங்குடன் மிக நெருக்கமான உறவில் மாட்டிவிடக் கூடாது என்பதிலும் மிகுந்த கவனமாக இருந்திருக்கிறேன். என் உரை தொடக்க உரைபோல் இருக்கட்டும், தலைமை உரைக்கும் தீர்மானங்களைக் கவனிக்கவும் வேறு ஆளைப் பாருங்கள் என்றும் மண்ட விடம் யோசனை சொன்னேன். 14 ஆம் தேதி இது பற்றி முடிவெடுக்க வேறு யாரையும் விட உங்கள் குழுவுக்கு மேலான வாய்ப்பு இருந்தது. அதைச் செய்ய குழு தவறி விட்டது. இதற்கிடையில் அச்சு செலவும் வைத்து விட்டீர் கள். கொஞ்சம் கூடுதல் மன உறுதியைக் கடைப்பிடித்தீர் களானால் இதைத் தவிர்த்திருக்க முடியும்.

உங்கள் குழுவின் முடிவுக்கும் உரையின் கருத்துகளுக் கும் தொடர்பில்லை என்று உறுதியாகக் கூறுகிறேன். அமிர்தசரசில் நடைபெற்ற சீக்கிய பிரச்சார கருத்தரங்குக்கு நான் வந்திருந்ததற்கும் நீங்கள் எடுத்த முடிவுக்கும் வேண்டுமானால் நிரம்ப தொடர்புண்டு என்று நம்ப காரணங்கள் உள்ளன. ஏப்ரல் 14 ஆம் தேதியிலிருந்து 22 ஆம் தேதிக்குள் உங்கள் குழு அடித்த குட்டிக்கரணத்துக்கு வேறு எதுவும் திருப்திகரமான காரணமாக இருக்க முடியாது. இந்த சர்ச்சையை நான் நீட்டக் கூடாது. என் தலைமையின் கீழான கருத்தரங்க அமர்வு ரத்தாகிவிட்டது என்று உடனடியாக அறிவித்து விடும்படி கேட்டுக் கொள்

கிறேன். கெடு முழுவதும் தீர்ந்து விட்டது. இனிமேல் முழு உரையை உங்கள் குழு ஏற்க முன் வந்தாலும் தலைமை தாங்க நான் தயாராக இல்லை. உரையைத் தயாரிப்பதில் நான் பட்டுள்ள பாட்டைப் புரிந்து கொண்டு மெச்சியதற்கு நன்றி கூறுகிறேன். நிச்சயம் இந்த வேலையால் நான் பயனடைந்துள்ளேன். என் ஒரே வருத்தம் என்னவென்றால் உடல் நலமில்லாத சமயத்தில் இந்த வேலைக்காக இவ்வளவு கடுமையாக உடலை வருத்த நேர்ந்ததே என்பது தான்.

உங்கள் உண்மையுள்ள,

பி. ஆர். அம்பேத்கர்

என் தலைமையை மண்டல் இரத்து செய்ததன் காரணங்களை மேற்கண்ட கடிதப் போக்குவரத்து வெளிப்படுத்தி இருக்கும். இப்போது குற்றம் யாருடையது என்பதை வாசகரே தீர்மானித்துக் கொள்ள முடியும். ஒரு தலைவரின் கருத்துகளில் உடன்பாடு இல்லாததால் தலைவரையே இரத்து செய்தது இதுவே முதல் தடவை என்று எண்ணுகிறேன். அப்படி இல்லாவிட்டாலும் சாதி இந்துக்களின் கருத்தரங்குக்குத் தலைமை தாங்க நான் அழைக்கப் பட்டது என் வாழ்வில் நிச்சயமாக இதுவே முதல் தடவை. இப்படித் தோல்வியில் முடிந்தது பற்றி வருந்துகிறேன். ஆனால் தம் வைதீக சகாக்களிடமிருந்து துண்டித்துக் கொள்ள விரும்பாத சாதி இந்துக்களின் சீர்திருத்தப் பிரிவினருக்கும், சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டே ஆக வேண்டும் என்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லாதிருக்கும் தீண்டத்தகாதோரின் தன்மானப் பிரிவினருக்கும் இடையிலான உறவு வேறு எப்படி முடியும்?

ராஜகிருகம், தாதர், பம்பாய் - 14, 15—5—1936.

பி. ஆர். அம்பேத்கர்

நண்பர்களே!

இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கும்படி மிகுந்த அன்போடு என்னை வேண்டிக் கொண்ட ஜாத்-பட்-தோடக் மண்டலின் உறுப்பினர்களுக்காக உண்மையிலேயே மிகவும் வருந்துகிறேன். என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது குறித்து பல்வேறு கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டி இருக்கும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். லாகூரில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்கு பம்பாயில் இருந்து ஒரு மனிதனை இறக்குமதி செய்தது ஏன் என்ற கேள்விக்கு மண்டல் ஆளாக வேண்டி இருக்கும். இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்க என்னைவிடத் தகுதி வாய்ந்த எவரேனும் ஒருவரை மண்டலால் மிக எளிதாகக் கண்டுபிடித்திருக்க முடியும் என நான் நம்புகிறேன்.

நான் இந்துக்களை விமர்சித்து இருக்கிறேன். இந்துக்களால் பூஜிக்கப்படுகிற மகாத்மாவின் மேலாண்மையை நான் மறுத்திருக்கிறேன். இந்துக்கள் என்னை வெறுக்கிறார்கள். அவர்களுடைய தோட்டத்தில் உள்ள நச்சுப் பாம்பாக என்னை அவர்கள் பார்க்கிறார்கள். அப்படி இருக்க, கவுரவம் மிக்க இந்தப் பொறுப்பை ஏற்கும்படி என்னை அழைத்தது ஏன்? என்று அரசியல் அறிவுள்ள இந்துக்கள் கேட்கப் போகும் கேள்விக்கு மண்டல்காரர்கள் விளக்கம் தந்தாக வேண்டி வரும்.

இது மிகவும் துணிச்சலான ஒரு செயலே. என்னைத் தலைவராகத் தேர்ந்து எடுத்தது தங்களை அவமதித்தது போலாகும் என்று சில அரசியல் இந்துக்கள் நினைத்தால் கூட வியப்பில்லை. வெறும் மத அபிமானம் மட்டுமே உள்ள சாதாரண இந்துக்களுக்கும் கூட இது உறுத்தலாகவே இருக்கும். தலைவன் ஒருவனை தேர்ந்தெடுப்பதில் உள்ள சாஸ்திர விதிகளை மீறியது ஏன்? என்பதற்கான விளக்கத்தையும் மண்டல் அளிக்க வேண்டி இருக்கும்.

சாஸ்திரங்களின்படி மற்ற மூன்று வருணங்களுக்கும் பிராமணன் குரு ஸ்தானத்தில் அமர்த்தப் பட்டுள்ளான்.

வர்ணானாம் ப்ராஹ்மனோ குரு

என்பது சாஸ்திர விதியாகும். எனவே ஒரு இந்து யாரிடம் கல்வி கற்க வேண்டும், யாரிடம் கல்வி கற்கக் கூடாது என்பதை அறிந்தே உள்ளான் என்பதை மண்டலும் அறிந்தே உள்ளது. ஒரு இந்துவானவன் பிராமணர் அல்லாத எவரையும் அவர் அதிக விஷய ஞானம் உடையவர் என்றாலும் கூட அவரை குருவாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சாஸ்திரங்கள் விதித்துள்ளன.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சந்நியாசி (Saint) ராமதாசர். இவர் சிவாஜியை இந்து ராஜ்யம் அமைக்குமாறு தூண்டியவர் என்று கூறப்படுகிறது. தன் 'தசபோதனை'யில் (மராத்தி மொழியில் உள்ள சமூக அரசியல் மதக் கட்டளைகள் இவை) இந்துக்களை நோக்கி ராமதாசர் அந்த்யாஜா (antyaja) ஒருவனை அவன் கல்வி அறிவு பெற்றவன் என்பதற்காக மட்டுமே குருவாக ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற கேள்வியை கேட்கிறார். அவ்வாறு ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று விடையும் அளித்துள்ளார். இம்மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் என்ன விதமாக பதில் கொடுப்பது என்ற பிரச்சனையை மண்டலுக்கே விட்டு விடுகிறேன். தலைமைப் பொறுப்புக்கு உரிய ஒருவரைத் தேடி பம்பாய்வரை வந்ததற்கும், இந்துக்களுக்கு அறவே பிடிக்காத ஒரு மனிதனை அப்பொறுப்புக்கு தேர்ந்தெடுத்ததற்கும், 'அந்த்யாஜா' (தீண்டத்தகாதவர்) ஒருவரை தேர்ந்தெடுத்து அவரை பிற சவர்ணர் (savarnas) அடங்கிய கூட்டத்திடையே பேச அனுமதிக்கும் 'இழிசெயலை' செய்யத் தூண்டியதற்கும் என்ன காரணமோ? மண்டல்காரர்களுக்கே வெளிச்சம். என்னைப் பொறுத்தவரை உங்களுடைய அழைப்பை என் சொந்த விருப்பத்தை மீறியே ஏற்றுக் கொண்டுள்ளேன். என்னைச் சார்ந்த என் சக தீண்டத்தகாதவர்களின் விருப்பத்துக்கு எதிராகத் தான் உங்கள் வேண்டுகோளை

ஏற்றுக்கொண்டுள்ளேன் என்பதை முதற்கண் தெளிவாக் கிட விரும்புகிறேன்.

இந்துக்கள் என்னை வெறுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அவர்களுக்குப் பிரியமான மனித னாக இல்லை என்பதையும் நான் அறிவேன். இதையெல் லாம் தெரிந்து கொண்டுதான் அவர்களிடம் இருந்து விலகி இருக்கிறேன். அவர்கள் மனசைக் கஷ்டப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. என் இடத்தில் இருந்தபடியே என் எண்ணங்களை நான் வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறேன். அந்த செயலே போதுமான அளவுக்கு அவர்களுக்கு ஆத்திரத்தையும் எரிச்சலை யும் உண்டாக்கி இருக்கிறது. இதைத்தவிர அவர்களுடைய மேடையிலேயே ஏறி நேருக்கு நேராக அவர்களைச் சாட வேண்டுமென்ற குறிப்பான விருப்பமெல்லாம் எனக்குக் கிடையாது. நான் தலைமை ஏற்றிருப்பது நீங்கள் என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததினால் தானே தவிர; என் விருப்பத்தினால் அல்ல. உங்களுடைய குறிக் கோள் எப்போதும் எனக்கு ஏற்புடையதே. அந்த குறிக் கோளுக்கு உதவுகிற ஒரு வாய்ப்புக்கிட்டுகிற போது அது வும் குறிப்பாக அந்தக் குறிக்கோளுக்கு நான் உதவக்கூடும் என்று நீங்கள் எண்ணுகிற போது, அந்த வாய்ப்பை மறுக்கக் கூடாது என்று நான் எண்ணினேன். நான் இன்றைக்குக் கூற இருப்பது நீங்கள் தீர்வுகாண முயற்சி செய்யும் பிரச்சனையைத் தீர்க்க எந்த வழியிலாவது உதவக்கூடுமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இந்தப் பிரச்சனையைப் பற்றி என் பார்வை என்ன என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

## 2

இந்தியாவில் சமுதாயச் சீர்திருத்தம் என்பது சொர்க்கத்துக்குச் செல்லும் பாதையைப் போலவே கரடு முரடானது, துன்பம் நிறைந்தது. எளிமையானது அல்ல.

இந்தியாவில் சமுதாயச் சீர்திருத்தத்துக்கு ஆதரவாளர்கள் சிலர், விமர்சகர்கள் பலர். விமர்சகர்கள் 2 வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். அரசியல் சீர்திருத்தவாதிகளைக் கொண்டது ஒரு பிரிவு. சோசலிஸ்டுகள் மறு பிரிவு. 'கேடுகெட்ட சமூகப் பழக்க வழக்கங்களால் கெட்டி தட்டிப்போன இந்து சமுதாயமானது மேம்பாடு காண்பதற்கான சூழலில் இல்லை. இந்த கேடு கெட்ட தன்மைகளை அழித்தொழிக்க நீண்ட நெடிய முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.' 'சமுதாய மேம்பாடு இல்லாமல் ஏனைய துறைகளில் நிரந்தரமான முன்னேற்றம் எதையும் சாதித்து விட முடியாது' என்பதை ஒரு கால கட்டத்தில் எல்லாரும் உணர்ந்தே இருந்தார்கள். இந்தக் காரணத்தினால் தான் தேசிய காங்கிரஸ் தனியாகத் தோன்றாமல் 'சோசல் கான்பெரன்சோடு' சேர்ந்தே தோன்றியது.

காங்கிரசானது அரசியல் இயக்கங்களில் இருந்த குறைபாடுகளை ஆதரித்துக் கொண்டிருந்த நேரத்தில் 'சோசல் கான்பெரன்ஸ்' (சமூக மாநாடு) இந்துச் சமூகத்தின் சமுதாய இயக்கங்களில் இருந்த குறைபாடுகளை நீக்குவதில் ஈடுபட்டு இருந்தது. சிறிது காலத்துக்கு காங்கிரசும் கான்பெரன்சும் பொது நடவடிக்கைக்கான இரண்டு அங்கங்களாக செயல்பட்டன. தங்கள் வருடாந்திரக் கூட்டங்களைக் கூட ஒரே பந்தலில் நடத்திக் கொண்டன. ஆனால் விரைவில் இந்த 2 பிரிவுகளும் இருவேறு கட்சிகளாக உருவெடுத்தன. அரசியல் சீர்திருத்தக்கட்சி ஒன்று. சமுதாய சீர்திருத்தக் கட்சி ஒன்று. இந்த 2 கட்சிகளுக்கும் இடையில் கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. அரசியல் சீர்திருத்தப் பிரிவு தேசிய காங்கிரசை ஆதரித்தது. சமுதாய சீர்திருத்தப் பிரிவு ''சோசல் கான்பெரன்சை'' ஆதரித்தது. இவ்வாறாக இந்த 2 பிரிவுகளும் 2 பகை முகாம்களாக மாறின. அவைகளுக்கு இடையே இருந்த பிரச்சனை சமுதாய சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம் இவற்றில் எதன் பின் எது நடக்க வேண்டியது என்பது

தான். பத்தாண்டுகள் வரை இந்த இருவேறு சக்திகளும் சம நிலையில் இருந்தன. ஆகவே யாருக்கும் வெற்றி இல்லாமல் யுத்தம் நடந்து கொண்டு இருந்தது. எவ்வாறாயினும் சோசல் கான்பெரன்சின் எதிர்காலம் வெகு வேகமாக மங்கி வந்தது.

'சோசல் கான்பெரன்சின்' கூட்டத் தொடர்களுக்கு தலைமை தாங்கிய கனவான்கள் ''படித்த இந்துக்களில் பெரும்பான்மையோர் அரசியல் முன்னேற்றத்துக்கே ஆதரவாக இருக்கிறார்கள். சமுதாய சீர்திருத்தத்தில் கவனம் செலுத்துவதில்லை'' என்று குறைபட்டுக் கொண்டார்கள். காங்கிரசுக்கான ஆதரவு தொடர்ந்து பெருகி வருகிறது. சோசல் கான்பெரன்சுக்கு மக்களின் ஆதரவு குறைந்து கொண்டே வருகிறது என்றும் அவர்கள் பொருமினர். படித்த கூட்டத்தின் அக்கறையின்மையும் வெகுமக்களின் ஆதரவின்மையும் சோசல் கான்பெரன் சாரை காங்கிரசுக்கு எதிரி முகாமாக உருவாக்கியது. அதற்கு முன்பெல்லாம் 'சோசல் கான்பெரன்ஸின்' கூட்டம் நடக்க காங்கிரஸ் தன் பந்தலை பயன்படுத்த பெயரளவிலாவது அனுமதித்தது. காலஞ் சென்ற திலகரின் தலைமைக் காலத்திலிருந்து அதைக்கூட செய்யத் தயாராக இல்லை. ''சோசல் கான்பெரன்ஸ்'' தனக்காக தன்னுடைய சொந்தப் பந்தலை போட முயன்ற போது பந்தலை எரித்துவிடப் போவதாக எதிராளிகளிடம் இருந்து மிரட்டல் ஒன்று கிளம்பியது. அந்த அளவுக்கு பகைமை உணர்வு உச்ச நிலையில் இருந்தது. இவ்வாறாக காலப் போக்கில் அரசியல் சீர்திருத்தத்துக்கு ஆதரவாக இருந்த கட்சி வென்றது. சோசல் கான்பெரன்ஸ் மங்கி மறைந்தது. மறக்கப்பட்டது. 1892 அலகாபாத்தில் காங்கிரசின் எட்டாவது கூட்டத்துக்கு தலைவர் என்ற முறையில் திரு. பானர்ஜி என்பவர் ஆற்றிய உரையானது சோசல் கான்பெரன்சின் சாவுக்கு வாசிக்கப்பட்ட இரங்கல் அறிக்கை போல் இருந்தது. காங்கிரசின் மனோபாவத்தை

வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்ற முறையில் அவருடைய பேச்சின் ஒரு பகுதியைத் தருகிறேன்:

> நம்முடைய சமுதாய அமைப்பைச் சீர்திருத்தாதவரை அரசியல் சீர்திருத்தத்துக்கு நாம் அருகதை அற்றவர்கள் என்று கூறுபவர்களை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சமுதாய சீர்திருத்தத்துக்கும் அரசியல் சீர்திருத்தத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நம்முடைய விதவைகள் மறுமணமே செய்து கொள்வதில்லை. மற்ற நாடுகளைவிட நம் நாட்டுப் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடந்து விடுகிறது. நாம் நம் நண்பர்களை காணச் செல்லும் போது நம் மனைவியையும் பெண் மக்களையும் நம்முடன் அழைத்துச் செல்வதில்லை. ஆக்ஸ்போர்டுக்கோ கேம்பிரிட்ஜ்க்கோ நம் பெண் மக்களை நாம் அனுப்புவதில்லை— இக்காரணங்களால் நாம் அரசியல் சீர்திருத்தத்துக்கு அருகதை அற்றவர்களாகி விடுவோமா என்ன? (கைத்தட்டல்)

பானர்ஜி அரசியல் சீர்திருத்தத்துக்கான பிரச்சனையை எவ்வாறு பார்க்கிறார் என்பதை உங்கள் முன் வைத்து விட்டேன். காங்கிரசுக்கு வெற்றி கிடைத்ததற்காக மகிழ்பவர்கள் பலர். ஆனால் சமுதாய சீர்திருத்தத்தின் முக்கியத்தை முன்னிறுத்துவோர், பானர்ஜியால் முன் வைக்கப்பட்டது போன்ற வாதம் முடிவானதுதானா என்று கேட்கக் கூடும். நியாயத்தின் பக்கம் நிற்கிறவர்களுக்குத் தான் வெற்றி கிடைத்தது என்பதை அந்த வாதம் நிரூபிக்கின்றதா? சமுதாய சீர்திருத்தம் அரசியல் சீர்திருத்தத்தின் மீது எந்தவித தாக்கத்தையுமே ஏற்படுத்தாது என்று அந்த வாதம் தீர்மானமாக நிரூபிக்கின்றதா? என்ற கேள்விகளை அவர்கள் எழுப்பக்கூடும். பிரச்சனையின் மறுபக்கத்தை நான் எடுத்துச் சொன்னால் பிரச்சனையை முழுவதுமாகப்

புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். நான் சொல்லப் போகும் உண்மைக்குச் சான்றாக, இன்று தீண்டத் தகாதோர் எப்படி எல்லாம் நடத்தப் படுகின்றனர் என்பதை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

1. அன்றைய மராத்திய பேஷ்வாக்களின் ஆட்சியிலே ஒரு தெருவில் எதிரே வரும் இந்துவின் மீது தீண்டத் தகாதோரின் நிழல் பட்டால் கூட தீட்டாகிவிடும் என்ற காரணம் காட்டி தீண்டத்தகாதவர்களை வீதிக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. இந்துக்கள் தவறி தீண்டத் தகாதவர்களைத் தொட்டு அவர்கள் தீட்டாகி விடுவதை தடுக்க, தீண்டத்தகாதவர் தன் கழுத்திலோ, மணிக் கட்டிலோ கறுப்புக் கயிறு ஒன்றை அடையாளமாகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

2. பேஷ்வாவின் தலைநகரான பூனாவில் தீண்டத் தகாதவன் தன்னுடைய இடுப்பில் விளக்குமாறு ஒன்றைக் கட்டிக் கொண்டு, தான் போகும் பாதையில் தன் காலடித் தடத்தின் புழுதியைப் பின்புறமாக கூட்டியபடி சென்றாக வேண்டும் என்ற உத்தரவு இருந்தது. இல்லாவிட்டால் அதே தெருவில் நடக்கும் இந்து தீட்டாகி விடுவானாம்!

3. பூனாவில் தீண்டத்தகாதவர் எங்கு போனாலும் தன் கழுத்தில் மண்கலயம் ஒன்றை தொங்கவிட்டுக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உத்தரவும் இருந்தது. அவன் தன் எச்சிலை அந்தக் கலயத்தில் துப்பிக் கொள்ள வேண்டும். ஏன் அப்படி என்றால் தீண்டத்தகாதவரின் எச்சில் தரையில் விழுந்தால் அதைத் தெரியாத்தனமாக மிதித்து விடும் இந்து தீட்டாகி விடுவானாம்!

மிக சமீபகாலத்து நிகழ்ச்சிகளைக்கூட பார்ப்போமே—

மத்திய இந்தியாவைச் சேர்ந்த பலாய்கள் (Palais) என்கிற தீண்டத்தகாதசமூகத்துக்கும் இந்துக்கள்இழைத்தக் கொடுமைகள் என் கருத்துக்குச் சான்றாகும். 1928 ஜனவரி

30 ஆம் தேதி 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் இது பற்றிய செய்தி வெளியாகி உள்ளது. இந்தூர் மாவட்டத்தில் உள்ள கனாரியா, பிச்சோலி-ஹப்சி, பிச்சோலி மர்தானா முதலிய 15 கிராமங்களில் இருந்த கலோதர்கள், ராஜ புத்திரர்கள், பிராமணர்கள் முதலிய மேல்சாதி இந்துக்கள்—பட்டேல்கள் — பட்வாரி உள்ளிட்டு — தத்தம் கிராமத்தைச் சேர்ந்த பலாய் இனத்தாரிடம், பலாய்கள் அந்தக் கிராமங்களில் இருந்து வாழ வேண்டும் என்றால் மேல் சாதி இந்துக்கள் இட்ட சில விதிமுறைகளை ஏற்று நடக்க வேண்டும் என்று அறிவித்தனர்.

அந்த விதிமுறைகள்—

நீங்கள் எங்கள் மத்தியில் வாழ விரும்பினால்

1. தங்க சரிகைக் கரை போட்ட உடைகளை அணியக் கூடாது.

2. புதுமையான வண்ண கரைபோட்ட உடைகளை அணியக் கூடாது.

3. இந்து ஒருவன் இறந்து போனால் இறந்து போன இந்துவின் சொந்தக்காரர்களுக்கு— அவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும்—இழவுச் செய்தியைப் போய் சொல்ல வேண்டும்.

4. எல்லா இந்து திருமணங்களிலும் ஊர்வலத்தின் போதும் திருமணம் நடக்கும் போதும் பலாய்கள் மேள தாளங்களை இசைக்க வேண்டும்.

5. பலாய்ப் பெண்கள் தங்க, வெள்ளி நகைகளை அணியக் கூடாது. அழகான ஆடைகளையோ ரவிக்கை களையோ அணியக் கூடாது.

6. இந்துப் பெண்களுக்கு பலாய்ப் பெண்கள் தான் பிரசவம் பார்க்க வேண்டும்.

7. எந்தவித கூலியும் கேட்காமல் பலாய் தொண்டூழியம் செய்ய வேண்டும். இந்து தருவதை பேசாமல் வாங்கிக் கொள்ள வேண்டும்.

8. இந்த விதிமுறைகளை ஏற்று நடக்க பலாய்கள் சம்மதிக்காவிட்டால் அவர்கள் கிராமங்களை விட்டு வெளியேற்றப்படுவர்.

பலாய்கள் இந்தச் சட்டங்களை ஏற்க மறுத்தார்கள். உடனே இந்துக்கள் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கிராமத்துக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுக்க பலாய்கள் அனுமதிக்கப்படவில்லை. தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்ல அனுமதிக்கவில்லை. ஒரு பலாயினுடைய நிலம், இந்துக்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நடுவில் இருந்தால் அந்த நிலங்களின் வழியே தன்னுடைய நிலத்துக்கு செல்ல விடாமல் பலாய்கள் தடுக்கப்பட்டனர். பலாய்களின் வயல்களில் உள்ள பயிர்களை இந்துக்கள் தங்கள் கால்நடைகளை விட்டு அழிக்க விட்டனர். இது போன்ற கொடுமைகளுக்கு எதிராக அரசாங்கத்துக்கு பலாய்கள் மனுக்கள் அனுப்பினர். ஆனால் உரிய நேரத்தில் தக்க நிவாரணம் ஏதும் பலாய்களுக்கு கிடைக்கவில்லை. அடக்குமுறை தொடர்ந்தது. எனவே நூற்றுக்கணக்கான பலாய்கள் தங்கள் சொந்த மண்ணை விட்டு வீடு வாசலை விட்டு தங்கள் பெண்டு பிள்ளைகளோடு பிழைப்புத் தேடி தார், தேவாஸ், பக்ளி, போபால், குவாலியர் போன்ற அண்டைப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டி வந்தது. புதிய இடங்களில் அவர்களுக்கு என்ன ஆயிற்று என்பது வேறு கதை.

குஜராத்தில் உள்ள கவிதாவில் சென்ற ஆண்டு ஒரு நிகழ்ச்சி நடந்தது. அரசாங்கத்தால் நடத்தப் பட்டு வந்த ஒரு கிராமப் பொதுப் பள்ளிக்கு தங்கள் குழந்தைகளை அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தக் கூடாது என்று அந்தக் கிராமத்து இந்துக்கள் தீண்டத்தகாதவர்களுக்கு ஆணையிட்டனர். இந்துக்களின் விருப்பங்களுக்கு எதிராக தங்களின் குடி உரிமையைப் பயன்படுத்த துணிவு கொண்ட ஒரே காரணத்துக்காக அந்தக் கிராமத்தின் தீண்டத்தகாத

மக்கள் எந்த அளவுக்கு கொடுமைப்படுத்தப்பட்டார்கள்! இது எல்லோரும் அறிந்த ஒன்று என்பதால் இதை விவர மாகக் கூறத் தேவை இல்லை என நினைக்கிறேன்.

குஜராத்தில் உள்ள அகமதாபாத் என்ற மாவட்டத் தில் ஜானு என்ற கிராமத்தில் நடந்த இன்னொரு நிகழ்ச் சியையும் சொல்கிறேன். 1935 நவம்பரில் வசதியான குடும்பங்களைச் சேர்ந்த சில தீண்டத்தகாத பெண்கள் உலோகக் குடங்களில் தண்ணீர் எடுத்துச் சென்றனர். தீண்டத்தகாதவர்கள் உலோகக் குடங்களைப் பயன்படுத் துவது தங்கள் கௌரவத்தையே இழிவுபடுத்தும் செயல் என்று இந்துக்கள் எண்ணி, அந்தப் பெண்களை அவர் களின் ''அகம்பாவத்துக்காக'' முரட்டுத்தனமாகத் தாக்கி னார்கள்.

ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில் சக்வாராவில் மிக சமீபத் தில் ஒரு சம்பவம் நடந்தது. தீர்த்த யாத்திரை சென்று வந்த தீண்டத்தகாதவர் ஒருவர் தன்போன்ற இதர தீண்டத்தகாதவர்களுக்கு ஒரு மதக்கடமையாக சிறப்பான விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். விருந்திலே பரிமாறப் பட்ட பலவித உணவுகளில் நெய்யும் ஒன்று. என்ன நடந்தது தெரியுமா? தீண்டத்தகாதோர் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது நூற்றுக்கணக்கான இந்துக்கள் தடிகளோடு அந்த இடத்துக்கு விரைந்தனர். உணவைக் கொட்டிக் கவிழ்த்தனர். சாப்பிடுவதை விட்டு விட்டு தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடியவர்களை நையப் புடைத்தனர். ஆதரவற்ற தீண்டத்தகாதவர்கள் மீது இதுபோன்ற கொலைபாதகச் செயல் நடந்தது ஏன்? அதற்குக் கூறப்பட்ட காரணம் என்னவென்றால் விருந் தளித்தவர் விருந்திலே நெய் சேர்க்கும் அளவுக்கு 'திமிர்' பிடித்தவராக இருந்தாராம்! விருந்தாளிகளும் துணிந்து நெய் சாப்பிடும் அளவுக்கு விவரங் கெட்டவர்களாக இருந்திருக்கிறார்கள்! நெய் பணக்காரர் பயன்படுத்தும் ஆடம்பரப் பொருள் என்றால் ஒத்துக் கொள்ளலாம்.

ஆனால் அது ஒருவரின் சமூக அந்தஸ்தை உயர்த்திக் காட்டும் பொருள் என்று யாராவது நினைப்பார்களா? சக்வாரா இந்துக்கள் அப்படித்தான் நினைத்தார்கள். அதாவது தீண்டத்தகாதவர்கள் அவர்களின் உணவில் நெய் விட்டுக் கொண்டதின் மூலம் தம்மை அவமதித்து விட்டதாகவே சாதி இந்துக்கள் நினைத்துக் கொண்டார் கள். அதற்காகவே தீண்டத்தகாதோரை இப்படிப் பழி வாங்கினார்கள். நெய் என்பது இந்துக்களின் கவுரவப் பிரச்சனை. எனவே தீண்டத்தகாதவர்கள் நெய் வாங்கும் அளவுக்கு வசதி படைத்திருந்தாலும் கூட அதைப் பயன் படுத்தக் கூடாது. நெய் அவர்களுக்கு உரியது அல்ல. இந்த நினைப்புதான் இந்துக்களை தீண்டத்தகாதவர் களுக்கு எதிராக நிறுத்தியது. இது 1936 ஏப்ரல் முதல் வாரத்தில் நடந்தது.

இதுவரை, நடந்த சம்பவங்களைக் கூறினேன். இப்போது சமுதாய சீர்திருத்தப் பிரச்சனையை எடுத்துக் கொள்கிறேன். என்னால் முடிந்தவரை பானர்ஜி அவர் களை ஒட்டி அரசியல் மனப்பான்மை கொண்ட இந்துக் களைக் கேட்கிறேன். உங்கள் சொந்த நாட்டைச் சேர்ந்த தீண்டத்தகாதோர் போன்ற பெரும்பான்மை வகுப்பினரை பொதுப் பள்ளிக்கூடங்களில் அனுமதிக்காத நீங்கள் அரசி யல் அதிகாரத்துக்கு அருகதை உடையவர்கள் தானா? அவர்களைப் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூட அனுமதிக்காத நீங்கள் அரசியல் அதிகாரத்துக்கு அருகதை படைத்தவர்கள் தானா? அவர்கள் விரும்புகின்ற ஆடை அணிகளை அணியக்கூட அனுமதிக்காத நீங்கள் அரசியல் அதிகாரத்துக்கு அருகதை படைத்தவர்களா? அவர்கள் விரும்புகிற எந்த உணவையும் உண்ணக்கூட அனுமதிக்காத நீங்கள் அரசியல் அதிகாரத்துக்கு அருகதை படைத்தவர்கள் தானா? இதுபோன்ற கேள்விக்கணைகளை என்னால் வரிசையாகத் தொடுக்க முடியும். ஆனால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். பானர்ஜி அவர்களின் பதில்

என்னவாக இருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். சொரணை உள்ள எவனும் இந்தக் கேள்விகளுக்கு ஆம் என்று பதில் கொடுக்கத் துணிவுண்டா? எந்த ஒரு நாட்டுக்கும் பிற நாடுகளை ஆதிக்கம் செய்ய உரிமை இல்லை என்ற மில் அவர்களின் கோட்பாட்டைத் திரும்பத் திரும்பக் கூறுகிற ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் எந்த ஒரு சாதிக்கும் பிற சாதிகளை ஆதிக்கம் செய்ய உரிமை இல்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

சமுதாய சீர்திருத்தக் கட்சி பின் எப்படித்தான் தோற்றது? இதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சமுதாயச் சீர்திருத்தக்காரர்கள் எந்தவிதமான சமுதாயச் சீர்திருத்தத்துக்காக கிளர்ச்சி செய்தனர் என்று பார்க்க வேண்டும். சமுகச் சீர்திருத்தம் என்றால் இந்துக் குடும்பத்தை சீர்திருத்துவதா அல்லது இந்து சமுதாயத்தை மாற்றி அமைப்பதா? இந்த இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாகக் கூறப்பட்ட சமுதாயச் சீர்திருத்தம் விதவை மறுமணம், குழந்தை மணம் ஆகியவற்றோடு தொடர்புடையது. இரண்டாவதாகக் கூறப்பட்ட சமுதாயச் சீர்திருத்தம் சாதி அமைப்பை ஒழிப்பது தொடர்பானது.

சோசல் கான்பெரன்ஸ் உயர்சாதி இந்துக் குடும்பத்தை சீர்திருத்துவதையே பிரதானமான சீர்திருத்தமாக எண்ணிக் கொண்டு அதில் ஈடுபட்டது. அந்த அணியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் கல்வி அறிவு பெற்ற உயர் சாதி இந்துக்களாகவே இருந்தனர். அவர்கள் சாதியை ஒழிக்கப் போராடுவதற்கான அவசியத்தை உணர்ந்திருக்கவில்லை. அல்லது அதற்காகப் போராடுவதற்கான துணிச்சல் பெற்றவர்களாகவும் இல்லை. ஒவ்வொரு மேல்சாதி இந்துக் குடும்பத்திலும் கட்டாய விதவைக் கோலமும், கட்டாய பாலிய விவாகக் கொடுமையும் இருந்தது. எனவே அந்தத் தீமைகளை ஒழிப்பது சாதி ஒழிப்பை விட முக்கியமானது என அவர்கள் உணர்ந்தது இயல்பே.

இந்து சமுதாயத்தை சீர்திருத்துவதற்கு ஆதரவாக அவர்கள் இல்லை. அவர்களது போராட்டம் பிரதானமாக குடும்பச் சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டது. சாதி அமைப்பைத் தகர்த்தெறிவது என்ற அர்த்தத்திலான சமுதாயச் சீர்திருத்தத்துக்கு தொடர்பு கொண்டதாக அது இல்லை. சீர்திருத்தவாதிகளுக்கு சாதி ஒழிப்பு என்பது ஒரு பிரச்சனையாகவே இல்லை. சமுதாயச் சீர்திருத்தக் கட்சி தோல்வியைத் தழுவியதற்கு இதுவே காரணம்.

இந்த வாதத்தை முன் வைக்கும்போது அரசியல் சீர்திருத்தமானது சமுதாய சீர்திருத்தத்தைவிட முன்னணிக்கு வந்துவிட்டது என்கிற உண்மையை நான் தெரிந்தே இருக்கிறேன். ஆனால் சமுதாய சீர்திருத்தவாதிகள் ஏன் தோல்வி அடைந்தார்கள் என்பதைப் புரிந்தாக வேண்டுமென்றால் நமக்கு இந்த உண்மை தெரிந்தே ஆகவேண்டும். அதற்காகவே சொன்னேன்.

மேலும் அரசியல் சீர்திருத்தக் கட்சி சமுதாய சீர்திருத்தக் கட்சியின் மேல் கொண்ட வெற்றி தற்காலிகம் ஆனது தான். அடுத்து குடும்ப சீர்திருத்தமே சமுதாய சீர்திருத்தம் என்று நீங்கள் எடுத்துக் கொண்டால் மட்டுமே சமுதாய சீர்திருத்தம் அரசியல் சீர்திருத்தத்துக்கு முன்னோடியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றாகும். அரசியல் சீர்திருத்தம் சமூகச் சீர்திருத்தத்துக்கு முன்னோடியாக இருக்க முடியாது. சமுதாயத்தை மாற்றி அமைத்தல் என்ற அர்த்தத்தில் இருந்து பார்க்கும் போது இதை என்னால் உறுதியாகக் கூறமுடியும். யாரும் இதை மறுக்க முடியுமா?

அரசியல் சாசனத்தை இயற்றுபவர்கள் சமூக சக்திகளைக் கணக்கில் கொள்ள வேண்டும். இந்த உண்மையை காரல் மார்க்சின் நண்பரும் சகாவும் ஆன பெர்டினண்ட் லசால் என்பவரே ஒப்புக் கொண்டுள்ளார். 1862இல் ரஷ்ய மக்கள் மத்தியில் லசால் பேசினார்:

அரசியல் சாசனம் பற்றிய பிரச்சனை முதலாவதாக உரிமை பற்றிய பிரச்சனை அல்ல, வலிமை பற்றிய பிரச்சனையே ஆகும். ஒரு நாட்டின் அரசியல் சாசனத்தின் வலிமை, அந்த நாட்டில் இருக்கின்ற சமூக சக்திகளின் உண்மையான நிலைமையைச் சார்ந்தே நிற்கும். எனவே சமூகத்தில் இருக்கிற சக்திகளின் நிலைமையை உள்ளவாறு பிரதிபலிக்கிற அரசியல் சாசனமே மதிப்புடையதாகவும் நிரந்தரமானதாகவும் இருக்க முடியும்.

ஆனால் இதைத் தெரிந்து கொள்ள ரஷ்யாவுக்குப் போக வேண்டியது இல்லை. நம் நாட்டிலேயே அதற்கான சாட்சியம் உள்ளது. பல்வேறு வர்க்கங்களுக்கும், வகுப்புகளுக்கும் (Class & Communities) அரசியல் அதிகாரத்தில் ஒதுக்கப்பட்ட விகிதாச்சாரத்தைப் பொறுத்து வகுப்புவாரி இட ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் என்ன? என்னுடைய கருத்தின்படி அரசியல் சாசனமானது சமூக நிறுவனங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுவதில்தான் அதன் முக்கியத்துவம் இருக்கிறது. சமுதாயப் பிரச்சனை அரசியல் பிரச்சனையை எவ்விதத்திலும் பாதிப்பது அல்ல என்று கூறி மறுத்த அரசியல்வாதிகள் அரசியல் சாசனத்தை எழுதும் போது சமுதாயப் பிரச்சனையைக் கணக்கில் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்களே, அதில் தான் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் இருக்கிறது.

சமுதாய சீர்திருத்தத்தை அலட்சியப்படுத்தியதன் விளைவே வகுப்புவாரி இடஒதுக்கீடு எனலாம். சமுதாய சீர்திருத்தக் கட்சி தோற்கடிக்கப்பட்ட போதும் கூட சமுதாய சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது என்கிற வகையில் வகுப்புவாரி இட ஒதுக்கீடானது சமுதாய சீர்திருத்தக் கட்சிக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

இந்த முடிவைப் பலர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். வகுப்புவாரி இடஒதுக்கீடு இயற்கையான ஒன்று அல்ல. சிறுபான்மையினருக்கும் அதிகார வர்க்கத்துக்கும் இடையே ஏற்பட்ட கள்ளத் தொடர்பின் விளைவே அது என்ற கருத்தே இப்போது பரவலாக உள்ளது. அதையே அவர்கள் நம்பவும் விரும்பு கிறார்கள். என் வாதத்தை விளக்க வகுப்புவாரி இட ஒதுக்கீடு நல்ல ஆதாரம் அல்ல என்று சொல்லப்படு மானால், என் வாதத்துக்கு வகுப்புவாரி இட ஒதுக்கீட்டை மட்டுமே ஒரே ஆதரவாக நான் பிடித்துக் கொண்டிருக்க அவசியம் இல்லை என்றே கூறுவேன்.

அயர்லாந்தின் உதாரணத்தைப் பார்ப்போம். அயர்லாந்து ஹோம்ரூல் (தன்னாட்சி) இயக்கத்தின் வரலாறு காட்டுவது என்ன? அல்ஸ்டர் என்ற பகுதியின் பிரதிநிதிகளும் தெற்கு அயர்லாந்தின் பிரதிநிதிகளும் ஒரு உடன்பாடு காண பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அப்போது தெற்கு அயர்லாந்தின் பிரதிநிதியாகிய ரெட் மாண்ட் என்பவர் அல்ஸ்டர் உட்பட அயர்லாந்து முழுமை யும் ஒரே ஹோம்ரூல் அரசியல் சாசனத்தின் கீழ்க் கொண்டு வருவதை ஆதரித்தார். அல்ஸ்டர் அப்படி உட்படும் பட்சத்தில் அவர்கள் விரும்பும் எல்லாவித அரசியல் பாதுகாப்பும் பெறலாம் என்று அல்ஸ்டர் பிரதி நிதிகளிடம் அவர் கூறினார். அதற்கு அல்ஸ்டர் பிரதிநிதி கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? ''உங்களின் (அரசியல்) பாதுகாப்பு நாசமாய்ப்போக! எவ்வித நிபந் தனையின் பேரிலும் நீங்கள் எங்கள்மேல் ஆதிக்கம் செலுத் துவதை நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம்'' என்றார்கள்.

இந்தியாவில் உள்ள சிறுபான்மையினரைக் குற்றம் சாட்டுபவர்கள், அல்ஸ்டர் பிரதிநிதிகள் மேற்கொண்ட நிலைபாட்டை இந்தியச் சிறுபான்மையினர் மேற்கொண்டி ருந்தால் இந்தியாவில் உள்ள பெரும்பான்மையினரின்

அரசியல் அபிலாசைகள் என்ன கதிக்கு ஆளாகி இருக்கக் கூடும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அயர்லாந்தின் ஹோம்ரூலைப் பொறுத்து அல்ஸ்டர் பிரதிநிதிகள் காட்டிய மனப்பாங்கை சீர்தூக்கிப் பார்ப்போம். அல்ஸ்டர் மக்களுக்கு சில பாதுகாப்புகள் ஏற்படுத்தித் தரப்படும் விதமாக அயர்லாந்து பிரதிநிதிகள் ராஜ தந்திர முறையில் நடந்திருந்து, பெரும்பான்மையரால் தாம் ஆளப்படுவதை சிறுபான்மையாரும் ஏற்றுக் கொண்டிருந்தால் என்ன கெட்டுவிடும்? அப்படி நடந்திருந்தாலும் அது தற்செயலானதாகவே இருந்திருக்கும். அல்ஸ்டர் பிரதிநிதிகள் இந்த நிலைபாட்டை மேற்கொண்டது ஏன் என்பதுதான் மையமான பிரச்சனை. நான் தரக்கூடிய ஒரே பதில்— அல்ஸ்டர் மக்களுக்கும் தெற்கு அயர்லாந்து மக்களுக்கும் இடையே ஒரு சமுதாயப் பிரச்சனை— கத்தோலிக்கர்களுக்கும் பிராட்டஸ்டண்டுகளுக்கும் இடையேயான பிரச்சனை, சாராம்சத்தில் சாதிப்பிரச்சனை— இருந்தது. அயர்லாந்தில் ஹோம்ரூல் (தன்னாட்சி) என்பது ரோம்ரூல் (ரோமின் ஆட்சி) ஆக இருந்துவிடுமோ என்ற பார்வையில் இருந்தே அல்ஸ்டர்காரர்கள், தங்கள் நிலைபாட்டை முன்வைத்தனர். இதையே வேறு விதமாகச் சொன்னால் கத்தோலிக்க சாதிக்கும் பிராட்டஸ்டண்டு சாதிக்கும் இடையே ஆன சமுதாயப் பிரச்சனையானது அரசியல் பிரச்சனையைத் தீர்ப்பதை தடை செய்கிறது என்று சொல்லலாம்.

இந்த எடுத்துக்காட்டும் மறுக்கப்படலாம். ஏகாதிபத்தியம் இங்கும் தங்களுடைய வேலையைக் காட்டிவிட்டது என்று அடித்துக் கூறப்படலாம். ஆனால் என்னிடத்தில் ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன, ரோமின் வரலாற்றில் இருந்து கூட என்னால் எடுத்துக்காட்டுத் தர முடியும்: ரோமைப் பொறுத்த மட்டில் எந்த துர்தேவதையும் மோசம் எதையும் செய்ததாகக் கூறமுடியாது இல்லையா? ரோமின் வரலாற்றை அறிந்த எவருமே ரோம் குடியரசின் அரசியல் சாசனம் பெருமளவுக்கு இந்த

வகுப்புவாரி இடஒதுக்கீட்டை ஒத்திருந்தது என்பதை அறிவர். ரோமில் மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்ட போது மன்னருக்குரிய அதிகாரங்கள் அல்லது இம்பீரியம், கான்சல்களுக்கும் போன்டிபிக்ஸ் மேக்சிமஸ்களுக்கும் இடையில் பிரித்து தரப்பட்டது. மன்னனிடம் இருந்த மத சம்பந்தமான அதிகாரங்கள் போன்டிபிக்ஸ் மேக்சி மசுக்கு வழங்கப்பட்டன. ஏனைய அதிகாரங்கள் கான்சலி டம் தரப்பட்டது இந்த குடியரசு சாசனப்படி 2 கான்சல் களில் ஒருவர் பாட்ரிசியன் மற்றவர் பிளபியன் ஆக இருத் தல் வேண்டும். போன்டிபிக்ஸ் மாக்சிமசில் உள்ள மத குருக்களில் ஒரு பாதி பாட்ரிசியன்களாகவும் மறுபாதி பிளபியன்களாகவும் இருக்க வேண்டும்.

இந்திய வகுப்புவாரி இடஒதுக்கீடு முறையைப் போல உள்ள ரோமின் குடியரசு சாசனத்தில் இந்த ஏற்பாடு செய்வதற்கான அவசியம் என்ன? பாட்ரிசியன் சாதிக்கும் பிளபியன் சாதிக்கும் இடையில் அந்தஸ்து வேறுபாடு இருந்ததை ரோம் குடியரசு சாசனம் கணக்கில் கொள்ள வேண்டி இருந்தது என்பதே நமக்குக் கிடைக்கும் ஒரே விடை.

இதுவரை கூறிய வாதங்களைத் தொகுத்துச் சொன் னால், அரசியல் சீர்திருத்தவாதிகள் அவர்கள் விரும்புகிற எந்த வழியிலே சென்றாலும் சரி, அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்குகிற போது நம் நாட்டில் நிலவுகிற சமுதாய அமைப்பில் இருந்து எழுகிற பிரச்சனையை அசட்டை செய்துவிட்டு ஒரு அரசியல் சாசனத்தை உருவாக்கி விட முடியாது.

சமுதாயப் பிரச்சனைகளும் மதப் பிரச்சனைகளும் அரசியல் சாசனத்தைப் பாதிப்பவை என்னும் கூற்றுக்கு ஆதரவாக நான் எடுத்துக் கொண்ட உதாரணங்கள் மிகவும் தனித்ததாகத் தோன்றலாம். அது உண்மை யாகவே இருக்கலாம். ஆனால் இந்த இரண்டு (சமுதாய, அரசியல்) பிரச்சனைகளுக்கும் இடையே உள்ள பரஸ்பர

தாக்கம் வரையறைக்கு உட்பட்டது என்று எண்ணிவிடக் கூடாது. அதற்குப் பதிலாக பொதுவாகச் சொன்னால் அரசியல் புரட்சிகளுக்கு முன்னோடியாக சமுதாய, ஆன்மீகப் புரட்சிகள் நடந்திருக்கின்றன என்னும் உண்மையை வரலாறு காட்டுகிறது.

லூதரால் தொடங்கப்பட்ட மதச் சீர்திருத்த இயக்கமே ஐரோப்பிய மக்களின் அரசியல் விடுதலைக்கு முன்னோடியாக இருந்தது. இங்கிலாந்தில் அரசியல் விடுதலை ஏற்படுவதற்கான வழியை வகுத்துத் தந்தது பியுரிட்டானிசமே (கிருத்துவ மத சீர்திருத்த இயக்கம்). அது ஒரு புதிய உலகத்தை உருவாக்கியது. அமெரிக்க சுதந்திரப் போரை வென்றெடுத்தது அந்த இயக்கமே. பியுரிட்டானிசம் என்பது ஒரு மத இயக்கம் தான். இதே உண்மை முஸ்லிம் சாம்ராஜ்யத்திற்கும் பொருந்தும். அரேபியர்கள் ஒரு அரசியல் சக்தியாக உருவெடுப்பதற்கு முன்னால் நபிகள் நாயகம் என்னும் தீர்க்கதரிசியால் தொடங்கப்பட்ட மதப்புரட்சிக்கு அரேபியர்கள் முழுமையாக ஆட்பட்டனர். இந்திய வரலாறும் கூட இந்த முடிவுக்குத்தான் இட்டுச் செல்கிறது. சந்திர குப்த மௌரியரால் நடத்தப்பட்ட அரசியல் புரட்சிக்கு புத்தரின் மதப் புரட்சியும் சமுதாயப்புரட்சியும் முன்னோடியாக இருந்தது. மகாராஷ்ட்ர சன்னியாசிகளால் ஏற்பட்ட மதச் சீர்திருத்தமும் சமுதாய சீர்திருத்தமுமே சிவாஜியால் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தத்திற்கு முன்னோடியாக அமைந்தது. குருநானக்கால் வழி நடத்தப்பட்ட மதப் புரட்சியும் சமுதாயப் புரட்சியுமே சீக்கியப் புரட்சிக்கு முன்னோடியாக அமைந்தது. மேற்கொண்டும் சான்றுகள் தேவை இல்லை. மக்களின் அரசியல் விரிவாக்கத்திற்குத் தேவையான தொடக்க ஏற்பாடு மன விடுதலையும் ஆன்ம விடுதலையுமே ஆகும் என்பதைக் காட்ட மேற்கூறிய எடுத்துக் காட்டுகள் போதுமானவை.

## 3

சோசலிஸ்டுகள் பற்றிப் பேசுவோம். சமுதாய அமைப்பின் காரணமாக எழுகின்ற பிரச்சனையை சோசலிஸ்டுகள் அசட்டை செய்ய முடியுமா? இந்தியா வில் இருக்கின்ற சோசலிஸ்டுகள் ஐரோப்பிய சோசலிஸ்டு களைப் பின் பற்றுகின்றனர்; வரலாறு குறித்த பொருளா தார ரீதியான விளக்கங்களை இந்தியாவின் உண்மை நிலைகளுக்குப் பொருத்த எண்ணுகிறார்கள். அவர்கள், மனிதன் என்பவன் ஒரு பொருளாதார ஜந்து என்றும் மனிதனுடைய செயல்பாடுகளும் ஆசாபாசங்களும் பொருளாதார நிலைகளால் கட்டுப்படுத்தப்படுபவை என்றும் சொத்து மட்டுமே அதிகாரத்திற்கான மூல ஆதாரம் என்றும் முடிவுகட்ட எண்ணுகின்றனர். எனவே அவர்கள் அரசியல் சீர்திருத்தமும் சமூக சீர்திருத்தமும் பிரம்மாண்டமான மாயைகளே என்றும், சொத்தைச் சமமாகப் பங்கிடுதல் மூலமாக மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்தமே மற்ற எல்லாவிதமான சீர்திருத்தத்திற்கும் முதன்மையானதாக இருக்கவேண்டும் என்றும் போதனை செய்கின்றனர். இந்த அடிப்படையில் தான் பொருளாதார சீர்திருத்தமே எல்லாவித சீர்திருத் தங்களுக்கும் அடிப்படை என்று சோசலிஸ்டுகள் வாதிடு கின்றனர். அவர்களின் வாதம் ஒவ்வொன்றுக்கும் ஒருவர் எதிர்வாதம் வைத்துவிட முடியும். மனிதனை இயக்கும் ஒரே உந்து சக்தி பொருளாதார சக்தி மட்டுமேயல்ல என்று நாம் கூற முடியும். பொருளாதார அதிகாரம் மட்டுமே ஒரே அதிகாரம் என்பதை மனித சமூகவியல் மாணவர் எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார். பல தருணங்களில் ஒரு தனிமனிதனின் சமுதாய அந்தஸ்து மட்டுமே அவரது ஆட்சியுரிமைக்கும் அதிகாரத்துக்கும் ஆதாரமாக அமைந்து விடுகிறது. மகாத்மாக்கள் சாதாரண மனிதர்களின் மேல் கொண்டிருக்கும் செல்வாக்கிலிருந்து இது நன்கு விளங்கும். இந்தியாவில் உள்ள பெரிய பெரிய

பணக்காரர்கள் கூட, கையில் கால்காசுகூட இல்லாத சாதுக்களுக்கும் பக்கிரிகளுக்கும் அடிபணிந்து நடப்பது ஏன்? தரித்திர நிலையிலுள்ள கோடிக்கணக்கான இந்திய மக்கள் காசிக்கும் மெக்காவுக்கும் செல்ல தங்களுடைய ஓரே அற்ப சொத்தான மூக்குத்தி, தோடு போன்றவற்றை யும் விற்பது ஏன்?

இந்தியாவில் சாதாரண மனிதனின் மேல் ஒரு நீதிபதிக் குள்ள செல்வாக்கைவிட ஒரு சன்னியாசிக்கு உள்ள செல்வாக்கு அதிகம் அல்லவா? வேலை நிறுத்தம், தேர்தல் உள்ளிட்ட எல்லாமே மிக எளிமையாக மதச்சார்பான ஒரு திருப்பத்தை அடைய முடிகிறது. மதச்சார்பான திரிபுக்கும் ஆளாகின்றன. மதம் என்பது அதிகாரத்திற் கான ஒரு ஆதாரம் என்பதை இந்திய வரலாறு நிரூபிக் கிறது.

மனிதனின் மேல் மதம் கொண்டிருக்கிற அதிகாரத்தை நிறுவ இன்னொரு எடுத்துக்காட்டாக ரோமிலுள்ள பிளபியன்களின் பிரச்சனையை எடுத்துக் கொண்டு என் கருத்தை மேலும் தெளிவுபடுத்த முயல்கிறேன். ரோமானிய குடியரசின் கீழ் இருந்த மேல்மட்ட செயல் குழுவில் தங்களுக்கும் ஒரு பங்கு வேண்டும் என பிளபியன் கள் போராடினர். பிளபியன்களின் சட்டப் பேரவையான 'கமிட்டியா சென்சாரியாட்டா' என்ற சபையின் உறுப் பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிளபியன் கான்சல் ஒருவர் நியமனம் செய்யப்படுவதற்கானஉத்திரவாதத்தைப் பெற்றனர். நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் பாட்ரிசியன் கான்சல்கள் பிளபியன்களுக்கு எதிராக ஒருதலைப் பட்சமாக நடந்து வந்தார்கள் என எண்ணியதால் தங்களுடைய சொந்த கான்சல் தேவை என உணர்ந்தனர். ரோமானியக் குடியரசு சாசனத்தின்படி ஒரு கான்சலின் நடவடிக்கையை தடை செய்வதற்கான அதிகாரம் மற்றொரு கான்சலிடம் இருந்தது.

எனவே பிளபியன்கள் பெரியதொரு வெற்றியை அடைந்தனர் என்பது எளிதாக விளங்கும். ஆனால் உண்மையில் அவர்கள் ஆதாயம் ஏதும் அடைந்தனரா? இல்லை என்றே சொல்ல வேண்டும். பாட்ரிசியன் கான்சலைச் சார்ந்திராமல் தனித்து செயல்படக் கூடிய உறுதியான ஒரு பிளபியன் கான்சல் ஒருவரை ஒருபோதும் பிளபியன்களால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. சாதாரண மாக பிளபியன் கான்சல் ஒருவரை பிளபியன்களே தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம் என்கிற சூழலில் ஒரு சரியான திறமையான கான்சலை அவர்கள் தேர்ந்தெடுக்க முடிய வேண்டும். ஆனால் இத முடியவில்லை. ஏன்? உறுதியான ஒரு பிளபியனை தங்களுடைய கான்சலாக தேர்ந்தெடுக்க பிளபியன்கள் முடியாமல் போனது ஏன்? மனித மனங் களின் மேல் மதம் எந்த அளவுக்கு ஆட்சி செலுத்துகிறது என்பதைத் தான் இந்தக் கேள்விக்கான விடை வெளிப் படுத்துகிறது. ரோமானிய பொதுமக்களின் மத நம்பிக்கை யின்படி டெல்பி என்னும் இடத்தில் குறி சொல்பவரால் தேவதைக்குச் சம்மதம் ஆனவராக அறிவிக்கப்படாத எந்த ஒரு மனிதனும் ஒரு அதிகாரியாக தன்னுடைய அதிகாரக் கடமைகளை ஆற்ற முடியாது. டெல்பி தேவதையின் கோவில்களின் பொறுப்பாளராக இருந்த பூசாரிகள் அனைவரும் பாட்ரிசியன்களே.

பாட்ரிசியன்களுக்கு எதிரான உறுதியான ஒரு கான்சலை— தற்போது இந்தியாவில் வழங்கி வருகிற படி 'மரபினப் பற்றுள்ள' ஒரு கான்சலை— பிளபியன்கள் தேர்ந்தெடுத்த போதெல்லாம் அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட கான்சல், தேவதைக்கு சம்மதம் ஆனவர் அல்ல என்று அறிவிப்பதே குறி கூறுவோரின் மாறாத வழக்க மாக இருந்தது. பிளபியன்கள் தங்கள் உரிமையைப் பெற முடியாமல் வஞ்சிக்கப்பட்டது இப்படித்தான். ஆனால் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்ன என்றால், இவ்வாறு தாங்கள் வஞ்சிக்கப்படுவதை

பிளபியன்களே அனுமதித்தனர் என்பது தான். இப்படி பிளபியன்கள் மோசம் போனது ஏன்?

ஏனெனில் பாட்ரிசியன்களைப் போலவே பிளபியன்களும் எந்த ஒரு ஊழியரும் தன் கடமையை நிறைவேற்றும் பொறுப்பை எடுத்துக் கொள்ள முன்னோடியான நிபந்தனை தேவதையின் சம்மதமே; மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது மட்டுமே போதாது என்று உறுதியாக நம்பினர் என்பதால் தான். தேர்தலே போதுமானது. தேவதையின் அனுமதி தேவை இல்லை என்று பிளபியன்கள் வாதாடி இருந்தால் தாங்கள் பெற்ற அரசியல் உரிமையின் முழுப் பயனையும் அவர்கள் அடைந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. (நிராகரிக்கப்பட்ட முந்தைய கான்சல்களைவிட) தங்களுக்கு குறைந்த அளவே பொருந்தி வரக்கூடிய ஆனால் தேவதைக்கு (நிராகரிக்கப்பட்ட முந்தைய கான்சல்களைவிட) கூடுதலாகப் பொருந்தி வரக்கூடிய— அதாவது பாட்ரிசியன்களுக்குக் கூடுதலாகப் பொருந்தி வரக்கூடிய கான்சலைத் தேர்தெடுக்க பிளபியன்கள் சம்மதித்தனர். மதத்தை விட்டொழிப்பதற்குப் பதிலாகத் தாங்கள் அரும்பாடுபட்டு வென்று அடைந்த உலகியல் ஆதாயங்களைக் கைகழுவினர். பணத்தைப் போலவே மதமும் அதிகாரத்துக்கான ஒரு ஊற்றுக் கண்ணாக அமைந்து விடுகிறது என்பதைத் தானே இது காட்டுகிறது?

ஐரோப்பியச் சமூகத்தின் இன்றைய காலகட்டத்தில் அதிகாரத்துக்கான ஒரு ஊற்றுக்கண் என்கிற முறையில் சொத்து ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்து நிற்பதால், இந்தியாவிலும் சொத்து அவ்வாறாகவே செயல்பட்டது என்று நம்பியது தான் சோசலிஸ்டுகளின் தவறான வாதத்துக்கு காரணமாகும். மதம், சமுதாய அந்தஸ்து, சொத்து ஆகிய எல்லாம் ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்துக்கும் ஆதிக்கத்துக்குமான அடிப்படைகள் ஆகும். இவற்றுள்

ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலகட்டத்தில் மேலோங்கி மற்றவற்றின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன. இது மட்டுமே இந்த அடிப்படைகளுக்கு இடையிலான வேறுபாடு ஆகும்.

சுதந்திரம் என்பதே குறிக்கோள் என்றால், ஒரு மனிதன் மற்றொரு மனிதனின்மேல் கொண்டிருக்கிற ஆளுமையை அழிப்பதே சுதந்திரத்தின் பொருள் என்றால், மிக எளிதாக நமக்குத் தெரியவருவது என்ன? பொருளாதார சீர்திருத்தம் மட்டுமே நாம் மேற் கொள்ள வேண்டிய ஒரே சீர்திருத்தம் என்று வலியுறுத்த முடியாது என்பதே ஆகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில், அதிகாரத்துக்கும் ஆதிக்கத்துக்குமான அடிப் படைகளாக சமுதாயமும் மதமும் இருந்தால் அந்த கட்டத்தில், நாம் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தம் சமுதாய சீர்திருத்தமும் மத சீர்திருத்தமுமே ஆகும்.

வரலாற்றைப் பொருளாதார அடிப்படையில் விளக் கும் இந்திய சோசலிஸ்டுகளின் விளக்கத்தை இவ்வாறு மறுக்க முடியும். சொத்தை மக்களுக்குச் சமமாகப் பங்கிடு வது ஒன்றே உண்மையான ஒரே சீர்திருத்தம். அது மற்ற எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் முன்னோடியாக நடந் தேற வேண்டும் என்பது சோசலிஸ்டுகளின் வாதம். ஆனால் இந்த வாதம் எடுபடுவதற்கு வரலாற்றைப் பொருளாதார அடிப்படையில் விளக்குவது தேவை இல்லை என நான் எண்ணுகிறேன். நான் சோசலிஸ்டுகளைக் கேட்க விரும்புவது எல்லாம், சமுதாய அமைப்பை முதலில் சீர்திருத்தி அமைக்காமல் நம்மால் பொருளாதார சீர்திருத்தத்தைக் கொண்டு வர முடியுமா என்பதைத் தான். இந்திய சோசலிஸ்டுகள் இதுபற்றி சிந்திக்கவே இல்லை என்று தோன்றுகிறது. அவர்களுக்குத் தீங்கிழைக்க வேண்டும் என்பது என் நோக்கம் அல்ல. பிரபலமான சோசலிஸ்டு ஒருவர் சில தினங்களுக்கு முன் என் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் கூறுகிறார்:

ஒரு வகுப்பினர் இன்னொரு வகுப்பினரை அடக்கி ஒடுக்குவதும், இழிவாக நடத்துவதும் ஆகிய இந்த நிலை தொடர்ந்து நீடிக்கும் வரை இந்தியாவில் சுதந்திரமான ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நான் நம்பவில்லை. இருந்தாலும் சோசலிசக் கோட்பாட்டில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சோசலிசத்தில் பல்வேறு வகுப்புகளுக்கும் குழுக்களுக்கும் சமத்துவம் கிட்டும் என்று நம்புகிறேன். சோசலிசம் மட்டுமே இந்தப் பிரச்சனைகளையும், இதைப் போலவே மற்ற எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான உண்மையான வழி எனவும் நான் நம்புகிறேன்.

'பல்வேறு வகுப்பினரும் பரிபூரண சமத்துவத்தோடு நடத்தப்படுவர் என நான் நம்புகிறேன்' என்று கூறி விட்டால் தீர்ந்ததா என்று சோசலிஸ்டுகளைக் கேட்க விரும்புகிறேன். நம்பிக்கையே போதும் என்று திருப்தி அடைந்து விடுகிற ஒரு சோசலிஸ்டு சோசலிசம் என்பதில் என்னவெல்லாம் அடங்கி இருக்கிறது என்பதைக் கடுகளவு கூட தான் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகிறார். நீண்ட நெடுங்காலத்துக்குப் பின் நிறைவேறக் கூடிய வெறும் லட்சிய உருவகம் அல்ல சோசலிசம். அது நடைமுறையில் செயல்படுத்தக் கூடிய ஒரு திட்டமே ஆகும், என்றால் சோசலிஸ்டுக்கு முன் உள்ள கேள்வி அவர் சமத்துவத்தை நம்புகிறாரா இல்லையா என்பதல்ல. அவருக்கு முன் உள்ள கேள்வி ஒரு சமூக கட்டமைப்பு என்கிற ரீதியிலும் கொள்கை ரீதியிலும் ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாரை அடக்கி ஒடுக்குவதும் இழிவுபடுத்துவதும் இருக்கிறது என்பதை அவர் ஒத்துக் கொள்கிறாரா? அவ்வாறே வகுப்பு வேற்றுமையை உருவாக்கும் கொடுங்கோன்மையும் அடக்குமுறையும் நீடிப்பதை அனுமதிக்கிறாரா?

சோசலிசத்தை அடைவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தால் நான் சொல்வதை முழுமையாக விளங்கிக்

கொள்ள முடியும். அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சி ஒன்றும் இல்லாமல் சோசலிஸ்டுகள் நினைக்கும் பொருளாதாரச் சீர்திருத்தத்தை செய்து விட முடியாது என்பது தெளிவு. அதிகாரத்தைக் கைப்பற்றுபவர் பாட்டாளியாகத் தான் இருந்தாக வேண்டும். நான் கேட்கிற முதல் கேள்வி, புரட்சிக்காக இந்தியப் பாட்டாளிகள் இணைந்து வருவார்களா? மக்களை இவ்வாறு ஒன்றுபடும்படி தூண்டுவது எது என்பதுதான்.

மற்ற விசயத்தில் எல்லாம் சமத்துவம் இருக்கும் போதும், தன்னோடு சேர்ந்து செயல்படும் மற்ற மனிதர்கள் சமத்துவம்— சகோதரத்துவம்— எல்லாவற்றுக்கும் மேல், நியாயம் என்கிற உணர்வுகளால் தூண்டப்பட்டே செயல்படுகிறார்கள் என்கிற உணர்வு ஏற்பட்டால் மட்டுமே, எந்த ஒரு மனிதனும் மற்றவர்களுடன் ஒன்றிணைவான் என்றே எனக்குத் தோன்றுகிறது. புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்த பின் தாங்கள் சமத்துவமாக நடத்தப் படுவோம். தம்மிடம் யாரும் சாதி, மத வேறுபாடு பாராட்ட மாட்டார்கள் என்று தெரிய வந்தால் ஒழிய, சொத்தைப் பொதுவுடமையாக்குவதற்கான புரட்சி ஒன்றில் மக்கள் சேரமாட்டார்கள். புரட்சிக்குத் தலைமை தாங்குகிற சோசலிஸ்டு தனக்கு சாதியில் நம்பிக்கை இல்லை என்று வாக்குறுதி அளித்தால் மட்டும் போதாது. ஒருவருக்கு ஒருவர் சமம், சகோதரர் என்ற மனப்பான்மை ஒவ்வொருவருடைய சொந்த உள்ளுணர்வாக இருந்தாக வேண்டும். இந்த உணர்வு அவர் மனதில் மிக ஆழமாக வேரூன்றி இருக்க வேண்டும்.

இந்திய பாட்டாளி வர்க்கம் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு ஒன்றைத்தவிர வேறெந்த வேறுபாடும் பார்ப்பதில்லையா? சாதி அல்லது மதம், அந்தஸ்தில் மேல்- கீழ் போன்ற எந்த வேறுபாட்டையும் அவர்கள் பாராட்டுவதில்லையா? இந்திய ஏழைகள் இந்த வேறுபாட்டை பாராட்டவே செய்கிறார்கள் என்பதே உண்மை என்றால்,

பணக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையில் பாட்டாளி வர்க்கத்தினர் ஓரணியாய்த் திரண்டு ஒன்றுபட்டு போராடு வர் என்று எதிர்பார்க்க முடியுமா? பாட்டாளி வர்க்கம் தன்னை ஒன்றுபட்ட ஓர் அணியாகத் திரட்டிக் கொள்ள முடியாத நிலையில் புரட்சி எப்படி சாத்தியமாகும்?

ஒரு வாதத்துக்காக, அதிர்ஷ்டக் காற்று எதிர்பாராத படி வீசி இந்தியாவில் புரட்சி நடந்து விடுகிறது. சோச லிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்து விடுவார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அப்போது இந்தியாவில் நிலவுகிற சமூக அமைப்பின் காரணமாக ஏற்படும் பிரச்சனைகளை அவர்கள் கவனிக்காமல் இருக்க முடியுமா? அந்தஸ்த்தால் மேல்-கீழ் என்றும் தீண்டத்தக்கவர்- தீண்டத்தகாதவர் என்றும் வேறுபாடுகளைக் கடைப்பிடிக்கும்படி மக்களைத் தூண்டும் தவறான எண்ணங்கள் உருவாக்கி உள்ள பிரச்சனைகளை சமாளிக்காமல், இந்தியாவில் சோசலிச அரசு ஒரு நாளைக்கு தாக்குப்பிடிக்க முடியுமா? என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வெறும் வாய்ப் பந்தல் போடுவதோடு திருப்தி அடைய முடியாது. சோசலி சத்தைத் திட்டவட்டமான உண்மை நிலையாக ஆக்கவே விரும்புகிறார்கள் என்றால் அவர்கள் உணர்ந்து அங்கீக ரிக்க வேண்டிய உண்மைதான் என்ன? சமூகச் சீர்திருத்தம் என்பது அடிப்படையானது. அவர்கள் அதில் இருந்து தப்பி ஓடி ஒளிந்து கொண்டு விட முடியாது என்பது தானே அது?

இந்தியாவில் வெளிப்படையாக மேலோங்கி நிற்கிற சமூகப் பிரச்சனை எந்த ஒரு சோசலிஸ்டும் எதிர்கொள்ள வேண்டிய ஒரு பிரச்சனை. இந்தப் பிரச்சனையைக் கையா ளாமல் புரட்சியை வென்று அடைய முடியாது. அதிர்ஷ் டத்தின் காரணமாக புரட்சி நடந்துவிட்டாலும் கூட தன் குறிக்கோளை அடைய சோசலிஸ்டு சாதிப் பிரச்சனை யோடு மல்லுக்கு நிற்க வேண்டி இருக்கும். இது என் ஆணித்தரமான கருத்து. புரட்சிக்கு முன்னால் சாதிப்

பிரச்சனையை கணக்கில் கொள்ளத் தவறினால், புரட்சிக் குப் பின்னால் சாதிப் பிரச்சனையை கையாள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியே தீருவார்கள். அதாவது நீங்கள் எந்த திசையில் சென்றாலும் சாதி அரக்கன் வந்து வழி மறிப்பான். இந்த சாதி அரக்கனை ஒழிக்கா மல் அரசியல் சீர்திருத்தத்தையோ பொருளாதார சீர்திருத் தத்தையோ அடைய முடியாது.

## 4

இன்றும் கூட சாதிக்கு ஆதரவாளர்கள் இருந்து வருவது வருத்தம் தரும் நிலைமைதான். சாதிக்கு ஆதர வாகக் கூறப்படும் வாதங்கள் ஏராளம். ''சாதி அமைப்பு என்பது தொழில் பிரிவினையின் மறு பெயரே. நாகரிகச் சமுதாயம் ஒவ்வொன்றிலுமே தொழில் பிரிவினை என்பது தேவையான ஒரு அம்சமாக உள்ளது. எனவே சாதி அமைப்பில் தவறேதும் இல்லை'' என்னும் வாதம் உள்ளது. இந்த வாதத்துக்கு எதிராக வலியுறுத்திக் கூறப் பட வேண்டிய முதல் விசயம் என்ன என்றால் சாதி அமைப்பு தொழில்களை மட்டும் பிரிப்பதில்லை. தொழி லாளர்களையுமே பிரித்து விடுகிறது. நாகரிகச் சமுதாயங் களுக்குத் தொழில் பிரிவினை தேவையானது என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனால் எந்த நாகரிகச் சமுதாயத் திலும் தொழில் பிரிவினையானது தொழிலாளர்களையே ஒரு செயற்கையான முறையில், இறுக்கமான தனித்தனித் தீவுகளாகப் பிரித்து விடுவது இல்லை.

தொழிலைப் பிரிப்பது என்பது வேறு. தொழிலாளி களைப் பிரிப்பது என்பது வேறு. சாதி அமைப்பானது தொழிலாளிகளை வெறுமனே பிரிக்கிற அமைப்பு மட்டு மல்ல, அவ்வாறு பிரிக்கப்பட்ட தொழிலாளிகளை மேல் கீழ் என்று ஏற்றத்தாழ்வாக— படிநிலை அமைப்பாக— வகைப்படுத்தும் அமைப்பும் ஆகும். இதுபோல தொழி

லாளிகளை ஏத்றத்தாழ்வாக வகைப்படுத்துகிற தொழில் பிரிவினை வேறு எந்த நாட்டிலும் இல்லை.

மூன்றாவதாக சாதி அமைப்பானது தன் இயல்பான போக்கில் உருவானது அல்ல. அது மனிதர்களின் இயற்கையான தன்மைகளின் அடிப்படையில் அமைந்ததும் அல்ல.

சமூக மேம்பாட்டுக்கும் தனிமனிதரின் மேம்பாட்டுக்கும் செய்யப்பட வேண்டியது என்ன? ஒருவர் தனக்குத் திறமையும் ஆர்வமும் உள்ள தொழிலை தானே தேர்ந்து கொள்ளவும், தன் வழியில் செய்து கொள்ளவும், தக்க சூழலைப் படைத்துத் தரவேண்டும், இந்தக் கோட்பாடு சாதி அமைப்பில் மீறப்படுகிறது. எப்படி என்றால் சாதி அமைப்பு ஒருவரது வேலையை முன் கூட்டியே நிர்ணயித்து விடுகிறது. சாதி அமைப்பில் ஒருவர் பெற்றுள்ள திறமையின் அடிப்படையில் அல்லாமல் அவரது பெற்றோரின் சமூக அந்தஸ்தின் அடிப்படையிலேயே அவரது வேலை நிச்சயிக்கப்படுகிறது.

இன்னொரு கோணத்தில் இருந்து பார்த்தால், சாதி அடிப்படையில் தொழிலை மேல் என்றும் கீழ் என்றும் பிரிப்பது நேரடியாகவே நாசகரமானது. தொழில்துறை, மாறாத நிலையில் எப்போதும் இருப்பது இல்லை. அது வேகமான திடீர் மாறுதல்களுக்கு ஆளாகிறது. தொழில் துறையில் இதுபோன்ற மாறுதல்கள் இருந்து வருவதால் ஒவ்வொரு தனிமனிதனும் தன் வாழ்க்கைத் தொழிலை மாற்றிக் கொள்ளும் சுதந்திரம் கொண்டவனாக இருக்க வேண்டும். மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும் சுதந்திரம் இல்லாமல் போனால் ஒருவருக்கு தன் பிழைப்பைத் தேடிக் கொள்வது என்பதே முடியாமல் போகும்.

தங்கள் பரம்பரைத் தொழில் அல்லாத வேறு எந்த தொழிலுக்கும்— ஆட்கள் தேவைப்படும் போது கூட— இந்துக்கள் செல்வதை சாதி அமைப்பு அனுமதிப்பது

இல்லை. தன் சாதிக்கு என்று ஒதுக்கப்பட்ட தொழிலைத் தவிர, வேறு புதிய தொழில்களை மேற்கொள்வதைவிட, பட்டினி கிடப்பதே மேல் என்று ஒரு இந்து சும்மா இருக்க காரணம் என்ன? சாதி அமைப்புத்தான் காரணம். தொழில்களை மாற்றிக் கொள்ள சாதி அனுமதிப்பதில்லை. ஆகையால் நம் நாட்டில் நிலவுகிற வேலை இல்லா திண்டாட்டத்துக்கான ஒரு நேரடிக் காரணம் ஆக சாதி இருக்கிறது.

தொழில் பிரிவினை என்ற முறையில் சாதி அமைப்பில் இன்னொரு பெரிய குறைபாடும் உள்ளது. சாதி அமைப் பில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிற தொழில் பிரிவினை சொந்தத் தேர்வின் அடிப்படையில் அமைந்தது அல்ல. தனி மனித உணர்ச்சிகளுக்கோ முன்னுரிமைக்கோ இவ்வகைப் பிரிவினையில் சிறிதும் இடம் இல்லை. இது தலைவிதித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. வறுமையை யும் அதனால் விளையும் துன்பத்தையும் விட ஏராளமான மக்கள் தங்களுக்கு விருப்பம் இல்லாத வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டுள்ளனர் என்பதே நவீன தொழில் அமைப்பின் மிகப் பெரிய கொடுமை. சமூக மேம்பாட் டைக் கருத்தில் கொள்ளும் யாரும் இதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். இது போன்ற தொழில்கள் எப்போதும் ஒருவனிடம் வெறுப்பையும், கெட்ட அபிப்பிராயத்தை யும், தட்டிக்கழிக்கும் மனோபாவத்தையுமே தூண்டி விடும். எத்தனையோ தொழில்கள் இந்தியாவில் இந்துக் களால் இழிவானவை என்று கருதப்படுவதாலேயே அத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்கள் அத்தொழில்களை வெறுக்கும்படித் தூண்டுகிறது. இத்தொழில்கள் மீது இந்து மதம் அவமரியாதையையும் இழிவையும் கற்பிப்ப தால், அத்தொழில்களை செய்வோர் கேவலப்படுத்தப் படுகின்றனர். இதுதான் இத்தொழில்களில் ஈடுபடுவோர் இவற்றைச் செய்யாமல் தட்டிக் கழிக்கவும் தப்பி ஓடவும் தொடர்ந்து தூண்டுகிறது. மனிதர்களின் எண்ணமும்

இதயமும் அவர்கள் செய்கின்ற வேலை மீது ஒன்றாத போது அத்தகைய அமைப்பில் எப்படி மேம்பாடு ஏற்பட முடியும்? தனிமனிதரின் இயற்கையான ஆற்றல்களையும் இயல்பான விருப்பங்களையும் சமூக விதிகளின் நிர்ப்பந்தத் துக்கு உள்ளாக்குவதே சாதியின் தன்மையாக இருப்பதால், பொருளாதார அமைப்பு என்ற வகையில் சாதி என்பது தீமை பயக்கக்கூடிய ஒரு நிறுவனமே.

## 5

சாதி அமைப்பைப் பாதுகாக்க சிலர் உயிரியல் கருத் துக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர். மரபு இனத்தூய்மையையும் இரத்தத் தூய்மையையும் காப்பதே சாதியின் நோக்கமாக இருந்தது என்று கூறப்படுகிறது. இனவியலாளரின் கருத்தோ வேறு மாதிரி இருக்கிறது. கலப்பற்ற ஒரு மனித இனம் எங்குமே இல்லை. இதுவரை யில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா மரபு இனங் களுக்கிடையிலும் கலப்பு இருந்தே வந்துள்ளது என்று அவர்கள் கருதுகிறார்கள். குறிப்பாக, இந்து மக்கள் விஷயத்தில் இது முற்றிலும் பொருந்தும். ''இந்திய சமூகத்தில் அந்நியர் கலப்பு'' என்னும் நூலில் திரு. பந்தார்க்கர் கூறுகிறார்.

> அந்நியக் கலப்பு இல்லாத சாதியோ வகுப்போ இந்தியாவில் இல்லவே இல்லை. சத்திரிய வகுப்பினரி டையே மட்டுமல்ல; தங்கள் சாதி எவ்வித அந்நிய இரத்தக் கலப்புக்கும் ஆளாகவே இல்லை என்கிற ஆனந்த மாயையிலே ஆழ்ந்து கிடக்கிற பிராமண சாதியிலும் கூட அந்நிய இரத்தக் கலப்பு இருக்கவே செய்கிறது.

சாதி அமைப்பானது மரபு இனக்கலப்பைத் தடுக் கவோ இரத்தத் தூய்மையைக் காப்பதற்கோதான் உருவானது என்று கூற முடியாது. உண்மையில் இந்திய

மரபு இனங்கள் தமக்குள் இரத்தத்திலும் கலாச்சாரத்திலும் இரண்டற கலந்ததற்கு, நெடுங்காலத்துக்கும் பின்னர் தான் சாதியமைப்பு நடைமுறைக்கு வந்திருக்கிறது. சாதி பாகுபாடு என்பது உண்மையில் மரபு இனப்பாகுபாடே என்பதும் பல்வேறு சாதிகளும் பல்வேறுபட்ட மரபு இனங்களே எனக் கொள்வதும் உண்மைகளை அப்பட்டமாகத் திரித்துக் கூறுவதே ஆகும்.

பஞ்சாப் பிராமணனுக்கும் சென்னை பிராமணனுக்கும் இடையில் என்ன மரபு இன ரீதியான ஒற்றுமை காணப் படுகிறது? வங்காளத்தில் உள்ள தீண்டத்தகாதோருக்கும் சென்னை தீண்டத்தகாதோருக்கும் இடையே என்ன மரபு இன வேற்றுமை காணப்படுகிறது? பஞ்சாப் பிராமணனுக் கும் பஞ்சாபின் சமர் (Chamar) சாதிக்காரருக்கும் இடையே என்ன மரபு இன ரீதியான வேறுபாடு இருக் கிறது? சென்னை பிராமணனுக்கும் சென்னை பறையனுக் கும் உள்ள மரபு இன ரீதியான வேறுபாடு தான் என்ன? பஞ்சாப் பிராமணனும் பஞ்சாப் சமரும் மரபு இனத்தால் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களே. சென்னைப் பிராமண னும் சென்னைப் பறையனும் மரபு இனத்தால் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களே.

சாதி அமைப்பு மரபு இன ரீதியான பிரிவினையைக் காட்டுவதாக இல்லை. ஒரே மரபு இனத்தைச் சேர்ந்த மக்களின் சமூக ரீதியான பிரிவினையாகச் சாதி இருக் கிறது. சாதி அமைப்பை மரபு இன ரீதியான பிரிவினை என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் ஒரு கேள்வி எழுகிறது. கலப்பு மணத்தின் வாயிலாக வேறுபட்ட மரபு இனங்களைச் சார்ந்த மக்களுக்கு இடையே, இனக் கலப்பும் இரத்தக்கலப்பும் ஏற்பட அனுமதித்தால் என்ன கெட்டுவிடும்? மனிதர்கள் சந்தேகமில்லாமல் மிருகங்களிட மிருந்து வேறுபட்டவர்கள் தான். அறிவியலே மனிதரை யும் மிருகங்களையும் வெவ்வேறு உயிரினங்கள் என்பதை ஒத்துக் கொள்கிறது.

ஆனால் மரபு இனத் தூய்மையில் நம்பிக்கை கொண்டிருக்கும் விஞ்ஞானிகள்கூட வெவ்வேறு மரபு இனங்களை (Races) வெவ்வேறு உயிரினங்கள் (Species) என்று கூறுவதில்லை. அவை ஒரே மனித இனத்தின் பல்வேறு வகைகள் மட்டுமே. வெவ்வேறு மரபு இனத்தைச் சார்ந்த மனிதர்களுக்கு தங்களுக்கு இடையில் மணம் புரிந்து சந்ததியைப் பெருக்க முடியும். அந்த சந்ததியும் இனப்பெருக்கம் செய்யும் திறன் உள்ளதாக இருக்கும். மலடாக இருக்காது. பாரம்பரியம், இனமேம்பாட்டியல் தொடர்பான ஏராளமான முட்டாள் தனமான கருத்துகள் சாதி அமைப்புக்கு ஆதரவாகப் பரப்பப்பட்டு வருகின்றன.

புத்திசாலித்தனமான இனச்சேர்க்கை மூலம் ஒரு மரபு இனத்தை மேம்படுத்துவது என்பதுதான் இன மேம்பாட்டியலின் அடிப்படைக் கொள்கை. சாதி அமைப்பு இக்கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த தானால் யார்தான் அதை எதிர்ப்பார்கள்? ஆனால் சாதி அமைப்பில் இது போன்ற சிறந்த இனச்சேர்க்கை எப்படி சாத்தியமாகும்? பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்குள் கலப்புமணம் புரிவதைத் தடுக்கும் எதிர்மறை அமைப்பாகவே சாதி அமைப்பு இருக்கிறது. ஒரு குறிப் பிட்ட சாதியைச் சேர்ந்த எந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நேரடியாக தேர்ந்து எடுக்கிற அமைப்பாக இல்லை.

சாதியின் தோற்றத்துக்கு மரபு இன மேம்பாட்டியலே அடிப்படை என்றால் உபசாதிகளின் தோற்றுவாய்க்கும் அதுதான் அடிப்படையாக இருக்க வேண்டும். ஆனால் உபசாதிகளின் தோற்றுவாய்க்கு மரபுஇன மேம்பாட்டியலே அடிப்படை என யாரேனும் துணிந்து கூற முடியுமா? அவ்வாறு வாதிடுவது அபத்தமாகவே முடியும். கைப்புண் ணுக்கு கண்ணாடி தேவை இல்லை. சாதி என்பது மரபு இனத்தைக் குறிக்கிறது என்றால், உபசாதிகளின் வேறுபாடு மரபு இன வேறுபாடுகளை குறிப்பதாக இருக்க முடியாது.

ஏனெனில் பல்வேறு உபசாதிகளும் ஒரே மரபு இனத்தின் உட்பிரிவுகள்தான். அப்படியானால் உபசாதிகளுக்கு இடையே கலப்பு மணத்துக்கும் சமபந்திக்கும் எதிராக உள்ள தடை இனத்தூய்மையையோ இரத்தத் தூய்மை யையோ காக்கும் நோக்கம் கொண்டதாக இருக்க முடியாது. உபசாதிகளின் தோற்றுவாய்க்கு மரபு இன மேம்பாடு என்பது அடிப்படை ஆக இருக்க முடியாது என்ற நிலையில், சாதியின் தோற்றுவாய்க்கு மரபு இனமேம்பாடே அடிப்படை என்று முடிவுகட்டுவது எந்த விதத்திலும் அர்த்தமற்றது ஆகும்.

சாதியின் தோற்றுவாய்க்கு மரபு இன மேம்பாடே அடிப்படை என்றால் கலப்புமணம் தடைசெய்யப்பட்டு இருப்பது ஏன் என்று புரிந்து கொள்ள முடியும். ஆனால் சாதிகளுக்கு இடையிலும் உபசாதிகளுக்கு இடையிலும் சமபந்தி தடைசெய்யப்பட்டு இருப்பதன் நோக்கம் என்ன? சமபந்தியால் இரத்தத் தூய்மை கெட்டு விடுமா? எனவே அது இனத்தின் மேம்பாட்டுக்கோ சீர்கேட்டுக்கோ காரண மாக இருக்க முடியாது.

சாதியின் தோற்றுவாய்க்கு விஞ்ஞான அடிப்படை ஏதும் இல்லை என்பதை இது காட்டுகிறது. எனவே இன மேம்பாடே சாதிக்கு அடிப்படை என்று கூறுகிறார்கள். அறவே விஞ்ஞான சாயம் பூசவே முயல்கிறவர்கள், பரம்பரை இயல்புகளின் விதிகள் பற்றிய திட்டவட்டமான அறிவை நாம் பெறாத வரை, மரபு இன மேம்பாட்டியல் என்பது இன்றைய நாளிலும் கூட நடைமுறை சாத்தியம் இல்லாத ஒன்றாகவே இருந்துவிடும்.

பேரா. பேட்சன் (Bateson) அவர்கள் தன் ''பரம் பரைக் குணங்கள் பற்றிய மெண்டலின் கொள்கைகள்'' என்னும் நூலில் கூறுகிறார்:

> ஒரு குறிப்பிட்ட வமிசாவழியின் உயர்குணங்கள் பரம்பரை பரம்பரையாக அந்த வமிசாவழியைச்

சேர்ந்த மக்களை ஒரு குறிப்பிட்ட முறையில்தான் வந்தடைகின்றன என்று கூற முடியாது. இத்தகைய உயர் குணங்களும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்த உடலாற்றலும் மக்களை வந்தடைந்து ஒரு மரபியல் அம்சத்தைப் பெற்று இருப்பதனால் மட்டும் அல்ல. வேறு பல காரணிகளும் ஒன்றிணைவதால் தான்.

சாதி அமைப்பு மரபு இன மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என வாதிடுவது இன்றைய நவீன விஞ்ஞானிகளுக்கே இல்லாத பாரம்பரியம் பற்றிய அறிவு, இன்றைய இந்துக்களின் மூதாதையருக்கு அன்றே இருந்தது என்று ஏற்றிக் கூறுவதே ஆகும். பழத்தைப் பார்த்துத் தானே அதைத் தந்த மரம் எப்படிப்பட்டதென மதிப்பிட முடியும்? சாதி இன மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என்றால், சாதி அமைப்பு எப்பேர்ப்பட்ட மனிதர்களை உருவாக்கி இருக்க வேண்டும்! ஆனால் இந்துக்கள் மிகவும் தரக்கேடான நிலையில் இருக்கிறார்கள் (Hindus are C3 people). வளர்ச்சியில் குன்றிய, ஆற்றலில் குறைந்த குள்ளர்களின், அற்பர்களின் சந்ததியாகத்தானே இந்துக்கள் இருக்கிறார்கள்? இந்த நாட்டில் 100க்கு 90 பேர் இராணுவத்துக்கு அருகதை அற்றவர்களாக அறிவிக்கப்பட்டு உள்ளனர். இன்றைய நவீன விஞ்ஞானிகள் கூறும் 'மரபு இனமேம்பாட்டியலை' (eugenics) சாதி அமைப்பு அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. தங்கள் சமூக அந்தஸ்தைச் செயல்படுத்தும் வல்லமை பெற்றவர்களும், தங்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்தவர்கள் மீது அந்த அமைப்பைத் திணிக்கும் அதிகாரம் பெற்றவர்களுமான வக்கிர மனம் படைத்த இந்துக்களின் ஆணவத்தையும் சுயநலத்தையுமே சாதி அமைப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## 6

சாதியினால் பொருளாதார மேம்பாடு முடக்கப்பட்டுள்ளது. சாதி, இன மேம்பாட்டுக்கு வழிவகுக்கவில்லை.

அவ்வாறு செய்யவும் சாதியால் இயலாது. இந்துக்களை முற்றிலும் சீரழித்து சின்னாபின்னமாக்கியதுதான் சாதி செய்த ஒரே காரியம்.

முதலாவதாகவும் முக்கியமானதாகவும் நாம் புரிந்து கொள்ள வேண்டியது; இந்து சமூகம் என்பதே ஒரு கட்டுக் கதை என்பதைத்தான். 'இந்து' என்கிற பெயரே ஒரு அந்நியப் பெயர்தான். சுதேசிகளிடம் இருந்து தம்மை இனம் பிரித்துக் காட்ட முகமதியரால் 'இந்துக்கள்' என்ற பெயர் தரப்பட்டது. முகமதியரின் படையெடுப்புக்கு முந்தைய எந்த சமஸ்கிருத நூலிலும் இந்து என்கிற சொல்லே காணப்படவில்லை. இந்துக்களுக்கு தாங்கள் பொதுவானதொரு சமூகம் என்கிற சிந்தனையே இல்லாது இருந்த காரணத்தால் தங்களுக்குப் பொதுவானதொரு பெயர் தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. உண்மையில் இந்து சமூகம் என்ற ஒன்று இல்லை. இருப்பதெல்லாம் பல சாதிகளைக் கொண்ட கலப்படமே. ஒவ்வொரு சாதியும் தான் ஒரு தனித்த சாதியாக இருப்பதை நன்றாகவே உணர்ந்திருக்கிறது. தானொரு சாதி என்கிற அளவில் தன் சொந்த இருத்தல் மட்டுமே ஒவ்வொரு சாதிக்கும் முதலும் முடிவுமான குறிக்கோளாக இருந்து வருகிறது. பல சாதிகளும் ஒரு கூட்டமைப்பாகக் கூட ஆகவில்லை. இந்து முஸ்லீம் கலவரம் ஏற்படும் சமயங்கள் தவிர்த்த மற்ற சமயங்களில், மற்ற சாதிகளோடு தம் சாதிக்கு உறவு உண்டு என்று எந்த சாதியினரும் எண்ணுவது இல்லை. மற்ற சமயங்களில் எல்லாம் ஒவ்வொரு சாதியும் பிற சாதிகளில் இருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளவும் வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளவுமே முயலுகின்றது.

ஒவ்வொரு சாதியினரும் தத்தம் சாதிக்குள்தான் மணம் புரிந்து கொள்கின்றனர் என்பது மட்டுமல்ல; அவர்கள் ஒரே பந்தியில் அமர்ந்து சாப்பிடுவதும் கூட தம் சாதியாரோடு தான். மேலும் ஒவ்வொரு சாதியினரும்

உடுத்த வேண்டிய உடை என்ன என்பதையும் கூட அந்தந்த சாதி தெளிவாகவே வரையறுத்துள்ளது. இந்திய நாட்டைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் எண்ணற்ற விதங்களில் ஆடை அணிந்து சுற்றுலாப் பயணிகள் வேடிக்கைப் பார்க்கத்தக்கக் காட்சிப் பொருளாக நிற்பதற்கு வேறென்ன விளக்கம் இருக்க முடியும்? உண்மையில், உண்மையான இந்து. எவருடனும் தொடர்பற்று ஒரு கிணற்றுத் தவளையாகவே இருக்க வேண்டும்.

சமூகவியலாளர் கூறுகிற குழு உணர்வு இந்துக்களிடம் அறவே இல்லாத ஒன்று. நாம் அனைவரும் இந்துக்களே என்கிற உணர்வு அவர்களிடம் இல்லை. ஒவ்வொரு இந்து விடத்திலும் இருக்கிற உணர்வு சாதி உணர்வுதான். இதன் காரணமாகத்தான் இந்துக்களை ஒரு சமூகமாகவோ தேசமாகவோ கொள்ள முடியவில்லை. இந்தியர்கள் ஒரே தேசத்தவராக இல்லை. அவர்கள் தமக்கென ஒரே சீரான அடையாளத்தைப் பெறாத கும்பலாகவே உள்ளார் கள். ஆனால் இந்தியர்கள் பலர் நாட்டுப்பற்று காரணமாக இந்த உண்லமகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

''வெளிப்படையாகத் தெரிகிற ஆயிரம் வேற்றுமை களுக்கு அடியில் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் ஆகியவற்றில் இந்தியா எங்கும் ஒற்றுமை ஒன்று காணப்படுகிறது. இந்த ஒற்றுமையே இந்துக்களின் வாழ்க்கையை அடையாளம் காட்டுவதாக இருக்கிறது'' என்று அவர்கள் கூறுகிறார்கள். பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் ஆகியவற்றில் ஒற்றுமை இருப்பதால் மட்டுமே இந்துக்கள் எல்லாம் ஒரே சமூகத் தைச் சார்ந்தவர்கள் என்ற முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு ஒப்புக் கொள்வது ஒரு சமூகத்தை உருவாக்கும் அடிப்படைக் காரணிகளையே தவறாகப் புரிந்து கொள்வது ஆகும். நெடுந்தொலைவில் இருப்பதால் ஒருவன் தன் சமூகத்தின் உறுப்பாக இருக்கக் கூடாத

வன் ஆகிவிடுவதும் இல்லை. பல மனிதர்கள் நெருக்கமாக வாழ்வதால் மட்டும் அவர்கள் ஒரே சமூகம் ஆகிவிடவும் மாட்டார்கள். இரண்டாவதாக, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் முதலியவற்றில் காணப்படும் ஒத்த தன்மை மட்டும் மனிதர்களை ஒரு சமூகமாக ஒன்றிணைக்கப் போதுமானது அல்ல. செங்கல்லைக் கைமாற்றித் தருவதை போலப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் போன்றவற்றையும் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாருக்குக் கைமாற்றலாம். அதனால் அந்த இரு கூட்டத்தாருக்கும் இடையே ஒற்றுமை இருப்பதாகத் தோன்றலாம்.

கலாச்சாரம் தொடர்பின் மூலம் பரவுகிறது. அதனால் தான் பல்வேறு பூர்வகுடிகள் நெருக்கமாக வாழாத போதிலும் கூடப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் முதலானவற்றில் அவர்களிடையே ஒற்றுமை காணப்படுகிறது. ஆனால் பூர்வ குடிகள் இடையே இந்த ஒற்றுமை இருப்பதை மட்டும் கணக்கில் கொண்டு பூர்வகுடிகள் எல்லோருமே ஒரே சமூகத்தினர் என்று எவராலும் கூற இயலாது. ஏன் எனில் ஒரு சில அம்சங்களில் காணப்படும் ஒற்றுமை ஒன்று மட்டுமே சமூகம் ஒன்றை உருவாக்கப் போதுமானது ஆகாது. தங்களுக்குள் பொதுவான விஷயங்களைக் கொண்டிருக்கும்போதுதான் மனிதர்கள் ஒரு சமூகமாக உருக்கொள்கின்றனர். மனிதர்கள் ஒத்த தன்மையைப் பெற்றிருப்பது என்பது தமக்குள் பொதுவான விஷயங்களைப் பெற்றிருப்பது என்பதில் இருந்து முழுவதும் மாறுபட்ட வேறொரு விஷயமே ஆகும்.

மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து உறவாடுவதால் மட்டுமே தமக்குள் பொதுவான அம்சங்களை அடைகிறார்கள். அதாவது சமூகமானது மனிதர்கள் கலந்து உறவாடுவதால் மட்டுமே சமூகமாக இருக்கிறது. மற்றவர்களுடைய செயல்பாடுகளோடு ஒத்துப்போகிற முறையில் மனிதர்கள் செயல்பட்டால் மட்டும் போதாது. ஒத்தத்

தன்மையனவாக இருந்தாலும் இணையான நடவடிக்கைகள் மனிதர்களைச் சமூகமாக ஒன்றிணைக்காது. பல சாதியைச் சேர்ந்த இந்துக்களும் கொண்டாடும் திருவிழாக்கள் ஒரே மாதிரியாக இருப்பதே இவ்வுண்மையை நிரூபிக்கும். இருந்தும் அந்த ஒரே மாதிரியான திருவிழாக்கள் அவற்றை இணையாகக் கொண்டாடும் பல்வேறான சாதிகளை ஒன்றுபட்ட ஒரே சமூகமாக இணைத்து விடுவதில்லை. அப்படி இணைக்கப்பட வேண்டுமானால் அவர்கள் ஒரு பொதுவான நடவடிக்கையில் பங்கு பெறுவதும் பகிர்ந்து கொள்வதும் அவசியம். அதன் மூலம் மற்றவர்களின் மனதில் எழும் அதே உணர்வுகள் இவர்களுக்குள்ளும் எழும்புவதும் அவசியம். கூட்டு நடவடிக்கையில் தனி மனிதனை பங்கு பெறவும், பகிர்ந்து கொள்ளவும் செய்யும் போது தான் அந்தக் கூட்டு நடவடிக்கையின் வெற்றியைத் தன் வெற்றியாகவும், தோல்வியைத் தன் தோல்வியாகவும் அவன் உணருவான். இதுவே உண்மையில் மனிதர்களை ஒன்றிணைத்து ஒரே சமூகமாக ஆக்கும் விசயம் ஆகும். சாதி அமைப்புக் கூட்டு நடவடிக்கையைத் தடுக்கிறது. கூட்டு நடவடிக்கையைத் தடுப்பதின் மூலம் சாதி அமைப்பு இந்துக்களை, ஒன்றிணைந்த வாழ்க்கை முறையும் தன் உணர்வும் கொண்ட ஒரு சமூகமாக உருக்கொள்ள முடியாமல் தடுக்கிறது.

## 7

ஒரு கூட்டத்தார் தனித்தும் விலகியும் வாழ்கின்றனர் என்றும், அக்கூட்டத்தாரிடம் சமூக விரோதத்தன்மை உள்ளது என்றும், இந்துக்கள் அடிக்கடி குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இந்தச் சமூக விரோதத் தன்மையானது தங்களுடைய சாதி அமைப்பின் மிக இழிவான அம்சம் என்பதை இந்துக்கள் தங்களுக்கு வசதியாக மறந்து விடுகின்றனர். கடந்த உலகப் போரின் போது ஜெர்மானியர்கள் ஆங்கிலேயரை எந்த அளவுக்கு வசைபாடினார்களோ

அதே அளவுக்கு இந்தியாவில் ஒவ்வொரு சாதியினரும் பிற சாதியாரை வசைபாடி மகிழ்கின்றனர்.

இந்துக்களின் இலக்கியங்களில் மலிந்து கிடக்கும் சாதி வமிசாவழிக் கதைகளில் ஒரு சாதிக்கு உயர்ந்த பிறப்பிடமும், மற்றச் சாதிகளுக்கு இழிவான பிறப்பிடமும் கற்பிக்க முயற்சி செய்யப்பட்டு உள்ளது. இத்தகைய இலக்கியங்களுக்கு 'சாஹியத்ரிகண்டம்' என்பது பேர்போன ஒரு எடுத்துக்காட்டு, சமூக விரோத மனோபாவம் என்பது சாதியோடு நின்றுவிடவில்லை. அது இன்னும் ஆழமாகப் பரவி உபசாதிகளுக்கு இடையே உள்ளப் பரஸ்பர உறவையும் கெடுத்துவிட்டது. என் மாகாணத்தில் கோலக் பிராமணர்களும், தியோருக பிராமணர்களும், கரட பிராமணர்களும், பால்சி பிராமணர்களும், சித்பவன் பிராமணர்களும் தங்களை பிராமண சாதியின் உட்பிரிவுகள் என கூறிக் கொள்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இடையிலும் சாதித்துவேசம் இருக்கிறது. பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதோருக்கும் இடையே உள்ள காழ்ப் புணர்ச்சி எந்த அளவுக்குக் குறிப்பிடத்தக்கதாகவும், கொடுமையானதாகவும் இருக்கிறதோ அதே அளவுக்குப் பிராமண உட்பிரிவுகளுக்குள்ளும் காழ்ப்புணர்ச்சி இருந்து வருகிறது. இதில் புதுமை ஒன்றும் இல்லை. எங்கெல்லாம் ஒரு கூட்டம் 'தனக்கென்று பிரத்தியேக நலன்களைக்' கொண்டுள்ளதோ அங்கெல்லாம் இந்த சமூக விரோத மனப்பான்மை காணப்படும். இந்த விரோத மனோபாவமே அக் கூட்டத்தார் மற்ற கூட்டத்தாரோடு முழுமையாகக் கலந்துரையாடுவதைத் தடுக்கிறது. இதன் மூலம் அது தான் பெற்றுள்ள பிரத்யேக நலன்களைக் காத்துக் கொள்ள முடிகிறது. இதுவே அதன் பிரதான நோக்கமும் ஆகும்.

நாடுகள் எப்படி தம் தன்னலங்கருதி தனித்து வாழ முற்படுகின்றனவோ அதுபோலவே பல்வேறு சாதிகளும் தன்னலங்கருதி தமக்குள் உறவின்றி தனித்து வாழ முற்படு

கின்றன. இந்தத் தன்மைதான் சாதிகளிடமுள்ள சமூக விரோத மனப்பான்மையாக இருக்கிறது. இந்தத் தன்னல மனப்பான்மை அனைத்துச் சாதிகளிலும் இருக்கிறது. பிராமணர் அல்லாதாருக்கு எதிராகத் தங்கள் ''சொந்த நலன்களைக்'' காத்துக் கொள்வதே பிராமணர்களுக்கு அக்கறையாக இருக்கிறது. அதுபோலவே பிராமணர்களுக்கு எதிராக தங்கள் ''சொந்த நலன்களைக்'' காத்துக் கொள்வதே பிராமணர் அல்லாதோரின் அக்கறையாக இருக்கிறது. எனவே இந்துக்கள் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த கதம்பமாக மட்டும் இருக்கவில்லை. தன் சொந்த நலனுக்காக மட்டும் வாழும்— பரஸ்பரம் போட்டி மனப்பான்மை கொண்ட கூட்டங்களாகவும் உள்ளனர்.

சாதி அமைப்பிலே வருந்தத்தக்க மற்றொரு அம்சமும் உண்டு. முன்காலத்தில் இங்கிலாந்தில் 'ரோஜா யுத்தமும்' 'கிராம்வெல் யுத்தமும்', நடந்த போது, இன்றைய ஆங்கிலேயரின் மூதாதையர் அப்போர்களில் ஆளுக்கொரு தரப்பில் நின்று போரிட்டனர். ஆனால் அவர்களின் சந்ததியினரோ ஒருவருக்கொருவர் எந்தவிதமான வெறுப்பையும் வன்மத்தையும் கடைப்பிடிக்கவில்லை. ஆக, பகை மறக்கப்பட்டுவிட்டது ஆனால் அன்றைய பிராமணர்களின் மூதாதையர் சிவாஜியை அவமதித்ததற்காக இன்றைய பிராமணர்களை மன்னிக்க இன்றைய பிராமணர் அல்லாதவர்களால் முடியவில்லை. முற்காலத்தில் பிராமணர்கள் காயஸ்தர்களை அவமதித்ததால் இன்றைய காயஸ்தர்கள் பிராமணர்களை மன்னிப்பதில்லை

இந்த வேறுபாட்டுக்குக் காரணம்தான் என்ன? சந்தேகமில்லாமல் சாதி அமைப்புத்தான் காரணம். சாதிகளும், சாதி உணர்வும் மக்கள் பழம்பகையை மறக்காமல் காத்துவரக் காரணமாகிவிட்டன. மக்களுக்கிடையில் ஐக்கியத்தைச் சீர்குலைத்து விட்டன.

## 8

விலக்கப்பட்ட பிரதேசங்கள் எவை, ஓரளவு இணைக்கப்பட்ட பிரதேசங்கள் எவை என்பது பற்றி சமீபத்தில் நடந்த விவாதம், இந்தியாவில் உள்ள பழங்குடி மக்களின் நிலைபற்றி கவனம் செலுத்தத் தூண்டியுள்ளது. அவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 130 இலட்சமாக இருக்கலாம். புதிய அரசியல் சாசனத்தில் அவர்களை சேர்க்காமல் விலக்கி வைப்பது முறையா இல்லையா என்பது போன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்கட்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாகரிகத்தில் திளைத்து வருவதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஒரு தேசத்தில், பழங்குடிகள் இன்றைய நாள்வரை தம் தொடக்க கால நாகரிகமற்ற நிலையிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள் என்பதுதான் உண்மையான நிலை. அவர்கள் நாகரிகம் அற்றவர்களாய் இருப்பதோடு மட்டுமல்லாது அவர்களில் சிலர் தாங்கள் மேற்கொண்டுள்ள தொழிலின் காரணமாக குற்றப் பரம்பரையினர் என்றும் வகைப்படுத்தப் பட்டனர். இவ்வளவு நாகரிக வளர்ச்சிக்கு மத்தியில் 130 இலட்சம் பேர் இன்னும் நாகரிகம் அற்றவர்கள் ஆகவும் குற்றப்பரம்பரையினராகவுமே வாழ்க்கை நடத்தவேண்டிய அவலம் உள்ளது ஆனால் இந்துக்கள் இதற்காக ஒருபோதும் வெட்கித் தலைகுனிவதில்லை.

இது வேறு எங்கும் காண முடியாத ஒரு நிகழ்வாகும். இந்த வெட்கக்கேடான நிலைக்குக் காரணம் என்ன? இந்தப் பழங்குடியினரை நாகரிக மக்களாக ஆக்கவும் கண்ணியமான ஒரு வாழ்க்கையை மேற்கொள்ளும்படியாக அவர்களை வழி நடத்திச் செல்லவும் எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப் படாதது ஏன்? பழங்குடியினர் பிறவியிலேயே மூடர்களாக அமைந்து விட்டதுதான் அவர்களின் நாகரிகமற்ற நிலைக்குக் காரணம் என்று கூற இந்துக்கள் முற்படலாம். பழங்குடியினரை நாகரிக மக்கள் ஆக்க

வும், மருத்துவ உதவி செய்யவும், சீர்திருத்தவும் நல்ல குடிமக்கள் ஆக்கவும், இந்துக்கள் எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளாதது தான் பழங்குடியினர் அநாகரிக மக்களாகவே நீடிக்கக் காரணம். இதை ஒப்புக் கொள்ள இந்துக்கள் மறுக்கலாம்.

ஒருவேளை கிறிஸ்தவ மிசனரிகள் பழங்குடியினருக்காக மேற்கொள்ளும் முயற்சிகளை இந்து ஒருவன் செய்ய விரும்புவதாக வைத்துக் கொள்வோம். அவனால் அதைச் செய்யமுடியுமா? முடியாது என்றே பணிவுடன் கூறுகிறேன். தொல்குடியினரை நாகரிக மக்களாக ஆக்குவது என்றால், அவர்களை எங்கள் உறவினராக நடத்தவேண்டும். அவர்களில் ஒருவராக அவர்கள் மத்தியில் வாழவேண்டும். தோழமை உணர்வை வளர்க்க வேண்டும், சுருக்கமாகச் சொன்னால் அவர்களை நேசிக்க வேண்டும். இப்படிச் செய்வது இந்து ஒருவனுக்கு எப்படிச் சாத்தியம் ஆகும்? தன் சாதியைப் பேணிக்காப்பதே இந்துவின் வாழ்க்கையின் முழு இலட்சியம். தன் சாதி என்பது ஒவ்வொரு இந்துவுக்கும் விலைமதிக்க முடியாத பெரும் சொத்து. ஆக எப்பாடு பட்டாவது எந்த ஒரு இந்துவும் அதைக் காப்பாற்றியே தீர வேண்டும். வேத காலத்து ஆரியர் அல்லாதவர்களின் சந்ததியரான பழங்குடிகளோடு தொடர்பு கொள்வதன் மூலம், சாதி என்ற உடைமையை இழக்க எந்த ஒரு இந்துவாலும் முடியாது. தாழ்ந்து கிடக்கிற மனித இனத்துக்குத் தான் செய்ய வேண்டிய கடமை பற்றிய உணர்வை இந்து ஒருவனுக்கு எவராலும் கற்பிக்க முடியாது என்று நான் கூறவில்லை. வேறு எந்தக் கடமை உணர்வும் ஓர் இந்துவை தன் சாதியைக் காப்பது என்கிற கடமையை மீறும்படிச் செய்யமுடியாது என்பதுதான் இங்குள்ள சங்கடமான நிலைமை. இவ்வளவு நாகரிக வளர்ச்சிக்கு மத்தியில் நாகரிகம் அற்ற மக்கள் நாகரிகமற்றவர்களாகவே நீடிப்பதை எந்தவித வெட்கமோ, வேதனையோ, மனச்சாட்சியின் உறுத்தலோ இல்லாமல் இந்து மதத்தவர் அனுமதிப்

பது ஏன்? என்ற கேள்விக்கு சாதிதான் சரியான விளக்க மாக இருக்கிறது. பழங்குடியினரின் இந்த நிலைமை எப்படி ஒரு உள்ளார்ந்த அபாயத்துக்கு இடமாக இருக்கிறது என்பதை இந்துக்கள் உணரவே இல்லை. இவர்கள் நாகரிகம் அற்றவர்களாகவே நீடித்தால் இந்துக்களுக்கு இவர்களால் எவ்வித இடைஞ்சலும் இருக்காது. ஆனால் இந்து அல்லாத மற்ற மதத்தவர்கள் இவர்களை வென்றெடுத்து தம் மதத்தில் சேர்த்துக் கொண்டு விட்டால் இந்துக்களின் பகைவர்களுடைய தொகை பெருகி விடும். இந்த நிலைமை ஏற்பட்டால் இந்துக்கள் தங்களையும் தங்கள் சாதி அமைப்பையும் தான் நொந்து கொள்ள வேண்டும்.

## 9

நாகரிகம் அற்ற மக்களை நாகரிகம் உள்ள மக்களாக மாற்ற இந்துக்கள் மனிதாபிமான அடிப்படையில் எந்த வித முயற்சியும் மேற்கொள்ள வில்லை என்பது மட்டுமல்ல. இந்துமதத்தின் பிடியில் உள்ள கீழ்ச்சாதியினர் மேல் சாதியினரின் கலாச்சார நிலைக்கு உயர்வடைவதையும் மேல் சாதி இந்துக்கள் திட்டமிட்டுத் தடுத்தனர். இரண்டு உதாரணங்களைக் கூறுகிறேன். ஒன்று சோனார்கள் பற்றி. இன்னொன்று பேதரி பிரபுக்கள் பற்றி. இவ்விரு சமூகத்தாரும் மராட்டிய மாநிலத்தில் நன்கு அறிமுகமான சாதிகள். மற்ற சமூகத்தாரைப் போலவே இந்த 2 சமூகத்தாரும் ஒரு சமயம் தங்கள் சமூக அந்தஸ்த்தை உயர்த்திக் கொள்ள விரும்பி பிராமணர்களின் பழக்க வழக்கங்களையும், வழிமுறைகளையும் கடைப்பிடிக்க முயற்சித்தனர். சோனார்கள் ''தைவந்த்ய பிராமணர்கள்'' என்று தங்களை அழைத்துக் கொண்டு அதற்கேற்ப நடந்து கொண்டனர். வேட்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டிக் கொண்டார்கள். வணக்கம் என்ற சொல்லுக்கு 'நமஸ்கார்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர். பஞ்சகச்சமும் நமஸ்

காரமும் பிராமணர்களுக்கே உரியது. எனவே சோனார்கள் தங்கள் பாணியைப் பின்பற்றி தங்களைப்போல் பவனி வருவதைப் பிராமணர்கள் விரும்பவில்லை. ஆகவே பிராமணப் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற சோனார்கள் மேற்கொண்ட முயற்சியை, ஆட்சி பீடத்திலிருந்த பேஷ்வாக்களின் துணையோடு பிராமணர்கள் வெற்றிகரமாக முறியடித்தனர். பம்பாயில் வாழும் சோனார்கள் மீது இதற்காக ஒரு தடை உத்தரவைக்கூட கிழக்கிந்திய கம்பெனி கவுன்சில்களின் தலைவர் பிறப்பிக்கும்படிச் செய்தனர்.

ஒரு காலகட்டத்தில் விதவை மறுமணத்தை பதேரி பிரபு சாதியினர் தம் சாதி வழக்கமாகக் கொண்டிருந்தனர். பிராமணச் சாதியில் விதவை மறுமணம் இல்லை என்ற குறிப்பான காரணத்தால் பிற்காலத்தில் பதேரி பிரபுச் சாதியில் சிலர் விதவை மறுமணத்தை இழிவான ஒரு சமுதாய நிலையின் அடையாளமாகக் கருத ஆரம்பித்தனர். தங்கள் சாதியின் சமூக அந்தஸ்தை உயர்த்தும் நோக்குடன் அதுவரை தங்கள் சாதியில் இருந்துவந்த விதவை மறுமண வழக்கத்தை விட்டொழிக்கச் சில பதேரி பிரபுக்கள் முற்பட்டனர். இம்முயற்சி அந்த சாதிக்குள் பிளவை உண்டாக்கிற்று. ஒரு பிரிவினர் விதவை மறுமணத்தை ஆதரித்தனர். மற்றவர்கள் எதிர்த்தனர். பேஷ்வாக்கள் விதவை மறுமணத்துக்கு ஆதரவான பிரிவினருக்குத் துணையாக நின்று பிராமணர்களின் பழக்க வழக்கங்களை பதேரி பிரபுக்கள் பின்பற்ற முடியாதபடி தடுத்து விட்டனர்.

முகமதியர்கள் ஆயுதபலத்தால் அவர்களின் மதத்தைப் பரப்புவதாக இந்துக்கள் குறை கூறுகிறார்கள். கர்த்தரை விசுவாசிக்காதவர்களை கிறித்தவர்கள் சித்திரவதை செய்தார்கள் என்று இந்துக்கள் ஏளனம் செய்கிறார்கள். ஆனால் உண்மையில் இவர்களில் நல்லவர்கள் எந்த மதத்தினர்? மோட்சத்தை அடையும் வழி என்று எதைத் தங்கள்

முழுமனத்தோடு நம்பினார்களோ, அதைப் பின்பற்றுமாறு விருப்பமில்லாத மக்களின் கழுத்தைப் பிடித்துக் கட்டாயப் படுத்திய கிருத்தவர்களும், முகமதியர்களுமா? அல்லது அறிவு ஒளியை மற்றவர்கள் அடைய முடியாதபடி மறைத்த வர்களும், அறியாமை என்னும் இருட்டறையில் மக்கள் தொடர்ந்து மூழ்கி இருக்கும்படி செய்தவர்களும், தம்மிடம் இருந்த அறிவையும் பாரம்பரியப் பெருமைகளையும்—அவற்றை விரும்பி ஏற்றுக்கொண்டு அதைத் தங்கள் வாழ்க்கையாகவும் மாற்றிக்கொள்ளத் தயாராக இருந்த வர்களுக்கு அவற்றை—பகிர்ந்து கொள்ள மறுத்தவர்களும் ஆன இந்துக்களா? முகமதியர்கள் குரூரமானவர்கள் என்றால் இந்துக்கள் அற்பர்கள் அற்பத்தனம். குரூரத்தை விட கேவலமானது என்று கூறுவதில் எனக்கு தயக்கமே இல்லை.

## 10

இந்து மதம் ஒரு மிசனரி மதமாக இருந்ததா இல்லையா என்பது விவாதத்துக்கு உரிய ஒரு பிரச்சினை.* இந்து மதம் ஒருபோதும் மிசனரி மதமாக இருந்தது இல்லை என்று சிலர் கருதுகிறார்கள். வேறு சிலர் மிசனரி மதமாக இருந்ததாகக் கூறுகிறார்கள். இந்து மதம் ஒரு காலத்தில் மிசனரி மதமாகத் தான் இருந்தது என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். அது மிசனரி மதமாக இருந்திராவிட்டால் இந்தியா எங்கும் பரவி இருக்க முடியாது. அதனால் இன்று இந்துமதம் ஒரு மிசனரி மதமாக இருந்ததா இல்லையா என்பது அல்ல பிரச்சினை.

* கல்வி, மருத்துவம் அல்லது இது போன்ற சேவைகளை கருவியாகக் கொண்டு தீவிர மதம் பரப்பும் பணியில் ஈடுபடும் மதத்தை மிசனரி மதம் என்கிறார்கள். (மொ-ர்)

இந்துமதம் ஏன் மிசனரி மதமாக நீடிக்க முடியவில்லை என்பதுதான் பிரச்சனை.

இந்துக்களிடையே சாதி அமைப்பு வளர்ந்ததால்தான் இந்துமதம் ஒரு மிசனரி மதமாக நீடிக்க முடியவில்லை என்பதே என் கருத்து. சாதியானது மதமாற்றத்துக்குப் பொருந்தி வராத விசயம். நம்பிக்கைகளையும் மதக் கோட்பாடுகளையும் புகுத்துவது மட்டும் மதமாற்றத் துக்குப் போதுமானது அல்ல. மதம் மாறியவர்களுக்குச் சமூக வாழ்வில் ஒரு இடத்தை உறுதி செய்வது என்பது அதைவிட முக்கியமானப் பிரச்னை. மதம் மாறி வந்த வருக்குச் சமூக வாழ்வில் எங்கு இடம் அளிப்பது? எந்தச் சாதியில் சேர்ப்பது என்பதுதான் அந்தப் பிரச்சனை. மற்ற மதத்தவர்களைத் தம் மதத்துக்கு மாற்ற விரும்பிற எந்த ஒரு இந்துவையும் குழப்புகிற பிரச்சனை இதுதான். மன்றங்களில் எவர் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆவதுபோல், சாதிகளில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது. சாதிச் சட்டப்படி எந்த ஒரு சாதியிலும் உறுப்பினர் ஆகும் உரிமை அந்தச் சாதியில் பிறந்தவருக்கு மட்டுமே உரியது. சாதிகள் சுயேச்சை யானவை. புதியவர்களைச் சமூக வாழ்க்கையில் குறிப்பிட்ட சாதியில் சேர்த்துக் கொள்ளுமாறு எந்தச் சாதியையும் நிர்ப்பந்திக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை. இந்துச் சமூகம் சாதிகளின் சேர்க்கையாக இருப்பதாலும், ஒவ்வொரு சாதியும் மூடுண்ட அமைப்பாக இருப்பதாலும், மதம் மாறியவர்களுக்கு இந்து சமூகத்தில் இடம் இல்லை. ஆக இந்து மதம் விரிவடையவும் மற்ற மதத்தினரை இந்து மதத்துக்குள் இழுத்துக் கொள்ளவும் தடையாக இருப்பது சாதியே. சாதிகள் இருக்கும்வரை இந்து மதத்தை மிசனரி மதமாக்க முடியாது. 'சுத்தி'* (Shudhi) என்பது அறிவீன மானதும் பயனற்றதுமான நடவடிக்கையே ஆகும்.

---

* படையெடுத்து வந்த மிலேச்சர்களால் பலவந்தமாக மாற்றப்பட்டவர்களை மீண்டும் இந்து கட்டமைப் பிற்குள் கொண்டு வருவதை சுத்தி என்கிறார், காண்.

## 11

இந்துக்களின் மனத்தில் இருந்து அச்சத்தையும் கோழைத் தனத்தையும் அகற்றுவதே ''சங்காதனின்' நோக்கம் ஆகும். ஆனால் 'சுத்தி'யை இந்துக்களுக்கு சாத்தியம் அற்றதாக ஆக்கிய காரணங்களே 'சங்காதனை' இந்துக்களுக்குச் சாத்தியம் அற்றதாக ஆக்குகின்றன. ஆகவே முகமதியரையும் சீக்கியரையும் போல அல்லாமல், இந்துக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நம்பிக்கைத் துரோகத்தையும் கீழ்த்தரமான சூழ்ச்சிகளை யும் கடைப்பிடிக்கிறார்கள். முஸ்லீம்களும், சீக்கியரும் தைரியசாலியாக, பயமில்லாதவர்களாக இருப்பதற்கான பலத்தை எங்கிருந்து பெறுகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. உடல் வலிமையோ உணவோ அல்லது உடற் பயிற்சியோ இதற்குக் காரணம் இல்லை என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். சீக்கியன் ஒருவன் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்போது எல்லா சீக்கியர்களும் அவனைக் காக்க வந்து விடுகிறார்கள். ஒரு முகமதியன் தாக்கப்படும் போது அவனைக் காக்க எல்லா முகமதியர்களும் ஓடோடி வருவார்கள்— இந்த உணர்வின் காரணமாக ஏற்படுகிற பலம் அது. அத்தகைய பலத்தை இந்துவால் பெற முடியாது. தனிஒருவனாக இருப்பதால், தனித்தனியாகவே வாழவேண்டும் என்று இந்துவுக்கு விதிக்கப்பட்டுள்ளதால், இந்து பலமற்றவனாக இருக்கிறான். அச்சத்தையும் கோழைத்தனத்தையும் வளர்த்துக் கொள்கிறான். போராட்டம் என்று வரும்போது சரணாகதி அடைகி றான். அல்லது ஓடி ஒளிந்து கொள்கிறான். மாறாக தனி ஒருவனாக இருந்த போதிலும் சண்டை என்று ஏற்படும் போது தான் தனித்து விடப்பட மாட்டோம் என்று தெரிந்து இருப்பதால், சீக்கியனும் முகமதியனும் அச்சம் அற்றவனாக சண்டையைச் சந்திக்கிறான். இந்த நம்பிக் கையைக் கொண்ட ஒருவன் போராட்டத்தில் தாக்குப்

பிடிக்கிறான். இந்த நம்பிக்கை இல்லாத மற்றவன் ஓடி ஒளிகிறான்.

இதைப் பற்றி மேலும் ஆராய்வோம். முகமதியருக்கும் சீக்கியருக்கும் இந்த அளவு நம்பிக்கை இருக்கவும் இந்து மதத்தவன் நம்பிக்கையற்று இருக்கவும் காரணம் என்ன? காரணம், அவர்களுடைய கூடிவாழும் வாழ்க்கை முறைதான். முகமதியர்களிடமும் சீக்கியர்களிடமும் உள்ள கூடி வாழும் வாழ்க்கை முறை அவர்களுக்குள் சகோதர உணர்வை வளர்த்துள்ளது. இந்துக்களின் வாழ்க்கை முறை அந்த உணர்வை வளர்க்கவில்லை. சீக்கியரிடமும் முகமதியரிடமும் உள்ள சமூகப்பற்று அவர்களைச் சகோதரர்களாக ஆக்கி இருக்கிறது. இந்துக்களுக்குள் அத்தகையச் சமூகப்பற்றும் இல்லை, எந்த ஒரு இந்துவும் மற்றொரு இந்துவை தன் சகோதரனாக கருதுவதும் இல்லை. இதுதான், ஒரு சீக்கியன் ஏழு லட்சம் பேருக்கு சமமானவன் என்றும், ஒரு முகமதியன் ஒரு இந்துக் கூட்டத்துக்கே சமமானவன் என்றும், முகமதியரும் சீக்கியரும் உணரவும் கூறவும் காரணம். இந்துக்களுக்கும் பிறருக்கும் இடையிலான இந்த வித்தியாசம் சந்தேகமில்லாமல் சாதியின் காரணமாக உண்டான வித்தியாசம்தான். சாதி இருக்கும் வரை 'சங்காதன்' சாத்தியம் அற்றது. 'சங்காதன்' இல்லாதவரை இந்து கோழையும் மோழையுமாகவே இருப்பான்.

இந்துக்கள் தங்களை மிகவும் சகிப்புத் தன்மை உடையவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இது பொய் என்றே நான் கருதுகிறேன். பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் சகிப்புத்தன்மை இல்லாமல்தான் இருக்கிறார்கள். சிற்சில சமயங்களில் அவர்கள் சகிப்புத் தன்மையோடு இருக்கக் காரணம் எதிர்ப்பதற்கான பலம் அல்லது அக்கறை இல்லாததுதான். தமக்கு இழைக்கப்படும் அவமரியாதையையும் அநீதியையும் எதிர்ப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளும் தன்மை இந்துக்களின் இரத்தத்திலேயே ஊறிவிட்டது.

மாரிசின் (Morris) வார்த்தைகளில் கூறுவதானால் ''இந்து மதத்தில் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்களை மிதிக்கின்றனர். வலுத்தவன் இளைத்தவனை அடித்து நொறுக்குகிறான். கொடியவர்களுக்கோ அச்சம் என்பதே இல்லை. அன்பு மனம் கொண்டவர்களுக்கோ துணிச்சல் இல்லை. அறிவாளிகளுக்கோ பிறர் மேல் அக்கறை இல்லை''. இந்து தெய்வங்கள் எல்லாமே மன்னித்து அருளும் தெய்வங்களாக அமைந்துவிட்ட நிலையில் இந்துக்களில் அநீதிக்கும் அடக்கு முறைக்கும் ஆளாக்கப்படுகிறவர்களின் இரங்கத்தக்க நிலையை எளிதில் உணரமுடியும். மனிதர்களை மிக எளிதில் தொற்றுகிற மிகக் கொடிய நோய் 'அலட்சியப் போக்கே' ஆகும். இந்து மதத்தவன் ஏன் இந்த அளவுக்கு அலட்சியப் போக்குடன் இருக்கிறான்? நல்ல நோக்கங்களுக்காகக் கூட ஒன்றுசேர்வதையும் ''சங்காதனை''யும் சாத்தியம் அற்றதாக்கிவிட்ட சாதியமைப்பே இந்துக்களின் இந்த அலட்சியப் போக்குக்கும் காரணம்.

## 12

ஒரு அமைப்பின் நியமங்களுக்கும் அதிகாரத்துக்கும் நலன்களுக்கும் எதிராக தனிமனிதன் தன் சொந்தக் கருத்துக்களையும் நம்பிக்கையையும் தன் சொந்த சுதந்திரத்தையும் நலன்களையும் வலுவாக வெளிப்படுத்துவதுதான் எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் தொடக்கமாக இருக்கிறது. ஆனால் சீர்திருத்தம் தொடருமா என்பது இத்தகைய தனிமனித வெளிப்பாட்டுக்கு அந்தக் கூட்டம் எந்த அளவு இடமளிக்கிறது என்பதைப் பொறுத்தது. தன் கருத்துகளை வெளிப்படுத்தும் தனிமனிதர்களிடம் அந்த வகுப்பினர் சகிப்புத் தன்மையோடும் நேர்மையோடும் நடந்துகொண்டால், அத் தனி மனிதர்கள் தொடர்ந்து தம் கருத்துகளைக் கூறி தன் கூட்டத்தாரைச் சீர்திருத்துவதில் வெற்றி பெறுவார்கள். இதற்கு மாறாக அந்தக் கூட்டத்தினர் சகிப்புத் தன்மை அற்றவர்களாகவும், அந்தத் தனி

மனிதர்களை அடக்கி ஒடுக்க எல்லாவகையிலும் முற்படும் போது சீர்திருத்தக்காரர்களும் அழிந்து விடுவார்கள். சீர் திருத்தமும் அழிந்து விடும்.

சாதிச் சட்டங்களை மீறுகிறவனை சாதியில் இருந்து விலக்கி வைப்பதற்கு கேள்விக்கு இடமற்ற அதிகாரம் சாதிக்கு உண்டு. சாதியில் இருந்து விலக்கி வைக்கப்படுப வன் எந்த சமூக உறவும் இல்லாதவன் ஆகிவிடுகிறான். ஆக, தண்டனை என்ற வகையில் சாதிப் பிரஷ்டத்துக்கும் மரண தண்டனைக்கும் அதிக வேறுபாடு இல்லை. எனவே சாதியின் தடைகளை மீறி தன் சுதந்திரத்தை வெளிப் படுத்தும் அளவுக்கு இந்து மதத்தில் எந்தத் தனிமனிதனுக் கும் துணிச்சல் இல்லாமல் போனதில் வியப்படைய எதுவும் இல்லை. எந்த மனிதனும் முழுமையாக சக மனிதர்களுடன் ஒத்துப்போக முடியாது என்பது உண்மை தான். ஆனால் அவர்களில்லாமல் இவனில்லை என்பதும் உண்மை தானே, தன் கருத்துப்படி சமூகம் இருக்க வேண்டும் என்பதும் உண்மைதானே. தன் கருத்துப் படிச் சமூகம் இருக்க வேண்டும் என்று ஒருவன் விரும்பலாம். அது சாத்தியம் ஆகாதபோது தன் கருத்துகளை முற்றிலு மாகக் கைவிட்டு சரணாகதி அடைந்தாவது சமூக உறவைத் தக்க வைத்துக் கொள்ள அவன் தயாராக இருப்பான். ஏனெனில் சமூகத்தில் இருந்து தனித்து வாழ முடியாது. மனிதனின் இந்த இயலாமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளச் சாதி எப்போதும் தயாராக இருக்கிறது. சொல்லாலும் செயலாலும் சாதிச் சட்டங் களை முற்றிலும் ஏற்றுக் கொண்டாக வேண்டுமென அது வற்புறுத்துகிறது. சீர்திருத்தக்காரனின் வாழ்க்கையை நரக வாழ்க்கை ஆக்கும் சதிக் கும்பலாகவும் சாதியால் மாற முடியும். சதிச்செயல் என்பது ஒரு பெரும் குற்றம் தானே? அப்படி இருக்கையில் சாதிச் சட்டங்களுக்கு மாறுபாடாக நடக்க முயற்சிப்போரைச் சாதிப் பிரஷ்டம் செய்வது போன்ற கேடு கெட்ட நடவடிக்கைகள் ஏன் சட்டத்தின் தண்டனைக்கு உரிய குற்றமாக ஆக்கப்படக்

கூடாது? தன் சாதி உறுப்பினர்களை ஒழுங்குபடுத்தவும், சாதிச் சட்டங்களை மீறி நடப்பவர்களைச் சாதியில் இருந்து விலக்கி தண்டிக்கவும், தேவையான அதிகாரத்தைச் சாதித் தலைமைக்கு இப்போதுள்ள சட்டம் வழி வகுத்துள்ளது. வைதீகர்களின் ஆதிக்கத்தில் சாதி, சீர்திருத்தக்காரர்களை துன்புறுத்தவும், சீர்திருத்த இயக்கங்களை அழிக்கவும் சக்தி வாய்ந்த ஆயுதமாகப் பயன்படுத்தப் பட்டு வந்திருக்கிறது.

## 13

சாதியினால் இந்துக்களின் தர்ம நெறிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையைப் பார்க்கப் பரிதாபமாக உள்ளது. பொது நலம் என்கிற உணர்ச்சியையே சாதி கொன்று விட்டது. பரோபகார உணர்ச்சியையும் அழித்துவிட்டது. மக்களின் பொதுக் கருத்து ஒன்று ஏற்படுவதையும் சாதி சாத்தியம் அற்றதாக்குகிறது. இந்து மதத்தவன் 'பொது மக்கள்' எனக் கருதுவது தன் சாதியினரையே; தன் சாதிக்கு மட்டுமே அவன் பொறுப்பாளியாக இருக்கிறான். தன் சாதிக்கு மட்டுமே அவன் விசுவாசம் உள்ளவனாக இருக்கிறான்.

நல்ல இயல்புகளை சாதி அடக்கி விடுகிறது. பொது ஒழுக்கம் என்பதாக அல்லாமல் இங்கு சாதி ஒழுக்கமே இருக்கிறது. இரக்கத்துக்கு உரியவர்களுக்கு இரங்கும் எண்ணம் சாதியில் இல்லை. தகுதியானவர்களைப் பாராட்டுவதும் இல்லை. தேவை உள்ளவர்களுக்குக் கொடுப்பதும் இல்லை. இதனால் துன்பத்தில் வருந்துவோரை எவரும் திரும்பிப் பார்ப்பது கூட இல்லை. தர்ம உணர்ச்சி இருக்கிறது. அது தம் சாதியினரோடு தொடங்கி தம் சாதியினரோடு முடிந்து விடுகிறது. இரக்க உணர்ச்சி இருக்கிறது, அது மற்ற சாதி மனிதர்களிடம் காட்டப்படுவதில்லை. நல்லவரும் உயர்ந்தவருமான

ஒருவரை இந்து அங்கீகரிப்பானா? (மகாத்மாவின் கதை வேறு).

தலைவன் தன் சாதியைச் சேர்ந்தவனாக இருந்தால் மட்டுமே இந்து அந்தத் தலைவனின் வழி நடப்பான். தலைவன் பிராமணனாய் இருந்தால் மட்டுமே பிராமணன் அந்தத் தலைவனைப் பின்பற்றி நடப்பான். காயஸ்த தலைவனை மட்டுமே காயஸ்தன் பின்பற்றுவான்...... ஒரு மனிதனின் சாதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அவனுடைய திறமையைப் போற்றுகிற தன்மை இந்துக் களிடம் இல்லை. திறமையைப் போற்றும் தன்மை இருக்கும்— திறமை உள்ளவன் தன் சாதிக்காரனாக இருந்தால். சாதி உணர்வின் காரணமாகவே ''ஒருவன் நல்லவனாக இருந்தாலும் சரி கெட்டவனாக இருந்தாலும் சரி, அவன் செய்தது சரியாக இருந்தால் என்ன, தவறாக இருந்தால் என்ன'' என்கிற மிக மோசமான மனப்பான்மை மேலோங்கி வருகிறது. நல்லவைகளுக்கு ஆதரவாக நிற்பதா, தீயவைகளுக்கு ஆதரவாக இல்லாமல் போவதா என்பதெல்லாம் சாதிக்கு ஆதரவாக இருப்பதா இல்லையா என்பதுதான் பிரச்சனையாக ஆகிவிடுகிறது. தம் சாதி நலன்களுக்காக இந்துக்கள் தேசத்துரோகம் செய்து விட வில்லையா?

## 14

சாதியானது உருவாக்கி உள்ள மோசமான விளைவு களை நான் விளக்கமாகவே கூறிவிட்டேன். இதைக் கேட்டு உங்களில் சிலர் சலித்துப் போயிருந்தால் அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இனி பிரச்சனையின் ஆக்கப்பூர்வமான பகுதி பற்றி பேச முற்படுகிறேன். சாதியை நீங்கள் விரும்ப வில்லையானால் நீங்கள் உருவாக்க விரும்புகிற உன்னத சமூகம் வேறு என்ன என்ற கேள்வி கிளம்பும். என்னைக் கேட்டால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகமே

நான் உருவாக்க விரும்புவது. ஏன் அத்தகைய சமூகம் ஏற்படக் கூடாது? என்ன எதிர்ப்பு இருந்துவிட முடியும்? அப்படி எதையும் என்னால் கற்பனை செய்யக் கூட முடிய வில்லை.

உன்னத சமூகம் இயக்கத்தன்மை உள்ளதாக இருக்க வேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றங் களை மற்ற பகுதிகளுக்குப் பரப்புவதற்கான வழிவகைகள் கொண்டதாக இருக்க வேண்டும். அந்தச் சமூகத்தில் பல வகைப்பட்ட கருத்துகளும் திட்டமிட்டு பகிர்ந்து கொள்ளப் படுவதற்கும் பரப்பப்படுவதற்கும் இடம் இருக்க வேண்டும். மற்ற அமைப்புகளோடு தொடர்பு கொள்வதற்கான பலதரப்பட்ட சுதந்திரமான வழிகள் இருக்க வேண்டும். அதாவது சமூகக் கலப்பு ஏற்பட வேண்டும். அதற்குப் பெயர்தான் சகோதரத்துவம். சகோதரத்துவம் என்பது ஜனநாயகத்தின் மற்றொரு பெயர்தான்.

ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க வடிவம் மட்டுமல்ல, பிரதானமாக அது ஒரு கூட்டு வாழ்க்கை முறை. வழி வழியாகக் கொடுக்கப்பட்ட அனுபவங்களின் தொகுப்பு அது. சாரத்தில் அது சக மனிதர்களுக்கு மதிப்பும் மரியாதை யும் செய்யும் மனப்பாங்கே ஆகும்.

தன்னுரிமையை எதிர்க்கிறவர் யாருண்டு. மனிதர்கள் தன்னுரிமையுடன் இயங்கும்—வாழும் உரிமையைச் சிலர் மறுக்கிறார்கள். ஆனால் உழைத்து உண்டு உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்கான கருவிகளையோ பொருள் களையோ சொத்தையோ வைத்திருக்கும் உரிமையை அவர்கள் எதிர்ப்பதில்லை. மனிதரிடம் அமைந்திருக்கிற ஆற்றல்களை திறமைக்கேற்ற முறையில் பயன்படுத்தி உயர்வடையும் உரிமையை ஏன் அனுமதிக்கக்கூடாது?

சாதியின் ஆதரவாளர்கள் சொத்துரிமையையும் உயிர் வாழும் உரிமையையும் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் ஒருவர் தன் தொழிலைத் தானே தேர்ந்தெடுக்கும் தன்னுரிமையை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இத்தகைய தன்னுரிமையை மறுப்பது, அடிமைத்தனத்தை நீட்டிப்பதே ஆகும். ஏனெனில் சட்டபூர்வமாக அடிமைகளாய் வைத்திருப்பது மட்டும்தான் அடிமைத்தனம் என்பதில்லை. தன் நடத்தையைக் கட்டுப்படுத்துகிற விதமான மற்றவர்களின் நோக்கங்களுக்கு ஒருவர் உட்பட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற சமூக நிலைமையும் அடிமைத்தனமே ஆகும். சட்டபூர்வ அடிமைத்தனம் இயலாத இடங்களிலும்கூட இவ்வித அடிமைத்தனம் உருவாகிவிடுகிறது. சிலர் தம் விருப்பத்துக்கு மாறாக, விதிக்கப்பட்ட தொழிலையே செய்ய வேண்டும் என்கிற கட்டாயம் நிலவுகிற சாதி அமைப்பு போன்ற அமைப்புகளில் இவ்வித அடிமைத்தனம் காணப்படுகிறது.

சமத்துவத்துக்கு மறுப்பு இருக்க முடியுமா? சமத்துவம் என்கிற முழக்கமே பிரெஞ்சுப் புரட்சியின் போது முன் வைக்கப்பட்ட முழக்கங்களில் மிகவும் சர்ச்சைக்குரிய முழக்கம். சமத்துவத்துக்கு எதிராகக் கூறப்படும் வாதங்கள் பொருத்தமானவையாக இருக்கலாம். எல்லா மனிதர்களுமே சமமானவர்கள் இல்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆனால் அதனால் என்ன பயன்? சமத்துவம் என்பது கற்பனையாக இருக்கலாம். இருப்பினும் அதையே வழிகாட்டும் இலட்சியமாக ஏற்றாக வேண்டும்.

ஒருவருடைய ஆற்றல் 1) இயற்கையாக அடையும் உடல்வாகு, 2) பெற்றோரின் வளர்ப்பு, கல்வி, அறிவியல் அறிவு போன்ற சமூகரீதியாக அடையும் திறன்கள், 3) தன் சொந்த முயற்சி ஆகியவற்றைச் சார்ந்து உள்ளது. இந்த மூன்று அம்சங்களிலும் சந்தேகத்துக்கு இடமே இல்லாமல் மனிதர்கள் சமநிலை இல்லாதவர்கள் தான். ஆனால் மனிதர்கள் தமக்குள் சமநிலை இல்லாதவர்களாக இருப்பதாலேயே நாமும் அவர்களை ஏற்றத்தாழ்வோடுதான் நடத்த வேண்டுமா என்பதுதான் கேள்வி. சமத்துவத்தை எதிர்ப்போர் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். மக்கள் மேற்கொள்கிற முயற்சிகள்

சமமாக இல்லாத வரை அவர்களைச் சமமாக நடத்த முடியாது என்பதைத் தனி மனிதவாதப் பார்வையில் இருந்து வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு தனிமனிதனையும் முழுமையாக வளர்த்தெடுப்பதற்கு முடிந்த அளவுக்கு ஊக்கம் தருவதும் விரும்பக் கூடியதே. ஆனால் முதல் இரண்டு அம்சங்களில் மனிதர்களிடையே உள்ள சமமற்ற நிலைக்காக அவர்களை ஏற்றத்தாழ்வாக நடத்துவது சரிதானா? பிறப்பு, வளர்ப்பு, குடும்பப் பெருமை, தொழில் தொடர்புகள், பரம்பரைச் சொத்து முதலியவற்றைப் பெற்றிருக்கிறவர்களே இந்தப் பந்தயத் துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பது வெளிப்படை. இப்படிப்பட்ட சூழலில் தேர்வானது தகுதி அடிப்படையில் அமையாது. சிறப்பான உரிமைகளைப் பெற்று இருப்ப வர்களைத் தேர்ந்தெடுப்பதாகவே அமையும். எனவே நாம் எல்லா மக்களையும் முதலிரண்டு அம்சங்களிலும் முடிந்தவரை சரிநிகர் சமானமாகப் பாவிக்க வேண்டியவர் களாக இருக்கிறோம்.

ஒரு சமூக அமைப்பானது தனக்குத் தேவையான தகுதியான மனிதர்களைப் பெருமளவில் தேர்ந்தெடுக்க விரும்பும் பட்சத்தில், தேர்ந்தெடுப்பதற்கு முன்பே அது முடிந்தவரை எல்லாரையும் சமநிலை கொண்டவர்களாக ஆக்கினால் மட்டும்தானே அது சாத்தியம் ஆகும்? ஆகவே தான் நம்மால் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது என்கிறேன்.

சமத்துவத்தை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்பதற்கான இன்னொரு காரணமும் இருக்கிறது. அரசியல் தலைவர்கள் மக்களின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில் கொண்டே திட்டமிட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு தனிமனிதரின் குணாம்சத்தை யும் பிரித்துப் பிரித்துப் பார்த்து அதற்கு ஏற்ற மாதிரி அவர்களைத் தனித்தனியாக மதிப்பிடும் அளவுக்கு அவர் களுக்கு நேரமோ அறிவோ இருப்பதில்லை. எனவே

எளிமையான—நடைமுறைக்கு ஏற்ற ஒரு பொது விதியை அவர் பின்பற்றியாக வேண்டும். அந்த விதி எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதாக இருக்கவேண்டும். ஒரே மாதிரியாக நடத்துவது என்பது எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியானவர்கள் என்பதால் அல்ல. மக்களைப் பலவிதமாக கறாராக வகை பிரிப்பது சாத்தியம் இல்லை என்பதுதான். சமத்துவம் என்கிற கோட்பாடு போலியானது என்பது அப்பட்டமான உண்மை. ஆனாலும் பொதுவாகப் பார்க்குமிடத்து மேலே சொன்ன வழியிலேயே அரசியலில் ஒருவர் செயல்பட முடியும். ஏனெனில் இந்த வழியே நடைமுறை சாத்தியம் ஆனதாக இருக்கிறது.

## 15

சீர்திருத்தவாதிகளில் ஒரு பிரிவினர் இன்னுமொரு கருத்தை முன்வைக்கிறார்கள். ஆரிய சமாஜத்தார் என்பது அவர்கள் பெயர். நான்கு வருணங்களைக் கொண்ட சமூக அமைப்பே அவர்களின் இலட்சியம். அதாவது இந்தியாவில் இருக்கிற நாலாயிரம் சாதிகளையும் நாலு வருணங்களாகச் சுருக்கிவிடவேண்டும் என்பது அவர்களின் குறிக்கோள். தங்கள் கொள்கையை கவர்ச்சி உள்ளதாக ஆக்கவும் தங்கள் கொள்கைக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்யவும் தாம் கூறுகிற நாலு வருணங்கள் பிறப்பை அடிப்படையாகக் கொண்டது அல்ல; 'குணத்தையே' அதாவது தகுதியையே அடிப்படையாகக் கொண்டது என்று சாதுரியமாகக் கூறுகிறார்கள்.

நால்வருணம் தகுதியையே அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும் கூட நான் அதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது முதலாவதாக ஆரிய சமாஜிகளின் நால்வருணத்தின் கீழ் இந்து சமூகத்தில் தனி மனிதனின் நிலை அவனுடைய தகுதியையே பொருத்ததாக இருக்கு

மானால் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற முத்திரைகளை மக்களுக்கு குத்த வேண்டியது ஏன் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கற்றறிந்த ஒரு மனிதனுக்குப் பிராமண முத்திரை குத்தப்படாமல் இருந்தாலும் அவன் கௌரவிக்கப்பட வேண்டும். சத்திரியன் என்ற பட்டம் கட்டப்படாத நிலையிலும் வீரன் ஒருவன் எல்லோராலும் மதிக்கப்பட வேண்டும். ஐரோப்பிய சமூகம் தன் வீரர்களுக்கும் ஊழியர்களுக்கும். நிரந்தரமான பட்டம் (சாதி முத்திரை) எதையும் சூட்டாமலே கவுரவித்து வரும்போது, இந்து சமூகத்துக்கு அது இயலாமல் போனது எப்படி என்பதே கேள்வி. இதை ஆரிய சமாஜிகள் எண்ணிப் பார்க்கவும் தயாராக இல்லை.

இந்த நிரந்தரப் பட்டங்களை (சாதிப்பெயர்) தொடர்வதற்கு வேறொரு ஆட்சேபணையும் இருக்கிறது. மனிதர்களையும் பொருட்களையும் பற்றி மக்களின் எண்ணத்திலும் உணர்விலும் மனப்பாங்கிலும் ஏற்படும் மாறுதலே சீர்திருத்தம் என்பது. சில குறிப்பிட்ட பெயர்கள் சில குறிப்பிட்ட கருத்துகளோடும் உணர்வுகளோடும் இணைந்தவையாக உள்ளன. இந்தக் கருத்துகளும் உணர்வுகளுமே மனிதர்களைப் பற்றியும் பொருள்களைப் பற்றியும் தனி மனிதனின் மனப்போக்கு என்ன என்பதைத் தீர்மானிக்கின்றன. பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய பெயர்கள் ஒவ்வொன்றும் திட்டவட்டமான, நிலையான ஒரு கருத்தை ஒவ்வொரு இந்துவின் மனத்திலும் ஏற்படுத்தி இருக்கின்றன. பிறப்பை அடிப்படையாகக் கொண்ட ஏணிப்படி அமைப்பே அந்தக் கருத்து.

இந்தப் பெயர்கள் நீடிக்கிற வரை பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகியோரை பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பிரிவுகளாக, ஏணிப்படி வரிசையில் எண்ணிப் பார்க்கிற போக்கும்,

அதற்கு ஏற்றபடி நடந்து கொள்கிற போக்கும் இந்துக்களிடம் தொடரத்தான் செய்யும். இந்துக்களின் சிந்தனையில் இந்தப் போக்கு இல்லாமல் போவதற்கு பயிற்றுவித்தாக வேண்டும். ஆனால் பழைய சாதி முத்திரைகள் தொடர்ந்து நீடித்து மனிதனின் மனத்தில் பழைய கருத்துகளையே நினைவுபடுத்திக் கொண்டிருக்கையில் இது எப்படிச் சாத்தியம்? மக்களின் மனதில் புதிய கருத்துக்கள் பதிய வைக்கப்பட வேண்டுமென்றால் மக்களுக்குப் புதிய பெயர்களை சூட்டியாக வேண்டும். பழைய சாதிப் பெயர்களையே தொடர்வது சீர்திருத்தத்தைப் பயனற்றது ஆக்கி விடும். பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பிரிவினைகளான பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் போன்ற முடை நாற்றம் வீசுகிற பெயர்களால், தகுதியை அடிப்படையாகக் கொண்ட நான்கு வருணத்தை அழைப்பது சூழ்ச்சியே ஆகும்.

## 16

பழைய முத்திரைகளோடு கூடிய இந்த நான்கு வருணத்தை நான் அடியோடு வெறுக்கிறேன். எதிர்க்கிறேன். நால் வருண முறையை நான் எதிர்ப்பது வெறும் உணர்வுகளின் அடிப்படையில் அல்ல. அதை நான் எதிர்ப்பதற்கு வலுவான காரணங்கள் என்னிடம் உண்டு. இந்தத் திட்டத்தை நுணுக்கமாக ஆராய்ந்தால் ஒரு சமூக அமைப்பு என்கிற முறையில் நால்வருண முறை நடைமுறை சாத்தியம் அற்றது என்பது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. அது தீமை பயக்கக் கூடியது. பரிதாபகரமான தோல்வியை சந்தித்த ஒன்று.

நடைமுறையில் நான்கு வருணம் பல சிரமங்களை உண்டாக்கும். ஆரிய சமாஜத்தார் இதையும் எண்ணிப் பார்க்கவில்லை. சாதிக்கு அடிப்படையாக இருக்கிற கொள்கையும் வருணத்துக்கு அடிப்படையாக இருக்கிற கொள்கையும் வேறு வேறானவை. அவை அடிப்படையில்

வேறுபட்டவை என்பது மட்டும் அல்ல, அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று எதிரானவையும் கூட. சாதி, பிறப்பை அடிப்படையாகக் கொண்டது. வருணம் தகுதியை அடிப் படையாகக் கொண்டது. தகுதியே இல்லாமல் பிறப்பின் அடிப்படையிலேயே அந்தஸ்தில் இருக்கிற மனிதர்களை அந்த அந்தஸ்தை விட்டுவிடுமாறு எப்படி நீங்கள் கட்டாயப் படுத்தப் போகிறீர்கள்? பிறப்பின் அடிப்படையில் தாழ்ந்து கிடக்கிற ஒரு மனிதனுக்கு தகுதியின் அடிப்படை யில் உரிய இடத்தை உங்களால் வாங்கித் தர முடியுமா? வருண அமைப்பை நிலை நிறுத்துவதற்கு, முதல் கட்டமாக நீங்கள் சாதி அமைப்பைத் தகர்த்து எறிந்தாக வேண்டி வரும். இது உங்களால் முடியுமா? பிறப்பை அடிப்படை யாகக் கொண்ட நாலு வருணங்களாக சுருக்க உங்களால் எப்படி சாத்தியம்? நால் வருண அமைப்பின் ஆதார வாளர்கள் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் முதல் பிரச்சனையே இதுதான்.

நால்வருண அமைப்பை நிலை நிறுத்துவதில் வெற்றி காண விரும்பினால் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய இன்னொரு பிரச்சனையும் இருக்கிறது. மக்களைத் திட்ட வட்டமான நாலு வகுப்பினராகப் பிரிக்க முடியும் என்ற ஊகத்தின் அடிப்படையில் அமைந்தது நால்வருண அமைப்பு. நடைமுறையில் இது சாத்தியமா! இதைப் பொறுத்த மட்டிலும் நால்வருண கருத்து பிளேட்டோவின் கருத்தோடு நெருங்கி உள்ளது. மக்கள் இயற்கையாகவே மூன்று பிரிவினராய் அமைந்து உள்ளதாக பிளேட்டோ நம்பினார். பிளேட்டோவைப் பொறுத்தமட்டில் 1) சிலருக்கு அடிப்படை வேட்கைகள் மேலோங்கி இருக்கும். எனவே அவர்கள் தொழிலாளிகளாக வணிகர்களாக உள்ளனர். 2) சிலருக்கு அடிப்படை வேட்கைகளுக்கும் மேலாக வீரதீர உணர்ச்சி மேலோங்கி இருக்கும். எனவே இவர்கள் நாட்டின் போர் வீரர்களாகவும் உள்நாட்டு

அமைதியின் காவலர்களாகவும் உள்ளனர். பிறரிடம் பிரபஞ்ச தத்துவங்களை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் மிகுந்து காணப்படும். எனவே இவர்கள் மக்களுக்கு நீதிகளை வகுத்து தருபவர்களாக உள்ளனர்.

நான்கு வெவ்வேறான வகுப்பினராக மக்களை வகைப் படுத்துவது சாத்தியம் தான் என்று நால்வருண அமைப்பு நம்பி வருகிறது. அந்த மட்டில் பிளேட்டோவின் 'குடியரசு' என்ற நூல் எத்தகைய விமர்சனத்துக்கு ஆளானதோ அதே விமர்சனம் நால்வருண அமைப்புக்கும் பொருந்தும். கறாரான ஒரு சில பிரிவுகளாக அனைத்து மக்களையும் பிரித்து அடைத்து விடும் போக்கு மனிதனையும் மனிதனின் ஆற்றலையும் பற்றிய மிக மேலோட்டமான ஒரு கண்ணோட்டத்தையே குறிக்கிறது என்பதே பிளேட்டோவைப் பற்றிய முக்கிய விமர்சனம் ஆகும். ஒவ்வொரு தனி மனிதனும் தனித்தன்மை வாய்ந்தவன். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தனி வகுப்பாக இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் பிளேட்டோவிடம் இல்லை. எண்ணற்ற விதமான தன்மைகள் சமுதாயத்தில் உள்ளன. இந்த தன்மைகளில் சில பல அம்சங்களின் இணைவே ஒரு தனிமனிதன். இதை பிளேட்டோ புரிந்து கொள்ளவில்லை. ஒவ்வொரு தனிமனிதனிடமும் குறிப்பிட்ட விதமான சில அறிவும் திறனும் உள்ளதாக அவர் நினைத்தார். இது தவறான ஒன்றாகும்

மக்களை தனித்தனியான ஒரு சில பிரிவுகளாகப் பிரிப்பது என்பது மனிதனைப் பற்றிய மிக மேலோட்டமான கண்ணோட்டம். அப்படிப் பிரிப்பது தவறு என்று இன்றைய அறிவியல் உணர்த்தி உள்ளது தனிமனிதர்களின் தன்மைகள் எண்ணற்ற விதத்தில் மாறக் கூடியதாக இருக்கிறது. எனவே மனிதர்களைப் பல்வேறு அடுக்குகளாகத் தரம் பிரித்து அவர்களை அதற்கேற்ற விதமாக மட்டுமே பயன் படுத்துவது என்பது அவர்களின் தன்மைகள் முழுமையாகப் பயன்படுவதாகாது. தனிமனிதன் குறிப்பிட்ட

வகுப்பைச் சார்ந்தவன் என்னும் கருத்துக்கு ஏற்றபடி மனிதர்களை தனித்தனிப் பெட்டிகளில் போட்டு அடைத்து வைப்பது சாத்தியம் அற்றதாக இருப்பதால் தான் பிளேட்டோவின் 'குடியரசுத்' திட்டம் தோல்வியைத் தழுவியது. இதே காரணத்துக்காகவே நால்வருண அமைப்பும் தோல்வி அடையும். தொடக்கத்தில் நாலு வகுப்புகளாக இருந்தவை இப்போது நாலாயிரம் சாதிகளாகப் பிரிந்துள்ள நிலையில் மக்களைத் திட்டவட்டமான நான்கு வகுப்புகளாகப் பிரிப்பது சாத்தியமற்றது.

நால்வருண அமைப்பை நிறுவுவதில் இன்னொரு சிக்கலும் இருக்கிறது. நால்வருண அமைப்பு நிறுவப்பட்டு விட்டாலும் கூட அதைத் தொடர்ந்து நிலைநிறுத்துவது எப்படி என்பதே அந்தப் பிரச்சனை. நால்வருண அமைப்பு வெற்றிகரமாக இயங்குவதற்கு அந்த அமைப்பை அங்கீகரிக்கக் கூடிய ஒரு குற்றவியல் சட்ட அமைப்பு ஒரு முக்கியமான தேவையாக இருக்கிறது. ஏனென்றால் வருண மாற்றம் என்பது நால்வருண அமைப்பை ஆதரிப்பவர்கள் நிரந்தரமாக எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனையாக இருந்து வரும். எனவே வருணத்தை மாற்றிக் கொள்வது தண்டிக்கப்பட வேண்டிய ஒரு குற்றமாக ஆக்கப்பட்டால் ஒழிய மக்கள் தத்தம் வகுப்புகளில் நீடித்து இருக்க மாட்டார்கள்.

இப்படி மனித இயற்கைக்கு முற்றிலும் மாறானதாக இருப்பதால் நால்வருண அமைப்பு அடியோடு நொறுங்கிப் போகும். தன் சொந்த பலத்தால் மட்டும் அந்த அமைப்பு நீடிக்க முடியாது. அதற்குக் குற்றவியல் சட்டங்களின் அங்கீகாரம் வேண்டும். இராமாயணத்தில் ராமன் சம்புகனைக் கொல்வதாக வரும் கதை இதைத்தான் நிரூபிக்கிறது. சம்புகனை காரணம் எதுவும் இல்லாமல் ராமன் கொன்றதாக சிலர் நிந்திப்பதாகத் தோன்றுகிறது.

சம்புகனைக் கொன்றதற்காக ராமனைத் தூற்றுவது என்பது மொத்த நிலைமையையும் தவறாகப் புரிந்து கொள்வதாகும்.

ராமராஜ்யம் என்பது நால்வருண அமைப்பை அடிப் படையாகக் கொண்ட ஒரு ராஜ்யம். ஒரு அரசன் என்கிற முறையில் நால்வருண அமைப்பைக் கட்டிக்காக்க வேண்டிய யது ராமனின் கடமையாக இருந்தது. சம்புகன் தன் வருண மாகியச் சூத்திர வருணத்தை விட்டு பிராமணன் ஆக மாற விரும்புகிறான். எனவே சம்புகனைக் கொல்வது ராமன் என்கிற அந்த அரசனின் கடமையாகிறது. ராமன் சம்புகனைக் கொன்றதற்கான காரணம் இதுதான். ஆக நால்வருண அமைப்பைக் கட்டிக் காக்க குற்றவியல் அதிகாரம் தேவையாகிறது என்பதையும் இந்த கதைக் காட்டுகிறது. குற்றவியல் அதிகாரம் தேவை என்பது மட்டுமல்ல. குற்றத்துக்கு வழங்கப்படுகிற தண்டனை மரண தண்டனையாக இருக்க வேண்டும் என்பதும் அவசியமா கிறது. எனவேதான் ராமன் சம்புகனுக்கு குறைவான தண்டனையை அளிக்கவில்லை. அதனால்தான் வேதம் ஓதுகிற சூத்திரனின் நாக்கை அறுக்க வேண்டும் என்பதும், வேதம் ஓதப்படுவதைக் கேட்கிற சூத்திரனின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்பதும் போன்ற கடுமையான தண்டனைகளை மனுஸ்மிருதி விதித்திருக் கிறது. தங்களால் மக்களை நான்கு தனித்தனி வருணங் களாக வெற்றிகரமாக பிரித்துவிட முடியும் என்றும், மனுஸ்மிருதி விதித்திருக்கும் கடும் தண்டனைகளை மீண்டும் அதே தீவிரத்துடன் அமுல்படுத்துமாறு இந்த இருபதாம் நூற்றாண்டின் நவீனச் சமூகத்தினரை தூண்டிவிடத் தங்களால் முடிகிறது என்றும், நால்வருண அமைப்புக்கு ஆதரவாக இருப்பவர்களால் உறுதியாகக் கூற முடியுமா?

நால்வருண அமைப்பை ஆதரிப்பவர்கள் தம் அமைப்பில் பெண்களின் நிலை என்ன என்பதையும் எண்ணிப் பார்க்க வில்லை. பெண்களும் பிராமண, சத்திரிய, வைசிய,

சூத்திரர் என்னும் நாலு வருணமாக பிரிக்கப்படுவார்களா. அல்லது தம் கணவரின் வருணம் எதுவோ அந்த வருணத்தில் இருக்க அனுமதிக்கப்படுவார்களா? ஒரு மனிதரின் சமூக நிலை அவருடைய சொந்தத் தகுதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது நால்வருண அமைப்பின் அடிப்படைக் கொள்கை. அப்படி இருக்கையில் ஒரு பெண்ணின் சமூக நிலை அவளது திருமணத்தால் நிர்ணயிக்கப் படும் என்றால் அந்த அடிப்படைக் கொள்கைக்கு என்ன கதி ஏற்படும்?

அல்லது பெண்களை அவர்களின் சொந்தத் தகுதிக்கு ஏற்றபடி பிரிக்க வேண்டும் என்றால் அவ்வாறு பிரிப்பது பெயரளவில்தான் இருக்குமா? அல்லது உண்மையாக இருக்குமா? பெயரளவுக்குத் தான் என்றால் அதனால் பயனிராது. அந்நிலையில் நால்வருணத்தை ஆதரிப்பவர் அவ்வமைப்புப் பெண்களுக்கு அல்ல என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியதாகும். உண்மையாகத்தான் என்றால் அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை ஏற்றுக் கொள்ள நால்வருண ஆதரவாளர்கள் தயாரா? பெண்களை மத குருக்களாகவும் படைவீரர்களாகவும் ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இருக்கவேண்டும். பெண்களை ஆசிரியைகள் ஆகவும் வழக்கறிஞர்களாகவும் ஏற்றுக் கொள்ள இந்துக்கள் பழகிவிட்டனர். பெண்களை சாராயம் காய்ச்சுபவர்களாகவும் கசாப்புக்கடைகாரிகளாகவும் ஏற்றுக் கொள்ளவும் இந்துச் சமூகம் பழகிவிடக்கூடும். ஆனால் பெண்களை மத குருக்களாகவும் படைவீரர்களாகவும் இருக்க இந்து சமூகம் அனுமதிக்கும் என்று சொல்ல உண்மையிலேயே துணிச்சல் வேண்டும். ஆனால் பெண்களுக்கும் நால் வருணப் பிரிவினையை ஏற்படுத்துவதன் தருக்கரீதியான பின்விளைவு அதுவாகத்தான் இருக்கும். இத்தனைச் சிக்கல்கள் இருக்கும்போது நால்வருண அமைப்பை மீண்டும் வெற்றிகரமாக உயிர்ப்பிக்க முடியும் என நம்புகிறவன்— எதிர்பார்க்கிறவன்— பிறவி முட்டாளாகத்தான் இருக்க முடியும்.

## 17

நால்வருண அமைப்பு நடைமுறைச் சாத்தியமானது என்றே கொண்டாலும் கூட அது மிகுந்த கேடு விளைவிக்கும் அமைப்பென்றே நான் கூறுவேன். பிராமணர்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். சத்திரியர்கள் ஆயுதம் தரிக்க வேண்டும். வைசியர்கள் வணிகம் செய்ய வேண்டும். சூத்திரர்கள் தொண்டூழியம் செய்யவேண்டும் என்கிறப் பிரிவினை, பார்வைக்குத் தொழில் பிரிவினை போல் தோன்றுகிறது. இந்தக் கோட்பாடு சூத்திரர்கள் இன்னின்னதைச் செய்யத் தேவை இல்லை என்று கூறுகிறதா அல்லது செய்யக் கூடாது என்று ஆணையிடுகிறதா என்பது ஒரு சுவாரசியமான கேள்வி ஆகும். நால்வருண அமைப்பின் ஆதரவாளர்கள் சூத்திரர்களுக்கு முதல் அர்த்தத்தையே கற்பிக்கின்றனர். மற்ற மூன்று வருணத்தாரும் சூத்திரருக்கு ஆதரவாக இருக்கும்போது, சூத்திரர் ஏன் தமக்கென சொத்து சம்பாதிக்க அல்லல்பட வேண்டும் என்கிறார்கள். சூத்திரர் எழுதப் படிக்கத் தேவைப்படும் போது பிராமணனிடம் செல்ல முடியும் என்கிற நிலையில், தான் கல்வி பெற வேண்டும் என்று சூத்திரர்கள் ஏன் கவலைப்பட வேண்டும் என்கிறார்கள். சூத்திரரைப் பாதுகாப்பதற்குச் சத்திரியன் இருக்கையில் சூத்திரன் தன்னைக் காத்துக் கொள்ள ஆயுதம் தரிக்க ஏன் ஆசைப்பட வேண்டும் என்கிறார்கள்.

இந்த விளக்கப்படி நால்வருண அமைப்பு சூத்திரனை பராமரிப்புக்கு உட்பட்டவனாகவும், மற்ற மூன்று வருணத்தாரையும் அவனுடைய காப்பாளராகவும் பார்க்கிறது. இந்த விளக்கப்படி நால்வருண கோட்பாடு ஒரு எளிய, ஏற்றம் தருகிற, வசீகரமான கோட்பாடாகத் தோன்றுகிறது. வருணக் கோட்பாட்டை ஆதரிப்பவர்கள் சொல்வது போல அக்கோட்பாட்டின் உண்மையான கருத்தோட்டம் இதுதான் என்றால் அந்த அமைப்பு நம்பகமானதும் அல்ல நாணயமானதும் அல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது.

பிராமணர்கள் அறிவைப் பெருக்கவும், சத்திரியர்கள் போர்த்திறனை வளர்க்கவும், வைசியர்கள் பொருளாதார முயற்சிகளில் ஈடுடவும் தவறினால் என்ன நடக்கும் இதற்கு மாறாக இந்த மூன்று வருணத்தாரும் தத்தம் காரியங்களைக் கவனித்துக் கொண்டு சூத்திரருக்கோ அல்லது இந்த மூன்று வருணத்தாரும் ஒரு வருணத்தார் மற்ற வருணத்தாருக்கோ செய்ய வேண்டிய கடமையை அலட்சியப்படுத்துவதாக வைத்துக் கொள்வோம். அந்த நிலையில் சூத்திர வருணத்தவருக்கு மற்ற மூன்று வருணத் தவரும் நியாயமாக அளிக்க வேண்டிய ஆதரவை அளிக்க மறுத்தாலோ அல்லது சூத்திரரை அடக்கியே வைத்திருக்க மற்ற மூன்று வருணத்தாரும் கைகோர்த்துக் கொண் டாலோ என்ன நடக்கும்? சூத்திரனின் அறியாமையை ஆதாயம் ஆக்கிக் கொள்ளப் பார்ப்பவன் பிராமணனாக இருந்தால் சூத்திரரின் நலன்களைக் காப்பது யார்? அது போன்ற நிலையில் வைசியர், சத்திரியர் ஆகியோரின் நலனைக் காப்பது யார்? சூத்திரரைக் கொள்ளையடிக்கப் பார்ப்பவன் சத்திரியனாக இருந்தால் சூத்திரரின் சுதந்திரத் தைக் காப்பது யார்? அல்லது அதுபோன்ற நிலையில் பிராமணரையும் வைசியரையும் காப்பது யார்? ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பைப் பரஸ்பரம் சார்ந்து இருப்பது தவிர்க்க முடியாதது. ஒரு வகுப்பு மற்ற வகுப்பை முற்றாகச் சார்ந்து இருப்பது கூட சில சமயங்களில் அனுமதிக்கப்படக் கூடியது ஆகலாம். ஆனால் உயிராதாரமான தேவை களுக்கும் கூட ஒருவர் மற்றவர்களைச் சார்ந்து இருக்கும் படி ஆக்கி வைப்பது ஏன்? ஒவ்வொருவரும் கல்வியறிவு பெற வேண்டும். ஒவ்வொருவரும் தற்காப்புக்கான சாதனங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தம்மைத்தாமே காத்துக் கொள்வதற்கான தலையாய தேவைகள் இவையே. அண்டை வீட்டுக்காரன் கல்வியறி வும், ஆயுதமும் பெற்றிருப்பதானது, கல்வி அறிவும் ஆயுதமும் பெற்றிராத ஒருவனுக்கு எந்த வகையில் உதவ முடியும்?... மொத்தக் கோட்பாடுமே அபத்தமாக

ஆகிறது. இந்தக் கேள்விகளைக் கேட்க நால் வருண அமைப்பின் ஆதரவாளர்கள் தயங்குவதாகத் தோன்று கிறது. ஆனால் இந்தக் கேள்விகள் மிகவும் அடிப்படையான கேள்விகள் ஆகும்.

''வெவ்வேறு வகுப்பினருக்கு இடையே உள்ள உறவு முறை பராமரிப்புக்கு உட்பட்டவனுக்கும், பராமரிக்கிற வனுக்கும் இடையே உள்ள உறவு முறைதான்'' என்பது தான் நால்வருண அமைப்பின் உள்ளடக்கம் என்று அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். இது உண்மை யானால் காப்பாளர்களின் தவறான நடவடிக்கைகளில் இருந்து பராமரிப்புக்கு உட்பட்டவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு இது எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். நால்வருண அமைப்பின் அடிப்படையான உறவுமுறை உண்மையில் பராமரிக்கப்படுபவனுக்கும் காப்பாளனுக்கும் உள்ள உறவு முறையோ என்னவோ தெரியாது. ஆனால் நடைமுறை யில் அது ஆண்டானுக்கும் அடிமைக்கும் உள்ள உறவுமுறை தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணங்களும் தமக்கு இடையிலான பரஸ்பர உறவில் அவ்வளவு திருப்தி இல்லாமல் இருந்தாலும் ஒருவருக்கொருவர் சமரசம் செய்து கொண்டு போக முடிகிறது. பிராமணர்கள் சத்திரி யர்களை முகஸ்துதி செய்தார்கள். பிராமணனும் சத்திரியனு மாகச் சேர்ந்து கொண்டு வைசியனைச் சுரண்டி வாழ்வதற் காக வைசியனை வாழவிட்டார்கள். ஆனால் இந்த மூன்று வருணத்தவருமே சூத்திரனை நசுக்குவதில் ஒத்துப் போனார்கள்.

சூத்திரன் சொத்தைத் தேடி அலைய அனுமதிக்கப் படவில்லை. ஏனென்றால் அதற்கு அனுமதித்தால் அவன் மற்ற மூன்று வருணத்தாரைச் சார்ந்து இல்லாமல் போவான். சூத்திரன் கல்வி அறிவு பெறாமல் தடுக்கப் பட்டான். ஏனென்றால் கல்வி அறிவு பெற்றுவிட்டால்

தன் நலன்களைப் பற்றி அவன் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவான். சூத்திரன் ஆயுதம் தரிக்க தடை போடப்பட்டது. ஏனென்றால் ஆயுதந் தரித்துவிட்டால் தன்னை ஆளுகின்றமூன்று வருணத்தாரின் அதிகாரத்துக்கும் எதிராக அவன் கிளர்ந்து எழுவான். சூத்திரர்கள் இந்த மூன்று வருணத்தாராலும் இப்படித்தான் நடத்தப்பட்டார் கள் என்பதை மனுவின் சட்டங்கள் காட்டுகின்றன. சமூக நீதிகளைப் பொறுத்து மனுவின் சட்டங்களைவிடக் கேவலமான சட்டங்கள் எதுவும் இல்லை. அவை எல்லாம் மனுவின் சட்டத்துக்கு முன் தூசுதான். மக்களில் பெரும் பகுதியினர் தாம் அனுபவிக்கிற சமூகக் கொடுமைகளை ஏன் சகித்துக் கொண்டிருக்கின்றனர்? உலகில் உள்ள மற்ற தேசங்களில் சமூகப் புரட்சிகள் நடந்து வந்துள்ளன. இந்தியாவில் ஏன் சமூகப் புரட்சிகள் நடக்கவில்லை? இந்தக் கேள்வியை நான் எனக்குள் இடைவிடாமல் கேட்டு வந்தேன்.

ஒரே ஒரு விடைதான் எனக்குக் கிடைத்தது. கேடு கெட்ட இந்த நால்வருண அமைப்பின் காரணமாக இந்துக் களில் தாழ்த்தப்படும் சாதியினர் எந்த நேரடி நடவடிக்கை யிலும் இறங்க முடியாதவர்களாக முடக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் ஆயுதம் தாங்க முடியாது. ஆயுதம் இல்லாமல் அவர்களால் கிளர்ச்சிச் செய்ய முடியாது. அவர்கள் எல்லாருமே கலப்பை பிடிப்பவர்கள். இன்னும் சொன்னால் கலப்பையை மட்டுமே பிடிக்கும்படிச் சபிக்கப் பட்டவர்கள். கலப்பைக் கொழுவை வாளாக மாற்றிக் கொள்ள அவர்களுக்கு எப்போதுமே அனுமதி அளிக்கப் பட்டதில்லை. அவர்களிடம் துப்பாக்கி இல்லை. எனவே அவர்களை அடக்கி ஒடுக்க விரும்பிய அனைவருக்குமே அவ்வாறு செய்வது சாத்தியமாயிற்று. அப்படியே நடக்க வும் நடந்தது. நால்வருண அமைப்பின் காரணமாக தாழ்த்தப்பட்ட சாதியினரால் கல்வியறிவு பெற முடிய வில்லை. எனவே தங்கள் விடிவுக்கான வழியைப் பற்றி

எண்ணவோ அறியவோ அவர்களால் முடியாமல் போனது. தாழ்த்தப்பட்ட நிலையில் தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அந்த நிலையிலிருந்து வெளியேறுவதற்கான வழி அவர்களுக்குத் தெரியாது. சாதனமும் அவர்களிடம் கிடையாது. எனவே நிரந்தரமான அடிமைகளாக இருப்பதே தங்கள் தலை எழுத்து என்று அவர்கள் சரணாகதி அடைந்து விட்டனர்.

ஐரோப்பாவிலும் கூட வலுத்தவர் நலிந்தவர்களை சுரண்டத்தான்—சரியாகச் சொன்னால் கொள்ளையடிக்கத் தான்—செய்தார்கள். ஆனால் சுரண்டலை எதிர்த்து நலிந்தோரால் எதுவுமே செய்ய முடியாத அளவுக்கு நால் வருண அமைப்பு மூலம் இந்துக்கள் வெட்கம் கெட்ட முறையில் சூழ்ச்சியாக நலிந்தோரை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பது போன்ற ஏற்பாடு எதுவும் ஐரோப்பாவில் இல்லையே. வலுத்தவர்களுக்கும் நலிந்தவர்களுக்கும் இடையே ஏற்படுகிற சமூக யுத்தங்கள் எப்போதுமே இந்தியாவில் நடந்ததைவிட மிகமிகக் கடுமையாக ஐரோப்பாவில் நடந்து வந்துள்ளன. ஆனாலும் கூட ஐரோப்பாவில் நலிந்த பிரிவினர் இராணுவத்தில் பணியாற்ற உள்ள உரிமையில் தன் பௌதீக ஆயுதத்தையும், போராட்டத்தில் தன் அரசியல் ஆயுதத்தையும், கல்வியில் தன் தார்மீக ஆயுதத்தையும் அடைந்து வந்திருக்கிறார்கள். விடுதலைக்கான இந்த மூன்று ஆயுதங்களையும் நலிந்த பிரிவினர் பெற முடியாமல் ஐரோப்பாவில் வலுத்தவர்கள் தங்களிடம் வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் இந்தியாவிலோ நால்வருண அமைப்பின் மூலம் இந்த மூன்று ஆயுதங்களும் மக்களுக்குக் கிடைக்காதபடி மறுத்தார்கள்.

நால்வருண அமைப்பை விட மனிதர்களை இழிவு படுத்தும் சமூக அமைப்பு எதுவும் இருந்துவிட முடியாது. பயன்தரும் செயல்பாடுகள் எதையும் மேற்கொள்ள முடியாதவாறு மக்களை மரமாக்கி முடமாக்கி மூலையில் கிடத்தும் அமைப்பு நால்வருண அமைப்பு. நான் ஒன்றும் மிகைப்

படுத்திக் கூறவில்லை. என் கூற்றுக்கு வரலாறு ஏராளமான ஆதாரங்கள் தருகிறது.

இந்தியாவின் வரலாற்றிலேயே ஒரே ஒரு கால கட்டம் தான் சுதந்திரமும் பெருமையும் புகழும் கொண்டதாக இருக்கிறது. அது மௌரியப் பேரரசின் காலமே மற்ற காலங்களில் எல்லாமே தேசம் தோல்வியில் துவண்டு கிடந்தது. அது ஏன்? மௌரியர் காலத்தில் நால்வருண அமைப்பு முற்றிலுமாக அழிக்கப்பட்டது. மக்களில் பெரும் பான்மையினரான சூத்திரர்கள் அன்று தங்களுக்கு உரிய நிலையை எட்டினார்கள்—நாட்டின் ஆட்சியாளராக ஆனார்கள். இந்த நாட்டின் பெரும்பான்மையினரான மக்களின் அவல நிலைக்குக் காரணமான நால்வருண அமைப்பு மேலோங்கிய காலம், தோல்வியும் அறியாமை இருளும் மேலோங்கிய காலம்.

## 18

நால் வருண அமைப்பு புதியதல்ல, வேதங்களைப் போலவே பழமையானது. நால் வருண அமைப்பை ஆதரிக்க வேண்டும் என்று ஆரிய சமாஜத்தார் கூற அதுவும் ஒரு காரணம். கடந்த கால அனுபவங்களைக் கணக்கில் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், ஒரு சமூக அமைப்பு என்கிற முறையில் நால்வருண அமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுத் தோல்வியடைந்து விட்டது. எத்தனையோ தடவைகள் சத்திரியர்கள் பிராமணர்களைக் கருவறுத்திருக் கிறார்கள். எத்தனையோ தடவைகள் பிராமணர்கள் சத்திரியர்களைக் கருவறுத்திருக்கிறார்கள். பிராமணர் களுக்கும் சத்திரியர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட சண்டை கள் மகாபாரதத்திலும் புராணங்களிலும் ஏராளமாக இடம் பெற்று உள்ளன. பிராமணனும் சத்திரியனும் தெருவில் சந்தித்துக் கொள்ளும் போது முதலில் வணங்க வேண்டி யவன் யார்? யார் முதலில் வழிவிட வேண்டும்? பிராமணனா

சத்திரியனா என்பது போன்ற அற்ப விஷயங்களுக்காகக் கூட அவர்களுக்குள் சச்சரவு இருந்து வந்திருக்கிறது. பிராமணர்களுக்குச் சத்திரியர்களும், சத்திரியர்களுக்கு பிராமணர்களும் பரஸ்பரம் உறுத்தலாக இருந்து வந்துள்ளார்கள். அது மட்டுமா? சத்திரியர்கள் கொடுங்கோலர் ஆனார்கள். நால் வருண அமைப்பின் கீழ் ஆயுதம் தாங்கும் உரிமை இல்லாத மக்கள் சத்திரியர்களின் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து தங்களை விடுவிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டார்கள். சத்திரியர்களை ஒழிப்பது என்னும் புனிதமான நோக்கத்திற்காகவே மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் எடுத்ததாக பாகவதம் கூறுகிறது. பல்வேறு வருணங்களுக்கு உள்ளும் போட்டியும் பகையுமே இருந்து வந்தது. நன்கறியப்பட்டு இருக்கிற இந்த நிலையில், 'நால்வருண அமைப்பு என்பதே நம்முடைய குறிக்கோள்' என்றும், அல்லது இந்துச் சமூகத்தை சிறப்பாக வடிவமைப்பதற்கான இலட்சிய வடிவம் என்றும் எப்படிக் கூறுகிறார்கள்?

## 19

இதுவரை உங்களுக்கு ஆதரவாக இல்லாதவர்களைப் பற்றி— முற்றிலும் வெளிப்படையாக உங்களுடைய இலட்சியத்துக்குத் தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்களைப் பற்றி— பேசினேன். மற்றவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் உங்களுடனும் இல்லை; உங்களிடமிருந்து அந்நியப்பட்டும் இல்லை. அவர்களுடைய கண்ணோட்டத்தைப் பற்றி பேசலாமா வேண்டாமா என நான் தயங்கிக் கொண்டு இருந்தேன். இரண்டு காரணங்களுக்காகப் பேசித்தான் ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

முதலாவதாக அவர்கள் சாதிப் பிரச்சனையில் வெறும் நடுநிலை வகிக்கவில்லை. போர்க்கோலம் பூண்டு நடுநிலை

வகித்து வருகின்றனர். இரண்டாவதாக மக்களில் கணிசமான ஒரு தொகையினரின் கருத்தைத்தான் அவர்கள் சொல்கிறார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் இந்துக்களின் சாதி அமைப்பிலே விசித்திரம் எதுவும் இல்லை; வெறுப்பு கொள்ளவும் எதுவும் இல்லை என எண்ணுகின்றனர். இவர்கள் முகமதியர்கள், சீக்கியர்கள், கிறித்தவர்கள் போன்றவர்களைச் சுட்டிக்காட்டி அவர்களுக்குள்ளும் சாதி இருக்கிறது என்ற உண்மையில் ஆறுதல் அடைகிறார்கள். இந்தப் பிரச்சனையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கு முன்னரே நீங்கள் உங்கள் மனதில் ஒரு உண்மையைப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் மனித சமூகம் என்பது எங்குமே ஒரே முழுச் சமூகமாக இல்லை என்பது தான் அந்த உண்மை. சமூகம் எப்பொழுதும் பன்முகப்பட்டதாகவே இருந்து வருகிறது. நடைமுறையில் தனி மனிதன் ஒரு துருவத்திலும் சமூகம் மறு துருவத்திலும் நிற்கிறார்கள். இந்த இரண்டு துருவங்களுக்கும் இடையிலே தான் எல்லா வகையான சிறிய அல்லது பெரிய அளவு கொண்ட இணைக்கும் ஏற்பாடுகள்— அதாவது குடும்பங்கள், நட்புறவுகள், கூட்டுறவுச் சங்கங்கள், வணிக நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், வழிப்பறிக் கூட்டங்கள், கொள்ளைக் கூட்டங்கள் முதலியவை— இருக்கின்றன.

இந்தச் சிறிய குழுக்கள் உறுதியாக இணைக்கப்பட்டு இருப்பது வழக்கம். சாதிகளைப் போலவே இச்சிறு குழுக்களும் தனித்து இயங்குகின்றன. அவர்களுக்கு என்று குறுகிய கண்டிப்பான சட்டங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் இந்தச் சட்டங்கள் சமூக நலன்களுக்கு எதிரானவையாகத் தான் இருக்கும். ஐரோப்பா ஆனாலும் சரி, ஆசியா ஆனாலும் சரி எந்த ஒரு சமூகத்துக்கும் உள்ள நிலை இதுதான். குறிப்பிட்ட ஒரு சமூகம் உன்னதமான ஒரு சமூகமா என்பதைத் தீர்மானிக்கக் கேட்கப்பட வேண்டிய கேள்வி, அந்தச் சமூகத்தில் குழுக்கள் இருக்கின்றனவா என்பது அல்ல. ஏனெனில் எல்லாச் சமூகங்களிலுமே குழுக்கள் இருக்கத்தான் செய்கின்றன.

உன்னதமான ஒரு சமூகம் எது என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கேள்விகள் :

1. அந்தக் குழுக்களால் உணர்வு பூர்வமாக பகிர்ந்து கொள்ளப்படுகிற நன்மைகள் எத்தனை? அவை எத்தனை வகை?

2. மற்றச் சமூகங்களுடன் எந்த அளவுக்கு அது முழுமையாகவும் சுதந்திரமாகவும் கலந்துறவாடுகிறது?

3. குழுக்கள், வகுப்புகள் போன்றவற்றை இணைக்கும் சக்திகளைவிடப் பிரிக்கும் சக்திகள் அதிகமாக இருக்கின்றனவா?

4. இந்தக் குழு வாழ்க்கைக்குத் தரப்பட்டுள்ள சமூக முக்கியத்துவம் என்ன? குழு தனித்தே இயங்குவது, பழக்க வழக்கம், வசதி இவற்றின் காரணமாகவா?

இந்தக் கேள்விகளின் அடிப்படையில் தான் இந்துக்களுக்கு இடையே இருக்கிற சாதிகளும் மற்ற மதத்தவருக்கு இடையே இருக்கிற சாதிகளும் ஒரே இயல்பு கொண்டவை தானா என்பதை முடிவு கட்ட வேண்டும்.

முகமதிய, சீக்கிய, கிறிஸ்தவ மதத்தினருக்கு இடையே உள்ள சாதி முறைமைக்கும் இந்துக்களுக்கு இடையே உள்ள சாதி முறைமைக்கும் இந்தக் கண்ணோட்டங்களை நாம் பொருத்திப் பார்த்தால், இந்து அல்லாதவரிடையே உள்ள சாதி முறை இந்துக்களிடை உள்ள சாதி முறையில் இருந்து அடிப்படையிலேயே மாறுபட்டவை என்பது உங்களுக்கு நன்றாகவே புரியும். முதலாவதாக மற்ற மதத்தவரிடம் உணர்வுபூர்வமாக இணைக்கும் எத்தனையோ காரணிகள் உள்ளன அதுபோன்ற காரணிகள் இந்து மதத்தவரிடையே ஏதுமில்லை, ஒரு சமூகத்தில் உள்ள குழுக்களுக்கு இடையில் தொடர்பு கொள்வதற்கும் இணைந்து செயல்படுவதற்கும் சாத்தியக்கூறுகள் எந்த அளவுக்கு இருக்கின்றனவோ, அந்த அளவுக்கே அந்த சமூகம் வலிமை உடையச் சமூகமாக இருக்கும். இந்தச் சாத்தியக்கூறு

களைக் கார்லைல் பிரிந்து நிற்கிற வெவ்வேறு மூலக்கூறு களை மறுபடியும் ஒருங்கிணைத்து ஒன்று சேர்க்கும் ஒரு நெகிழ்வுத்தன்மை உடைய இணைப்புக் கண்ணி''யாக கருதுகிறார்.

இந்துச் சமூகத்தைச் சிதறடிக்கிற சக்தியாக இருக் கிறது சாதி. சாதியின் இந்த விளைவுக்கு எதிராகச் செயல் பட்டு இந்துச் சமூகத்தை ஒருங்கிணைக்கும் சக்தி எதுவு மில்லை. மற்ற மதத்தவரிடையே ஒருங்கிணைக்கும் சக்திகள் ஏராளமாக இருக்கின்றன. இந்துக்களுக்குள் சாதிகள் இருப்பது போலவே மற்ற மதத்தவர்களுக்குள்ளும் சாதிகள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்த போதிலும் இந்துக்கள் சாதிக்குத் தருகிற சமூக முக்கியத்துவத்தை மற்ற மதத்தவர் தருவதில்லை. ஒரு முகமதியனையோ சீக்கிய னையோ நீ யார் என்று கேளுங்கள். தான் ஒரு முகமதியன் அல்லது சீக்கியன் என்றே அவன் பதில் தருவான். தனக்கு என்று ஒரு சாதி இருந்த போதிலும் கூட அவன் தன் சாதியைச் சொல்வதில்லை. நீங்களும் அவனுடைய பதிலில் திருப்தியடைந்து விடுகிறீர்கள். தான் ஒரு முகமதியன் என்று அவன் கூறியதும் நீங்கள் அவனை நீ சன்னியா, ஷேக்கா, சையதா, சாதிக்கா, பிஞ்சாரியா என்றெல்லாம் கேட்கப் போவதில்லை. தானொரு சீக்கியன் என்று அவன் கூறியதும், நீங்கள் அவனை நீ ஜாட்டா, ரோதாவா, மாம்பியா, ராம்தாஸியா என்றெல்லாம் கேட்பதும் இல்லை. நான் ஒரு இந்து என்று எவனாவது சொன்னால் நீங்கள் அந்தப் பதிலால் திருப்தியடைந்து விடுவதில்லை. அவனுடைய சாதி என்னவென்று விபரமாகத் தெரிந்து கொள்வது அவசியம் என்று உணருகிறீர்கள். ஏன்? ஒரு இந்துவைப் பொறுத்தமட்டில், அவனுடைய சாதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அவன் எத்தகைய ஒரு மனிதன் என்பதை உங்களால் உறுதியாகத் தெரிந்து கொள்ள முடியாது என்கிற அளவுக்குச் சாதி, முக்கியத் துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

இந்துக்கள் மத்தியில் சாதிக்கு இருக்கிற சமூக முக்கியத் துவம் இந்து அல்லாதார் மத்தியில் இல்லை. இந்துக்களில் சாதி விதிமுறைகளை மீறிய ஒருவருக்கு ஏற்படும் பின் விளைவுகளை கவனித்தால் மேற்சொன்ன கூற்றின் உண்மை விளங்கும். முகமதியருள்ளும் சீக்கியருள்ளும் சாதிகள் இருக்கலாம். ஆனால் சாதி விதிகளை மீறிய காரணத்துக்காக அவர்கள் சாதியில் இருந்து விலக்கி வைக்கப்படுவது இல்லை. ஆனால் இந்து ஒருவன் அப்படி நடந்து கொண்டால் அவன் கண்டிப்பாகச் சாதியில் இருந்து விலக்கி வைக்கப்படுவான். உண்மையில் சாதியிலிருந்து விலக்கி வைப்பது என்பது சீக்கியர் முகமதியர் அறியாத ஒன்றாகும்.

இந்துக்களுக்கு சாதியின் சமூக முக்கியத்துவம் என்பது என்ன? மற்றவர்களுக்குச் சாதியின் சமூக முக்கியத்துவம் என்ன? என்பதையே இது காட்டுகிறது. இரண்டாவது வேறுபாடு இது.

மூன்றாவதும் இதைவிட முக்கியமானதுமான வேறு பாடு ஒன்று இருக்கிறது. மற்ற மதத்தவரிடையே சாதி யைக் கடைப்பிடிப்பது புனிதமான மதக் கடமையாக இருக்கவில்லை; இந்து மதத்தவரின் சாதிகள் மதக் கடமை கொண்டதாக இருக்கின்றன. மற்ற மதத்தவரிடையே சாதி ஒரு பழக்கமாகத்தான் இருந்து வருகிறது. ஒரு புனித மான நிறுவனமாக இருக்கவில்லை. சாதியின் உற்பத்திக்கு மற்ற மதத்தவர் காரணம் அல்ல. மற்ற மதத்தவரைப் பொறுத்தவரைச் சாதி அவர்களிடம் மிஞ்சி இருப்பது மட்டும் தான். மற்ற மதத்தவர் சாதியை ஒரு மதக் கோட்பாடாக கடைப்பிடிப்பது இல்லை. பல்வேறு சாதி யினரும் தனித்து இயங்குவதும். ஒரு சாதியினரோடு மற்ற எந்தச் சாதியினரும் கலக்காமல் பிரிந்து இயங்குவதுமே பெருமைக்கு உரியது எனக் கருதி நடக்குமாறு இந்துமதம் இந்துக்களை கட்டாயப்படுத்துகிறது. சாதி விஷயத்தில் இதே மனப்போக்கைத்தான் மேற்கொள்ள வேண்டும்

என்று மற்ற மதங்கள் கட்டாயப்படுத்துவதில்லை' இந்துக்கள் சாதியைத் தகர்த்தெறிய விரும்பினால் மதம் வழி மறிக்கும். மற்ற மதத்தவருக்கு இந்தத் தடை இல்லை. எனவே மற்ற மதத்தவருக்குள்ளும் சாதிகள் இருந்த போதிலும், அவர்களுடைய வாழ்க்கையில் சாதிக்குத் தரப்படுகிற இடம் அதாவது முக்கியத்துவம் குறைவு. ''ஒரே மதத்தவன்'' என்கிற உணர்வைவிட ''தன் சாதிக்காரன் மற்றச் சாதிக்காரன்'' என்கிற சாதி உணர்வு தாழ்வானது தான் என்று கருதச் செய்கிற இணைப்புச் சக்திகள் இந்து மதத்தில் குறைவு. எல்லா மதங்களிலுமே சாதி இருக்கத் தான் செய்கிறது எனத் திருப்தியடைவது மிகவும் பயங்கர மான ஒரு மனமருட்சியேயாகும். இந்துக்கள் இந்த மன மருட்சியில் இருந்து எவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தப் படுகிறார்களோ அந்த அளவுக்கு நன்மை உண்டாகும்.

மற்றொரு சாரார் இந்துக்களுக்கு சாதி எந்தப் பிரச்சனையையுமே ஏற்படுத்தவில்லை என்கிறார்கள். இந்து சமூகம் காலத்தால் அழிந்து போகாமல் வாழ்ந்தே வருகிறது. ''வாழத் தகுதியுள்ள ஒரு அமைப்புதான் கால வோட்டத்தில் அழிந்து விடாமல் வாழ முடியும்'' என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, சாதி போன்ற அம்சங்கள் இருந்தாலும் கூட இந்து சமூகம் இன்றளவும் வாழ்ந்து வருவதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ''வாழ்க்கையை பற்றிய இந்து கண்ணோட்டம்'' என்கிற தன் நூலில் பேரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த மனப்போக்கை நன்றாகவே விளக்கியிருக்கிறார். இந்துமதம் பற்றி அவர் கூறுகையில்-

> இந்து நாகரீகம் நேற்றோ இன்றோ தோன்றியது அல்ல. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டது அந்த நாகரீகம். இருந்தபோதும் கூட அது உயர்ந்த ஒரு நிலையை எட்டியிருக்கிறது. சில சமயங்களில் அதன் வளர்ச்சிப் போக்கிலே ஒரு தொய்வும் தேக்க நிலையும் இருந்தே

வந்தது. அதையும் மீறி இந்து நாகரீகம் இன்றைய நாள் வரை தங்குதடையின்றி வளர்ந்தே வந்திருக்கிறது. நான்கு ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆன்மீகச் சிந்தனைகளும் அனுபவங்களும் தந்த நெருக்கடிகளைச் சமாளித்து வளர்ந்தது அந்த நாகரீகம். வரலாற்றின் தொடக்க காலம் முதற்கொண்டே பல்வேறு இனத்தவரும் பல்வேறு பண்பாட்டினரும் இந்தியாவில் வந்து குவிந்தபோதும்கூட இந்து மதம் தன்னுடைய மேலாண்மையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. அரசதிகாரத்தின் ஆதரவைப் பெற்றிருந்த மத மாற்றும் கூட்டத்தாராலும் கூட பெரும்பான்மை இந்துக்களை தம் மதத்துக்கு மாற்ற முடியவில்லை. இந்து மதத்தில் உள்ள ஏதோ ஒரு உயிரோட்டம், அதைவிடச் சக்தி வாய்ந்த காட்டாறுகள் போன்று பிற மதங்களில் இல்லை. மரம் உயிரோடு இருக்கிறதா இல்லையா என்பதை அறிய மரத்தைப் பிளந்து பார்க்கவேண்டியது இல்லை. இந்து மதத்தில் உயிரோட்டம் இருக்கிறதா என்பதை அறிய இந்து மதத்தைப் பகுதி பகுதியாக எடுத்து ஆராய வேண்டியது இல்லை.

பேராசிரியர் ராதாகிருஷ்ணன் சொல்வதெல்லாம் வேதமென்று அவருடைய வாசகர்கள் கொள்வதற்கு அவர் பெயரே போதுமானதாக இருக்கிறது. ஆனால் அதற்காக நான் என் கருத்தைக் கூறாமல் இருக்கமுடியாது; உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருப்பது என்பதே, ஒன்று நீடித்து உயிர் வாழத் தகுதி உடையது என்பதற்கு சான்றாகிவிடும் என்ற நச்சு வாதத்துக்கு அவர் சொற்கள் அடிப்படையாக அமைந்து விடலாம். ஒரு சமூகம் வாழ்கிறதா அல்லது செத்துமடிகிறதா என்பது ஒரு கேள்வியே அல்ல. எந்தத் தளத்தில் அந்தச் சமூகம் வாழ்கிறது என்பது தான் கேள்வி. செத்துமடியாமல் உயிரைத் தக்க வைத்துக் கொண்டு வாழும் முறைகள் ஆயிரம் இருக்கலாம். ஒரு

மனிதன் என்றாலும் சரி சமூகம் என்றாலும் சரி, சும்மா வாழ்வதற்கும் பயன்பட வாழ்வதற்கும் இடையே கடல் அளவு வேறுபாடு உண்டு. போர்க்களத்தில் பகைவனோடு போரிட்டுப் பெருமையோடு வாழ்வதும் ஒரு வாழ்க்கை முறை. புறமுதுகிட்டு ஓடி சரணாகதி அடைந்து ஒரு போர்க் கைதியாக வாழ்வதும் இன்னொரு வாழ்க்கை முறை.

தானும் தன் மக்களும் இன்னமும் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற சுயதிருப்தியால் எந்த இந்துவுக்கும் எந்தப் பயனும் இல்லை. தன் வாழ்க்கையின் தரம் என்ன என்பதைத் தான் ஒவ்வொரு இந்துவும் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் இன்னும் நாம் அழியாமல் இருக்கிறோம் என்று பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை என்பதை அவர் உணர்வார் என்று நான் நினைக்கிறேன். இந்துவின் வாழ்க்கை என்பது தோல்விகளின் தொடர்ச்சியாகவே இருந்து வந்திருக்கிறது. நிரந்தரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக உண்மையில் ஒவ்வொரு கணமும் செத்து மடிந்து கொண்டிருக்கிற வாழ்க்கை அது. உண்மையை ஒத்துக் கொள்ள அஞ்சாத நேர்மை உள்ளம் கொண்ட எந்த ஒரு இந்துவையும் வெட்கித் தலைகுனிய வைப்பதே மேற்கூறிய 'அழியாமல் வாழும் முறை.'

## 20

உங்களுடைய சமூக அமைப்பை மாற்றினால் ஒழிய நீங்கள் முன்னேறவே முடியாது என்பதே என் கருத்து. தாக்குதலுக்கோ தற்காப்புக்கோ மக்களை ஒன்று திரட்ட உங்களால் முடியாது. சாதி என்கிற அஸ்திவாரத்தின் மேல் எதையுமே உங்களால் கட்ட முடியாது. ஒரு தேசத்தை உங்களால் உருவாக்க முடியாது. உயர்ந்த

ஒழுக்க நெறிகளையும் உருவாக்க முடியாது. சாதியை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் உருவாக்குகிற எல்லாமே உருக்குலைந்து போகும். முழுமை அடையாது.

ஆக, இனி கேட்கப்பட வேண்டிய கேள்வி ஒன்றே ஒன்றுதான்— இந்துக்களின் சமூக அமைப்பை சீர்திருத்தி அமைப்பது எப்படி? மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி இது. சாதிய சீர்திருத்தத்தில் தேவையான முதல் நடவடிக்கை உப சாதிகளை ஒழிப்பதே என்று ஒரு கண்ணோட்டம் இருந்து வருகிறது. சாதிகளுக்குள் இருப்பதைவிட உப சாதிகளுக்குள் நடை உடை பாவனைகளிலும் அந்தஸ்திலும் பெரும்பாலும் ஒத்ததன்மை இருக்கிறது என்ற எண்ணமே இந்தக் கண்ணோட்டத்துக்குக் காரணம். ஆனால் இந்தக் கண்ணோட்டம் தவறானது என்றே நான் கருதுகிறேன்.

தக்காண பிராமணர்களையும் தென்னிந்திய பிராமணர்களையும் விட வட இந்திய பிராமணர்களும் மத்திய இந்திய பிராமணர்களும் சமூக அந்தஸ்தில் மிகவும் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள். வட இந்திய பிராமணரும், மத்திய இந்திய பிராமணரும் சமையல்காரர்களாகவும் தண்ணீர் சுமப்பவர்களாகவும் தான் இருக்கின்றனர். தக்காண பிராமணர்களும், தென்னிந்திய பிராமணர்களும் உயர்ந்த ஒரு சமூக அந்தஸ்து பெற்று உள்ளனர். இதற்கு மாறாக வட இந்திய வைசியர்களும் காயஸ்தர்களும் அறிவு நிலையிலும், சமூக நிலையிலும் தென்னிந்திய மற்றும் தக்காண பிராமணர்களுக்கு சமமானவர்களாய் இருக்கிறார்கள். தென்னிந்திய மற்றும் தக்காண பிராமணர்கள் சைவ உணவுப் பழக்கத்தினர். காஷ்மீர் மற்றும் வங்காள பிராமணர்கள் அசைவ உணவுப்பழக்கம் கொண்டவர்கள்; உணவு விஷயத்திலும் ஒத்தத் தன்மை இல்லை. இதற்கு மாறாக தக்காண, தென்னிந்திய பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களில் குஜராத்திகள், மார்வாரிகள், பனியாக்கள், ஜெயின்கள் முதலியவர்களுக்

கும் உணவு விசயத்தில் மிக அதிகமான ஒற்றுமை காணப் படுகிறது.

ஒரு சாதியில் இருந்து மற்றொரு சாதிக்கு மாறுவதை எளிமையானதாக ஆக்க வேண்டும்; எனவே வட இந்திய காயஸ்தர்களையும், தென்னிந்திய பிராமணர் அல்லாதவர் களையும் நாட்டில் உள்ள மற்ற பிராமணர்கள் அல்லாத வர்களோடு இணைத்து விடுவது, இந்த தேசத்தில் உள்ள தென் இந்திய வட இந்திய பிராமணரை இணைப்பதை விட நடைமுறை சாத்தியமானதாகத் தோன்றலாம். உபசாதிகளை ஒருங்கிணைப்பது முற்றிலும் சாத்திய மானது என்றே வைத்துக் கொள்வோம்; உபசாதிகளை ஒழித்து விடுவது என்பதே சாதிகளை ஒழிப்பதற்கு வழி வகுத்து விடும் என்று எப்படி உறுதியாக நம்ப முடியும்? இதற்கு மாறாக சாதியொழிப்பு உபசாதிகளை ஒழிப்ப துடன் நின்றுவிடலாம் அல்லவா? அப்படியானால் உப சாதிகளை ஒழிப்பது சாதிகளை வலுப்படுத்தவே துணை போகும்; சாதிகள் முன்பு இருந்ததைவிட வலிமை மிகுந் தவையாகி, முன்பை விட மிகுந்த விஷமத்தனமாகிவிடும். எனவே சாதியை ஒழிப்பதற்கு உபசாதிகளை ஒன்றாக இணைத்து விடுவது என்கிற வழி நடைமுறைச் சாத்திய மானது மல்ல, பயனுள்ளதும் அல்ல. இது தவறான வழி என்பது எளிதில் நிரூபணமாகும்.

சாதியை ஒழிப்பதற்கான இன்னொரு வழி சமபந்தி விருந்து என்ற கருத்தும் இருந்து வருகிறது. சாதியை ஒழிக்க சமபந்தி விருந்து மட்டுமே போதுமென்று நான் கருதவில்லை. சமபந்தி விருந்தை அனுமதிக்கிற எத்தனையோ சாதிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் சாதி உணர்வை ஒழிப்பதில் சமபந்தி விருந்து வெற்றியடையவில்லை என்பது பொதுவான அனுபவம். கலப்புத் திருமணமே சாதியை ஒழிப்பதற்கான உண்மை யான வழி என நான் நம்புகிறேன். இரத்தக் கலப்பு மட்டுமே ''எல்லோரும் நம்மவரே'' என்கிற உணர்வை

உருவாக்கும். இந்த உணர்வு ஒவ்வொருவரிலும் மேலாண்மை பெறாத வரை தன்னுடைய சாதிக்காரனைத் தவிர்த்த மற்ற எல்லோருமே அயலார் தான். அந்நியர்தான் என்கிற பிரிவினை உணர்வு— அந்நிய உணர்வு— மறையாது.

கலப்புத் திருமணம் என்பது சமூக வாழ்வில் மற்ற மதத்தவரை விட இந்துக்களுக்கு மிக வலுவான காரணி யாக அமைவது தேவை. சமூகத்தை ஒன்றிணைக்க பல்வேறு காரணிகள் ஏற்கெனவே இருக்கும் பட்சத்தில் திருமணம் என்பது சமூகத்தில் ஒரு சாதாரண நிகழ்ச்சி யாகவே இருக்கும். ஆனால் சமூகமென்பது பல்வேறு கூறு களாகப் பிளவுபட்டுள்ள நிலையில் இந்தக் கூறுகளை இணைக்கும் சக்தியாக திருமணமே இருப்பதால் அது உடனடி கவனத்துக்கு உரியதாக மாறுகிறது.

சாதியைத் தகர்த்தெறிவதற்கான உண்மையான வழி கலப்புத் திருமணமே. வேறு எந்தச் சக்தியாலும் சாதியை அழிக்க முடியாது. ஜாத்-பட்-தோடக் மண்டல் இந்த வழியிலான தாக்குதல் முறையை மேற்கொண்டு இருக் கிறது. அது நேரடியாக நெற்றிப் பொட்டில் தாக்குவ தாகும். இந்துக்களிடம் உள்ள நோயை சரியாக இனம் கண்டுள்ளீர்கள், தைரியமாக சுட்டிக்காட்டியும் இருக்கிறீர் கள். இதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். சமூக ஒடுக்குமுறையோடு ஒப்பிடும்போது அரசியல் அடக்கு முறை ஒன்றுமே இல்லை. எனவே அரசாங்கத்தை எதிர்க் கிற அரசியல் வாதியைவிட சமூகத்தை எதிர்க்கிற சீர் திருத்தவாதியே மிகவும் துணிச்சல் உள்ளவன். சமபந்தி விருந்துகளும் கலப்புத் திருமணங்களும் தங்குதடையின்றி நடைபெறும்போது மட்டுமே சாதியானது சமூகத்தை இயக்கும் வலிமையை இழந்து போகும் என்ற உங்கள் எண்ணம் சரியானதே.

நோயின் பிறப்பிடத்தை நீங்கள் தெரிந்து கொண்டு விட்டீர்கள். ஆனால் இந்த நோய்க்கு நீங்கள் தர நினைக் கிற மருந்து சரியான மருந்து தானா? இந்த கேள்விக்

களை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். 1) இந்துக்களில் பெரும்பான்மையினர் கலப்பு மணம் செய்யாதது ஏன்? பல சாதியினரும் சமபந்தி விருந்தில் கலந்து கொள்ளாததும் ஏன்? சாதியொழிப்பு என்கிற உங்கள் நோக்கம் பரவாமல் இருக்கக் காரணமென்ன? கலப்பு மணமும் கலந்துண்ணலும் இந்துக்கள் புனிதமாகக் கருதும் நம்பிக்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் எதிரானவை என்பதே. சாதி என்பது இந்துக்கள் ஒருவரோடொருவர் கலந்து விடாமல் தடுக்கிற ஒரு செங்கல் சுவரோ முள் வேலியோ அல்ல. அப்படி சாதி வெறும் ஒரு சுவராகவோ வேலியாகவோ இருந்தால் அதைத் தகர்த்து விடலாம். சாதி என்பது ஒரு கண்ணோட்டம். ஒரு மனநிலை. எனவே சாதியைப் தகர்ப்பது என்றால் வெறும் ஒரு பௌதீகத் தடையைத் தகர்ப்பது என்பது அல்ல. சாதியைத் தகர்ப்பது என்றால் இந்துக்களின் மனநிலையில் ஒரு மாறுதல் உண்டாக்க வேண்டும் என்பதேயாகும்.

சாதி கெட்டதாக இருக்கலாம்; மனிதனே மனிதனிடம் மனிதத் தன்மையில்லாமல் நடந்து கொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கலாம், இருந்தாலும் இந்துக்கள் சாதியைக் கடைப்பிடிக்கக் காரணமென்ன? இந்துக்கள் மனிதத்தன்மை அற்றவர்களாய் இருப்பதோ அல்லது பிடிவாத குணமும் வக்கிர புத்தியும் கொண்டவர்களாய் இருப்பதோ தான் காரணம் என்று கூற முடியாது. இந்துக்கள் மிக ஆழமான மதப்பற்று உள்ளவர்களாக இருப்பதால் தான் சாதியைப் பின்பற்றுகிறார்கள். மக்கள் சாதியைக் கடைப்பிடிப்பதில் தவறு எதுவுமில்லை. சாதி என்கிற கண்ணோட்டத்தை இந்துக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்து இருக்கிற இந்து மதமே தவறானது என்று நான் கருதுகிறேன். என்னுடைய இந்தக் கருத்து சரியானதென்றால் நீங்கள் வீழ்த்தவேண்டிய எதிரி சாதியைக் கடைப்பிடிக்கும் மக்கள் அல்ல. சாதி

களின் மதமான இந்துமதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்தி ருக்கிற சாஸ்திரங்களே உங்கள் பயங்கர எதிரி. சமபந்தி விருந்தில் கலந்து கொள்ளாதவர்களையும் கலப்புமணம் செய்யாதவர்களையும் விமர்சிப்பதும் கேலி செய்வதும் அல்லது எப்போதாவது சில சமயங்களில் சமபந்தி விருந்தை நடத்துவதும் கலப்புமண விழாவைக் கொண்டாடுவதும் வீண் வேலையாகும். சாஸ்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை அழித்தொழிப்பதுதான் சாதியை ஒழிக்கும் உண்மையான வழிமுறை. மக்களுடைய கருத்துக்களும் நம்பிக்கைகளும் இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்று வடிவமைக்கும் வேலையை சாஸ்திரங்கள் இடைவிடாமல் செய்து வருகின்றன. இதை இனியும் நீங்கள் அனுமதித்துக் கொண்டிருந்தால் சாதியை ஒழிப்பதில் நீங்கள் எவ்விதம் வெற்றி பெற முடியும்? சீர்திருத்தக்காரர்கள் பொதுவாக சாஸ்திரங்களின் அதிகாரத்தை எதிர்ப்பதில்லை. சாஸ்திரங் கள் புனிதமானவை, அடிப்படையான ஆதாரம் உடையவை என்று மக்களை நம்பும்படி விட்டு விடுகின்றனர். அதே சமயத்தில் ''மக்களின் செயல்கள் பகுத்தறிவு இல்லாதவை யாக இருக்கின்றன'' என்று கூறி மக்களைக் கண்டிக்கின் றனர், விமர்சிக்கின்றனர். இது சமூக சீர்திருத்தத்துக்கு ஒத்து வராத வழியாகும். மக்களின் செயல்கள் எல்லாம் சாஸ்திரங்கள் மக்களின் மனதிலே பதிய வைத்திருக்கும் நம்பிக்கைகளின் விளைவுகள் தான். எனவே சாஸ்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை போக்கிக் கொள்ளாத வரை மக்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளப் போவதில்லை; இதை தீண்டாமையை ஒழிக்க நினைக்கிற ''மகாத்மா'' காந்தி உள்ளிட்ட எந்த சீர்திருத்தக்காரர் களும் புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை. எனவே அதுபோன்ற முயற்சிகள் எந்தப் பலனையும் தராததில் வியப்பு ஏதும் இல்லை. தீண்டாமையை ஒழிக்க நினைக் கிறவர்கள் செல்லுகிற அதே தவறான பாதையில்தான் நீங்களும் செல்வதாக எனக்குத் தோன்றுகிறது. சமபந்தி விருந்துகளையும் கலப்புமணங்களையும் ஏற்பாடு செய்வ

தும் அவை நடைபெற்றே ஆகவேண்டும் எனக் கிளர்ச்சி செய்வதும், செயற்கையான முறையில் உங்கள் கருத்துக் களை மக்களிடம் திணிப்பதாகவே அமையும். ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் சாஸ்திரங்களின் தளைகளில் இருந்து விடுவியுங்கள். மக்களின் மனங்களில் சாஸ்திரங்கள் உருவாக்கி வைத்திருக்கிற நாசகரமான கருத்தமைவுகளை நீக்கி தூய்மைப்படுத்துங்கள். இதை நீங்கள் செய்து முடித்து விட்டால் மக்கள் தாமாகவே முன் வந்து நீங்கள் சொல்லாமலேயே கலப்புமணம் செய்வார்கள். சமபந்தி விருந்து நடத்துவார்கள்.

சாஸ்திரங்கள் சொல்வதாக மக்கள் நம்புகிற கருத்து களை உண்மையில் சாஸ்திரங்கள் சொல்லவே இல்லை என்று நீங்கள் ஆயிரம் விளக்கங்கள் தந்தாலும் ஆயிரம் வியாக்கியானம் செய்தாலும் அதனால் பலனேதும் இல்லை. சாஸ்திரங்களை மக்கள் எப்படிப் புரிந்துகொண்டு இருக் கிறார்கள் என்பதுதான் முக்கியம். புத்தரும் குருநானக்கும் எடுத்த நிலைபாட்டை நீங்களும் மேற்கொள்ளவேண்டும். சாஸ்திரங்களை நிராகரித்தால் மட்டும் போதாது. புத்தரும் நானக்கும் செய்ததைப்போல சாஸ்திரங்களின் அதிகாரத்தை மறுக்க வேண்டும். சாதி புனிதமானது என்ற கருத்தை இந்து மதம் இந்துக்களிடம் உருவாக்கி இருக்கிறது. இந்து மதமே அவர்களிடம் உள்ள குறை என்று இந்துக்களிடம் சொல்வதற்கான துணிச்சல் உங்க ளிடம் இருக்க வேண்டும். அந்தத் துணிச்சல் உங்களுக்கு உண்டா?

## 21

உங்கள் வெற்றிக்கான வாய்ப்புகள் என்ன? சமூகச் சீர்திருத்தங்கள் பலவகைப்பட்டவை. ஒன்று, மக்களின் மதக் கருத்துகளோடு தொடர்பு இல்லாதது. நடுநிலை யான அம்சங்களை மட்டுமே கருத்தில் கொள்வது.

மற்றொன்று மக்களின் மதக்கருத்துகளைக் கையாள்வது. இந்த இரண்டாம் வகை சீர்திருத்தத்திலும் 2 வகைகள் உள்ளன. ஒன்று மக்களின் மதக்கொள்கைகளோடு ஒத்துப் போவது. தம் மதத்தில் இருந்து விலகிச் சென்ற மக்கள் தம் சொந்த மதத்திற்கு மீண்டும் திரும்பி அந்த மதத்தின் நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என அழைப்பு விடுப்பது. இரண்டாவது வகை, மதக் கொள்கைகளைத் தொட்டு, அவற்றை முழு மூச்சாக எதிர்ப்பது. மதத்தை விட்டு விலகி மதக் கொள்கைகளின் அதிகாரத்தை முற்றிலுமாக நிராகரித்து அவற்றுக்கு நேர் எதிராக செயல்படுமாறு அழைப்பு விடுப்பது.

சாதி என்பது மத நம்பிக்கைகளின் இயற்கையான வெளிப்பாடே. இந்த மத நம்பிக்கைகள் சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டவை. இந்த சாஸ்திரங்களோ தெய்வீகத் தன்மை பெற்ற ஞானிகள் கட்டளைகளைக் கொண்டவை என்று நம்பப்படுகின்றன. அந்த ஞானிகளோ மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பேரறிவு பெற்றவர்கள். எனவே அத்தகைய ஞானிகளின் கட்டளைகளை மீறி நடப்பது பெரும் பாவமாகும் என்பது மத நம்பிக்கை. எனவே சாதியை விட்டொழித்து விடும்படி மக்களைக் கேட்டுக் கொள்வது மக்களின் அடிப்படையான மத நம்பிக்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டு நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்வதே ஆகும்.

சாதியை ஒழிப்பது என்பது மூன்றாவது வகைப்பட்ட சீர்திருத்தம் ஆகும். மேற்சொன்ன முதலிரண்டு சீர்திருத்தங்களும் எளிதானவை. இந்த மூன்றாம் வகை சீர்திருத்தமோ பிரமிக்கத்தக்க பெரும் பணியாகும். ஏறக்குறைய அசாத்தியம் என்றே கூறலாம். சமூக அமைப்பின் புனிதத்தைக் காத்துவர வேண்டும் என்று இந்துக்கள் எண்ணுகின்றனர். சாதி தெய்வீக அடிப்படை கொண்டதாய் இருக்கிறது. எனவே சாதிக்கு தரப்பட்டு உள்ள புனிதத்தையும்

தெய்வீகத்தையும் நீங்கள் ஒழித்தாக வேண்டும். அதாவது வேதங்கள் மற்றும் சாஸ்திரங்களின் அதிகாரத்தை ஒழிக்க வேண்டும்.

நம் குறிக்கோள் என்னஎன்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம் அந்த குறிக்கோளை அடைவதற்கான சரியான வழிவகைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வது அதைவிட முக்கியம். எனவே தான் சாதியை ஒழிப்பதற்கான வழி என்ன என்பதை வலியுறுத்திக் கூறினேன். சாதியை ஒழிப்பதற்கான உண்மையான வழி என்ன என்பதை நீங்கள் அறியாமல் இருந்தால் உங்கள் முயற்சிகள் பலனற்றுப் போகும். என் ஆராய்ச்சி சரிதான் என்றால் நீங்கள் மாபெரும் பணியை மேற்கொள்ள வேண்டி உள்ளது. இந்தப் பெரும் பணியைச் செய்து முடிக்க உங்களால் முடியுமா முடியாதா என்பதை நீங்கள் தான் கூற வேண்டும்.

உண்மையில் இந்தப் பணி மிகக் கடினமானது என்பது என் சொந்தக் கருத்து. நான் ஏன் இப்படி நினைக்கிறேன் என்பதை நீங்கள் அறிய விரும்பலாம். அதற்கு காரணங்கள் பல. அவற்றில் நான் முக்கியம் என்று கருதும் சில காரணங்களை மட்டும் கூறுகிறேன். சாதி ஒழிப்புக்கு பிராமணர்கள் காட்டுகிற பகைமை ஒரு காரணம். அரசியல் சீர்திருத்த இயக்கத்தின் முன்னணியில் பிராமணரே இருக்கிறார்கள். சில சமயங்களில் பொருளாதார சீர்திருத்த இயக்கத்திலும் முன்னணியினராக இருக்கிறார்கள். சாதியத் தடைகளை தகர்த்தெறிவதற்காக ஏற்கெனவே எழுப்பப்பட்டிருக்கும் பெரும்படையின் பின்னால் செல்லும் ஆதரவாளராகக் கூட அவர்கள் இல்லை. வருங்காலத்திலாவது பிராமணர்கள் சாதி ஒழிப்பில் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்ற நம்பிக்கைக்கு இடமுண்டா! இல்லை என்றே நான் கூறுவேன். ஏன் என்று நீங்கள் கேட்கக்கூடும். சமூக சீர்திருத்தத்தை பிராமணர்கள் தொடர்ந்து புறக்கணிப்பதற்கு காரணம் எதுவும் இல்லையே என்றும் நீங்கள் வாதிட

லாம். இந்துச் சமூகத்தின் பேரழிவுக்குக் காரணமாய் இருப்பது சாதியே என்பதை பிராமணர்கள் நன்றாக அறிவார்கள். தீர்க்கதரிசனம் உடைய வகுப்பினர் என்ற முறையில் சாதியின் விளைவுகளைப் பற்றி அக்கறை இல்லாதவர்களாகப் பிராமணர்கள் இருப்பார்கள் என்று கூறமுடியாது என்றெல்லாம் நீங்கள் வாதிடலாம். நடுநிலை பிராமணர்களும் இருக்கிறார்கள். வைதீக பிராமணர்களும் இருக்கிறார்கள். எனவே சாதியை ஒழிக்க விரும்புகிற மக்களுடன் சேர்ந்து கொள்ள வைதீக பிராமணர் மறுத்து விட்டாலும் கூட நடுநிலை பிராமணர் சாதி ஒழிப்பில் தீவிரமாக இறங்கலாம் என்றும் நீங்கள் கூறலாம்.

இவை எல்லாம் உண்மை என்றே தோன்றுகிறது. ஆனால் சாதி அமைப்பைத் தகர்த்தெறிவது பிராமண சாதியை மிகக் கடுமையாகப் பாதிக்குமென்பதை மறந்து விடக் கூடாது. பிராமண சாதியின் அதிகாரத்தையும் சிறப்பு உரிமைகளையும் அழிப்பதே இறுதியான குறிக்கோள் என்ற நிலையில் சாதி ஒழிப்பு போன்ற எந்த ஒரு இயக்கத்தையும் வழிநடத்திச் செல்ல பிராமணர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவு உடைமை ஆகுமா? வைதீக பிராமணர்களுக்கு எதிராக நடத்தப்படும் ஒரு இயக்கத்தில் நடுநிலை பிராமணர்கள் பங்கு கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமை ஆகுமா? என் கணிப்பின்படி பிராமணரிடையே வைதீகர் என்ற வேறுபாடு இருப்பதாக எண்ணுவதே அபத்தம். இரு சாராருமே தாயாதிகள் தான். ஒரே உடலின் இரு கைகள். ஒரு கை பாதிக்கப்படும் போது மற்றது அதைக் காக்க போராடவே செய்யும். இது தொடர்பாக 'ஆங்கில அரசியல் சாசனத்'தில் பேராசிரியர் டிசே கூறியுள்ள கருத்தாழமிக்க குறிப்பைப் பார்ப்போம். பாராளுமன்ற சட்டமியற்றும் அதிகாரம் பற்றிய நடைமுறைக் கட்டுப் பாடு பற்றி அவர் கூறுகிறார் :

எந்த ஒரு சுயேச்சை அமைப்பும்— குறிப்பாக பாராளுமன்றமும்—தன் அதிகாரத்தை நடைமுறைப்

படுத்தும்போது இரண்டு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே இயங்குகிறது. 1. புறநிலைக் கட்டுப்பாடு, 2. அகநிலைக் கட்டுப்பாடு. மக்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும்பாலாரோ அரசின் அதிகாரங்களை மீறுவார்களா எதிர்ப்பார்களா என் பதில்தான் அரசின் உண்மையான அதிகாரத்தின் மீதிருக்கும் புறக்கட்டுப்பாடு அடங்கி இருக்கிறது... அகநிலைக் கட்டுப்பாடு அரசு அதிகாரத்தின் இயல்பை மட்டும் பொறுத்ததாக உள்ளது. ஒரு கொடுங்கோலனும் கூட தன் குணங்களைப் பொறுத்தே அதிகாரம் செலுத்துகிறான். அவன் குணங்கள்—அவன் வாழும் சூழ்நிலை அவன் வாழும் சமூகம்—இவற்றால்தான் உருவாக்கப்படுகின்றன. சுல்தான் ஒருவன் தான் விரும்பினாலும் கூட முகமதிய உலகின் மதத்தை மாற்ற முடியாது; அப்படி அவனால் செய்ய முடிந்தாலும் அவன் பெரும்பாலும் செய்யமாட்டான். ஏனென்றால் அவ்வாறு செய்வது இசுலாமின் தலைவனே இசுலாமை அழிப்பது ஆகிவிடும். சுல்தான் தன் அதிகாரங்களை அமுல்படுத்துவதில் உள்ள அகநிலை கட்டுப்பாடு புறநிலைக் கட்டுப்பாட்டை போலவே வலிமையானதாகத்தான் உள்ளது. போப் இந்த அல்லது அந்தச் சீர்திருத்தைச் செய்திருக்கலாமே என்ற பயனற்ற கேள்விகளைக் கேட்கிறார்கள். இதற்கு சரியான விடை: ''புரட்சி மனப்பான்மை கொண்டவன் போப் ஆகமாட்டான். போப் ஆனவன் புரட்சி செய்ய விரும்ப மாட்டான்'' என்பது தான்.

இந்தக் கருத்து இந்தியாவின் பிராமணர்களுக்கும் நன்றாகப் பொருந்திவரும். போப் ஆன ஒரு மனிதர் புரட்சிக்காரன் ஆக விரும்பமாட்டார் என்றால் பிராமணனாகப் பிறந்தவன் புரட்சிக்காரன் ஆக நினைக்கவே மாட்டான். நீலக்கண்களை உடைய குழந்தைகளை எல்லாம் கொன்று விட வேண்டுமென பிரிட்டிஷ் பாராளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும் என் எதிர்பார்ப்பது எப்படி அர்த்த

மற்றதோ அது போலவே சமூகச் சீர்திருத்த விஷயங்களில் பிராமணர்கள் புரட்சிகரமானவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்ப்பதும் அர்த்தமற்றதே ஆகும்.

சாதி ஒழிப்பு இயக்கத்துக்குத் தலைமைதாங்க பிராமணர்கள் முன்வருவார்களா மாட்டார்களா என்பது பெரிய பிரச்சனை ஒன்றும் இல்லை என்று உங்களில் சிலர் கூறலாம் ஒரு சமூகத்தில் அறிவாளிகளுக்குள்ள பங்கைப் புறக்கணிக்கும் போக்கு இது. வரலாற்றைப் படைக்கிற வன் மகத்தான தனி மனிதனே என்கிற கோட்பாட்டை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களோ இல்லையோ; ஒவ்வொரு நாட்டிலும் ஆளும் வர்க்கமாக இல்லையென்றாலும் கூட அந்த நாட்டை ஆட்டிப் படைக்கும் அளவுக்கு செல்வாக்குடன் இருப்பது அறிவாளிகள் வர்க்கமே என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

என்னவெல்லாம் நடக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே உணருகின்ற ஆற்றல் அந்த வர்க்கத்துக்கு உண்டு. அந்த வர்க்கமே மககளுக்கு அறிவுரை கூறி அவர்களை வழி நடத்திச் செல்லும் ஆற்றல் உள்ள வர்க்கம். எந்த நாட்டிலும் பரந்துபட்ட மக்கள் அறிவாளிகளைப் போன்ற சிந்தனையோடும் செயல்களோடும் வாழ்க்கையை நடத்துவதில்லை. பொது மக்கள் அறிவாளிகளைப் பார்த்து அதுபோல நடக்கும் இயல்பு கொண்டவர்கள். அவ்வாறே நடக்கவும் செய்கிறார்கள். ஒரு நாட்டின் தலையெழுத்து முழுவதுமே அந்த நாட்டின் அறிவாளி வர்க்கத்தைச் சார்ந்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அறிவாளி வர்க்கம் நேர்மையானதாக சுதந்திரமானதாக, தன்னலம் அற்றதாக இருக்குமானால்நெருக்கடி நேருகிறபோது அந்த வர்க்கம் முன் முயற்சியில் இறங்கி மக்களை வழி நடத்திச் செல்லும் என நம்பலாம். அறிவு தன்னளவிலேயே ஒரு சிறந்த குணம் ஆகிவிட முடியாது என்பது உண்மைதான். அது குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கான சாதனமாகத்தான் இருக்கிறது. அறிவுள்ள மனிதன் அடைய வேண்டிய குறிக்கோள் என்ன என்பதைப்

பொறுத்துத்தான் அறிவு பலன் அளிக்கும். அறிவுள்ள மனிதன் ஒரு நல்ல மனிதனாகவும் இருக்கலாம். அவ்வாறே ஒரு போக்கிரியாகவும் ஆகலாம். அது போலவே அறிவாளி வர்க்கம் என்பது தவறான வழியில் சென்று கொண்டு இருக்கிற மனிதகுலத்துக்கு உதவிக்கரம் நீட்டி மீட்டு நல்வழிப்படுத்துகிற உயர்ந்த உள்ளம் கொண்ட உத்தமர் களைக் கொண்ட குழுவாகவும் இருக்கலாம். அல்லது கருத்து வேறுபாடுகள் கொண்ட சிறு சிறு குழுக்களுக்கு ஆதரவான கூட்டமாகவோ மோசடிக் கும்பலாகவோ இருந்து ஆதாயம் அடைகிறவர்களாகவும் இருக்கலாம். இந்தியாவில் அறிவாளி வர்க்கம் என்பது பிராமண சாதி யின் மற்றொரு பெயராகவே இருப்பது பரிதாபகரமான நிலை என்று நீங்கள் எண்ணக்கூடும். அறிவாளி வர்க்கம் என்பது ஒரே ஒரு சாதிக்குள் அமைந்து இருப்பதற்காக நீங்கள் வருந்தக் கூடும். இந்த அறிவாளி வர்க்கம் நாட்டின் நலன்களிலும் விருப்பங்களிலும் அக்கறை காட்டுவதற்குப் பதிலாக சாதி நலனின் பாதுகாவலனாக தன்னைத்தானே அறிவித்துக் கொண்டிருக்கிற பிராமண சாதியின் நலன் களிலும் விருப்பங்களிலும் அக்கறைக் காட்டி வருகிறதே என்று நீங்கள் வருந்தக்கூடும். இவை எல்லாம் வருத்தம் தரக்கூடியவை தான். ஆனாலும் இந்துக்களின் அறிவாளி வர்க்கமாக பிராமணர்களே இருக்கிறார்கள் என்பதே மறுக்க முடியாத உண்மை. பிராமண சாதி அறிவாளி வர்க்கமாக மட்டும் இருக்கவில்லை. இந்துக்களில் மற்ற சாதியினர் மத்தியில் பெருமதிப்புக்குரிய வர்க்கமாகவும் இருக்கிறது. பிராமணர்கள் பூதேவர்கள் (பூமியில் உள்ள கடவுள்கள்) என்று இந்துக்களுக்குக் கற்பிக்கப்பட்டு உள்ளது. பிராமணர்கள் மட்டுமே இந்துக்களுக்குக் குருவாக இருக்க முடியும் என்றும் இந்துக்களுக்குக் கற்பிக்கப்பட்டு உள்ளது. மனு கூறுகிறான்— தர்மசாத்திரத்தில் குறிப்பிடப்படாத விசயங்களைப் பொறுத்த மட்டில் நல்லொழுக்கமுடைய பிராமணர்களின் சொற்களே பின்பற்றி நடக்கத் தக்க தாகும்.''

அனாம் நாதேஷு தர்மேஷு கதம் ஸ்யாதிதி சேத்பவேத் 1
யம் சிஸ்டா பிராஹ்மணா ப்ருயூ: ஸ தர்ம: ஸ்யாதசங்கீத 11

மற்ற சாதியினரைத் தன் பிடிக்குள் வைத்திருக்கும் இதுபோன்ற ஒரு அறிவாளி வர்க்கம், சாதிச் சீர்திருத்தத்துக்கு எதிரியாக இருக்கும்போது சாதி அமைப்பைத் தகர்த்தெறிவதற்கான இயக்கத்தில் வெற்றி வாய்ப்புகள் எட்டாக்கனி என்றே எனக்குத் தோன்றுகிறது.

சாதி அமைப்பைத் தகர்த்தெறியும் பெரும்பணி மிகக் கடினம் என்பதற்கான இரண்டாவது காரணம் என்ன? சாதி அமைப்பு இரு அம்சங்களைக் கொண்டது. முதல் அம்சம் மனிதர்களைத் தனித் தனி சமூகங்களாகப் பிரித்து வைக்கிறது. இரண்டாவது அம்சம், அவ்வாறு பிரிக்கப்பட்ட சமூகங்களை சமூக அந்தஸ்தில் மேலும் கீழுமாக வரிசைப்படுத்தி வைக்கிறது. ஒவ்வொரு சாதியும் சாதி ஏணி வரிசையில் தான் மற்றொரு சாதியைவிட மேல்நிலையில் இருப்பதில் ஆறுதல் அடைகிறது, பெருமிதம் கொள்கிறது. இவ்விதமான ஏணி வரிசை அமைப்பின் வெளிப்படையான அறிகுறியாக அஷ்டாதிகாரங்கள் சம்ஸ்காரங்கள் என்னும் பெயரால் சமுதாய மற்றும் மதவியல் உரிமைகளும் வரிசைப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

ஒரு சாதி எந்த அளவுக்கு உயர்வானதாக இருக்குமோ அந்த அளவுக்கு இந்த உரிமைகளும் அதிகமானவையாய் இருக்கும். ஒரு சாதி எந்த அளவுக்கு கீழானதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த உரிமைகளும் குறைவானவையாக இருக்கும். ஆக சாதிகளை இந்த விதமாகத் தரம் பிரிப்பதும் ஏணிப்படி வரிசையில் அமைப்பதும் சாதி அமைப்புக்கு எதிராக பொதுவான முன்னணி ஒன்றை உருவாக்குவதைச் சாத்தியம் அற்றதாகச் செய்து விடுகிறது. தன்னை விட உயர்ந்ததாக உள்ள ஒரு சாதியோடு கலப்பு மணம் செய்யவோ கலந்து உண்ணவோ வேண்டும் என்று எந்த ஒரு சாதியும் உரிமைக்குரல் எழுப்பினால் அக்குரல் ஒடுக்கப்பட்டு விடுகிறது. 'உரிமைக்குரல் எழுப்புகிற சாதி

தன்னிலும் கீழான சாதியினரோடு கலப்புமணம் செய்யவும் கலந்து உண்ணவும் செய்வதுதானே' என்று விஷமிகள் அந்த வினாடியே கூறிவிடுகின்றனர். அதுபோன்ற விஷமிகள் பிராமணர்களில் ஏராளமாக உள்ளனர். எல்லாருமே சாதி அமைப்பின் அடிமைகளாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்த அடிமைகள் எல்லாரும் அந்தஸ்தில் சமமானவர்களாக இல்லை.

பொருளாதாரப் புரட்சி ஒன்றை ஏற்படுத்த பாட்டாளிகளைத் தட்டி எழுப்ப அவர்களிடம் மார்க்ஸ் கூறினார்: நீங்கள் இழக்கப் போவது உங்கள் அடிமை விலங்குகளையே! இழப்பதற்கு வேறு எதுவும் உங்களிடம் இல்லை'' என்று.

ஆனால் சமுதாய மற்றும் மதவியல் உரிமைகளை சில சாதிகளுக்கு அதிகமாகவும் சில சாதிகளுக்கு குறைவாகவும் பல்வேறு சாதிகளுக்கு இடையே மிக வஞ்சகமாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ள நிலையில் சாதியமைப்புக்கு எதிராக இந்துக்களைத் தட்டி எழுப்ப காரல் மார்க்சின் கோஷம் சிறிதும் பயன்தராது. சாதிகள் உயர்ந்தது தாழ்ந்தது என்ற வரிசைப்படி தரம் பிரிக்கப்பட்டுள்ளன. தங்கள் அந்தஸ்தை சாதிகள் மிகவும் அக்கறையோடு காப்பாற்றி வர எண்ணுகின்றன. சாதிய அமைப்பு ஒழிக்கப்பட்டால் சில சாதிகள் மற்ற சாதிகளைவிட அதிகமாக தங்கள் தனியுரிமைகளையும் அதிகாரங்களையும் இழக்க வேண்டியிருக்கும் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. எனவே சாதி அமைப்பு என்னும் கோட்டையைத் தகர்க்க மக்களைப் பொதுவான ஒரு அணியாக ஒன்று திரட்ட உங்களால் முடியாது.

## 22

''சாதி பகுத்தறிவுக்குப் புறம்பானது. எனவே சாதியை விட்டொழித்து விடுங்கள். பகுத்தறிவோடு நடந்து கொள்ளுங்கள்'' என்று இந்துக்களைக் கேட்டுக் கொள்ள உங்களால் முடியுமா? அப்படிக் கேட்பது மற்றொரு கேள்வியை எழுப்புகிறது. தன் பகுத்தறிவின்

படி நடக்க இந்து மதத்தவனுக்குச் சுதந்திரம் உண்டா? இந்துவின் நடத்தையைப் பொறுத்த வரையில் மனு மூன்று கட்டளைகளைப் பிறப்பித்து இருக்கிறான்.

வேதம்: ஸ்மிருதி: சதாச்சார்: ஸ்வஸ்யச ப்ரிய மாத்மன:

இந்த மூன்று கட்டளைகளுக்கும் இந்து கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும். இந்த ஆணைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதில் பகுத்தறிவு என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்து ஒருவன் வேதத்தையோ ஸ்மிருதியையோ சதாச்சாரத்தையோ பின்பற்றியாக வேண்டும். .வன் வேறு எதையும் பின்பற்ற முடியாது. முதலாவதாக வேதங்களிலும் ஸ்மிருதி·ளிலும் சொல்லப்பட்டுள்ள சுலோகங்களின் பொருளென்ன என்பது பற்றி சந்தேகம் ஏற்படுகிறபோது உண்மையான பொருளை அறிந்துகொள்வது எப்படி? மிக முக்கியமான இந்தக் கேள்விக்கு மனு மிகவும் திட்ட வட்டமாகப் பதில் கூறுகிறான்:

யோவமன்யேத் தே முலே ஹேதுசாஸ்த்ராஸ்ராயாத் த்விஜ 1
ஸ் ஸாது பிர்ப ஹிஷ்கார்யோ நாஸ்திகோ வேதநிந்தக். 11

'வேதங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் பொருள் கூறுவதில் பகுத்தறிவைப் பயன்படுத்துவது முழுமையாக கண்டனத்துக்குரியதாகும்' பகுத்தறிவை இவ்வாறு பயன்படுத்துவது நாத்திகத்தைப் போலவே பாவகரமானது. அதற்கான தண்டனை சாதி விலக்கமே. வேதத்திலோ ஸ்மிருதியிலோ சொல்லப்பட்டுள்ள ஒரு விசயத்தைப் பற்றி இந்து மதத்தவன் பகுத்தறிவோடு சிந்திக்க முடியாது. வேதங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் இடையே ஒரு விசயத்தில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தால் அதையும் பகுத்தறிவால் தீர்த்துக் கொள்ளக்கூடாது. இரண்டு சுருதிகளுக்கிடையே கருத்து மாறுபாடு ஏற்படுகிற போதும் அவற்றை சம அதிகாரம் கொண்டவையாகவே கருதி அவற்றில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றலாம். இந்த சுருதிகளில் பகுத்தறிவுக்கு ஏற்றதாக

உள்ளது எது என்பதை அறிய எந்த முயற்சியும் செய்யக் கூடாது என்கிறான் மனு.

ஸ்ருதித்வைதம் யத்ர ஸ்யாப்தத்ர தர்மாவுபெள ஸ்ம்ருதெள l

சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் இடையே மாறுபாடு தோன்றும்போது சுருதி சொல்கிறதைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். இதிலும் கூட பகுத்தறிவுக்கு ஏற்ற படி இருப்பது எது என்பதை அறிய முயற்சி செய்யக் கூடாது என்கிறான் மனு.

யாவேத பாஹ்யா : ஸ்டிருத்யோ யாஸ்ச காஸ்ச சத்ருஷ்ட : l
ஸர்வாஸ்தா நிஷ் வலா : ப்ரேத்ய தமோநிஸ்டா ஹித் :
ஸ்ம்ருதா ll

இரண்டு ஸ்மிருதிகளுக்கு இடையே மாறுபாடு இருக் கிறபோது மனு ஸ்மிருதியில் கூறுகிறபடிதான் நடந்து கொள்ள வேண்டும். பகுத்தறிவுக்குப் பொருந்தி வருவது எந்த ஸ்மிருதி என்று அறிந்து கொள்வதற்கான எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படக் கூடாது. இந்த விதி பிரகஸ்பதியால் வகுக்கப்பட்டது.

வேதாயத்வோ நிபந்திருத்வத் பரமாண்ய ஹிமனோ : ஸ்ம்ருத்
மன்வர்த்த விபரிதர துயா ஸ்ம்ருதி ஸா ந சஸ்யதே ll

எனவே எந்த ஒரு விஷயத்திலும் ஸ்மிருதிகளும் சுருதி களும் திட்டவட்டமான கட்டளைகளைத் தந்திருக்கிற போது ஒரு இந்துவானவன் தன் பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்த சுதந்திரம் இல்லை. மகாபாரதத்தில் இந்த விதி வலுத்தளிக்கப் பட்டுள்ளது.

புராண மானவோ தர்ம : ஸாங்கோ வேத ஸ்சித்ஸித் l
ஆங்யாஸித்தானி சத்வாரி ந ஹந்தவ்யானி வேஹ்துபி ll

இந்து மதத்தவன் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தாக வேண்டும். சாதியும் வருணமும் வேதம் மற்றும்

ஸ்மிருதியின் விளைவாகும். எனவே ''பகுத்தறிவுடன் இருங்கள்'' என்று இந்து மதத்தவனைக் கேட்டுக் கொண்டாலும் கூட எந்தப்பயனும் ஏற்படப்போவதில்லை. சாதிகள் வருணங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் பகுத்தறிவைப் பயன்படுத்த சாஸ்திரங்கள் இந்து மதத்த வனை அனுமதிப்பது இல்லை என்பதுடன் சாதிகள், வருணங்கள் மேல் தனக்குள்ள நம்பிக்கையின் அடிப்படை என்ன என்பதை பகுத்தறிவு வழி நின்று பரிசீலிப்பதற் கான எந்த விதமான வாய்ப்பும் தோன்றாதபடியும் சாஸ்திரங்கள் தொடர்ந்து கவனமாகப் பார்த்துக் கொள்கின்றன. புகைவண்டிப் பயணங்களின் போதும் வெளிநாட்டுப் பயணங்களின் போதும் சாதி விதிகளைப் புறக்கணிக்கிற லட்சக்கணக்கான இந்துக்கள், மற்றபடி தினசரி வாழ்வில் சாதி விதிகளைக் கடைப்பிடிக்க பெரு முயற்சி செய்வது மற்ற மதத்தவர் பார்வையில் விசித்திர மாகவே இருந்து வருகிறது. இது ஏன் என்பதை ஆராய்ந் தால் இந்துவின் பகுத்தறியும் ஆற்றலுக்குப் பூட்டப்பட்டு இருக்கிற மற்றொரு விலங்கு வெளிச்சத்துக்கு வருகிறது.

பொதுவாக மனித வாழ்க்கை பழக்க தோசத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. விழிப்புணர்வு கூடிய சிந்தனையின் (reflective thought) அடிப்படையில் அல்லா ஒரு நம்பிக்கைக்கோ ஊகத்துக்கோ அல்லது அறிவுக்கோ ஆதாரமாக இருப்பது எது. அது நம்மை எங்கே இட்டுச் செல்லும் என்பது பற்றி தீவிரமாகவும் இடைவிடாமலும் ஆழமாகவும் சிந்திப்பதே விழிப்புணர்வுடன் கூடிய சிந்தனை ஆகும். இது மிகவும் அபூர்வமாகவே காணப்படுகிறது. இவ்வகையான சிந்தனை ஒரு நெருக்கடி நிலை ஏற்படும் போது மட்டுமே ஏற்படுகிறது. இந்து ஒருவனின் வாழ்க்கை யில் புகைவண்டிப் பயணமும் வெளிநாட்டுப் பயணமும் உண்மையிலேயே நெருக்கடியான நேரங்கள் ஆகும். இந்து ஒருவன் ''என்னால் சாதிவிதிகளை எல்லாச் சமயங்களி லும் கடைப்பிடிக்க முடியவில்லை; இந்த நிலையில் சாதி

என்கிற ஒரு அமைப்பு எதற்காகத்தான் இருக்கிறதோ'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது இயற்கைதான். ஆனாலும் அவன் அப்படி கேட்பதில்லை: ஒரு கட்டத்தில் சாதி விதிகளை மீறி நடக்கிறான் அடுத்த கட்டத்திலோ சாதிவிதிக்கு எவ்வித எதிர்ப்பும் இன்றி அடிபணிகிறான். இந்த முன்பின் முரண்பட்ட போக்குக்குக் காரணம் சாஸ்திரங்கள் தான்! ''சாத்தியமானவரை சாதி விதிமுறைகளைப் பின்பற்றி நட. அப்படி நடக்க முடியாத போது அதற்கு என்று உண்டான பிராயச்சித்தத்தைச் செய்'' என்று சாஸ்திரம் விதித்திருக்கிறது. இந்த பிராயச்சித்தக் கோட்பாட்டின் மூலமாகப் பெறப்படும் சமரச உணர்வைக் கொண்டு சாஸ்திரங்கள் சாதியின் வாழ்க்கையை நிரந்தரமாக நீட்டிக்கின்றன. விழிப்புணர்வுடன் கூடிய சிந்தனை முறையை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுகின்றன. இல்லையென்றால் அந்த சிந்தனைப் போக்கே சாதிய மனநிலையை ஒழித்துக் கட்டி இருக்கும்.

சாதியையும் தீண்டாமையையும் ஒழித்துக் கட்டும் பெரும்பணியில் எத்தனையோ பேர் இறங்கி இருக்கிறார்கள். ராமானுஜர், கபீர் போன்றவர்கள் விசேசமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய செயல்பாடுகளை எல்லாம் ஏற்கவும் அவற்றைப் பின்பற்றி நடக்குமாறு இந்துக்களைத் தூண்டவும் உங்களால் முடியுமா? சுருதியும், ஸ்மிருதியும் மட்டுமல்ல, சதாச்சாரமும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளாகும் என்று மனு வலியுறுத்தி உள்ளார். இங்கு சாஸ்திரங்களை விட சதாச்சாரத்துக்கே உயர்ந்த மதிப்பு தரப்பட்டு உள்ளது.

யத்யதாச்சர்யதே யேந தர்மய வாடதர்மவேவ் வா I
தேஸ்ஸ்யாசரண் நித்யம் சரித்ரம் தத்திகீர்திதம் II

இதன்படி சதாச்சாரம் என்பது தருமமாயினும் அதருமமாயினும் சாஸ்திரங்களோடு ஒத்துப் போனாலும்

மாறுபட்டாலும் அதையே பின்பற்றி நடக்கவேண்டும். அப்படியானால் சதாச்சாரம் என்றால் தான் என்ன? சதாச்சாரம் என்பது சரியான செயல்கள் அல்லது நல்ல செயல்கள்— அதாவது நல்ல, நியாய உள்ளம் படைத்த மனிதர்களின் செயல்கள் என்று எவரேனும் நினைத்தால் அது முற்றிலும் தவறு. சதாச்சாரத்தின் பொருள் அது வல்ல; பழமையான பழக்க வழக்கங்கள்— அவை நல்லதா யினும் கெட்டதாயினும்— அதையே சதாச்சாரம் என்பர்.

யஸ்மின் தேசேய ஆச்சார் : பாரம்பர்ய க்ரமாகத : I
வர்ணாநாம் கில் சர்வேஷாம் ஸ ஸதாச்சார் உச்யதே II

சதாச்சாரம் என்றால் நல்ல செயல்கள் அதாவது நல்ல மனிதர்களின் செயல்கள் என்று புரிந்து கொண்டு அந்த நல்ல வழியிலே மக்கள் நடந்து விட்டால் என்ன செய்வதென்று பயந்து, வேறுவிதமாகப் புரிந்து கொள்வ தற்கு இடமே வைக்காமல் சில கட்டளைகளை ஸ்மிருதிகள் பிறப்பித்து உள்ளன. அதாவது ஸ்மிருதிகள், சுருதிகள். சதாச்சாரங்கள் ஆகியவற்றுக்கு எதிராக இருக்கும் பட்சத் தில் கடவுள்களின் நல்ல காரியங்களையும் கூடப் பின்பற்றி நடக்கக் கூடாது என்று அந்தக் கட்டளைகள் இந்துக் களுக்கு விதித்துள்ளன. இது மிகவும் அசாதாரணம் ஆன தாக, மிகவும் வக்கிரமானதாகத் தோன்றலாம். ஆனால் தேவர்கள் சொல்வதை மனிதர்கள் செய்யக்கூடாது என்று இந்துக்களுக்கு சாஸ்திரங்கள் தடை விதித்து உள்ளன என்பதே உண்மை.

ந வேத சரிதம் சரேத்

சீர்திருத்தவாதியிடம் உள்ள இரண்டு சக்தி வாய்ந்த ஆயுதங்களான பகுத்தறிவையும் ஒழுக்கத்தையும் அவன் பெறமுடியாமல் செய்வது என்பது அவனை செயலற்ற வனாக்குவதே ஆகும். பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் சாதிக்கும் உள்ள தொடர்பை எண்ணிப் பார்ப்பதற்கான சுதந்திரமற்ற நிலையில் மக்கள் இருக்கும் போது நீங்கள்

சாதியை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள்? சாதியமைப்பு என்கிற கோட்டையில் பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் இடமேயில்லை. அந்தக் கோட்டைக்குள்ளே இருப்பது பார்ப்பனப் படை. அது அறிவாளி வர்க்கமாகவும் இந்துக்களின் பிறவித் தலைவனாகவும் உள்ள படை. வெறும் கூலிப்பட்டாளம் அல்ல. தன் தாயகத்துக்காக ஜீவமரணப் போராட்டம் நடத்தும் வீரப்பட்டாளம்.

இந்துக்களிடையே உள்ள சாதி அமைப்பைத் தகர்த்தெறிவது ஏறக்குறைய அசாத்தியம் என்று நாம் நினைப்பது ஏன் என்பது இப்போது உங்களுக்குப் புரியும். எப்படியானாலும் சாதி அமைப்பு என்னும் கோட்டையில் பிளவு ஒன்றை ஏற்படுத்துவதற்கே யுகங்களாகும். சாதியமைப்பை பிளவுபடுத்த நீண்டகாலம் ஆகும் என்றாலும் சரி, அல்லது அந்தப் பெரும்பணியை வெகுவிரைவில் முடித்துவிடலாம் என்றாலும் சரி, நீங்கள் ஒரு உண்மையை மறக்கக்கூடாது. சாதிக்கோட்டையில் பிளவு ஏற்படுத்த வேண்டுமென்றால் பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் ஒரு சிறிதும் இடம் கொடுக்காத வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் வெடி வைத்தே தீரவேண்டும். சுருதிகள், ஸ்மிருதிகளாலான மதத்தை அழித்தொழிக்க வேண்டும். வேறு எந்த செயலும் பயன் தராது. இதுவே என் முடிவான கருத்தாகும்.

## 23

''மதம் ஒழிக்கப்பட வேண்டும்'' என நான் கூறினேன். நான் இப்படிக் கூறுவதன் பொருள் சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். சிலருக்கு கலகம் விளைவிப்பதாகத் தோன்றலாம். சிலருக்குப் புரட்சிகரமாகத் தோன்றலாம். ஆகவே என் நிலைப்பாடு என்னவென்பதை விளக்கிவிடுகிறேன். கொள்கைகளுக்கும் விதிகளுக்கும் இடையே வேற்றுமை உண்டென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதை நான் அறியேன். வேற்றுமை உண்டென்றே நான் எண்ணுகிறேன். அது மட்டுமல்ல, இந்த வேற்றுமை

உண்மையானது, முக்கியமானதென்றும் நான் கூறுகிறேன். விதிகள் நடைமுறையை ஒட்டியவை. ஏற்கெனவே நிர்ணயித்தபடி நம் வேலைகளைச் செய்து முடிப்பதற்கான பழகிப்போன வழிமுறைகளே அவை. கொள்கைகளோ அறிவுரீதியானவை. ஒரு விசயத்தைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் சரியான முறைகள். ஒருவன் ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கான வழிமுறை என்ன என்பதை விதிகள் விளக்கிக் கூறுகின்றன. கொள்கைகள் அப்படி எந்த ஒரு குறிப்பிட்ட வழி முறையையும் விளக்கிக் கூறுவதில்லை.

விதிகள் சமையல் குறிப்புகளைப்போல, என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதை மட்டும் அவை கூறுகின்றன. கொள்கைகள் (உதாரணமாக 'நீதி') ஒருவர் தன் விருப்பங்களையும் நோக்கங்களையும் எதை ஒட்டி அமைத்துக் கொள்வது என்ற பார்வைக் குறிப்பைத் தருகின்றன. அவர் தன் பணியைச் செய்து முடிக்க முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியவை எவை, மனதிலே ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டியவை எவை என்பதில் அவருடைய சிந்தனைக்கு வழி காட்டுவது கொள்கை. ஆக விதிகளுக்கும் கொள்கைகளுக்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. அதாவது விதிப்படி செய்யும் செயலுக்கும் இடையிலும் அளவிலும் பண்பிலும் வேறுபாடுள்ளது என்பதே உண்மை. ஒரு கொள்கை வழி நின்று செய்யும் செயல் மனமறிந்து செய்யப்படுவதும் பொறுப்புணர்ச்சியோடு கூடியதும் ஆகும். விதி என்பது சரியானதாக இருக்கலாம். ஆனால் விதிப்படியான செயல் எந்திரகதியில் ஆனது.

மதச் செயல்பாடு சரியான செயல்பாடாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் குறைந்தபட்சம் பொறுப்புணர்ச்சி உள்ள செயல்பாடாக அது இருந்தாக வேண்டும். இந்தப் பொறுப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்றால் மதம் கொள்கைகளால் ஆனதாக இருந்தாக வேண்டும். விதி

களால் ஆனதாக இருக்கக் கூடாது. மதம் வெறும் விதிகளாகச் சீரழிந்து போகிற அந்தக் கணமே அது மதம் என்று அழைக்கப்படுவதற்கான அருகதையை இழந்து விடுகிறது ஏனென்றால் உண்மையான மதச் செயல்பாட்டின் சாராம்சமாகிய பொறுப்புணர்ச்சியையே அது அழித்து விடுகிறது. இந்த இந்து மதம் என்பது தான் என்ன? கொள்கைகளின் தொகுப்பா அல்லது விதிகளின் தொகுப்பா?

வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லியிருக்கிறபடி அமைந்துள்ள சடங்கு, சமூகம், அரசியல், சுகாதாரம் பற்றிய விதிகளும் ஒழுங்கு முறைகளும்தான் இன்றைய இந்துமதம். இந்துக்களால் மதம் என்று சொல்லப்படுவது எண்ணிலடங்காத கடமைகளும் கட்டுப்பாடுகளும் தவிர வேறில்லை. எல்லாக் காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் எல்லா மனித இனங்களுக்கும் ஏற்ற, உலக மக்கள் அனைவருக்கும் ஒத்து வரக்கூடிய ஆன்மீகக் கொள்கைகளாக இந்துமதம் இல்லை. ஒரு வேளை அப்படியிருந்தாலும் கூட அது போன்ற ஒரு கொள்கை இந்து மதத்தவன் ஒருவனின் வாழ்க்கையிலே முக்கியமான அங்கம் வகிக்கவில்லை. இந்து மதத்தவன் ஒருவனுக்கு 'தர்மம்' என்பது கடமைகளும் கட்டுப்பாடுகளும்தான். தருமத்தைப் பற்றி வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறி இருப்பதைப் பார்த்தால் இது தெளிவாகும். வேதங்களில் பெரும்பாலும் தருமம் என்னும் சொல் மதச் சட்டங்கள், மதச் சடங்குகள் என்னும் பொருளிலேயே கையாளப்படுகிறது. ஜெய்மினியும் கூட தன் 'பூர்வ மீமாம்சை'யில் ''வேத விதிகளின் மூலமாக வரையறுக்கப்பட்டுள்ள விரும்பத்தக்க லட்சியம் அல்லது பலனே தருமமாகும்'' என்று கூறுகிறார். அப்பட்டமாகச் சொன்னால் இந்துக்கள் 'மதம்' என்று அழைப்பது உண்மையில் சட்டங்களைத்தான் அல்லது சட்டமாக ஆக்கப்பட்டுள்ள வகுப்புவாரி நீதிநெறிகளைத்தான், இந்தச் சட்டங்களின் தொகுப்பை மதமென்று சொல்ல நான் மறுக்கிறேன். மதமென்று தவறான பெயரிட்டு மக்களின் முன்னே நிறுத்தப்படுகிற இதுபோன்ற சட்டத்

தொகுப்பால் விளைகிற கேடுகள் பல. முதல் கேடு : ஒழுக்கத்தோடு கூடிய, சுதந்திரமான, தன்னிச்சையான வாழ்க்கையை இது மறுக்கிறது. மாறாக அது (வெளியில் இருந்து திணிக்கப்படும் விதிகளை) அடிமைத்தனமாக ஏற்றுக் கொண்டு நடக்கிற இழிநிலைக்கு வாழ்க்கையைத் தள்ளி விடுகிறது. கொள்கை விசுவாசத்துக்கு இந்து மதத்தில் இடமில்லை. கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நிலை தான் இருக்கிறது. ஆனால் இந்த சட்டத் தொகுப்பால் விளைகிற பெருங்கேடு என்னவென்றால் இந்தச் சட்டங்களே முக்காலத்துக்கும் பொருந்துபவை என்று இருப்பது தான். எல்லா வகுப்புக்கும் பொதுவான ஒரே சட்டம் இல்லையென்ற வகையில் அது மோசமானது. ஆனால் எத்தனை தலைமுறையானாலும் சரி இந்த அநியாயம், அநீதியென்பது நிரந்தரமாக நீட்டிக்கப்பட வேண்டிய ஒன்றென்று ஆக்கி வைக்கப்பட்டுள்ளதே! சட்ட வல்லுநர்கள் அல்லது மகான்கள் என்று அழைக்கப்படுகிற ஒரு சில நபர்களால் இவை உருவாக்கப்பட்டது என்பதற்காக அல்ல நான் இவற்றை மறுப்பது. இறுக்கமும் மாறாத் தன்மையுமே அதன் தன்மைகளாக இருப்பதாலேயே நான் அதை மறுக்கிறேன்.

ஒரு மனிதனின் வாழ்நிலையும் சூழ்நிலையும் மாறுபடுகிறபோது அந்த மனிதனின் மனநிலை மாறும். அப்படி இருக்கையில் நிரந்தரமான இந்தச் சட்டத் தொகுப்பை எந்தவித மாற்றமும் இல்லாமல் மனித இனம் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? எனவே அதுபோன்ற ஒரு மதத்தை அழித்தாக வேண்டும் என்று கூறுவதில் எனக்குத் தயக்கம் எதுவுமில்லை. அதுபோன்ற ஒரு மதத்தை அழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பணிகள் மதத்துக்கு எதிரானவை அல்ல என்று நான் கூறுகிறேன். சட்டத்துக்கு மதமென்று தவறான பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த முகத்திரையை கிழித்தெறியுங்கள். இதுவே உங்கள் தலையாய கடமை.

மக்களின் மனதிலே பதிந்திருக்கும் இந்த ''மதம்'' என்கிற தவறான கருத்தை நீக்குங்கள். மதம் என்று தங்களுக்குச் சொல்லப்பட்டது மதமே அல்ல, சட்ட விதிகளே என்கிற உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்யுங்கள். இதைச் செய்து முடித்ததுமே மதம் என்று சொல்லப்படுகிற இந்த சட்ட விதிகளைச் சீர்திருத்தியாக வேண்டும் அல்லது அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று வலியுறுத்துவதற்கான தார்மீக பலம் எங்களுக்குத் தானாகவே வாய்க்கும். இந்து மதத்தை அதாவது ஒரு சட்டத்தொகுப்பை மதமாக மதிக்கிற வரையில் மக்கள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முன்வர மாட்டார்கள். ஏனெனில் பொதுவாகவே மதம் என்பது மாற்றம் என்ற கருத்துக்குப் புறம்பானது. ஆனால் சட்டம் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய இயல்பு உடையது. எனவே இந்து மதம் என்று சொல்லப்படுவது உண்மையில் பழமையான, வழக்கொழிந்த சட்டம் தான் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளும்போது மக்கள் மாற்றத்துக்கு தயாராக இருப்பார்கள். ஏனெனில் சட்டத்தை மாற்ற முடியும் என்பது மக்களுக்குத் தெரியும். சட்டத்தை மாற்ற முடியும் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

## 24

விதிகளால் ஆன ஒரு மதத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்பதால் மதமே தேவை இல்லை என்று நான் கருதுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். மாறாக திரு. பர்க் கூறுவதையே நானும் கூறுகிறேன். ''உண்மையான மதம் சமூகத்தின் அஸ்திவாரமாக இருக்கிறது. எல்லா உண்மையான சிவில் அரசாங்கங்களும் அதை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாக்கப்பட்டுள்ளன. சமூகம் உண்மையான சிவில் அரசாங்கம் ஆகிய இரண்டினதும் உத்திரவாதமாகவும் அது இருக்கிறது.

எனவேதான் இந்தப் பழமையான விதிகளால் ஆன மதம் அழிக்கப்பட வேண்டும் என்று கூறும் அதே வேளையில் அதன் இடத்தைக் கொள்கைகளால் ஆன மதம் ஒன்று இட்டு நிரப்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கொள்கைகளால் ஆன மதத்தையே உண்மையான மதம் என்று கூற முடியும். மனித வாழ்க்கைக்கு மதம் இன்றியமையாதது என்பதை நான் முழுமையாக நம்புவதால் மதச் சீர்திருத்தத்துக்கு தேவையானவை என்று நான் எண்ணுகிற ஒரு சில கருத்துக்களைக் கூறுவது என் கடமையென்று நான் உணருகிறேன்.

சீர்திருத்தத்தில் அடிப்படையான அம்சங்களாகக் கொள்ளப்பட வேண்டியவை:

1. அனைத்து இந்துக்களும் ஏற்று அங்கீகரிக்கக்கூடிய ஒரே ஒரு இந்து புனித நூலே இருக்க வேண்டும். அதாவது இப்போது புனிதமானவையாகவும் அதிகாரம் உள்ளதாகவும் கொள்ளப்படுகிற வேத சாஸ்திர புராணங்கள் புனிதமானவையோ அதிகாரபூர்வமானவையோ அல்ல என்று சட்டபூர்வமாக செய்துவிட வேண்டும். இந்நூல்களில் உள்ள மத, சமுதாய கருத்துக்களைப் பரப்புவதை தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக்க வேண்டும்.

2. இந்துக்களிடையே புரோகிதர் ஒழிக்கப்படுவது நலம். ஆனால் அது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. எனவே புரோகிதத் தொழில் பரம்பரைத் தொழிலாக இருப்பதையாவது ஒழிக்க வேண்டும். இந்து மதத்தவன் என்று தன்னைச் சொல்கிற எந்தச் சாதியைச் சேர்ந்தவராயினும் அவருக்குப் புரோகிதர் ஆகும் உரிமை இருக்க வேண்டும். புரோகிதத் தொழிலுக்கான அரசுத் தேர்வு எழுதி சான்றிதழ் பெறாத எவனும் புரோகிதத் தொழில் செய்யக் கூடாது என்று சட்டமியற்ற வேண்டும்.

3. சான்றிதழ் பெறாத புரோகிதன் நடத்தும் சடங்குகள் செல்லாது என்று அறிவித்துவிட வேண்டும். மீறி

நடத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்ற நிலை ஏற்படுத் தப்பட வேண்டும்.

4. புரோகிதன் அரசு ஊழியனாக ஆக்கப்பட வேண்டும். மற்ற மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு உட்படுவதோடு கூட புரோகிதன் கூடுத லாக, ஒழுக்கம், நம்பிக்கை, கடவுள் வழிபாடு போன்ற வற்றிலும் அரசு விதிகளுக்குக் கட்டுப்பட்டவனாக ஆக்கப் பட வேண்டும்.

5. ஐ. சி. எஸ். ஊழியர்களின் எண்ணிக்கை கட்டுப் பட்டு இருப்பது போலவே அரசின் தேவைகளுக்குத் தக்கபடி புரோகிதர்களை நியமிக்க வேண்டும்.

சிலருக்கு இது தீவிரமானது என்று தோன்றலாம். ஆனால் இதில் புரட்சிகரமான எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்தியாவில் எல்லாத் தொழில்களுமே ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டவையாகத்தான் உள்ளன. எஞ்சினியர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள் ஆகிய எல்லாருமே தத்தம் தொழிலில் திறமை உடையவர்கள் என்று நிருபித்துக் காட்டிய பிறகே தங்களுடைய தொழி லைச் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். தங்கள் தொழிலை நடத்தி வருகிற காலம் முழுவதும் இந்த நாட்டின் சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்களுக்கு மட்டுமல்லாமல் தத்தம் தொழிலில் அமைந்துள்ள சிறப்புச் சட்டங்களுக்கும் கீழ்ப் படிந்து நடக்கிறார்கள். திறமை என்பது எள்ளளவும் தேவை இல்லாத ஒரே தொழில் புரோகித தொழில் ஒன்று தான். இந்து புரோகிதனின் தொழிலே சட்டத்துக்கு உட்படாத ஒரே தொழிலாக இருந்து வருகிறது. அறிவு நிலையில் புரோகிதன் மூடனாக இருக்கலாம். உடல்நிலை யில் பால்வினை நோய்களாகிய மேகநோய், வெட்டை நோய் உடையவனாக இருக்கலாம். ஒழுக்கத்தில் சீரழிந்த வனாக இருக்கலாம். எப்படி இருந்தாலும் அந்தப் புரோகிதன் பவித்திரமான சடங்குகளை நடத்தும் இந்துக்

கோயிலில் உள்ள மிகப் புனிதமான மூலஸ்தானங்களில் நுழையவும், இந்துக் கடவுளை வணங்கவும் தகுதி படைத்தவனாக இருக்கிறான். இந்துக்களுக்கிடையே இது சாத்தியமாக இருப்பது எப்படி? இந்துக்களில் புரோகிதனாக இருக்க புரோகித சாதியில் பிறந்திருப்பதே போதுமானது என்ற நிலை இருப்பதால் தான். எல்லாமே கேவலமாக இருக்கிறது! இந்துக்களில் உள்ள புரோகித வகுப்பு சட்டத்துக்கோ, ஒழுக்கத்துக்கோ கட்டுப்படாத காரணத்தால் தானே இந்த நிலை? புரோகித வகுப்பு தன்னுடைய கடமைகள் என்று எதையுமே ஏற்றுக் கொள்ளவில்லை. தனக்கு என்று உரிமைகளும் தனிச் சலுகைகளும் இருப்பது மட்டுமே புரோகித வகுப்புக்குத் தெரியும். மக்களின் அறிவையும் ஒழுக்கத்தையும் சீரழிக்க வேண்டி, கடவுள் கட்டவிழ்த்து விட்டிருக்கிற பெரும் பீடையே புரோகித வர்க்கம். நான் மேலே சுருக்கமாகக் கூறியது போன்ற சில சட்டதிட்டங்களால் புரோகித வகுப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். அது போன்ற ஒரு நடவடிக்கை, புரோகித வர்க்கத்தினர் தீங்கு செய்ய முடியாமலும், மக்களைத் தவறாக வழி நடத்த முடியாமலும் தடுத்து நிறுத்தும். புரோகிதத் தொழிலை மேற்கொள்ள எல்லோருக்கும் வாய்ப்புத் தருவதன் மூலமாகப் புரோகிதத் தொழில் எல்லோருக்கும் பொதுவான ஒன்று என்ற நிலையை ஏற்படுத்தும். இந்த நடவடிக்கை பார்ப்பனியத்தை ஒழிக்கவும், பார்ப்பனியத்தின் மறுவடிவான சாதியை ஒழிக்கவும் துணை புரியும். இந்து மதத்தை நாசப்படுத்திய கொடிய நஞ்சு பார்ப்பனியமே. நீங்கள் பார்ப்பனியத்தை ஒழித்துவிட்டால் இந்து மதத்தைக் காப்பாற்றுகிற முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். இந்தச் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்பே இருக்கக் கூடாது. ஆரிய சமாஜத்தாருங்கூட இதை வரவேற்க வேண்டியதே. ஏனெனில் இந்தச் சீர்திருத்தம் அவர்கள் கூறும் ''குண-கர்ம'' கோட்பாட்டைச் செயல்படுத்துவதே ஆகும்.

நீங்கள் அதைச் செய்தாலும் சரி, செய்யாமல் போனாலும் சரி உங்களுடைய மதத்துக்கு ஒரு புதிய கொள்கையை அடிப்படையாக அமைக்க வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்— சுருங்கச் சொன்னால் ஜனநாயகம் ஆகியவற்றோடு பொருந்தி வருவதாக அக்கொள்கை இருக்க வேண்டும். இதைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் அது போன்ற மதக் கொள்கைகளை அந்நிய மதங்களில் இருந்து அடைய வேண்டியது இல்லை என்றும் உபநிடதங்களில் உங்களுக்குத் தேவையான கொள்கைகள் இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. ஆனால் உபநிடதங்களை முழுவதுமாகப் புதிதாக வார்த்து எடுக்காமலும் உபநிடதங்களில் கணிசமான ஒரு பகுதியை நீக்காமலும், கணிசமான ஒரு பகுதியைச் செதுக்காமலும், உபநிடதங்களில் இருந்து புதிய ஒரு மதக் கோட்பாட்டை உருவாக்கிக் கொள்ள உங்களால் முடியுமா என்பது சந்தேகமே. வாழ்க்கையின் அடிப்படையான கருத்தோட்டங்களில் முழுமையான மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியாக வேண்டும். வாழ்க்கையின் மதிப்பீடுகளிலே முழுமையான மாற்றம் வேண்டும். மக்களையும் பொருள்களையும் பற்றிய மனநிலையில் முழுமையான மாற்றம் என்பதே புதிய மதக் கோட்பாட்டை உருவாக்குவது ஆகும். மத மாற்றம் வேண்டும் என்பதுதான் அதன் பொருள். 'மதமாற்றம்' என்ற சொல் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; என்றால் 'புத்துயிர்' என்பதே அதன் பொருள் என்றும் கூறுவேன். சவத்துக்குள் 'புத்துயிர்' நுழைய முடியாது. புதிய உடல் ஒன்று தோன்றுவதற்குப் பழைய உடல் அழிய வேண்டும். அந்தப் புதிய உடலில் தான் புது உயிர் ஒன்று நுழைய முடியும். சுருங்கச் சொன்னால் புதுமை உயிர்ப் பெற்றுப் பரிணமிக்க முதலில் பழமை செத்து மடிய வேண்டும். சாஸ்திரங்களின் அதிகாரத்தை ஒதுக்கித் தள்ளுங்கள், சாஸ்திரங்களின் மதத்தை அழித்து விடுங்கள் என்று நான் கூறியதன் பொருள் இதுதான்.

## 25

உங்களை நீண்ட நேரம் காக்கச் செய்து விட்டேன். இந்த உரையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நேரம் நெருங்கிவிட்டது. இத்துடன் இந்த உரையை முடிப்பது எனக்கு வசதிதான். ஆனாலும் இந்துக்களைப் பொறுத்து மிக முக்கியமான ஒரு தலைப்பின் கீழ் இந்துக்கள் நிறைந்த ஒரு சபையிலே பெரும்பாலும் இதுவே நான் ஆற்றும் கடைசி உரையாக இருக்கலாம். எனவே என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால்— இந்துக்கள் அனுமதித்தால்— நான் முக்கியமானது எனக் கருதுகிற சில கேள்விகளை எழுப்பவும் அவர்கள் அதைத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவும் விரும்புகிறேன்.

1) உலகம் எங்குமுள்ள பல்வேறு மக்களிடையே காணப்படுகிற நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், நீதி நெறிகள், வாழ்க்கை பற்றிய மனநிலைகள் ஆகியவை வேறுபட்டே காணப்படுகின்றன என்ற மானுடவியல் அறிஞர்களின் கூற்றை ஒரு கருத்து என்கிற அளவில் மட்டும் ஏற்றுக்கொள்வது போதுமானதாகுமா? எந்த விதமான நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் நீதிநெறிகளும் மனநிலைகளும் சமூகத்தில் மேலோங்கி உள்ளன? எந்தவிதமான கருத்துகள் அந்தக் கருத்துகளுக்கு சொந்தக்காரர்களான மனிதர்களை மேம்படுத்தி வலுப்படுத்தி அவர்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்த மிகவும் உதவின? இதை அறிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டாமா?

பேராசிரியர் கார்வர் கூறுகிறார் :

எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று முறைப்படுத்தப்பட்ட கூற்றுகளே மதமும் நீதிநெறியுமாகும். வாழ்க்கைப் போராட்டத்தில் தாக்குதலுக்கும் தற்காப்புக்கும் ஆன பற்கள், நகங்கள், கொம்புகள்,

கூச்சல்கள், ரோமங்கள், இறகுகள் போன்ற கருவி களைப் போலவே மதம், நீதிநெறி ஆகியவற்றையும் கருத வேண்டும்.

நடைமுறைப்படுத்த முடியாத நீதிநெறிகளையும் சமூகத்தைப் பலவீனப்படுத்தி அதை வாழத் தகுதி யற்ற தாக்கிவிடும் சமூக நடவடிக்கைகளையும் பழக்கத் தால் ஏற்கச் செய்துவிடுகிற எந்த ஒரு குழு/ சமூகம்/ குலம்/ தேசமும் நாளடைவில் அழிந்து விடும். அவ்வாறே, நடைமுறைப்படுத்த முடிகிற நீதிநெறி களையும் சமூகத்தைப் பலப்படுத்தி வளர்த்தெடுக்கிற சமூக நடவடிக்கையையும் பழக்கத்தால் ஏற்காமல் செய்து விடுகிற எந்த ஒரு குழு/ சமூகம்/ குலம்/ தேசமும் நாளடைவில் அழிந்து போகும்.

இந்த ஏற்பும் மறுப்பும் மதம், நீதிநெறி ஆகியவற்றின் விளைவாகும். இவையே சமூகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. பறவையின் இரு இறக்கைகளுமே ஒரே பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்தில் இறக்கையே இல்லாமலிருந்தால் அந்தப் பறவை பறக்க முடியாது அல்லவா? அதைப் போலவே 'எல்லாத் தரப்புமே நல்லதுதான்' என்று கூறுவது முற்றிலும் பயனற்றதே ஆகும்.

எனவே நீதிநெறிகளும் மதமும் வெறும் விருப்பு வெறுப்பு களைப் பொறுத்த விஷயம் மட்டும் அல்ல.

ஒரு குறிப்பிட்ட நீதிமுறையை ஒரு தேசத்தில் உள்ள மக்கள் அனைவருமே பின்பற்றினால் அத்தேசம் உலகி லேயே வலிமைபெற்ற தேசமாக ஆகக்கூடும் என்போம். அந்த நீதிமுறை உங்களுக்குச் சுத்தமாகப் பிடிக்காமல் இருக் கலாம். ஆனாலும் நீங்கள் அந்த நீதிமுறையை என்னதான் வெறுத்தாலும் அந்த நீதிமுறையைப் பின்பற்றுகிற ஒரு தேசம் வலிமை பெறத்தான் செய்யும்.

இன்னொரு நீதிமுறையை ஒரு தேசத்தில் உள்ள மக்கள் அனைவருமே பின்பற்றினால் மற்ற தேசங்களுடன் போரிடும்போது அந்தத் தேசம் தன்னைத்தானே காத்துக் கொள்ளமுடியாது ஆகிவிடும் என்போம். அந்த நீதிமுறை உங்களுக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கலாம். ஆனாலும் உங்கள் விருப்பத்துக்குரியதாக இருந்தபோதும் கூட அந்த நீதிமுறையைப் பின்பற்றுகிற தேசம் இறுதியில் அழிந்தே போகும்.

இந்தச் சமூகம் இனி அழிந்துபோகாமல் பிழைத்திருக்க வேண்டும் என்றால் இந்துக்கள் தங்கள் மதத்தையும் நீதி முறையையும் பரிசீலனை செய்தாக வேண்டும்.

2. தங்கள் சமூக மரபுகளை ஒரு சிறிதும் மாற்றாமல் அப்படியே பாதுகாக்க வேண்டுமா? அல்லது எதிர்காலச் சந்ததிகளுக்குப் பயனுள்ளதை மட்டுமே தேர்ந்து கொள்ள வேண்டுமா என்பதைப் பற்றி இந்துக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

என் மதிப்புக்குரிய ஆசிரியர் பேராசிரியர் ஜான்டேவி கூறுகிறார்: ''ஒவ்வொரு சமூகமும் அற்பமான, வக்கிர மான பயனற்ற பெரும் சுமைகளால் நிரம்பி உள்ளன. ஆனால், ஒரு சமூகம் அறிவு விளக்கம் பெறுகிறபோது இப்போது சாதனைகளாக இருப்பவை அனைத்தையும் எதிர்காலச் சந்ததிக்கு அப்படியே காப்பாற்றித் தராமல், மேம்பட்ட எதிர்காலச் சமூகத்தை உருவாக்குபவைகளை மட்டும் கைமாற்றித் தருவதே பொறுப்பென்று உணர் கிறது.'' 'பிரெஞ்சுப் புரட்சியில் அடங்கியிருந்த அனைத்தும் மாறுதலுக்கு உட்பட்டவை' என்ற கொள்கையை மிக ஆவேசமாகத் தாக்கிய திரு. பர்க்கும்கூட ''மாற்றத்துக் குக் கொஞ்சமும் வழிவகை இல்லாத ஒரு அரசு தன்னைத் தானே காத்துக் கொள்ள வழி வகையில்லாத அரசாக இருக்கிறது. இந்த வழிவகைகள் இல்லாமல் போனால் தன் அமைப்பின் எந்தப் பாகத்தை மிகவும் புனிதமான

தாகப் போற்றிப் பாதுகாக்க விரும்புகிறதோ அந்தப் பாகத்தையே இழந்து விடுகிற ஆபத்துக்கு ஆளாகலாம்'' என்று ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது. பர்க் கூறியது அரசுக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கும் பொருந்தும்.

3. தம் லட்சியங்களை எல்லாம் பழமையிலிருந்தே பெற்றுக்கொள்கிறோம் என்றெண்ணிப் பழமையை வழி பட்டு வருவதை இந்துக்கள் விட்டொழிக்க வேண்டாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பழமையை வழி படுவது பேரழிவுக்கே காரணம் ஆகிவிடும் என்ற கருத்தை திரு. டேவி பின்வருமாறு தொகுத்தளிக்கிறார்.

> தனிமனிதன் நிகழ்காலத்தில் மட்டுமே வாழ முடியும். நிகழ்காலம் என்பது இறந்த காலத்தை அடுத்து வருவது மட்டுமல்ல; அதனால் மட்டுமே உருவாக்கப்படுவதும் அல்ல. இறந்த காலத்தை உதிர்த்துவிட்ட வாழ்க்கையே நிகழ்காலம். கடந்த காலத்தில் உற்பத்தியாக்கப்பட்ட கருத்துகள் நிகழ் காலத்தைப் புரிந்து கொள்ள நமக்கு உதவாது. கடந்த காலத்தையும் அதன் மரபுகளையும் பற்றிய அறி வானது நிகழ் காலத்துடன் தொடர்புடையதாகிய போது மட்டுமே அந்த அறிவு முக்கியத்துவம் பெறு கிறது. மற்றபடி அல்ல. கடந்த காலத்துப் பதிவுகளை யும் எச்சங்களையும் கற்பிப்பதே கல்வியில் முக்கிய மானது என்ற கருத்து பெரும் தவறு ஆகும். இது கடந்த காலத்தை நிகழ்காலத்துக்கு எதிராக நிறுத்து கிறது. நிகழ்காலத்தைக் கடந்த காலத்தின் வெறும் நகலாகவே பார்க்கிறது.

நிகழ்கால வாழ்க்கையைக் குறைத்து மதிப்பிடுகிற ஒரு கொள்கையானது இயல்பாகவே நிகழ் காலத்தை அர்த்த மற்றதாகவும் எதிர்காலத்தை எட்டாக்கனியாகவும் பார்க் கிறது. இப்படிப்பட்டதொரு கொள்கை வளர்ச்சிக்குத்

தடையானது. வலிமையானதும் நிலையானதுமான ஒரு வாழ்க்கை முறைக்குத் தடையானது.

4. ''நிலையானது, நிரந்தரமானது, சனாதனமானது என்று எதுவும் இல்லை. எல்லாமே மாறிக் கொண்டு இருக்கின்றன. சமூகமானாலும் சரி தனி மனிதர்கள் ஆனாலும் சரி மாற்றம் என்பதே வாழ்க்கையின் நியதி'' என்பதை இந்துக்கள் உணர வேண்டிய காலம் வந்து விட்டதா இல்லையா என்பதை இந்துக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். மாறி வருகிற ஒரு சமுதாயத்தில் பழைய மதிப்பீடுகள் இடைவிடாது மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டாக வேண்டும். மனிதர்களை எடைபோடுவதற்கான ஒரு அளவுகோல் இருந்தாக வேண்டும் என்பதை இந்துக்கள் ஒத்துக்கொண்டால் அந்த அளவுகோல் மாறுதலுக்கு உட்பட்டது என்பதையும் அவர்கள் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்.

## 26

இந்த உரை மிகவும் நீண்டுவிட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்த நீண்ட உரையால் எந்தப் பயனுமே இல்லையா என்பதை நீங்கள் தான் கூற வேண்டும். என் நிலைபாட்டை ஒளிவுமறைவின்றி தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்து விட்டேன். இதை ஏற்றுக் கொள்வதோ விட்டு விடுவதோ உங்களைப் பொறுத்தது. இந்தக் கருத்துக்கள் அதிகாரம் படைத்த— புகழ் படைத்த ஒருவனின் கருத்துக்கள் அல்ல; இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்களின்—அடக்கி ஒடுக்கப் பட்டவர்களின் —விடுதலைக்காகத் தன் வாழ்க்கையை ஓயாத போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஒரு சாமானியனின் கருத்துக்களாக இதை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் போராட்ட வாழ்க்கையில் அவன் சந்தித்ததெல்லாம் தேசியத் தலைவர்களாலும் தேசிய நாளேடு

களாலும் ஓயாமல் பொழியப்பட்ட வசைமாரிகளையும் அவதூறுகளையும்தான். காரணம், ஒடுக்கப்படும் மக்களை கொடுங்கோலர்களின் பொற்காசுகளாலும் ஏழைகளைச் செல்வந்தர்களின் பணத்தாலும் ஏற்றம் பெறச் செய்து விட முடியும் என்று அவர்கள் ஆடுகின்ற கபட நாடகத்தில் (ஒடுக்கப்பட்டவர்களை விடுவிக்க அவர்கள் காட்டும் அற்புத வழி இது தான்) அவன் கலந்து கொள்ளாதது தான்.

என் கருத்துகளை நீங்கள் ஏற்றுக் கொள்ள இது வரை கூறியவை போதுமானவையாக இல்லாமல் போக லாம். என் கருத்துகள் உங்கள் கருத்துகளை மாற்றிய மைக்கப் போவதில்லை என்றே நான் எண்ணுகிறேன். ஆனால் உங்கள் கருத்துக்களை நீங்கள் மாற்றிக் கொண்டா லும் சரி மாற்றிக் கொள்ளாவிட்டாலும் சரி சாதியை நீங்கள்தான் ஒழித்தாக வேண்டும். சாதியை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிய நான் காட்டிய வழி யில் பெரு முயற்சி செய்யுங்கள். இல்லையேல் உங்கள் சொந்த வழியிலாவது பெரு முயற்சி செய்யுங்கள். நான் உங்களோடு இருக்கப் போவதில்லை என்பதற்காக வருந்து கிறேன். நான் மாறுவதென்று தீர்மானித்து விட்டேன். ஏன் என்பதற்கான காரணங்களை விளக்கிக் கொண்டு போவதற்கு ஏற்ற இடம் இதுவல்ல. ஆனால் நான் உங்களுடன் இல்லாவிட்டாலும் கூட உங்கள் இயக்கத்தை அக்கறையோடு கவனித்துக் கொண்டுதான் இருப்பேன். தேவையான அளவுக்கு உங்களுக்கு நான் உதவுவேன். உங்கள் நோக்கம் தேசம் முழுமைக்கும் உரிய ஒரு நோக்கம்.

சாதிதான் இந்துக்களின் உயிர் மூச்சாக இருக்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்துக்கள் இந்த தேசம் முழுவதையும் சாதி அமைப்பால் மாசுபடுத்தி விட்டார்கள். சீக்கியர்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர் கள் ஆகிய எல்லா மதத்தினரிடமும் இந்தச் சாதி நோய் தொற்றிக் கொண்டு விட்டது. எனவே சீக்கியர்கள்,

வர்கள் தன்னை மறந்து விடுவதை அனுமதிக்கிறவர் அல்லர் டாக்டர் அம்பேத்கர்.

வரவேற்புக் குழுவால் டாக்டர் அம்பேத்கரைத் தோற்கடிக்க முடியவில்லை. அவர் தன் சொந்தச் செலவில் தன் உரையை அச்சிட்டு அதன் மூலம் வரவேற்புக்குழுவின் புறக்கணிப்புக்குத் தக்க பதிலடி தந்திருக்கிறார். அந்த உரையின் விலை எட்டணா. அதை 2 அல்லது 4 அணாவாகக் குறைக்க வேண்டும் என்று யோசனை கூற விரும்புகிறேன்.

சீர்திருத்தவாதி எவரும் அந்த உரையை அலட்சியப் படுத்திவிட முடியாது. வைதிகர்கள் அதைப் படித்தால் பயனடைவார்கள். இவ்வாறு கூறுவதால் உரை மறுப்புக்கு இடமற்றதாக ஆகிவிடாது. கடும் ஆட்சேபனைக்கு உரியது என்ற ஒரே காரணத்துக்காகத்தான் அதைப் படித்தாக வேண்டும். டாக்டர் அம்பேத்கர் இந்து மதத்துக்கு ஒரு சவால். இந்துவாக வளர்க்கப்பட்டவர் அவர். இந்து பாதுகாவலர் ஒருவரின் தயவால் கல்வியறிவு பெற்றவர். சவர்ண இந்துக்கள் என்று சொல்லப்படுகிறவர்களால் அவரும் அவரைச் சார்ந்த மக்களும் நடத்தப்பட்ட முறை யின் காரணமாக அவர்களின் மீது ஆழ்ந்த வெறுப்பு கொண்டார். இந்த வெறுப்பு எந்த அளவுக்குச் சென்று விட்டது? சவர்ண இந்துக்களை மட்டுமல்லாது தனக்கும் சவர்ண இந்துக்களுக்கும் பொதுவான பாரம்பரியமாகிய மதத்தையே விட்டோடும்படிச் செய்து விட்டது. அந்த மதப் பண்டிதர்களில் ஒரு பகுதியினரின் மீது தனக்கு ஏற்பட்ட வெறுப்பை அந்த மதத்தின் மேல் உமிழ்ந்து இருக்கிறார் அவர்.

ஆனால் இதில் வியப்பு ஏதும் இல்லை. ஏனெனில் ஒரு அமைப்பையோ நிறுவனத்தையோ அதன் பிரதிநிதி கள் நடந்துகொள்ளும் முறையைக் கொண்டுதான் மதிப் பிட முடியும். இதற்குமேல் என்ன சொல்ல? சவர்ண

இந்துக்களில் மிகப் பெரும்பான்மையர் தங்கள் மதத்தைச் சேர்ந்த-தீண்டத்தகாதவர் என்று தங்களால் பெயர்சூட்டப் பட்ட— மக்களிடம் மனிதத் தன்மை இல்லாமல் நடந்து கொண்டார்கள். அத்தோடு மட்டுமல்ல. அந்த நடத்தைக்கு மத நூல்களை ஆதாரமாக ஆக்கிக் கொண்டார்கள். அம்பேத்கர் அந்த நூல்களை அலசிப் பார்க்கிறார். தீண்டாமைக்கும் அதன் விளைவுகளுக்கும் ஆதரவான நம்பிக்கைக்கும் ஏராளமான ஆதாரங்களை அந்த நூல்களில் காண்கிறார்.

அம்பேத்கரின் உரையில் காணப்படும் குற்றச்சாட்டு மூன்று அம்சங்களைக் கொண்டது. 1. மனிதத் தன்மை இல்லாத நடத்தை 2. மனிதத்தன்மை இல்லாத கொடியவர்கள், தங்களுடைய நடத்தைக்காக வெட்கித் தலை குனியாமல் அந்த நடத்தைக்குக் கற்பிக்கிற நியாயங்கள். 3. இவ்வாறு கற்பிக்கப்படுகிற நியாயங்களுக்கு அதிகாரம் தந்திருப்பவை மதநூல்களே என்ற கண்டுபிடிப்பு—இவையே அந்த மூன்று அம்சங்கள். தன் குற்றச்சாட்டு உண்மைதான் என்று உறுதிப்படுத்த மத நூல்களில் இருந்து உள்ளபடியே ஏராளமான மேற்கோள்களை அடுக்கிக் கொண்டே செல்கிறார்.

தன் நம்பிக்கையை (மதத்தை) தன் உயிரைவிட மேலானதாக மதிக்கிற எந்த ஒரு இந்துவும் அவருடைய குற்றச் சாட்டின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. டாக்டர் அம்பேத்கர் மிகுந்த வெறுப்புடன் இருக்கிறார் என்பது மட்டுமல்ல. அதே வெறுப்புணர்வோடு இருக்கிற பலர் மத்தியில் தன் கருத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் மிகத்தெளிவாக விளக்கிச் சொல்லும் உரம் படைத்தவர் அவர். அத்தகைய மனிதர்களிலேயே மிகத் திறமையானவரும் கூட. நல்ல வேளையாக முன்னணித் தலைவர்களின் வரிசையிலே அவர் மட்டும் தன்னந்தனியராக நிற்கிறார். இந்த நிமிடம் வரை ஒரு மிகச் சிறிய சிறுபான்மையினரின் பிரதிநிதி

யாகவே இருக்கிறார். ஆனால் ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பல தலைவர்கள் அவர் கூறுவதை அவரைப் போலவே ஆவேசத்துடன் எதிரொலித்து வருகிறார்கள். அவர்களில் ராவ்பகதூர் எம். சி. ராஜா, திவான்பகதூர் சீனிவாசன் போன்றவர்கள் எல்லாம் இந்து மதத்தைவிட்டு வெளியேறப் போவதாக மிரட்டுகிறார்கள். அரிஜனங்களில் மிகப்பெரும்பான்மையினர் ஆளாகியிருக்கிற வெட்கக்கேடான ஒடுக்குமுறையைப் பார்த்து ஆவேசப்படும் அவர்கள் அதற்காக இந்து மதத்தை விட்டு வெளியேறுவதாக மிரட்டுவதிலேயே திருப்தி அடைந்து விடுகிறார்கள். இன்னும் பல தலைவர்கள் இந்து மதத்தில் தொடர்ந்து நீடிக்கிறார்கள் என்பதற்காக டாக்டர் அம்பேத்கர் சொல்வதைப் புறக்கணித்து விட முடியாது. சவர்ண இந்துக்கள் தங்கள் நடத்தையைத் திருத்திக் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக சவர்ண இந்துக்களில் கற்றறிந்த மேலோரும் செல்வாக்கு உடையவர்களுமாக இருப்பவர்கள் இந்து மத நூல்களைப் பற்றிச் சரியான விளக்கமளிக்க வேண்டும்.

டாக்டர் அம்பேத்கரின் குற்றச்சாட்டு மூன்று கேள்விகளை எழுப்புகிறது.

1. இந்துக்களின் மத நூல்கள் எவை?

2. இதுவரை வெளிவந்த உரை நூல்கள் அனைத்தையுமே ஏற்றுக் கொள்வதா அல்லது ஒரு சில நூல்களை அதிகாரப் பூர்வமற்றவை என ஒதுக்கி விடுவதா?

3. தீண்டாமை, சாதி, சம அந்தஸ்து, கலப்புமணம், சமபந்தி என்பன பற்றி எழுப்பப்படுகிற கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ நூல்களும் அதிகாரப் பூர்வமற்ற நூல்களும் தருகிற பதில் என்ன?

டாக்டர் அம்பேத்கர் தன் உரையில் இந்த மூன்றையும் ஆராய்கிறார். அடுத்த இதழில் இந்தக் கேள்விகளுக்கு

பதிலளிக்கிறேன். டாக்டர் அம்பேத்கரின் உரையில் உள்ள அப்பட்டமான குறைபாடுகளை விளக்குகிறேன்.

## 2

இராமாயணம், மகாபாரதம் உள்ளிட்ட வேதங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் முதலியன இந்து சாஸ்திரங்கள், இத்துடன் முடிந்து விடவில்லை. ஒவ்வொரு சகாப்தமும் ஒவ்வொரு தலைமுறையும் கூட புதிய மதநூல் ஒன்றைத் தந்துள்ளது. எனவே அச்சில் ஏறிய எல்லாமே அல்லது சுவடிகளில் உள்ள எல்லாமே மத நூல் ஆகிவிடாது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக கடவுளின் சொல்லாக ஒருபோதும் ஏற்க முடியாத கருத்துகள் ஸ்மிருதிகளில் ஏராளமாக உள்ளன. ஆக டாக்டர் அம்பேத்கர் ஸ்மிருதி களில் இருந்து மேற்கோளாக எடுத்துக் காட்டுகிற எத்தனையோ சூத்திரங்கள் அதிகாரப் பூர்வமானவை என்று ஏற்க முடியாதவையே. எக்காலத்துக்குமான விசயத் தைப் பேசுபவை மட்டுமே சாஸ்திரங்கள். திறந்த மனது டைய எல்லாருமே ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக இருப்பவையே சாஸ்திரங்கள், பகுத்தறிவால் பரிசோதிக்க முடியாத எதையும் அல்லது ஆன்மீக ரீதியாக அனுபவிக்க முடியாத எதையும் இறைவனின் சொல் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. விலக்கப்பட்ட மதநூல்கள் உங்களிடம் இருந்தாலும் கூட, சரியான விளக்கம் தந்தாக வேண்டுமே! அந்த நூல்களுக்கு விளக்கம் தருவதில் தலைசிறந்தவர்கள் யார்? நிச்சயமாகக் கற்றறிந்த மனிதர்கள் அல்ல. கல்விச் சிறப்பு தேவையானதே. ஆனால் மதம் கல்விச் சிறப்பால் இயங்கவில்லை. முனிவர்கள், முக்காலமும் உணர்ந்த ஞானி கள் ஆகியோரின் அனுபவங்களிலும், வாழ்க்கையிலும், சொற்களிலும் குடிகொண்டு இருப்பதுதான் மதம். மிகச் சிறந்த சாஸ்திர அறிஞர்கள் மறக்கப்பட்டு விடுகின்ற நிலை யிலும் ஞானிகள், தவ முனிவர்கள் ஆகியோர் அடைந்

துள்ள பேரனுபவங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும். மக்களின் ஆன்மீக உணர்ச்சியைத் தூண்டிவிடும் பெரும் சக்தியாகத் தொடர்ந்து வரும்.

சாதி, மதத்தோடு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாதது. சாதி ஒரு நடைமுறை வழக்கமே; சாதியின் மூலம் எது என்று எனக்குத் தெரியாது. என் ஆன்மீக வேட்கையைத் தணித்துக் கொள்ள சாதியின் மூலத்தை நான் தெரிந்து கொள்ளவும் அவசியம் இல்லை.

ஆனால் சாதி ஆன்மீக வளர்ச்சிக்கும், தேச வளர்ச்சிக்கும் கேடுவிளைவிக்கக் கூடியது என்பது எனக்குத் தெரியும். வருணம், ஆசிரமம் ஆகிய நிறுவனங்கள் சாதிகளோடு சிறிதும் தொடர்பு இல்லாதவை. வருணச்சட்டம் நமக்குக் கற்பிப்பது என்ன? பரம்பரைத் தொழிலை மேற்கொண்டு ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்ள வேண்டும் என்பதுதானே. வருணச்சட்டம் நம் உரிமைகள் என்ன என்பதைக் கூறவில்லை. கடமைகள் என்பதையே கூறுகிறது. மனிதகுலத்துக்கு நன்மை செய்வதற்கான தொழில்களைப் பற்றியே அது பேசுகிறது. வேறு எதையும் அல்ல. மிகவும் உயர்ந்த தொழில் அல்லது மிகவும் தாழ்ந்த தொழில் என்று எந்தத் தொழிலும் இல்லை என்பதும் இதனால் விளங்கும். எல்லாத் தொழில்களுமே நல்லவைதான்; சட்டத்துக்கு உட்பட்டவைதான்- எல்லா வகையிலும் சம அந்தஸ்து கொண்டவைதான். ஆன்மீக குருவாக இருப்பது என்னும் பிராமணனின் தொழிலும் தோட்டி ஒருவனின் தொழிலும் சமமானவையே. தத்தமக்குரிய கடமைகளை பிராமணனும் தோட்டியும் சரிவரச் செய்வது ஒரு காலத்தில் கடவுளின் கண்களுக்கு சமமான சிறப்பு உடையதாகவே காட்சியளித்தது. மனிதனிடமிருந்தும் ஒரே மாதிரியான ஊதியத்தையே பெற்று வந்ததாகத் தெரிகிறது. பிராமணன் ஆனாலும் சரி, தோட்டியானாலும் சரி வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவே அவர்கள் அத்தொழில்களை மேற்

கொண்டார்கள். வேறு எதற்காகவும் இல்லை. இன்னும் கூட கிராமங்களில் இந்தச் சட்டம் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது என்பதற்குரிய சில அடையாளங்கள் காணப்படுகின்றன. 600 பேரே உள்ள சீகன் என்ற ஊரில் பிராமணர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளிகளின் ஊதியத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சீரழிந்த இந்தக் காலத்திலும் நான் சில உண்மையான பிராமணர்களைப் பார்க்கிறேன். அந்தப் பிராமணர்கள் அவர்களுக்குப் பிறர் மனம் உவந்து இடும் பிச்சையால் உயிர் வாழ்ந்து வருகிறார்கள்; தங்களுடைய ஆன்மீக அறிவு அனுபவம் என்கிற அரிய சொத்தை மனமுவந்து பிறருக்கு வழங்குகிறார்கள். தாங்கள் ஒரு குறிப்பிட்ட வருணத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொண்டு அதே நேரத்தில் அந்த வருணத்துக்குரிய ஒரே ஒரு செயல்பாட்டு விதியையும் வெளிப்படையாக மீறி நடக்கிற மனிதர்களின் வாழ்க்கையில் காணப்படும் கேலிக் கூத்துகளைக் கொண்டு வருணச் சட்டத்தை ஆராய முற்படுவது பிழையானது. முற்றிலும் முறையற்றது. மற்ற எந்த வருணத்தையும் விட தங்கள் வருணமே உயர்ந்த அந்தஸ்து கொண்ட வருணம் என்று எந்த வருணத்தாரும் உரிமை கொண்டாடுதல் கூடாது. இவ்வாறு செய்வது வருணச்சட்டத்தை மறுப்பதே ஆகும். தீண்டாமையை நம்பச் சொல்கிற எந்த அம்சமும் வருணச் சட்டத்தில் இல்லை. (சத்தியமே கடவுள், அகிம்சையே மனித குலத்தின் சாரம் என்பதே இந்து மதத்தின் சாராம்சம்)

டாக்டர் அம்பேத்கர் மட்டுமல்ல, இந்து மதம் பற்றி நான் தந்திருக்கிற இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து இன்னும் பல தலைவர்கள் எதிர்வாதம் புரிவார்கள் என்பது எனக்கு மிக நன்றாகவே தெரியும். இவர்களின் எதிர் வாதத்தால் என் நிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டு விடாது. இந்த விளக்கத்தின் படிதான் கடந்த 50 ஆண்டுகளாக நான் வாழ்ந்து வருகிறேன். என்னால் முடிந்த

அளவுக்கு என் வாழ்க்கையை அந்த விளக்கத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்திக் கொள்ள முயற்சி செய்து வருகிறேன்.

டாக்டர் அம்பேத்கர் தன் உரையில், சந்தேகத்துக்கு இடமான நூல்களில் இருந்தும் தம் மதத்துக்கு உண்மையுள்ள முன்மாதிரியாக வாழாமல் சீரழிந்து போன இந்துக்களின் வாசகங்களில் இருந்தும் எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார். இதுவே அவர் செய்துள்ள மிகப்பெரும் தவறு என்பது என் அபிப்பிராயம் டாக்டர் அம்பேத்கர் கூறும் அளவுகோலை வைத்து அளந்தால் இன்று நடப்பில் உள்ள எல்லா மதங்களுமே அதன் முன்னால் தோற்றுத்தான் போகும்.

தனது திறமையான உரையில் அறிவாளியான டாக்டர் தன் தரப்பு நியாயத்தை வரம்பை மீறியே நிரூபித்து உள்ளார். சைதன்யரும் ஜயன்தேவும் துக்காராமும் திருவள்ளுவரும் ராமகிருஷ்ண பரமஹம்சரும் ராஜாராம் மோகன்ராயும் மகரிஷி தேவேந்திரநாத் தாகூரும் விவேகானந்தரும் இன்னும் சுலபமாக பேர் சொல்லி விடக் கூடிய ஏராளமானோரும் ஏற்றுக் கொண்ட ஒரு மதமானது டாக்டர் அம்பேத்கர் தம் உரையில் சித்தரித்துக் காட்டி உள்ள படி முழுக்க முழுக்க தகுதி இல்லாதது ஆகி விட முடியுமா? ஒரு மதத்தை அதன் மோசமான உதாரணங்களைக் கொண்டு மதிப்பிடக்கூடாது. அது உருவாக்கிய மிகச் சிறந்த உதாரணங்களைக் கொண்டே மதிப்பிட வேண்டும். அவற்றை மட்டுமே பின்பற்றத்தக்க முன் மாதிரிகளாகப் பயன்படுத்த முடியும். அதற்கு மேலேயும் போக வேண்டும் என்பது வேறு விசயம்.

('அரிஜன்' ஆகஸ்டு 18, 1936)

# 3

# வருணமா சாதியா

லாகூர் ஜாத்-பட்-தோடக் மண்டலைச் சேர்ந்த திரு. சாண்ட்ராம்ஜி பின்வரும் கடிதத்தை நான் வெளியிட வேண்டும் என்று விரும்புகிறார்.

'டாக்டர் அம்பேத்கரைப் பற்றியும் லாகூர் ஜாத்-பட்-தோடக் மண்டலைப் பற்றியும் நீங்கள் எழுதியுள்ள குறிப்புகளை வாசித்தேன். அது தொடர்பாகப் பின்வரும் விளக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

''டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பையைச் சேர்ந்தவர் என்பதற்காக அல்ல எங்கள் மாநாட்டுக்கு அவரைத் தலைமை தாங்க அழைத்தது. ஏனெனில் தீண்டத்தக்க இந்துவுக்கும் தீண்டத்தகாத இந்துவுக்கும் இடையில் நாங்கள் பாகுபாடு காட்டுவதில்லை. அவரை நாங்கள் அழைத்ததற்கான காரணமே இந்து சமூகத்தைப் பீடித்துள்ள கொள்ளை நோயைப் பற்றிய அவரது ஆய்வு எங்களுடையதோடு ஒத்துப் போனதினால் தான். அதாவது இந்துக்களின் சீர் குலைவுக்கும் வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணம் சாதியமைப்பே என்றே அவரும் கூறுவதால்தான். டாக்டர் பட்டத்துக்கான அவரது ஆய்வுரை சாதியமைப்பைப் பற்றியதே ஆகும். அதில் சாதி அமைப்பை அவர் முழுமையாக ஆய்ந்துள்ளார். சாதிகளை ஒழிக்குமாறு இந்துக்களை வற்புறுத்துவதே எங்கள் மாநாட்டின் நோக்கமாக இருந்தது. ஆனால் இந்து அல்லாத ஒருவர் சமூக, மத காரியங்களில் அறிவுரை கூறுவது என்பது இந்துக்களிடம் எந்த மாறுதலையும் ஏற்படுத்தாது. டாக்டரோ என்றால் தம் உரையின் இணைப்புப் பகுதியில் ஒரு இந்து என்ற முறையில் அதுவே தன்

இறுதி உரையாக இருக்கும் என அழுத்திக் கூறி இருக்கிறார். மாநாட்டின் நலன்களுக்கு இது பொருத்தமாக இல்லை என்பது மட்டுமல்ல கெடுதல் செய்வதாகவும் இருந்தது. எனவே அந்த வாசகத்தை தவிர்த்து விடுமாறும் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அதை அவர் எளிதில் வெளியிட்டுக் கொள்ள முடியும் என்றும் வேண்டிக் கொண்டோம். ஆனால் அவர் மறுத்து விட்டார். நாங்களும் அதற்கு மேல் எங்கள் நிகழ்ச்சியை வெறும் பந்தா பண்ணிக் காட்டுவதில் எந்தப் பிரயோஜனத்தையும் காணவில்லை. இதெல்லாம் இருந்தாலும் அவரது உரையை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. நான் அறிந்த வரை இந்தத் தலைப்பில் மிகவும் அறிவார்ந்த ஆய்வுரையாகும் அது. இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் மொழி பெயர்த்து வெளியிட தகுதியானது.

அடுத்து, சாதிக்கும் வருணத்துக்கும் இடையில் நீங்கள் காட்டும் தத்துவார்த்த வேறுபாடு மிக நுணுக்கமானது என்பதை உங்கள் பார்வைக்குக் கொண்டு வர விரும்புகிறேன். பொதுமக்களால் அந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் இந்துச் சமுதாயத்தில் தினசரி வாழ்வில் சாதியும் வருணமும் ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில் இரண்டின் செயல்பாடும் ஒன்றுதான். அதாவது இரண்டுமே கலப்பு மணத்தையும் சமபந்தியையும் தடுக்கின்றன. உங்கள் வருணக் கோட்பாட்டை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை. வருங்காலத்தில் அது புத்துயிர்ப்பு பெறும் என்கிற மாதிரியும் தெரியவில்லை. ஆனால் இந்துக்கள் சாதியடிமைகள். சாதியை ஒழிக்க அவர்கள் விரும்பவில்லை. எனவே நீங்கள் உங்கள் கற்பனா லட்சியமான வருணக்கோட்பாட்டை முன்வைக்கும்போது அதில் அவர்கள் தத்தம் சாதியில் தொடர்ந்து தொற்றி இருப்பதற்கு

நியாயத்தைக் காண்கிறார்கள். ஆக உங்கள் வருணப் பிரிவினையின் கற்பனையான பயன்பாட்டை உபதேசிப் பதன் மூலம் நீங்கள் சமுதாய சீர்திருத்தத்துக்கு பெரும் கெடுதியே உண்டு பண்ணி வருகிறீர்கள். ஏனென்றால் அது எங்கள் வழிக்குத் தடையாக இருக் கிறது. வருணக் கோட்பாட்டின் ஆணிவேரைத் தாக்காமல் தீண்டாமையை நீக்கிவிட முயல்வது, நோயின் வெளி அடையாளங்களுக்கு சிகிச்சை செய்வது போலவும் நீர்மேல் சித்திரம் வரைவது போலவும் ஆகும். துவிஜர்கள் (மேல் சாதி இந்துக்கள்—மொ.ர்.) தங்கள் அடிமனத்தில் தீண்டத்தக்க—தகாத சூத்திரர் எனப்படுவோருக்கு சமூக சமத்துவம் வழங்க விரும்பு வதில்லை. எனவே அவர்கள் சாதியை உடைக்க மறுக் கிறார்கள். தீண்டாமையை அகற்ற அவர்கள் தாராள நிதி வழங்குவது பிரச்சனையை ஓரம்கட்டவே ஆகும். தீண்டாமையையும் சாதியையும் அகற்ற சாஸ்திரங் களின் உதவியை நாடுவது சேற்றை சேற்றால் கழுவப் பார்ப்பது போன்றதே ஆகும்.

கடிதத்தின் பின் பாரா முன் பாராவுக்கு முரணாக உள்ளது. மண்டல்காரர்கள் சாஸ்திரங்களின் உதவியை நிராகரிப்பார்களானால் அவர்களும் டாக்டர் அம்பேத்கர் செய்த அதே காரியத்தையே செய்கிறவர்கள் ஆகிறார்கள். அதாவது இந்துக்கள் அல்லாமல் போகிறார்கள். பின் எப்படி அவர்கள் 'இதுவே என் கடைசி உரையாக இருக்கும்' என்று சொன்னதற்காக அம்பேத்கரை ஆட்சே பிக்க முடியும்? எதன் சார்பாக திரு. சாண்ட்ராம் பேசுவ தாகக் கூறிக் கொள்கிறாரோ அந்த மண்டலே டாக்டர் அம்பேத்கரின் உரை முழுவதின் சாரமான வாதத்தை தூக்கிப்பிடிக்கிறபோது நிலைமை முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாமல் போகிறது.

ஆனால் மண்டல் சாஸ்திரங்களை நிராகரிக்கிறது என்றால் வேறு எதை நம்புகிறது என்று கேட்பது ஏற்பு

டையதே ஆகும். குரானை மறுத்த பின் ஒருவர் எப்படி முஸ்லீமாக நீடிக்க முடியும். பைபிளை மறுத்த பின் ஒருவர் எப்படி கிறிஸ்தவராக நீடிக்க முடியும்? சாதியும் வருணமும் ஒன்றுதான் என்றால், இந்து மதத்தை வரையறுக்கிற சாஸ்திரங்களிலிருந்து பிரிக்க முடியாத பகுதியை வருணக் கோட்பாடு என்றால், சாதியை அதாவது வருணத்தை மறுக்கிற எவரும் எப்படி தன்னை இந்து என்று அழைத்துக் கொள்ள முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. சாண்ட்ராம் சாஸ்திரங்களைச் சேற்றுடன் ஒப்பிடுகிறார். எனக்குத் தெரிந்தவரை டாக்டர் அம்பேத்கர் சாஸ்திரங்களுக்கு இதுவரை இப்படிப்பட்ட சித்தரிப்பை வழங்கவில்லை. இன்று நிலவுகிற தீண்டாமையை சாஸ்தி ரங்கள் ஆதரிக்குமானால் நான் என்னை இந்து என்று சொல்லிக் கொள்ளக் கூடாது என்று நான் சொன்னது வெறும் பேச்சுக்கல்ல. அதுபோலவே சா ையை இன்று நாம் அறிந்துள்ள அதன் எல்லா அசிங்கங்களோடும் சாஸ்தி ரங்கள் ஆதரிக்குமானால் நான் என்னை இந்து என்று சொல்லிக் கொள்ளவோ இந்துவாக நீடிக்கவோ முடியாமல் போகலாம். கலப்புமணத்தின் மீதோ சமபந்தி மீதோ எனக்கு எவ்விதக் காழ்ப்பும் கிடையாது. சாஸ்திரங்கள் மற்றும் அவற்றில் உள்ள இடைச்செருகல்கள் குறித்த என் நிலைபாட்டை நான் திரும்பவும் கூறத் தேவையில்லை. இது மட்டுமே அறிவுப்பூர்வமாக சரியானதும் ஒழுக்கப் பூர்வமாக வலுவானதும் ஆன நிலைபாடு என்று திரு. சாண்ட்ராமுக்கு நான் துணிந்து சொல்லிக் கொள்கிறேன். இப்படி சொல்வதற்கு இந்து மரபில் போதிய சாட்சியங்கள் உள்ளன.

('அரிஜன்' ஆகஸ்டு 15, 1936)

# பிற்சேர்க்கை 2

## 'மகாத்மா' வுக்கு ஒரு பதில்

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்

நான் ஜாத்-பட்-தோடக் மண்டலுக்காக சாதியைப் பற்றித் தயார் செய்திருந்த உரையைப்பற்றி தன் 'அரிஜன்' ஏட்டில் எழுதியதன் மூலம் மகாத்மா என்னைக் கௌர வித்தமைக்கு எனது பாராட்டுகள். எனது உரை மீதான அவரது மதிப்புரையை வாசித்த போது சாதிபற்றி நான் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு மகாத்மா முற்றிலும் வேறுபடுகிறார் என்பது தெளிவாயிற்று. தனிப்பட்ட காரணங்கள் இருந்தால் தவிர பொதுவாக என் எதிராளி களோடு சர்ச்சையில் இறங்கும் வழக்கம் எனக்கு கிடையாது. எனது எதிராளி ஒரு அனாமதேய அல்பாத்மாவாக இருந்திருந்தால் நானும் போனால் போகிறது என விட்டிருப்பேன். ஆனால் மகாத்மாவே என் எதிராளியாக இருப்பதால் அவர் முன் வைத்துள்ள வழக்கை நான் சந்திக்க முயன்றாக வேண்டும் என்றே கருதுகிறேன். அவர் எனக்குச் செய்துள்ள கௌரவத்துக்காக அவரை நான் பாராட்டுகிற அதே நேரத்தில் அதைப் படித்தபோது எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது என்பதையும் கூறியாக வேண்டும். விளம்பரத்தைத் தேடும் ஆசை எனக்கு இருப்ப தாக மகாத்மாவே குற்றம் சாட்டி உள்ளதால் ஏற்பட்ட அதிர்ச்சி அது. என்னை யாரும் 'மறந்துவிடக்கூடாது' என்பதற்காகவே கூட்டத்தில் வாசிக்கப்படாத அந்த உரையை நான் பிரசுரித்தேன் என்று இவர் எழுதி உள்ளார். மகாத்மா என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். அந்த உரையை பிரசுரித்ததில் என் நோக்கம், இந்துக்கள் தங்கள் தற்போதைய நிலையைப் பற்றி சிந்திக்குமாறு தூண்டி விடுவதுதான். நான் ஒரு

போதும் விளம்பரத்துக்கு ஏங்குகின்றவன் அல்ல. சொல்லப் போனால் நான் விரும்புகிற அல்லது எனக்குத் தேவைப் படுகிற அளவுக்கு மேலாகவே அது எனக்குக் கிடைத்து உள்ளது. ஆனால் ஒரு வேளை விளம்பரம் சம்பாதிக்கும் உள்நோக்கத்தோடு தான் நான் அந்த உரையை வெளி யிட்டேன் என்றே கொண்டாலும் யாரால் என்மேல் கல்லெறிய முடியும்? மகாத்மா போல கண்ணாடி வீட்டுக் குள் வசிப்போரால் நிச்சயம் முடியாது.

## 2

உள்நோக்கம் இருக்கட்டும். என் உரையில் நான் எழுப்பிய கேள்விக்கு மகாத்மா என்ன பதில் சொல்லி இருக்க வேண்டும்? முதலாவதாக நான் எழுப்பி உள்ள பிரச்சனைகளை மகாத்மா முற்றாகப் புறக்கணித்து விட்டார். என் உரையில் நான் இந்துக்களை அவதூறு செய்திருக்கிறேன் என்று கூறும் மகாத்மா அதைப்பற்றிப் பேசாமல் வேறு எதையோ பேசிச் செல்கிறார். என் உரை யைப் படிக்கும் எவரும் இதை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

என் உரையில் நான் மெய்ப்பிக்க விரும்பிய முக்கிய கூற்றுகளை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்: 1. சாதி யானது இந்துக்களைச் சீரழித்துள்ளது. 2. நால்வருண அடிப்படையில் இந்து சமூகத்தைப் புனர்நிர்மாணம் செய் வது சாத்தியமல்ல. ஏனென்றால் வருணமுறை ஓட்டைப் பானையையும் ஒழுகும் மூக்கையும் போன்றது. அது தன் சொந்தத் தன்மையைக் கொண்டு தன்னை நிலை நிறுத்திக் கொள்ள சக்தி அற்றது. யார் தன் வருணத்தை மீறினா லும் அவருக்கு எதிராகப் போகிற ஒரு சட்டத்தின் துணை அதற்கு வேண்டும். இல்லாவிட்டால் அதன் உள்ளார்ந்த போக்கின் காரணமாக சாதி அமைப்பாக குறுகிவிடும். 3. வருண முறையின் விளைவாக மக்கள் அறிவைப் பெறும் வாய்ப்பு மறுக்கப்படுவதால் அவர்களின் தரம் கெடுகிறது.

ஆயுதம் தாங்கும் உரிமை மக்களுக்கு மறுக்கப்படுவதால் அவர்கள் காயடிக்கப்படுகின்றனர். எனவே நால்வருண அடிப்படையில் இந்து சமூகத்தை மறுசீரமைப்பது தீங்கு பயப்பதாகும். 4. எந்த மதம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற கொள்கைகளை அங்கீகரிக்குமோ அந்த மதத்தின் அடிப்படையில் இந்துச் சமூகம் மறு சீரமை வேண்டும். 5. இந்த நோக்கத்தை எட்டவேண்டுமானால் சாதிக்கும் வருணத்துக்கும் உள்ள மத அங்கீகாரம் ஒழிக் கப்பட வேண்டும். 6. சாஸ்திரங்களுக்கு உள்ள தெய்வீக அதிகாரத்தைத் தூக்கி எறிவதன் மூலம் மட்டுமே சாதி—வருணத்தின் புனிதத் தன்மையை ஒழிக்க முடியும்.

மகாத்மா எழுப்பி உள்ள கேள்விகளுக்கும் உரையின் இந்த மையமான வாதப் போக்குக்கும் தொடர்பே இல்லா மல் இருக்கிறது.

## 3

மகாத்மாவின் கூற்றுகளின் உட்பொருளை ஆராய் வோம். மகாத்மா கூறும் முதல் விசயம், நான் மேற்கோள் காட்டும் நூல்கள் அதிகாரப்பூர்வமானவை அல்ல என்ப தாகும். சாஸ்திரங்களை நான் முற்றும் அறிந்தவன் அல்ல என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் மேற்கோள் காட்டியவை எல்லாம் சமஸ்கிருத மொழியிலும் இந்து சாஸ்திரங்களிலும் வல்லவர் என்று எல்லாராலும் ஏற்கப் பட்ட காலஞ் சென்ற திலகரின் நூல்களில் இருந்து எடுக்கப் பட்டவை. அடுத்ததாக 'சாஸ்திரங்களுக்கு ஞானிகளே பொருள் கூற வேண்டும். பண்டிதர்கள் கூறக்கூடாது. ஞானிகள் புரிந்து கொண்ட வகையில் சாஸ்திரங்கள் சாதியையோ தீண்டாமையையோ ஆதரிக்கவில்லை' என்கிறார். நான் மகாத்மாவிடம் கேட்க விரும்புவது, சாஸ்திரங்கள் இடைச் செருகல்களாகவும் வேறுபாடான முறையில் ஞானிகளால் பொருள் கூறப்பட்டதாகவும்

இருந்தால் என்ன பலன்? பொது ஜனங்களைப் பொறுத்த வரை அசல், இடைச்செருகல் இரண்டும் ஒன்றுதான். ஏனென்றால் அவர்களுக்கு சாஸ்திரங்களின் உட்பொருளைத் தெரிந்து கொள்வதற்கான படிப்பு கிடையாது. அவர்கள் தமக்குச் சொல்லப்பட்டதைப் பேசாமல் நம்பி வந்துள்ளார்கள். அவர்களுக்குச் சொல்லப்பட்டதெல்லாம் சாதியையும் தீண்டாமையையும் கடைப்பிடிப்பது மதக் கடமை என்பதற்கு சாஸ்திரங்களே ஆதாரம் என்பதுதான்.

ஞானிகளை எடுத்துக் கொண்டால் வெறும் பண்டிதர்களின் நூல்களைவிட அவர்களின் போதனை என்னதான் வேறுபாடாகவும் உயர்வானதாகவும் இருந்தாலும் அவை அறவே பயனற்றவையாக உள்ளன. இரண்டு காரணம், 1. எந்த ஞானியுமே ஒருபோதும் சாதி அமைப்பைத் தாக்கியதில்லை. மாறாக அவர்கள் சாதி அமைப்பைத் தீவிரமாக நம்பியவர்கள். அவர்களில் பெரும்பாலோர் அவரவர் சார்ந்த சாதியின் உறுப்பினர்களாகவே வாழ்ந்து இறந்தவர்கள். ஜயன்தேவ் என்பவர் தன் பார்ப்பன அந்தஸ்தில் எந்த அளவுக்கு தீவிரப் பற்றுக் கொண்டிருந்தார் என்றால் பைதானைச் சேர்ந்த பார்ப்பனர்கள் அவரைத் தம்முடன் இணைத்துக் கொள்ள மறுத்தும் பார்ப்பன சமூகத்தால் தன் பார்ப்பன அந்தஸ்து அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக பகீரதப் பிரயத்தனங்கள் செய்தார். ஞானி ஏகநாதரும் அப்படித்தான். 'தர்மாத்மா' என்று அவரைப் பற்றி ஒரு திரைப்படம் வந்துள்ளது. அதில் தீண்டத்தகாதோருடன் உண்டு குடிக்கவும் அவர்களைத் தொடவும் துணிச்சல் பெற்ற வீரராக அவர் காட்டப்படுகிறார். ஆனால் அவர் அப்படிச் செய்தது சாதியையும் தீண்டாமையையும் எதிர்த்ததல்ல. அதனால் உண்டாகும் தீட்டை கங்கா நதியின் புனித நீரில் கழுவி முற்றிலும் போக்கிக் கொள்ள முடியும் என்றுதான்.

என் ஆராய்ச்சியில் தெரிந்தவரை ஞானிகள் ஒருபோதும் சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிராக இயக்கம்

நடத்தியவர்கள் அல்ல. மனிதருக்கிடையிலான போராட்டம் மீது அல்ல அவர்கள் கவனம், மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான உறவின் மீதே அவர்கள் கவனம். எல்லா மனிதர்களும் சமம் என்று அவர்கள் போதிக்கவில்லை. கடவுளின் திருமுன் எல்லாரும் சமம் என்ற போதித்தார்கள். இது முதலில் சொன்னதில் இருந்து மிகவும் மாறுபட்டதும் அறவே ஆபத்தில்லாததும் ஆன நிலைபாடாகும். இதைப் போதிப்பதில் யாருக்கு கஷ்டமில்லை; நடபுவதில் ஆபத்துமில்லை.

ஞானிகளின் போதனைகள் பயனற்றதாகிப் போனதற்கு இரண்டாவது காரணம் சாதியை ஞானிகள் மீறலாம், பொதுமக்கள் மீறக்கூடாது என்று பொதுமக்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதுதான். எனவே ஞானிகளின் வழியில் நடக்க ஒருபோதும் முடியாது. ஞானி எப்போதும் வழிபடத்தகுந்த புனிதர். மக்கள் எப்போதும் சாதியையும் தீண்டாமையையும் தீவிரமாக நம்பிக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? ஞானியின் புனிதமான வாழ்க்கையும் அருமையான போதனையும் மக்களின் வாழ்வையும் நடத்தையையும் சாஸ்திரங்களின் வழியிலிருந்து மாற்றவில்லை. எனவே படித்த சிலரை விடவும் பாமரரான பலரை விடவும் வித்தியாசமான முறையில் சாஸ்திரங்களைப் புரிந்து கொள்ளும் பல ஞானிகள் இருந்தார்கள். ஒரு மகாத்மா இருக்கிறார் என்கிற விசயம் எந்த ஆறுதலையும் தருவதில்லை. சாஸ்திரங்களை மக்கள் வித்தியாசமான முறையில் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு உண்மை. இதைக் கணக்கில் கொண்டேயாக வேண்டும். இதற்கு மக்களின் நடத்தையை தொடர்ந்து ஆட்சிசெய்யும் சாஸ்திரங்களின் அதிகாரத்தைக் கண்டனம் செய்தே தீரவேண்டும். வேறு எப்படி இந்தப் பிரச்சனையை எதிர் கொள்ள முடியும் என்பதை மகாத்மா சிந்திக்க வில்லை. சாஸ்திரங்களின் போதனைகளில் இருந்து மக்களை விடுவிக்கும் பயனுள்ள வழியாக மகாத்மா எந்தத்

திட்டத்தை முன்வைத்தாலும் ஒரு நல்ல மனிதனின் தூய வாழ்க்கை அவனுக்கு மட்டுமே பயன்பட முடியும் என்பதை அவர் ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆனால் இந்தியா விலோ புனிதர்களையும் மகாத்மாக்களையும் வழிபடுவது— ஆனால் அவர்களின் வழி நடப்பதில்லை என்கிற போக்கு சாமானியரிடம் இருப்பதால் அவருடைய திட்டத்தால் பெரிய பலன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை.

## 4

மகாத்மா முன் வைக்கும் மூன்றாவது வாதம், சைதன்யரும் ஜயன்தேவும் துக்காராமும் திருவள்ளுவரும் ராமகிருஷ்ண பரமஹம்சரும் போன்றவர்கள் கடைப் பிடித்த ஒரு மதம் நான் கூறியது போல் தகுதியற்றதாக இருக்க முடியாது. ஒரு மதத்தை அது உருவாக்கிய மிகச் சிறந்த உதாரணங்களைக் கொண்டு மதிப்பிட வேண்டுமே தவிர அது உருவாக்கிய மிக மோசமான உதாரணங் களைக் கொண்டு மதிப்பிடக் கூடாது என்பதாகும். இந்த வாசகத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதைக் கூறுவதன் மூலம் அவர் எதை நிரூபிக்க விரும்புகிறார் என்று எனக்குத் தெரிய வில்லை. ஒரு மதத்தை நல்ல உதாரணங்களைக் கொண்டே மதிப்பிட வேண்டும். மோசமான உதாரணங்களைக் கொண்டு அல்ல என்று கூறிவிட்டாலே விஷயம் முடிந்து விடுமா? அப்படி இருக்க முடியாது என்றே கருதுகிறேன். பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை. அந்த மோசமான உதாரணங்கள் ஏன் மிக அதிக எண்ணிக்கையிலும் நல்ல உதாரணங்கள் மிகக் குறைந்தும் காணப்படுகின்றன? இந்தக் கேள்விக்கு இரு சாத்தியமான பதில்களே இருக்க முடியும். 1. அந்த மோசமான மனிதர்கள் தம் இயல்பிலேயே வக்கிரபுத்தி படைத்தவர்கள். சாஸ்திரங்களைக் கற்பதற்கு லாயக்கற்றவர்கள். எனவே அவர்கள் மத லட்சியத்தை நெருங்கவே முடியாமல் இருப்பவர்கள். 2. மத லட்சியமே

முற்றிலும் தவறானது. பெரும்பான்மையரின் வாழ்க்கையில் ஒரு தவறான போக்கை ஏற்படுத்தியதற்கு அதுவே காரணம். நல்லவர்கள் நல்லவர்களாக இருப்பதற்கு இந்தத் தவறான இலட்சியத்துக்கு எதிரான நிலைபாட்டை அவர்கள் மேற்கொண்டதே காரணம்.

இந்த இரண்டு விளக்கங்களில் முதல் விளக்கத்தை நான் ஏற்கத் தயாரில்லை. மகாத்மாகூட இதை ஏற்க மாட்டார் என்றே நினைக்கிறேன். மூன்றாவது ஒரு விளக்கத்தை மகாத்மா தராதவரை என்னைப் பொறுத்து இரண்டாவது விளக்கமே தர்க்கரீதியானதும் அறிவு பூர்வமானதும் ஆக இருக்கும்.

இரண்டாவது விளக்கமே ஒரே சரியான விளக்கம் என்றால் ஒரு மதத்தை அதில் உள்ள நல்ல உதாரணங்களைக் கொண்டே மதிப்பிட வேண்டும் என்கிற மகாத்மாவின் வாதம் நம்மை எங்கே இட்டுச் செல்லும்? தவறிப் போன பெரும்பான்மையர் தவறான லட்சியத்தை மேற்கொண்டதால் தான் அப்படி ஆனார்கள் என்று அவர்கள் மேல் பரிதாபப் படுவதற்கே தவிர வேறெதற்கும் இட்டுச் செல்லாது.

## 5

இந்துமதப் பெரியார்களைப் பெரும்பாலானவர்கள் பின்பற்றி நடந்தால் மட்டுமே அந்த மதம் ஏற்றுக்கொள்ளக் கூடியது ஆகும் என்ற மகாத்மாவின் வாதம் மற்றொரு காரணத்தாலும் தவறானது ஆகும். சைதன்யரைப் போன்ற புகழ்பெற்ற மனிதர்களை உதாரணமாகக் காட்டுவதன் மூலம் மகாத்மா என்ன சொல்ல வருகிறார்? இந்துச் சமுதாயத்தில் எந்த விதமான அடிப்படை மாறுதலையுமே செய்யாமல் உயர்சாதி இந்துக்கள் தாழ்ந்த சாதி இந்துக்களுடன் கொள்ளும் நடவடிக்கைகளில் ஒரு உயர்ந்த பண்பாட்டை மேற்கொள்ளுமாறு அவர்களை இணங்கச் செய்வதன் மூலமே இந்துச் சமூகத்தை எல்லாரும் ஏற்கத்

தக்க - மகிழ்ச்சிகரமான - சமூகமாக ஆக்கி விட முடியும் என்று மகாத்மா சொல்ல வருகிறார் என்றே மொத்தத்தில் எனக்குப் படுகிறது.

இந்த வகையான கருத்தை நான் முற்றாக எதிர்க்கிறேன். தங்கள் வாழ்க்கையில் ஒரு உயர்ந்த சமூக லட்சியத்தைக் கடைப்பிடிக்க முயற்சிக்கிற சாதி இந்துக்களை நான் மதிக்கிறேன். இப்படிப்பட்ட மனிதர்களே இந்தியாவில் இல்லாது போனால் இந்தியா இன்னும் மிக மோசமான ஒரு நாடாகவே இருக்கும். இருந்தாலும் சாதி இந்துக்களின் சொந்த குணங்களை உயர்த்துவதன் மூலம் அவர்களை நல்ல மனிதர்களாக மாற்ற முயற்சிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அனைவரும் அவர்களுடைய ஆற்றலை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஒரு வித மாயையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றே எனக்குப் படுகிறது. ஒருவனுடைய சொந்த குணாம்சங்களே ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்பவனை நல்லவனாக்கி விடுமா? (உதாரணமாக ஒரு நல்ல மனிதன் தயாரிக்கும் குண்டு வெடிக்காமல் இருக்குமா?) அவன் தயாரிக்கும் விஷப்புகை கொல்லாமல் இருக்குமா? அது சாத்தியமில்லை என்று ஏற்றுக்கொண்டால் சாதிய உணர்வுகளால் நிரம்பிய ஒருவனின் சொந்த நல்ல குணங்கள் மட்டும் எப்படி அவனை நல்லவன் ஆக்கிவிடும்? அதாவது சாதியத்தால் நிரம்பிய மனிதனை அவனது சக மனிதர்களை நண்பர்களாகவும் சமமானவர்களாகவும் நடத்துகிற மனிதனாக ஆக்க முடியும். தன் சக மனிதர்களை தன் சாதியைச் சேர்ந்த பிறர் பார்க்கிற பார்வையில் இருந்து மாறுபட்டுப் பார்க்கிறவனாக அவனை ஆக்க முடியுமா?

தன் சக மனிதர்களை உறவினராகவோ சமமானவர்களாகவோ ஒரு இந்து நடத்துவான் என்று எதிர்பார்க்க முடியாது. உண்மையில் தன் சாதியைச் சாராத அனைவரையும் ஒரு இந்துவானவன் தன்னிலிருந்து பிரித்து அந்நிய

மாகவே பார்க்கிறான். அவர்களுக்கு எதிராக எல்லாவித மான சூழ்ச்சிகளையும் மோசடிகளையும் வெட்கமில்லாமல் மேற்கொள்கிறான். ஆக உயர்ந்த இந்து தாழ்ந்த இந்து இருக்கிறார்கள். ''நல்ல இந்து'' இல்லை. அவனுடைய சொந்த குணாம்சத்தில் உள்ள ஏதாவது குறைபாட்டின் காரணமாகவே அவன் அப்படியிருக்கிறான் என்று இதற்குப் பொருளல்ல. அவனுடைய சக மனிதர்களுடன் அவன் கொள்ளும் உறவின் அடிப்படையில் தான் குறைபாடு உள்ளது. மனிதர்களுக்கிடையிலான உறவுகள் அடிப்படை யிலேயே தவறானதாக இருக்கும்போது அவர்களிடம் உள்ள நல்ல அம்சங்கள் என்பவை பின்பற்றத் தக்கதாக இருக்க முடியாது.

ஓர் அடிமைக்கு அவனுடைய எஜமானன் உயர்ந்த வனாகவோ தாழ்ந்தவனாகவோ இருக்கலாம். ஆனால் நல்ல எஜமானன் என்பவன் இருக்கமுடியாது. ஒரு நல்ல மனிதன் எஜமானனாக இருக்க முடியாது. அதுபோலவே ஒரு எஜமானன் நல்ல மனிதனாக இருக்கவும் முடியாது. உயர்ந்த சாதிக்கும் தாழ்ந்த சாதிக்கும் இடையிலான உறவுமுறைக்கும் இது பொருந்தும். ஒரு தாழ்ந்த சாதிக் காரனுக்கு ஓர் உயர்சாதிக்காரன் இன்னொரு உயர் சாதிக்காரனோடு ஒப்பிடும்போது உயர்ந்தவனாகவோ தாழ்ந்தவனாகவோ இருக்கலாம். ஓர் உயர்சாதிக்காரன் தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்கு ஒரு தாழ்ந்த சாதிக்காரனை வைத்திருக்கும்வரை அவன் நல்ல வனாக இருக்க முடியாது. ஒரு தாழ்ந்த சாதிக்காரனுக்கு தனக்கு மேலே ஒரு உயர்ந்த சாதிக்காரன் இருக்கிறான் என்ற உணர்வு நல்லதாக இருக்க முடியாது. வருணத்தை சாதியை அடிப்படையாகக் கொண்ட சமூகம் தவறான உறவுமுறையை அடிப்படையாகக் கொண்ட சமூகமே. இதைப்பற்றி நான் என் உரையில் கூறியுள்ளேன். என் வாதங்களை முறியடிப்பதற்கு மகாத்மா முயற்சி எடுப் பார் என்று நம்பினேன். அதற்கு மாறாக அவர் நால்

வருண அமைப்பின் மீது தனக்கு உள்ள நம்பிக்கையானது எதன் அடிப்படையில் ஏற்பட்டது என்பதை விளக்காமல், தனது நம்பிக்கையைப் பற்றி மட்டுமே கூறிக் கொண்டிருக்கிறார்.

## 6

மகாத்மா தான் சொல்வதை நடைமுறையில் கடைப்பிடிக்கிறாரா? பொதுத் தன்மையை விளக்கும்போது தனிப்பட்ட விஷயங்களைக் கூறக் கூடாது. ஆனால் ஒரு கோட்பாட்டை (doctrine) உபதேசித்துக் கொண்டு, அதை மதக்கோட்பாடாகவே (dogma) வைத்துக் கொண்டிருக்கிற ஒருவர் தான் சொல்வதை எந்த அளவுக்கு நடைமுறையில் கடைப்பிடிக்கிறார் என்று அறிய ஆவலாகத்தான் இருக்கிறது. அந்த லட்சியம் அடைவதற்கு முடியாதது என்பதால் கூட அந்த லட்சியத்தை நடைமுறையில் கடைப்பிடிப்பதில் அவர் தோல்வியடைந்திருக்கலாம் அல்லது அதை நடைமுறைப் படுத்த முடியாததற்கு அவருக்குள் உள்ள போலித்தனம் காரணமாக இருக்கலாம். எப்படியும் மகாத்மா தான் ஏற்றுக் கொண்டுள்ள கோட்பாட்டை தன் விசயத்திலாவது எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்த முயற்சித்தார் என்பதைப் பற்றி நான் விமர்சித்தால் என்னை நீங்கள் குறை சொல்லக்கூடாது.

மகாத்மா பிறப்பால் ஒரு வணிகர். அவரது முன்னோர்கள் தம் வணிகத் தொழிலை விட்டு மந்திரிகளானார்கள். அவரது சொந்த வாழ்க்கையிலே கூட அவர் தன் எதிர்காலத்தை தேர்ந்தெடுக்கும் போது அவர் வணிகத்தை விட்டு விட்டு பாதி முனிவராகவும் பாதி அரசியல் வாதியாகவும் மாறினார். அவருடைய முன்னோர்களின் தொழிலான வணிகத்தில் அவர் ஈடுபடவே இல்லை. அவரது இளைய மகன் (தன் அப்பாவை அப்படியே பின்பற்றுகிறவர்) வைசியனாகப் பிறந்து விட்டு பிராமணப் பெண்ணை மணந்து கொண்டார். ஒரு பத்திரிகை பெரு

முதலாளிக்கு சேவை செய்யப் போய் விட்டார். தன் முன்னோர்களின் தொழிலைத் தேர்ந்தெடுக்காததற்காக அவரை மகாத்மா கண்டித்ததாகத் தெரியவில்லை.

ஆனால் ஒரு லட்சியத்தை அதன் மோசமான முன்னு தாரணங்களைக் கொண்டு மதிப்பிடுவது தப்புதான். ஆனால் ஒரு முன் உதாரணம் என்ற வகையில் மகாத்மா ஒன்றும் மற்றவர்களிடம் இருந்து மேம்பட்டு இல்லை. லட்சியத்தை அடைவதில் அவர் தவறி இருந்தால் கூட அந்த லட்சியம் எட்டுவதற்கு அசாத்தியமானது; சராசரி மனிதர்களின் இயல்புகளுக்கு எதிரானது என்று சொல்லி யிருக்க முடியும்.

கார்லைல் ஒரு விசயத்தைப் பற்றி சிந்திக்கும் முன்பே பேசத் தொடங்கி விடுவாராம். சாதியைப்பற்றி மகாத்மா கருத்துக் கூறுவதும் அப்படித்தானே இருக்கிறது? அப்படி இல்லாவிட்டால் எனக்குத் தோன்றிய சில கேள்விகள் காந்திக்கு ஏன் தோன்றாமல் போயின? ஒரு மனிதன் எப்போது தன் பரம்பரைத் தொழிலை தன் தொழிலாக விரும்பி ஏற்றுக் கொள்வான்? பரம்பரைத் தொழில் ஒரு வனது தகுதிக்குப் பொருந்தாது, ஆதாயம் தராது என்ற நிலையில் கூட அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? ஒழுக்கக் குறைவானது என்று கருதப்படுகிற ஒரு தொழிலை பரம்பரைத் தொழில் என்பதற்காக மேற்கொள்ள வேண்டுமா? பரம்பரைத் தொழிலைத்தான் ஒவ்வொரு வரும் மேற்கொள்ளவேண்டும் என்றால் ஒருவனுடைய தாத்தா விபசாரத்தரகராக இருந்தால் பேரனும் அப்படியே இருக்க வேண்டும் என்றாகிறது. ஒரு பெண்ணின் பாட்டி விபசாரத் தொழிலில் ஈடுபட்டாள் என்பதற்காக அந்தப் பெண்ணும் அதையே மேற்கொள்ளவேண்டும் என்றா கிறது. என்னைப் பொறுத்த மட்டிலும் பரம்பரைத் தொழிலையே ஒருவர் மேற்கொள்ள வேண்டும் என்ற அவரது லட்சியம் நடைமுறைப்படுத்த முடியாத லட்சிய மாகும். தார்மீக ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாத லட்சியமும் ஆகும்.

## 7

ஒரு பார்ப்பனன் தன் வாழ் நாள் முழுவதும் பார்ப்பனனாக இருப்பதே சிறப்பு என்று மகாத்மா கருதுகிறார். நிறைய பார்ப்பனர்கள் அப்படியொன்றும் தம் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனர்களாகவே நீடிக்க விரும்புவதில்லை இது ஒருபுறம் இருக்க தம பரம்பரைத் தொழிலான புரோகிதத்தில் இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களைப் பற்றி என்ன சொல்ல? அவர்கள் ஏன் இன்னமும் அதில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்— பரம்பரைத் தொழிலே உத்தமம் என்ற கோட்பாட்டின் மீதுள்ள நம்பிக்கையாலா அல்லது கீழ்த்தரமான வழியிலேனும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தாலா? இத்தகைய கேள்விகளை மகாத்மா கேட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக 'தமக்கு மனமுவந்து அளிக்கப்படும் தானத்தில் வாழ்ந்து கொண்டு தம்மிடமுள்ள ஆன்மீக செல்வத்தை மனமுவந்து வழங்குபவர்களே உண்மையான பார்ப்பனர்கள்' என்று கூறுவதுடன் திருப்தியடைந்து விடுகிறார். இப்படித்தான் ஒரு பிறவிப் பார்ப்பனப் புரோகிதன் மகாத்மாவின் கண்களுக்கு ஆன்மீக செல்வத்தைப் பெற்றிருப்பவனாகத் தோன்றுகிறான்.

வைதீகப் பார்ப்பானைப் பற்றிய இன்னொரு படப்பிடிப்பையும் கவனிப்போம். பார்ப்பான், காக்கும் கடவுளான விஷ்ணுவுக்கும் பூசாரி, அழிக்கும் சிவனுக்கும் பூசாரி, அன்பின் தத்துவத்தை மனித குலத்துக்குப் போதித்த மாபெரும் ஆசானாகிய கயைப் புத்தருக்கும் பார்ப்பான் பூசாரியாக இருக்க முடிகிறது. தினமும் மிருக ரத்த பலிகேட்கும் காளிக்கும் அவன் பூசாரியாக இருக்க முடிகிறது. சத்திரிய கடவுளான ராமனுக்கும் அவன் பூசாரி. சத்திரியரை ஒழித்துக்கட்ட என்றே அவதாரம் எடுத்த பரசுராமனுக்கும் பூசாரி, படைப்புக் கடவுளான பிரமனுக்கும் பார்ப்பான் பூசாரியாக முடியும். ஆன்மீக

உலகில் பிரமனின் ஆதிக்கத்தை ஏற்காத அல்லாவைத் தொழும் 'பிர்' களுக்கும் பார்ப்பான் பூசாரியாக முடியும். நிஜ வாழ்க்கையில் இப்படி இல்லை என்று யாரும் கூற முடியாது. மாறாக இது உண்மைதான் என்றால் ஒரு நேர்மையான மனிதன் எதிரெதிரான குணங்களைக் கொண்ட எல்லா தேவ தேவிகளுக்கும் பக்தனாக இருக்க முடியாது என்னும்போது அப்படி இருக்கிற பார்ப்பன னின் இந்தத் திறமையைப் பற்றி என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இந்த அசாதாரணமான நிகழ்வையே இந்துக்கள் தம் மதத்தின் மாபெரும் சிறப்பாக, அதன் சகிப்புத்தன்மை-பரந்த நோக்கு என்பதாகக் கூறுகிறார்கள்.

இப்படி எளிமையாகச் சொல்லப்பட்டாலும் இந்த சகிப்புத் தன்மையும் பரந்த மனப்பாங்கும் உண்மையில் வெறும் அசிரத்தையையும் கட்டுப்பாடின்மையையுமே குறிக் கிறது. மேலோட்டமாகப் பார்த்தால் இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையில் வேறுபாடு காண்பது கடினம். ஆனால் உள்ளடக்கத்தில் அவை யிரண்டும் முற்றிலும் வெவ்வேறு ஆனவையாகும். நெருங்கி ஆராய்ந்து பார்த் தால்தான் இது விளங்கும். வெவ்வேறு விதமான கடவுள் களையும் வழிபடுவது சமரசத்தன்மையைக் குறிக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் அதுவே சந்தர்ப் பத்துக்கு ஏற்றவாறு நிலைபாட்டை மாற்றிக் கொள்ளும் நேர்மையின்மையையும் குறிக்க முடியும் அல்லவா? இந்த சகிப்புத் தன்மை என்பது உண்மையில் நேர்மை இன்மையே என்பது உறுதி. இது உறுதியானால் தன் காரியத்தை முடித்துக் கொடுக்கும் எந்த சாமிக்கும் பூசாரி ஆவதற்குத் தயாராக இருக்கும் ஒருவனிடம் என்ன ஆன்மீக சம்பத்து இருக்க முடியும் என்று நான் கேட்கிறேன். அப்படிப்பட்ட வனிடம் எந்தவிதமான ஆன்மீகச் செல்வமும் சுத்தமாக இருக்காது என்பதோடு அத்தகையவன் நம்பிக்கையோ விசுவாசமோ இல்லாமல் பரம்பரையாக எந்திரத்தனமாக பெற்றதற்காக மட்டுமே புரோகிதம் என்ற உயர்ந்த தொழிலைக் கைக்கொள்வான் என்றால் அது நல்லவனுக்கு

அடையாளமும் இல்லை. அதற்குப் பதிலாக சமயப் பணி என்ற உன்னதத் தொழிலை விபசாரமாக்குகிறான் என்றே கூற வேண்டும்.

## 8

ஒவ்வொருவரும் தம் பரம்பரைத் தொழிலையே ஏற்க வேண்டுமென்ற கொள்கையை மகாத்மா ஏன் பிடித்துத் தொங்குகிறார்? இதற்கான காரணத்தை அவர் எங்கும் சொல்லக் காணோம். இதைச் சொல்வதற்கு அவர் அக்கறை எடுத்துக் கொள்ளா விட்டாலும் அப்படிக் காரணம் இருக்கத்தான் வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன் 'யங் இந்தியா'வில் 'சாதியா வர்க்கமா' என்ற தலைப்பில் அவர் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் ''வர்க்க அமைப்பை விட சாதி அமைப்பே சிறந்தது. ஏனென்றால் சமூகத்தின் நிலைப்புத் தன்மையைப் பாதுகாக்க சாதியே மிகச் சிறந்த வழி'' என்று வாதிட்டார். ஒவ்வொருவரும் அவரவர் பரம்பரைத் தொழிலையே செய்யவேண்டும் என்ற கொள்கையை மகாத்மா ஆதரிக்கக் காரணம் இதுதானா? அப்படியானால் சமூக வாழ்வைப் பொறுத்து ஒரு தவறான கண்ணோட்டத்தை அவர் ஆதரிக்கிறதாகவே ஆகும்.

சமூகம் நீடித்திருக்க வேண்டும் என்று தான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதற்காக தனி மனிதர்களுக்கிடையிலும் வர்க்கங்களுக்கிடையிலுமான உறவில் கொஞ்சம் அனுசரித்துத்தான் போகிறார்கள். ஆனால் இரண்டு நிலைமைகளை யாருமே விரும்புவதில்லை என்று உறுதியாகக் கூறலாம். 1. எக்காலத்திலும் மாற்றமுடியாதபடி இறுகிப்போன உறவை யாரும் விரும்புவதில்லை. நிலைப்புத் தன்மை தேவைதான். ஆனால் மாற்றம் அவசியமாகிற போது கூட அதை மறுக்கிற நிலைப்புத் தன்மை தேவையா? 2. தொடர்ந்து அனுசரித்துக் கொண்டே போவதை யாரும் விரும்புவதில்லை. அனுசரணைக்காகவே (adjust-

ment) சமூக நீதியை இழந்து போவதையும் யாரும் விரும்புவதில்லை. சாதி அடிப்படையில் அதாவது பரம்பரைத் தொழில் அடிப்படையில் சமூக உறவு அனுசரிக்கப்படுவது மேற்சொன்ன இரண்டு தீமைகளையும் தவிர்த்துவிடுகிறதா? இல்லவே இல்லை. சாதியம் மிகச்சிறந்த அனுசரணையாக இருக்கிறதற்குப் பதிலாக மிக மோசமான அனுசரணையாகவே இருக்கிறது. ஏனென்றால் சமூக அனுசரணையின் இரண்டு விதிகளான நெகிழ்ச்சித் தன்மைக்கும் நடுநிலைத் தன்மைக்கும் அது எதிரானது.

## 9

மகாத்மா இப்போது ரொம்பவும் முன்னேறிவிட்டார். இப்போது அவர் சாதியை நம்புவதில்லை. வருணத்தையே நம்புகிறார் என்று சிலர் எண்ணலாம். மகாத்மா ஒரு தீவிர காலத்தில் இருந்தார் என்பது உண்மையே அன்று. அவர் வேதங்களையும் உபநிடதங்களையும் புராணங்களையும் இந்து சாஸ்திரங்களின் பேரால் வழங்கப்படும் அத்தனையையும், அவதாரங்கள், மறுபிறப்பு உட்பட நம்பினார். சாதியை நம்பினார். ஒரு வைதீகனுக்கு உரிய வேகத்தோடு அதைப் பேணி வந்தார். சமபந்தியையும் கலப்புமணத்தையும் கண்டித்தார். சமபந்திக்கு எதிரான கட்டுப்பாடுகள் பெருமளவுக்கு ''மனோசக்தியை வளர்க்கவும் சமூக நன்மையைக் காக்கவும் உதவுகிறது'' என்று வாதிட்டார். அந்த பத்தாம்பசலி அபத்தத்தை அவர் மறுத்து ''சாதி ஆன்மீக வளர்ச்சிக்கும் தேசிய வளர்ச்சிக்கும் தீங்கு பயப்பதாகும்'' என்று ஒத்துக் கொண்டுள்ளது நல்லதுதான். தன் மகனுக்கு வேறு சாதியில் திருமணம் செய்வித்ததும் இந்த மாறுதலைக் காட்டுகிறது. ஆனால் மகாத்மா உண்மையிலேயே முன்னேறியுள்ளாரா? மகாத்மா ஆதரிக்கும் வருணத்தின் தன்மை என்ன? சுவாமி தயானந்த சரஸ்வதியும் அவரது சீடர்களான ஆரிய சமாஜிகளும் பரப்பிவரும் வேதியக் கருத்தா அது? வேதத்தின்படி

வருணம் என்பது ஒருவனின் சுபாவத்துக்குப் பொருத்தமான பணியைத் தேடுவதாகும். மகாத்மாவின் வருணக் கருத்தோ சுபாவத்தைப் பற்றி கவலைப்படாமல் பரம்பரைத் தொழிலை நாடுவதாகும். மகாத்மா புரிந்துவைத்துள்ள சாதிக்கும் வருணத்துக்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. மகாத்மாவின் வரையறுப்பின்படி பார்த்தால் சாதிக்கு இன்னொரு பெயர் தான் வருணம். ஏனென்றால் இரண்டின் நோக்கமும பரம்பரைத் தொழிலை செய்யக் கூறுவதாகவே உள்ளது.

முன்னேறுவதற்குப் பதில் மகாத்மா பின்னடைந்திருக்கிறார். வேதங்கள் கூறும் வருணக் கருத்துக்கு தன் விளக்கத்தை அளித்ததன் மூலம் ஒரு மேன்மையான கருத்தைப் பரிகாசத்துக்கு உரியதாக்கி இருக்கிறார். வேதம் கூறும் வருணக் கோட்பாட்டை நான் மறுக்கிறேன். அதற்கான காரணங்களை என் உரையில் தந்துள்ளேன். அதே சமயத்தில் சுவாமி தயானந்தரும் இன்னும் சிலரும் வேதத்தின் வருணக் கொள்கைக்கு தரும் விளக்கம் அர்த்தமுள்ளதாகப் படுகிறது. தனிமனிதனை சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துவதற்கு பிறப்பை ஒரு தீர்மான காரணியாக அது கூறவில்லை, தகுதியையே அது அங்கீகரிக்கிறது. வருணம் பற்றிய வேதத்தின் கருத்தை அபத்தப்படுத்துவதோடு அதை வெறுக்கத் தக்கதாகவும் ஆக்குகிறது.

வருணமும் சாதியும் இரு வேறுபட்ட கருத்தாக்கங்களாகும். 'ஒவ்வொருவருக்கும் அவரது தகுதிக்கு ஏற்ப' என்பதன் அடிப்படையில் வருணக்கோட்பாடும், 'ஒவ்வொருவருக்கும் அவரது பிறப்புக்கேற்ப' என்பதன் அடிப்படையில் சாதிக் கோட்பாடும் அமைந்துள்ளன. இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் இடையிலான வேறுபாடு போல உண்மையில் இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானதாகும். ஒவ்வொருவரும் தம் பரம்பரைத் தொழிலையே பின்பற்ற வேண்டும்

என்பதை நம்புவாரானால் சர்வ நிச்சயமாக அவர் சாதி அமைப்பையே ஆதரிப்பவர் ஆகிறார். பின் அதைப் போய் வருண அமைப்பு என்று பேசும்போது அவர் சொற்குற்றம் செய்பவராகவும் பெருங்குழப்பம் விளைப்பவராகவும் ஆகிறார்.

'மகாத்மாவின்' குழப்பத்துக்குக் காரணம், சாதி என்றால் என்ன? வருணம் என்றால் என்ன? இந்து மதத்தைக் காப்பதற்கு அவை இரண்டின் அவசியம் என்ன என்பது பற்றிய தெள்ளத் தெளிவான இலக்கணம் அவரிடம் இல்லாமல் இருப்பதேயாகும். இந்து மதத்தின் சாரம் சாதி அல்ல என்ற தன் கருத்தை மாற்றிக் கொள்ள ஏதாவது மாயக் காரணத்தைக் கண்டுபிடிக்க மாட்டேன் என்று அவர் கூறியிருக்கிறார். அப்படியே செய்வார் என்று நம்பலாம். ஆயின் வருணமே இந்துமதத்தின் சாரம் என்று அவர் கருதுகிறாரா? இந்தக் கேள்விக்கு யாரும் தீர்மான மான பதில் ஒன்றும் கூற முடியவில்லை. சாதி அமைப்பு சரியானதே என்ற அவரது கட்டுரையில் டாக்டர் அம்பேத்கரின் குற்றச்சாட்டு என்ற பகுதியை வாசிக்கும் எவரும் எதிர்மறையான பதிலையே தருவார்கள். அந்தக் கட்டுரையில் இந்து மதத்தின் சாரமான பகுதி வருணக் கோட்பாடே என்று அவர் கூறவில்லை. அதற்குப் பதிலாக இந்து மதத்தின் சாரம் 'சத்தியமே ஒரே கடவுள் என தெரியப்படுத்துவதும் மனிதக் குடும்பத்தின் சட்டம் அகிம்சையே என்பதைத் துணிவுடன் ஏற்பதுமே' என்றே கூறுகிறார்; ஆனால் திருவாளர் சாண்ட்ராமுக்கு அவர் எழுதிய பதிலை வாசிப்பவர்கள் உடன்பாடான விடையைத் தருவார்கள். அந்தக் கட்டுரையில் அவர் 'குரானை மறுக்கும் முஸ்லீம் எப்படி முஸ்லீமாக நீடிக்க முடியும்? பைபிளை மறுக்கும் கிறிஸ்தவன் எப்படி கிறிஸ்தவனாக நீடிக்கமுடியும்? சாதியும் வருணமும் ஒன்று தான் என்றால் இந்துமதத்தை வரையறுக்கும் சாஸ்திரங்களில் இருந்து பிரிக்கமுடியாத பகுதியே வருணக் கோட்பாடு என்றால்,

சாதியை அதாவது வருணத்தை மறுக்கிற எவரும் எப்படி தன்னை இந்து என்று அழைத்துக் கொள்ள முடியும் என்று எனக்குத் தெரியவில்லை'' என்றார். ஏன் இந்த சொல் புரட்டு? ஏன் மகாத்மா மழுப்புகிறார்? யாரை திருப்தி செய்ய? முனிவரால் உண்மையை உணர முடியாமல் போய் விட்டதா அல்லது முனிவரின் வழக்கு அரசியல்வாதி தடையாக நிற்கிறாரா?

இத்தகைய குழப்பத்தால் மகாத்மா அவதிப்படுவதற்கு உண்மையான காரணத்தை இரண்டு இடங்களில் தேடலாம். ஒன்று மகாத்மாவின் உணர்ச்சி நிலை. அவர் எல்லாவற்றையும் குழந்தையைப் போல் எளிமைப் படுத்தியே பார்க்கிறார். குழந்தை போலவே தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் திறன் உடையவர் அவர். குழந்தை போலவே அவர் தான் நம்ப விரும்பும் எதையும் நம்பி விடுகிறார். எனவே சாதி மீது தன் நம்பிக்கையைத் துறக்க விரும்பினதும் அவர் துறந்து விட்டதைப் போலவே வருணத்தின் மீது தான் கொண்டுள்ள நம்பிக்கையை அவர் துறக்க விரும்பும் காலம் வரை நாம் காத்திருக்க வேண்டியதே.

மகாத்மாவின் குழப்பத்துக்கு இரண்டாவது காரணம் அவர் மகாத்மா, அரசியல்வாதி என இரண்டு விதமாகவும் நடக்க விரும்புவதாகும். மகாத்மா என்ற முறையில் அவர் அரசியலை ஆன்மீக மயப்படுத்த விரும்புகிறார். அதில் அவர் வெற்றி பெற்று விட்டாரோ இல்லையோ அரசியல் நிச்சயமாக அவரை வியாபார மயமாக்கி விட்டுள்ளது. முழு உண்மையை சமூகத்தால் தாங்க முடியாது. எனவே தான் முழு உண்மையைப் பேசக்கூடாது என்பதை அரசியல்வாதி அறிந்திருக்க வேண்டும். அவர் முழு உண்மையைப் பேசினால் அவருடைய அரசியலுக்கு அது பாதகமாகிவிடும். மகாத்மா எப்போதும் சாதியையும் வருணத்தையும் ஆதரிக்க காரணம் அதை அவர் எதிர்த்தால் அரசியலில்

தன் இடத்தை இழந்து விட நேரும் என அவர் அஞ்சுவது தான். அவரது குழப்பத்தின் மூலகாரணம் யாதாயினும் மகாத்மா தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதையும் வருணம் என்ற பேரால் மக்களுக்கு சாதியைப் போதித்து அவர்களையும் ஏய்த்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் அவருக்குச் சொல்லியாக வேண்டும்.

## 10

இந்துக்களுக்கும் இந்து மதத்துக்கும் நான் பிரயோகிக்கும் அளவுகோல் மிகவும் கடுமையானது. இந்த அளவுகோலை வைத்துப் பார்த்தால் இன்றுள்ள நமக்குத் தெரிந்த எல்லா மதங்களும் தோற்றே போகும் என்கிறார் மகாத்மா. என் அளவுகோலின் தரம் உயர்வானது என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவை உயர்வானவையா தாழ்வானவையா என்பதல்ல, பிரச்சனை. அவை சரியானவையா என்பதே. சமூக நீதியின் அடிப்படையிலான சமூக அளவுகோலைக் கொண்டே ஒரு மக்களையும் அவர்களின் மதத்தையும் மதிப்பிடமுடியும். மக்களின் நன்மைக்கு அவசியமானதே மதம் என்று கொள்ளப்பட்டால், வேறு அளவுகோலைப் பிரயோகிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இந்துக்கள் மீதும் இந்து மதத்தின் மீதும் நான் பிரயோகிக்கும் அளவுகோலே மிகச் சரியானது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். அதைவிட சரியான வேறு எந்த அளவுகோலும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நமக்குத் தெரிந்த எல்லா மதங்களும் என் அளவுகோலின் முன் தோற்றுப் போகலாம் என்ற கருத்து உண்மையாயிருக்கலாம். ஆனால் இந்தக் கருத்து மகாத்மாவை இந்துக்களின் தானைத் தலைவன் என்பதாகவும் இந்து மதத்துக்கு ஆதரவாகவும் போய்விடக் கூடாது. அப்படிப் போனால் அதற்கும் ஒரு பைத்தியக்காரன் மற்ற பைத்தியக்காரர்களுக்கு ஆதரவாக இருப்பது அல்லது ஒரு குற்றவாளி மற்ற குற்றவாளிகளுக்கு ஆதர

வாக இருப்பது என்பதற்கும் வித்தியாசம் இராது. நான் குற்றம் சாட்டும் நிலைமைகள் மீது எனக்கு ஏற்பட்டுள்ள வெறுப்புக்கு இந்துக்களும் இந்து மதமுமே காரணம். இவர்கள் என் அளவுகோலை எட்டத் தவறிவிட்டனர். அவ்வளவு தான் என்று மகாத்மா சொல்லிவிட முடியாது.

இந்த உலகம் மிகவும் குறைபாடுகள் கொண்ட உலகம். இதில் வாழ விரும்புபவன் அதன் குறைபாடுகளை சகித்துக் கொண்டுதான் வாழவேண்டும் என்பதை நான் அறிவேன். நான் இருந்து வாழ வேண்டிய இந்த சமுதாயத்தின் குறைபாடுகளைச் சகித்துக்கொள்ள நான் தயார். ஆனால் தவறான லட்சியங்களை வளர்க்கும் சமுதாயத்திலோ சரியான லட்சியங்கள் இருந்தாலும் அதன்படி சமூக வாழ்வை நடத்தாத சமுதாயத்திலோ எனக்குச் சம்மத மில்லை. இந்துமதமும் இந்துக்களும் தவறான லட்சியங் களை நாடுவதாலும் தவறான சமூக வாழ்வை நடத்துவ தாலும் தான் நான் அவர்களை வெறுக்கிறேன். அவர் களின் சமூக நடத்தையிலுள்ள குறைபாடுகள் மீதல்ல என் சண்டை, அதைவிட அடிப்படையானது, அதாவது அவர் களின் லட்சியங்களைப் பற்றியது.

## 11

இந்து சமுதாயத்துக்கு ஒரு தார்மீக மறுமலர்ச்சி தேவைப்படுகிறது. இதைத் தள்ளிப் போடுவது அபாயகர மானதாகுமென்று தோன்றுகிறது. இந்தத் தார்மீக மறு மலர்ச்சியைத் தீர்மானித்துக் கட்டுப்படுத்த யாரால் கூடும் என்பதே கேள்வி. அறிவு மறுமலர்ச்சி பெற்றவர்களும் தம் அறிவு விமோசனத்தில் பிறந்த முடிவையே துணிவுடன் செயல்படுத்தும் நேர்மை கொண்டவர்களுமே மேற் சொன்ன தார்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். இந்த அளவு கோலின்படி பார்த்தால் இன்றுள்ள முன்னணி இந்துத் தலைவர்கள் இந்தப் பணிக்கு சுத்தமாக லாயக்கற்ற வர்கள் என்பது என் அபிப்பிராயம். அறிவு மறுமலர்ச்சி

யின் பாலபாடத்தைக்கூட அவர்கள் கற்க வில்லை. அப்படிக் கற்றிருந்தால் பாமரப் பெரும்பான்மையைப் போலவே எளிமையாக அவர்கள் தமக்குத் தாமே மயங்கி நிற்கவும் மாட்டார்கள். மற்றவர்களின் ஆதிகால அறியா மையில் தமக்குச் சௌகரியமாகக் குளிர்காயவும் மாட்டார்கள். இந்து சமுதாயம் தகர்ந்து குட்டிச் சுவராக் கிக் கொண்டிருக்கிற நிலையிலும் இந்துத் தலைவர்கள் வெட்கமில்லாமல் நிகழ்காலத்துடன் எவ்விதத் தொடர்பும் அற்றுப் போய்விட்ட கடந்த கால லட்சியங்களை ஆதரித்து நிற்கிறார்கள். தாம் தோன்றிய காலத்தில் பொருத்தமாக இருந்திருக்கக் கூடிய லட்சியங்கள் இன்றைக்கு வழிகாட்டு வதாக மாறி உள்ளன.

இந்துத் தலைவர்களுக்குப் பழமையான வடிவங்களில் இன்னும் மயக்கம் இருப்பதால் சமுதாயத்தின் அடிப்படை களை ஆராய அவர்கள் தயங்குகிறார்கள். எதிர்க்கிறார்கள். இந்து பொது ஜனங்களோ தம் நம்பிக்கைகள் எப்படி உருவாயின என்பதைப் பற்றி நம்ப முடியாத அளவுக்கு அக்கறை இன்றி இருக்கிறார்கள். எல்லாவற்றையும்விட மோசம் இந்த இந்துத் தலைவர்கள் பிரியாத் துணையான நம்பிக்கையை அகற்ற வேண்டும் என்று யாரேனும் பிரஸ் தாபித்தாலே உள்ளுக்குள் பொங்குகிறார்கள். மகாத்மா வும் இதற்கு விதிவிலக்கல்ல. சிந்திப்பதில் நம்பிக்கையற்ற வராக மகாத்மா காணப்படுகிறார். ஞானிகளை பின்பற்று வதையே அவர் விரும்புகிறார். புனிதக் கருத்துகளுக்கு வணக்கம் செலுத்தும் வைதிகரைப் போல எங்கே சிந்திக்கத் தொடங்கி விட்டால் தான் பற்றிக் கொண்டுள்ள லட்சியங் களும் நிறுவனங்களும் பாழாய்ப் போகுமோ என்று பயப் படுகிறார், அவரைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டி யிருக்கிறது.

சுதந்திர சிந்தனையில் இருந்து பிறக்கும் ஒவ்வொரு செயலும், உலகம் நிலைத்தது என்ற தோற்றத்தின் ஒரு

பகுதிக்கு உலை வைக்கிறது தான். ஆனால் ஞானிகளைச் சார்ந்து இருப்பது உண்மையான அறிவுக்கு இட்டுச்செல்ல முடியாது. ஞானிகளும் மனிதர்களே. பால்போர் பிரபு சொன்னது போல ''உண்மையைக் கண்டுபிடிக்கும் யந்திரம் என்ற வகையில் மனிதயனம் பன்றியின் முகரையை விட உயர்ந்தது அல்ல... அப்படியே மகாத்மா சிந்தித்தாலும் உளுத்துப்போன இந்துச் சமூக அமைப்புக்கு முட்டுக் கொடுக்கும் வேலையில் தன் மூளையை ஈடுபடுத்துவதன் மூலம் அவர் அறிவு விபச்சாரம் செய்பவரே ஆகிறார். அதன் மிக செல்வாக்கான பிரதி நிதியும் அவரே. எனவே இந்துக்களின் மிக மோசமான எதிரியும் அவரே.

மகாத்மாவைப் போல் அல்லாமல் வெறுமனே சிந்திப்பதிலும் பின்பற்றுவதில் மட்டுமே திருப்தி அடையாத இந்துத் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் சிந்திக்கத் துணிபவர்கள் தம் சிந்தனையின் முடிவின்படி நடக்கத் துணிபவர்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக வழிகாட்ட வேண்டிய நிலைமை வரும்போது இவர்கள் நேர்மையற்றவர்களாகவோ அக்கறையற்றவர்களாகவோ ஆகிவிடுகிறார்கள், ஏறக்குறைய எல்லாப் பார்ப்பனருமே சாதிக் கட்டுப்பாடுகளை மீறுபவர்களாக இருக்கிறார்கள். புரோகிதம் பண்ணும் பார்ப்பனரைவிட செருப்பு விற்கும் பார்ப்பனர் அதிகமாகி வருகிறார்கள். தம் பரம்பரைத் தொழிலான புரோகிதத்தை விட்டு வணிகத்தில் இறங்கி உள்ளதோடு சாஸ்திரங்களால் விலக்கப்பட்ட தொழில்களிலும் அவர்கள் இறங்கி உள்ளனர். இருந்தும் தினமும் சாதியை மீறும் பார்ப்பனரில் எத்தனைபேர் சாதிக்கும் சாஸ்திரங்களுக்கும் எதிராகப் பேசுகிறார்கள்? சாதியையும் சாஸ்திரங்களையும் தன் காரிய நோக்கும் மனசாட்சியும் ஆதரிக்காததால் சாதிக்கும் சாஸ்திரங்களுக்கும் எதிரான கருத்துகளைப் பரப்பிய ஒரு நேர்மையான பார்ப்பான் இருந்தால் தினமும் சாதியை மீறிக் கொண்டும் சாஸ்திரங்களை மிதித்துக் கொண்டும் அதே வேளையில்

சாதிக் கோட்பாடுகளையும் சாஸ்திரங்களின் புனிதத்தை யும் வெறித்தனமாக ஆதரிக்கும் பார்ப்பனர்கள் நூற்றுக் கணக்கில் இருக்கிறார்களே. ஏன் இந்த இரட்டைப் புத்தி? ஏனென்றால் மக்கள் சாதி யுகத்தில் இருந்து விடுபட்டு விட்டால் பார்ப்பன வர்க்கத்தின் அதிகாரத்துக்கும் அந்தஸ்துக்கும் அந்த மக்கள் ஆபத்தாகி விடுகிறார்கள் என்பதைப் பார்ப்பனர்கள் உணர்ந்துள்ளார்கள். தம் சிந்தனையின் பயனை மக்களுக்கு வழங்க மறுக்கும் இந்தப் படிப்பாளி வர்க்கத்தின் நேர்மை இன்மை படு அயோக்கியத் தனமானதாகும்.

மாத்யூ அர்னால்டின் வார்த்தையில் சொன்னால் இந்துக்கள் "செத்துப் போன உலகத்துக்கும் இன்னும் பிறக்க சக்தியற்ற உலகத்துக்கும் இடையில் அல்லாடு பவர்கள்" அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? தங்களின் வழிகாட்டியாக அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள மகாத்மாவே சிந்தனையை நம்புபவர் அல்ல. எனவே அனுபவ சோதனைக்குத் தாக்குப்பிடிக்கும் உருப்படியான உதவியை அவரால் தர முடியாது. மக்கள் அறிவாளி வர்க்கத்தை உதவிக்கு எதிர்பார்க்கிறார்கள், ஆனால் இந்த அறிவாளி வர்க்கத்தினரோ நேர்மையற்றவர்களாக இருக்கிறார்கள் அல்லது மக்களுக்குக் கல்வி தந்து சரியான வழிகாட்டும் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். உண்மையாகவே நாம் ஒரு மாபெரும் சோக நிகழ்ச்சியின் பார்வையாளர்களாக இருக்கிறோம். இந்த சோகத்தின் முன்னிலையில் "ஓ இந்துக்களே! இதுதான் உங்கள் தலைவர்களின் லட்சணம்" என்று அங்கலாய்க்க மட்டுமே நம்மால் முடிகிறது."

□ □

## குறிப்புகளுக்காக

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

இந்தியாவில் உள்ள பெரிய பெரிய பணக்காரர்கள் கூட, கையில், கால்காசு கூட இல்லாத சாதுக்களுக்கும் பக்கிர்களுக்கும் அடிபணிந்து நடப்பது ஏன்? தரித்திர நிலையிலுள்ள கோடிக் கணக்கான இந்திய மக்கள் காசிக்கும் மெக்காவுக்கும் செல்ல தங்களுடைய ஒரே அற்ப சொத்தான மூக்குத்தி, தோடு போன்றவற்றையும் விற்பது ஏன்?

இந்தியாவில் சாதாரண மனிதனின் மேல் ஒரு நீதிபதிக்குள்ள செல்வாக்கைவிட ஒரு சன்னியாசிக்குள்ள செல்வாக்கு அதிகம் அல்லவா? வேலை நிறுத்தம், தேர்தல் உள்ளிட்ட எல்லாமே மிக எளிமையாக மதச்சார்பான ஒரு திருப்பத்தை அடைய முடிகிறது. மதச்சார்பான திரிபுக்கும் ஆளாகின்றன. மதம் என்பது அதிகாரத்திற்கான ஒரு ஆதாரம் என்பதை இந்திய வரலாறு நிரூபிக்கிறது.

— அண்ணல் அம்பேத்கர்